**போர்க்குற்ற விசாரணைகளில் தடம்மாறும் அரசு**



பக்கம் 18

விலை ரூபா 30
பக்கங்கள் 56 + XVI

# உதயன்

34c - 27c
தெளிவான காலநிலை

சுடர் 31 கதிர் 206 வள்ளுவர் ஆண்டு 2047 ஆனி 05, ஞாயிற்றுக்கிழமை 19.06.2016

## உதய கம்மன்பில நேற்றுக் கைது



கொழும்பு, ஜூன் 19
பிவித்துரு ஹெல உறுமயவின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பிலவை எதிர்வரும் முதலாம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு கோட்டை நீதிவான் மன்றம் உத்தரவிட்டது.
நுகேகொடவில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் வைத்து நேற்றுச் சனிக்கிழமை காலை கம்பன்பில பொலிஸ் விசேட விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு கோட்டை நீதிவான் மன்றத்தில் முற்படுத்தப்பட்டார். இதன் போதே நீதிவான் பக்.53

# வலி. வடக்கு மக்கள் அதிர்ச்சி, ஏமாற்றம்

## யாழ்ப்பாணம் வந்த மைத்திரி மீள்குடியேற்றம் பற்றி எதுவும் பேசாததால்

"ஜனாதிபதி மைத்திரிபாலவை நாங்கள் தேவதூதனாகவே பார்த்தோம். அவர் தென்னிலங்கையிலும் சரி வெளி நாடுகளிலும் சரி, தமிழ் மக்கள் தங்களுடைய காணிகளைத் தான் கேட்கின்றார்கள் என்று பேசியிருந்தார். இதனைக் கேட்கும் போது, எமது காணிகளை விடுவிப்பதாகச் சொன்ன அவரது வாக்குறுதி நிறைவேறும் என்று நம்பினோம்."

யாழ்ப்பாணம், ஜூன் 19
ஜனாதிபதி வழங்கிய காலக்கெடு முடிவடையும் நிலையில், யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ஜனாதிபதி வலி.வடக்கு மீள்குடியமர்வு தொடர்பில்எதுவும்பேசாமல்மௌனம் சாதித்தது எங்களுக்கு அதிர்ச்சியையும் - ஏமாற்றத்தையும் தருகின்றது.
இவ்வாறு தெரிவித்தார் வலி. வடக்கு மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வுச் சங்கத்தின் தலைவர் அ.குணபாலசிங்கம்.
கடந்த டிசெம்பர் மாதம் 21ஆம் திகதி தேசிய நத்தார் தின நிகழ்வுக்காக ஜனாதிபதி மைத்திரிபால யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தார். இதன் போது வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களை ஆறு மாதங்களில் அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்துவதாக உறுதியளித்திருந்தார்.
ஜனாதிபதி வழங்கிய காலக்கெடு நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமையுடன் பக்.53

**முச்சந்தி முரளி**



ஆறு மாதமா கலந்துரையாடல் மட்டும்தான் நடக்குது பாருங்கோ....

## துரையப்பா விளையாட்டரங்கு நல்லிணக்கத்தின் அடையாளம்

### அதன் திறப்பு விழாவில் மைத்திரி தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 19
இந்தியாவின் உதவிகளுக்கு பெருநன்றி தெரிவித்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. இந்திய அரசுக்கும் - மக்களுக்கும், இலங்கை அரசினதும் - மக்களினதும் சார்பில் இந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாக மைத்திரிபால குறிப்பிட்டார்.
அத்துடன் துரையப்பா விளையாட்டரங்கு திறப்பானது நல்லிணக்கத்தின் முக்கியமான பக்.53

## அமைதியான இலங்கையை காண விரும்புகிறது இந்தியா

### யாழ்.துரையப்பா விளையாட்டரங்கத் திறப்பு விழாவில் பிரதமர் மோடி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 19
அமைதியான இலங்கையைக் காண விரும்புவதாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.
'பொருளாதார வளம் மிகுந்த, ஐக்கியம் - பிரதேச ஒருமைப்பாடு - அமைதி என்பவை காணப்படும் இலங்கையை இந்தியா விரும்புகின்றது' என்று மோடி குறிப்பிட்டார்.
துரையப்பாவிளையாட்டரங்கைத் திறந்து வைத்த பின்னர் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இதன்போது பக்.53

## சர்வதேசத்தின் பிடியிலிருந்து தப்பிக்க முடியாது இலங்கை

### ஐ.நா. தீர்மானத்தின் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்கிறார் சம்பந்தன்

யாழ்ப்பாணம், ஜூன் 19
இலங்கைஅரசின்சம்மதத்துடன் தான் கடந்த வருடம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் பலவற்றின் ஆதரவுடன், இலங்கை தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. எனவே, இந்தத் தீர்மானத்தில் உள்ள அனைத்துப் பரிந்துரைகளும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இதிலிருந்து இலங்கை அரசு விலகிச் செல்ல சர்வதேச நாடுகள் ஒருபோதும் அனுமதிக்காது.
இவ்வாறு தெரிவித்தார் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன்.
ஐ.நா. தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகளில் இலங்கை அரசு மந்தகதியில் செயற்படுவது தொடர்பில், பக்.53

## இராணுவ பவுசர் மோதி தாய்சாவு; மகள் படுகாயம்

### யாழ். நகரில் நேற்று பரிதாபம்



யாழ்ப்பாணம், ஜூன் 19
யாழ். நகரில் நேற்று இராணுவத் தண்ணீர் பவுசர் மோதியதால் மோட்டார் சைக்கிளில் சென்ற பெண் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டதோடு, அவரது மகள் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
எதிர்வரும் சனிக்கிழமை குறித்த யுவதிக்குத் திருமணம் நடைபெறவுள்ள நிலையில் இந்த விபத்து - இழப்பு பக்.53

ஒரு வருட நிலையான வைப்புக்களுக்கு
11%
(வ.தே.வ. 11%)
கவர்ச்சிகர வருடாந்த வட்டி
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
011 5 411 411
நிபந்தனைகளுக்குட்பட்டது.
011 5 411 411
சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி
தேசத்தின் முன்னோடி

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# துரையப்பா விளையாட்டரங்கு திறப்பு விழா











யாழ்ப்பாணம், ஜூன் 19
வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் விருந்தினர்கள் இருக்கைக்குச் செல்லும் படியில் ஏறும் போது தடக்குண்டு வீழ்ந்தார். இவரை, ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினர் தூக்கி விட்டனர். காலை 10 மணிக்கு ஆரம்பமான நிகழ்வுக்கு, யோகாவில் பங்குபற்றும் பாடசாலை மாணவர்களை காலை 7 மணிக்கே பாடசாலைகளிலிருந்து அழைத்து வந்து, துரையப்பா விளையாட்டரங்கில் அமர்த்தி விட்டனர். மாணவர்கள் வெயிலின் கொடுமை தாங்காது குடைகளைப் பிடித்துக் கொண்டும், தொப்பிகளை அணிந்து கொண்டும் இருந்தனர்.

✦ காலையில் அழைத்து வரப்பட்ட மாணவர்களுக்கு, நிகழ்வு முடிந்த பின்னரே – மு.ப. 11.15 மணியளவில் சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன.

✦ ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, துரையப்பா விளையாட்டரங்குக்கு வருகை தருவதற்கு முன்னதாக, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வருகை தந்து விட்டார். (நிகழ்வுக்காக ஒழுங்கு செய்யப்பட்ட திரையில் இந்தியாவிலிருந்தே காட்சி கொடுத்தார்.)

✦ இந்தியப் பிரதமர் காணொலி தொழில்நுட்பம் ஊடாக இணைந்து கொண்டதால், துரையப்பா விளையாட்டரங்கில் மூன்று பிரமாண்ட திரைகள் வைக்கப்பட்டிருந்தன. இந்தியப் பிரதமர் மோடி முதன்முறையாக காணொலியூடாகத் தோன்றும் போது மாணவர்கள் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

✦ துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறும் நிகழ்வுகளை, இந்தியப் பிரதமர் மோடி அங்கிருந்து பார்வையிட்டுக் கொண்டிருந்தார். அதற்காக பிரதமர் மோடி இந்தியாவிலிருந்த அறையில் விசேட தொலைக் காட்சிகள் வைக்கப்பட்டிருந்தன.

✦ இந்த நிகழ்வில், இந்தியப் பிரதமர் மோடியுடன், இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ்ஜும் பங்குபற்றியிருந்தார்.

✦ துரையப்பா விளையாட்டரங்கு திறப்பு விழாவை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா – இந்தியப் பிரதமர் மோடி இருவரும் இணைந்து மேற்கொண்டனர். இருவரும் தமக்கு முன்னால் இருந்த "பட்டனை" சம நேரத்தில் அழுத்தினர். இதன்போது நினைவுக் கல் திரை திறந்தது.

✦ துரையப்பா விளையாட்டரங்கு நிர்மாணத்தின் போது மேல்மாடியில் கண்ணாடிக் கூண்டு அமைக்கப்பட்டிருந்தது. ஜனாதிபதி மைத்திரி உள்ளிட்ட விருந்தினர்கள் கண்ணாடிக் கூண்டினுள் இருந்தே நிகழ்வுகளைப் பார்வையிட்டனர்.

✦ மாணவர்களின் யோகா நிகழ்வு சுமார் 20 நிமிடங்கள் மாத்திரமே இடம்பெற்றது. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உரையாற்ற ஆரம்பிக்கும் போதும், முடிக்கும் போதும், தமிழ் – சிங்கள – ஹிந்தி – ஆங்கில மொழிகளில் வணக்கம் தெரிவித்தார்.

✦ ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வணக்கம் கூறி விருந்தினர்களை விழித்துக் கூறும் போது, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனின் பெயரைக் கூறவில்லை. ஆனால் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, வடக்கு முதலமைச்சருக்கும் வணக்கம் தெரிவித்தார்.

✦ இந்தியப் பிரதமர் ஆங்கில மொழியில் உரையாற்றினார். இதன் தமிழ் மொழி பெயர்ப்பு துரையப்பா விளையாட்டரங்கில் மேற்கொள்ளப்பட்டது. இருப்பினும், இந்தியப் பிரதமரின் உரையின் ஒலியும், தமிழ் மொழி பெயர்ப்பு ஒலியும் மாறி மாறி வந்ததால் சிறிது நேரம் குழப்பம் நீடித்தது.

ஜனாதிபதி மைத்திரி பங்கேற்கும் நிகழ்வுகளில், வடக்கு மாகாண முதலமைச்சருக்கு உரை நிகழ்த்த சந்தர்ப்பம் வழங்கப்படுவது வழமை. ஆனால் நேற்று முதலமைச்சர் உரை நிகழ்த்த அனுமதி வழங்கப்படவில்லை.

✦ நிகழ்வு முடிவடைவதற்கு முன்பதாகவே வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோட் கூரேயும், முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும் புறப்பட்டு விட்டனர்.

**துரையப்பா விளையாட்டரங்கு**
இந்த மைதானத்தை புனரமைப்பு செய்வதற்கு இந்திய அரசு 145 கோடி ரூபா ஒதுக்கீடு செய்தது. 2014 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி, விளையாட்டு மைதானத்தை சர்வதேச அரங்காக மாற்றும் புனரமைப்பதற்கான பணிகள் தொடங்கின. இதில் தற்போது இரண்டு பக்க பார்வையாளர் அரங்குகள், புதிதாக 400 மீற்றர் நீளம் உடைய தடகள பாதை, தானியங்கி நீர் தெளிப்பான், மழை நீர் கால்வாய்கள், கழிப்பறை போன்றன சர்வதேச தரத்தில் உருவாக்கப்பட்டுள்ளன. (ற–5)

# மீண்டும் ஒட்டிக் கொண்ட டக்ளஸ்

யாழ்ப்பாணம், ஜூன் 19
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வடக்கில் பங்கெடுத்த நிகழ்வுகளில் இதுவரை கலந்து கொள்ளாதிருந்த முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நேற்று முதன் முறையாகப் பங்கெடுத்தார். நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் அவரது குழுவினர், துரையப்பா விளையாட்ட


[illegible] முன்னாள் முதலமைச்சர் அ.வரதராஜப்பெருமாள், நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் கலந்து கொண்டனர்.

ரங்கு திறப்பு விழாவில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் கலந்து கொண்டனர்.
கடந்த ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது, டக்ளஸ் தேவானந்தா முன்னாள் ஜனாதி[illegible] மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவாகச் செயற்பட்[illegible]. ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ச [illegible]வியடைந்தார். பின்னர் ஆட்சிக்கு வந்த [illegible]தி மைத்திரிபால சிறிசேன வடக்குக்கு பல [illegible] வந்து சென்றார். மைத்திரிபால பங்[illegible]வொரு நிகழ்வுகளிலும், நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்ளவில்லை.
ஆனால் நேற்று முதன்முறையாக, ஜனாதிபதி மைத்திரிபால பங்கேற்ற நிகழ்வில் அவரும் அவரது குழுவினரும் கலந்து கொண்டனர். ஜனாதிபதி மைத்திரிபால துரையப்பா மைதானத் திறப்பு விழாவுக்கு வரும் போது அந்தக் குழுவினருடன் இணைந்து டக்ளஸ் தேவானந்தாவும் வந்திருந்தார்.
நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் அவரது குழுவினர், அரச அதிகாரிகள் அமர்ந்திருந்த இடத்திலேயே அமர்ந்திருந்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தனியாக அமர்ந்திருந்தனர்.
இதேவேளை நேற்றைய நிகழ்வில், வடக்கு – கிழக்கு முன்னாள் முதலமைச்சர் அ.வரதராஜப் பெருமாளும் கலந்து கொண்டிருந்தார். (ற–5)

# இந்தோனேசியாவில் அகதிகள் தரையிறங்குவதற்கு அனுமதி

கொழும்பு, ஜூன் 19
இந்தோனேசியாவின் ஆச்சே மாகாண கடற்கரையில் தரைதட்டி நிற்கும் படகில் இருந்த இலங்கைத் தமிழ் அகதிகளை தரையிறங்குவதற்கு இந்தோனேசிய அரசு நேற்று அனுமதி அளித்துள்ளது.
கடந்த சனிக்கிழமை தொடக்கம், ஒருவாரகாலமாக ஆச்சே மாகாண கடற்கரையில் படகில் இருந்த அகதிகள் 44 பேரும் தரையிறங்க அனுமதிக்கப்பட்டனர்.
படகில் உள்ள அகதிகளை தரையிறங்க அனுமதிக்குமாறு இந்தோனேசிய உதவி அதிபர் யூசுப் கல்லா, ஆச்சே மாகாண அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.
அகதிகளை ஒளிப்படம் எடுத்து அடையாளங்களைப் பதிவு செய்யும் பணிகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
பெண்கள், குழந்தைகளை உள்ளடக்கிய அகதிகள் படகை மீண்டும் ஆழ்கடலுக்குள் கொண்டு சென்று விடுவதற்கு இந்தோனேசியா முன்னர் முடிவெடுத்திருந்தது.
அதற்கு அனைத்துலக அளவில் கடும் எதிர்ப்பும் கண்டனங்களும் எழுந்த நிலையிலேயே அகதிகளைத் தரையிறக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. (ற)

## தேசிய போசணை மாதம் ஜூன் – 2016

✦ மரக்கறி வகைகளையும், பழங்களையும் புதியனவாகவும் தூய்மையானவையாகவும் எடுங்கள். வீட்டுத் தோட்டத்து விளைச்சல் நம்பகமானது.
✦ பழப்பானங்களை விட பழங்களை நேரடியாக உண்பதே, போஷணை இழப்பைத் தவிர்க்கும்.
✦ தினமும் மரக்கறி மற்றும் பழங்களில் ஆகக் குறைந்தது ஐந்து வகைகளை எடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு கனடா நிதியுதவி

## 1250 மில்லியன் ரூபாவை இலங்கைக்கு வழங்குகிறது

கொழும்பு, ஜூன் 19
'தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வின் முன்னோடி மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதே' என்று தெரிவித்துள்ள அமைச்சர் மனோ கணேசன், இது உள்ளிட்ட பலசெயற்றிட்டங்களுக்கும் என 1250 மில்லியன் ரூபாவை கனேடிய அரசு ஒதுக்கியுள்ளதோடு, அதுபற்றிய ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்திடப்படவுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

இதன்போது அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்ததாவது:-

தற்போதைய நிலையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது மிகவும் அவசியம். எனினும் இப்பிரச்சினையை தீர்ப்பதற்கு முன்னர் மொழிப் பிரச்சினைக்கு முடிவு காண்பது இன்றியமையாததாகும். மொழிப் பிரச்சினை என்பது கையில் உள்ள பறவை போன்றது. தேசியப் பிரச்சினை என்பது மரத்திலுள்ள பறவையைப் போன்றது. கையிலுள்ள பறவையின் அழகை ரசிக்க வேண்டும்.

பல சந்தர்ப்பங்களில் மும்மொழிகளிலும் உள்ள பெயர்ப் பலகையில், சிங்கள மொழி சரியானதாகவும், தமிழ் மொழி பிழையாகவும் எழுதப்பட்டிருக்கிறது. அதனை அனுமதிக்க முடியாது. நல்லாட்சி அரசு கூறுவது போன்று, நாட்டில் உண்மையான நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமாயின் இரண்டாம் மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டும். மொழியிலிருந்தே அனைத்துப் பிரச்சினைகளும் உருவெடுப்பதால், பிரச்சினையை ஆரம்பத்திலிருந்து தீர்த்துக் கொள்வதே சிறந்தது.

தேசிய மொழிகள் சமத்துவ முன்னேற்றத் திட்டம் என்ற பெயரில், அரச கரும மொழிகளை நடைமுறைப்படுத்துவதற்கு பல மொழி பேசும் இனங்களின் தேசிய சகவாழ்வு, கலாசார பன்மைத் தன்மை, கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் ஆகியவை நாட்டின் இருமொழிகளையும் பிரதேச செயலக பிரிவு, மாகாண, உள்ளூராட்சி, தேசிய மட்டங்களில் வெற்றிகரமாக முன்னெடுக்கும் முகமாகவும், அரசகரும மொழிகள் அமைச்சின் செயலாற்றலை வலுவாக்கும் முகமாகவும் கனடா - இலங்கை அரசுகளுக்கு இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் அடுத்த மாதம் கைச்சாத்திடப்படவுள்ளது.

இந்த ஒப்பந்த நோக்கங்களை நிறைவேற்றும் முகமாக, தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் செயல்திட்டங்களை முன்னெடுக்க 11,200,000 கனடிய டொலர்கள் (1250 மில்லியன் ரூபா) பெறுமதியான உதவித் தொகையை கனடிய அரசு ஒதுக்கியுள்ளது.

கனடிய தேசத்தின் இந்த உதவிகளும், ஒத்தாசைகளும், இந்த நாட்டில் இன்று புரையோடிப் போயுள்ள தேசிய இனப் பிரச்சினைக்கு வித்திட்ட மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு, அதை தேசிய இனப்பிரச்சினையின் அரசியல் தீர்வின் முன்னோடியாக உருவாக்கிக் காட்டும் மொழிப்பிரச்சினையின் தீர்வு, இனப்பிரச்சினை தீர்வின் முன்னோடி என்று நான் தொடர்ச்சியாகக் கூறிவந்துள்ளேன். எனினும் எனது அமைச்சுக்கு வரவு செலவு திட்டத்தில் உரிய ஒதுக்கீடுகள் கிடைக்கவில்லை.

இதன் காரணமாக எனது திட்டங்கள் தாமதமாகிக் கொண்டிருந்த வேளையில், இலங்கையின் சர்வதேச நண்பர்களுடன் பேச்சு வார்த்தைகளை நடத்தி வருகிறேன். இந்த அடிப்படையில் கனடிய அரசின் இந்த ஒத்தாசை சரியான நேரத்தில் அமைச்சுக்கு கிடைக்கின்றது - என்றார்.

(வ-4)

# நடன ஆற்றுகை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 19
நல்லைக் கலாமந்திர் நடனாலய மாணவர்கள் வழங்கும் சதங்கை நாதம் நடன ஆற்றுகை நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை உபஅதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது என்று நல்லைக் கலாமந்திர் தலைவர் தெரிவித்தார்.

(ற-ரி)







# பயங்கரவாதச் சிந்தனை இன்னும் மறையவில்லை

## பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 19
இலங்கையில் பௌதிக ரீதியாகப் பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்ட போதிலும், பயங்கரவாதச் சிந்தனை சிலரிடமிருந்து இன்னும் மறையவில்லை யென பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இந்தப் பயங்கரவாதச் சிந்தனை தொடர்பில் பாதுகாப்புத் தரப்பு மிகவும் அவதானத்துடன் செயற்படவேண்டுமெனவும் அவர் கூறினார்.

தியத்தலாவை இராணுவ அக்கடமியில் பயிற்சிகளை முடித்துக் கொண்டுவெளியேறும் இராணுவ கெடட் அதிகாரிகளின் 89ஆவது பிரியாவிடை அணி வகுப்புதியத்தலாவை இராணுவ முகாமில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில், பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் தெரிவித்ததாவது:-

இந்த இராணுவ முகாமில் பயிற்சிப்பெற்று வெளியேறும் இராணுவஅதிகாரிகள்உணர்ச்சி பூர்வமான தொழிநுட்பத்தால் வளர்ச்சியடைந்த சமூகத்துக்குள் செல்லவுள்ளனர். இதுபோன்ற இராணுவ முகாமில் பயிற்சிபெறும் போது, வெளியுலகத்துடனான தொடர்பு மட்டுப்படுத்தப்படுகின்றது. பயிற்சிகளை முடித்து வெளியேறும் அதிகாரிகளான நீங்கள், பல சவால்கள் நிறைந்த உலக சூழலுக்குள் இன்றிலிருந்து பிரவேசிக்கின்றீர்கள்.

இவ்வாறு இங்கிருந்து பயிற்சிகளைப் பெற்று வெளியேறும் இராணுவ அதிகாரிகள் சுற்றுச் சூழல் அரசியல், சமூக - கலை - கலாசாரம் தொடர்பில் புரிதலைக் கொண்டிருக்கும் போதே பரிபூரணமாக சேவையை மக்களுக்கும் நாட்டுக்கும் வழங்க முடியும்.

அண்மைக் காலமாக முப்படையினரும், பொலிஸாரும் பல் வேறுப்பட்ட பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். 2009ஆம் ஆண்டு இராணுவம்உட்படபாதுகாப்புத்தரப்பு மேற்கொண்ட மனிதாபிமான நடவடிக்கை ஊடாக வழங்கிய சேவையை, எந்தக் காலத்திலும் மறக்கமுடியாது. இந்த மனிதாபிமான நடவடிக்கையின் ஊடாகவே இன்று சமாதானம் நிலவுகின்றது. அவ்வாறு பெற்றுக்கொண்ட சமாதானத்தைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இராணுவத்தினராகிய உங்களையும் சார்ந்தது.

(வ-5)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TRADE FINANCE AND INVESTMENTS PLC
(Licensed by the Monetary Board of the Central Bank of Sri Lanka under the Finance Business Act No 42 of 2011)

வெகுவிரைவில் புதிய முகவரியில்
233, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(வெலிங்ரன் சந்திக்கு அருகில்)

எமது நிதி சேவையினை வழங்கவுள்ளோம்

01 லீசிங்
02 நிலையான வைப்புக்கள்
03 வாடகைக் கொள்வனவு
04 வியாபாரக் கடன்
05 நுண் நிதிக் கடன்





தொடர்புகளுக்கு:-
24/7
கோபி : 077 006 2594
சதீஸ் : 077 844 7777
வினோத் : 076 672 6702
021 221 9997, 9998 021 222 1898, 1900



நயினைநாகபூசணி அம்பாள் இரதோற்சவம் சிறப்புற வாழ்த்துகிறோம். – யுனிலங்காஸ்

கலண்டர் உலகில் தரமான நாட்காட்டி
யுனிலங்காஸ் பஞ்சாங்க, தினத்தாள் கலண்டர்கள்
(வாக்கிய பஞ்சாங்க இரகுநாதய ஐயரால் கணிக்கப்பட்டது)

புலமைப்பரிசில் பரீட்சைக்கு
தயாராகும் மாணவர்களுக்கு

வெற்றிச்சிகரம்

மாதிரி வினாத்தாள்கள் ஆக்கம் S.கணேசலிங்கம் - திருமலை

தரம் 1 முதல் தரம் 5 வரை மாணவர்களின் பரீட்சை வழிகாட்டி

வெற்றிக்கு வழிகாட்டி

24 மாதிரி வினாத்தாள்கள் விடைகளோடு

தரம் 1 முதல் தரம் 5 வரை தவணைப் பரீட்சை மாதிரி வினாத்தாள்கள்

யாழ் எக்ஸ்பிரஸ்

15க்கு மேற்பட்ட நாடளாவியரீதியில் முன்னணி ஆசிரியர்களின் ஆக்கத்தில்
தமிழ் , கணிதம் , சுற்றாடல் , ஆங்கிலம் , சிங்களம் , நுண்ணறிவு , இந்து சமயம் ,
இஸ்லாம் , கத்தோலிக்க திருமறை ஆகிய பாடங்கள் விடைகளோடு

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களே! எதிர்பார்க்கை வினாக்களுடன்
12 நாடளாவியரீதியில் அக்கரைப்பற்று , காரைநகர் , யாழ்ப்பாணம் , மன்னார் , வவுனியா , கொழும்பு ,
புசல்லாவ , ஹட்டன் , பதுளை , நுவரெலியா ஆகிய பிரதேசங்களை சேர்ந்த
முன்னணி ஆசிரியர்களால் தொகுக்கப்பட்டுள்ளது.

பூமாலை

ஒவ்வொன்றும் 16 பக்கம் அடங்கிய மாதிரி வினாத்தாள்கள் விடையோடு
விசேட கையேடு அடங்கியது. - (யூலை 1 முதல் கிடைக்கும்)

வெளியீடு : யுனிலங்காஸ் பப்ளிக்கேஷன்
இல. 10-1/1, (Trust Complex 342 Sea Street)
ஜிந்துப்பிட்டிய வீதி கொழும்பு 13. தொ.பே : 077 6258778

ஆரம்பக்கல்வி மாணவர்களே! வாங்கிப் படியுங்கள் வித்தியாசத்தை உணர்வீர்கள்.

STUDIO 3000 DF.
The Camera is only a tool, we make the difference...



3000 wedding & event Planner
we bring your vision to life



Bambalapitiya 0114003000 0718223000
Peliyagoda 0114853000 0710663000
Negombo 0114943000 0714113000
www.3000.lk

3000Cars
Luxury Car for your wedding



Hummer H3 Limo | Chrysler 300C Limo
Rolls - Royce Silver Sprit | BMW 520d | Benz E Class | Hummer H3 | Chrysler 300C | Benz 200SLK
Vezel | Mini Cooper Crossover | Prado | Voxy
So many ways to get you there in style


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்து

## திருமதி குமுதநாயகி நாமநாதன்

**Sp.Tr.Sc,B.A, PGDE (merit) SLTS I, ALIC (Sinhala)**

**உப அதிபர் யா/வைத்தீஸ்வராக் கல்லூரி.**



**சேவை விவரம்**

| | |
|---|---|
| 1977 - 1978 | - பொ/மன்னம்பிட்டி அ.த.க.பாடசாலை. |
| 1979 | - யா/தேவரையாளி இந்துக் கல்லூரி, கரவெட்டி. |
| 1930 | - யா/பலாலி ஆசிரியர் கலாசாலை. |
| 1981 | - யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, பருத்தித்துறை. |
| 1982 | - யா/பலாலி ஆசிரியர் கலாசாலை. |
| 1983 - 1986 | - மு/குமுழமுனை அ.த.க.பா. |
| 1986 - 1997 | - யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம். |
| 1998 - 2016 | - யா/வைத்தீஸ்வராக் கல்லூரி. |

ஆசிரியர் சேவை 39 வருடங்கள்



### செஞ்சொற்செல்வரின் ஆசியுரை

ஆற்றலும், பண்பும், ஆளுமையும், பக்தியும் மிக்க ஆசிரியை திருமதி குமுதநாயகி நாமநாதன் அவர்களை வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடைகிறேன். முப்பத்தொன்பது ஆண்டுகள் சிறந்த ஆசிரியப் பணியாற்றி ஓய்வுபெறும் நல்லாசிரியர் என்றும் நலமுடன் வாழப் பிரார்த்திக்கின்றேன். சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் என்னுடன் சக ஆசிரியராக நீண்டகாலம் பணியாற்றினார். இவரது கணவர் திரு.க.நாமநாதன் அவர்கள் அளவையூர் புகழ்பூத்த அறிஞர் வித்துவான் கணேசன் அவர்களின் மைந்தன் ஆவார். சிறந்த கல்விவளம் மிக்க குடும்பத்தில் பிறந்து அரிய சேவையாற்றிய அம்மையாரின் சகோதரன் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் உப பீடாதிபதியாக விளங்கும் திரு. சத்தியேந்திரம்பிள்ளை ஆவார். ஆசிரியையின் குடும்பத்தவர்கள் அனைவரோடும் பழகும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. கல்விப் பணியை கடவுள் பணியாகக் கருதிச் சேவை செய்த அம்மையாரும் அவரது குடும்பத்தவர்களும் என்றும் சிறப்புடன் வாழ எனது இதயபூர்வமான வாழ்த்திலையும் நல்லாசியையும் தெரிவித்து அமைகின்றேன்.

**கலாநிதி ஆறு.திருமுருகன்**
தலைவர் - ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.
தலைவர் - சிவபூமி அறக்கட்டளை.



### கல்வி அமைச்சரின் வாழ்த்துச் செய்தி

39 வருடங்கள் கல்வித்துறைக்கு அர்ப்பணிப்பான சேவையை வழங்கிய திருமதி குமுதநாயகி நாமநாதன் அவர்களுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

யா/வைத்தீஸ்வராக் கல்லூரியின் உப அதிபராகச் சிறப்பாக நிர்வாகக் கடமைகளை நிறைவேற்றியுள்ள இவர் இக் கல்லூரியின் பல்வேறு துறைசார் செயற்பாடுகளின் அபிவிருத்திக்கு அளப்பரிய பங்களிப்பை வழங்கியுள்ளார்.

சிறந்த விஞ்ஞான ஆசிரியரான இவர் மாணவர்களின் விஞ்ஞான அறிவு அபிவிருத்திக்கு நீண்டகாலம் அர்ப்பணிப்புள்ள சேவையை வழங்கியுள்ளார். இவரது ஓய்வு காலம் சிறக்க எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு த.குருகுலராஜா**
கல்வி அமைச்சர்,- வடமாகாணம்.



### வலயக்கல்விப் பணிப்பாளரின் ஆசிச்செய்தி

ஆசிரியர் சேவையில் அர்ப்பணிப்புடன் 39 வருடங்களாக சேவையாற்றி நல் மாணாக்கர்களை உருவாக்கி சேவையிலிருந்து இளைப்பாறும் திருமதி குமுதநாயகி நாமநாதன் அவர்களது சேவையைப் பாராட்டுவதில் மகிழ்வடைகின்றேன். ஆரம்பக் கல்வியை வட இந்து மகளிர் கல்லூரியிலும் இடைநிலைக் கல்வியை யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையிலும் பயின்று விஞ்ஞானத்துறையில் ஆசிரியர் பயிற்சியைப் பெற்றது மட்டுமன்றி கலைத்துறையிலும் பட்டம் பெற்று பல்துறை ஆளுமையுள்ள ஆசிரியராக சேவையாற்றியமை பெருமைக்குரிய விடயமாகும். வடமராட்சி மண்ணில் பிறந்து மண்ணின் பெருமை நிலைகொள்ளத்தக்க வகையில் தன்னுடைய அர்ப்பணிப்பான கல்விப் பணியினை சமூகத்துக்கு வழங்கியிருப்பது சாலச்சிறந்தது ஆகும்.

பொ/மன்னம்பிட்டி அ.த.க.பாடசாலையில் தன்னுடைய ஆசிரியப் பணியை ஆரம்பித்து முல்லைத்தீவு உட்பட பல மாவட்டங்களிலும் ஆசிரியப் பணி ஆற்றியதன் மூலம் பல மாணவர்களின் வாழ்வில் ஒளியேற்றியமை பாராட்டுக்குரியது.

யா/வைத்தீஸ்வராக் கல்லூரியில் கல்வி போதிப்பது மட்டுமன்றி சுகாதார மன்றத்தின் தலைவராகவும், இந்து மாமன்றத்தின் செயலாளராகவும் சாரணியத்தின் பொறுப்பாசிரிய ராகவும், கணித, விஞ்ஞான மன்றத்தின் இணைப்பாளராகவும் மனவிருப்புடன் சேவையாற்றும் இவர் காலத்தின் கட்டளையாக இன்று இளைப்பாறும் திருமதி குமுதநாயகி நாமநாதனின் ஓய்வுக்காலம் ஆரோக்கியமாகவும் மகிழ்வாகவும் அமைய இறையாசியை வேண்டி நிற்கின்றேன்.

**ந.தெய்வேந்திரராஜா,**
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.



### அகவை அறுபது நிறைவு மணிவிழா வாழ்த்து

புனிதப் பிறவியாகவே மனிதப் பிறவி எடுத்தவர்கள் சமூகத்தில் பலர் நல்லபடியாக வாழ்ந்து அறப்பணி புரிந்து, தாமும் வாழ்ந்து மற்றவர்களையும் நான்கு வாழ வைத்து உதவுகின்றார்கள். அந்தவகையில் வடமராட்சி மண்ணைச் சேர்ந்தவரும் எமது அன்புக்குரிய பிரிய பத்தினியுமாகிய திருமதி குமுதநாயகி அவர்கள் அகவை அறுபது நிறைவாகி மணிவிழாக் காண்பதையிட்டு பெருமகிழ்ச்சியுடன் வாழ்த்துகின்றோம்.

திருமதி குமுதநாயகி நாமநாதன் அவர்கள் சாந்தகுணமும் அமைதியான சுபாவமும் கொண்ட ஓர் உத்தமசீலி. இவருடைய தாய், தந்தையரும் சகோதரர்களும் மற்றும் அன்பு மாமனாரும் கூட கல்விமான்களாக விளங்கி கல்விப்புலத்தைச் சார்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அவரது 39 வருட சேவையில் அளப்பரிய பணியாற்றி பகுதித் தலைவியாகம் உபஅதிபராகவும் பரிணமித்து நிர்வாகத் திறமையுடன் எல்லோரது உள்ளங்களிலும் இடம்பிடித்து முன்னேற்றங் கண்டுள்ளார். ஆதலால் அவர் ஆரோக்கியத்துடன் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து சிறப்புற்றுத் திகழ இறையருளை வேண்டி உளமார வாழ்த்துகின்றோம்.

**சரவணமுத்து ஸ்ரீஸ்கந்தராசா J.P**
சமாதான நீதிவான்.



### பல்திறன் ஆற்றலுடையவர்

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் வைத்தீஸ்வராக் கல்லூரியில் மிக நீண்டகாலம் ஆசிரியராக பகுதித்தலைவராக உப அதிபராக சேவையாற்றி மணிவிழாக்காணும் திருமதி குமுதநாயகி நாமநாதன் அவர்களின் பணிநயப்பு விழாவுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

மணிவிழாக்காணும் திருமதி கு.நாமநாதன் அவர்களையும், அவரது சகோதர, சகோதரிகளையும் நன்கறிவேன். சகோதரிகளுடன் இணைந்து கற்பித்தலை மேற்கொண்டதையும் அவர்களுடன் அன்புரிமையுடன் பழகிய அனுபவங்களையும் மறக்க முடியாது. இவர்களது பூர்வீகம் வடமராட்சியாக இருந்தாலும் வாழ்விடம் எனது ஊரின் அயற்கிராமமாகும். இவர்கள் கற்ற சூழலில் பிறந்து வளர்ந்து அமைதியாகவும், அடக்கமாகவும், சமூகத்தில் மற்றவர்களுக்கு முன்மாதிரியாகவும் வாழ்ந்து வருபவர்கள்.

திருமதி கு.நாமநாதன் ஆசிரியர் மிக அமைதியாகவும், அடக்கமாகவும் இருந்து காரியம் ஆற்றுவதில் வல்லவர். இக்கல்லூரியின் பல பொறுப்புக்களை மனவிருப்புடன் ஏற்றுப் பணியாற்றியவர். பல அதிபர்களோடு பணியாற்றிய முதிர்ச்சி மிக்க ஆசிரியராக விளங்கினார். இக்கல்லூரியில் சுகாதாரமன்றம், இந்துமாமன்றம், கணித விஞ்ஞானமன்றம், சாரணியம் போன்றவற்றுக்குப் பொறுப்புக்களை ஏற்று மாணவர்களை சிறப்பாக வழிநடத்திய பெருமைக்குரியவர். இக்கல்லூரியில் நடைபெறும் பல்வேறு விழாக்களில் இவரது பணிகள் காத்திரமாக இருந்ததை நானறிவேன். இக்கல்லூரி நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிய போது முக்கியமான பொறுப்புக்களை ஏற்றுச் சிறப்பாக வழிநடத்தினார். மாணவர்களின் நன்மதிப்பைப் பெற்றவராகவும் தான் பொறுப்பேற்ற பாடங்களில் உயர் பெறுபேறுகளைப் பெறுவதற்கு கடினமான உழைப்பை நல்கியவர். பொதுப்பரீட்சைகளில் மேற்பார்வையாளராகப் பணியாற்றி நம்பகத் தன்மையை உறுதிப்படுத்தி மேல் அதிகாரிகளின் நன்மதிப்பைப் பெற்று விளங்கினார்.

இத்தகைய பல்திறன் கொண்ட அனுபவமிக்க ஆசிரியர் ஓய்வுபெறுவது பாடசாலைக்கு இழப்பாகவே கருதமுடியும். எனினும் ஓய்வென்பது தவிர்க்க முடியாதது. அந்தவகையில் ஓய்வுபெறும் ஆசிரியை நீண்டகால சுக நலத்துடன் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**அ.அகிலதாஸ்**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்.



### பல்துறை ஆளுமை கொண்ட உப அதிபர்

எமது கல்லூரியிலே கடந்த 18 ஆண்டுகளுக்கு மேலாக பகுதித் தலைவராகவும் உப அதிபராகவும் அரும்பணியாற்றி இன்று (19.06.2016) மணிவிழாக்காணும் திருமதி குமுதநாயகி நாமநாதனுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். 1998ஆம் ஆண்டிலே விஞ்ஞான ஆசிரியராக நுழைந்த ஆசிரியை மாணவரின் விருப்பு வெறுப்புக்களுக்கேற்ப விஞ்ஞான பாடத்தை இலகுவாகக் கற்பிப்பதில் வல்லவராக திகழ்ந்து மாணவரதும் பெற்றோரினதும் பெருமதிப்புக்குள்ளவராகத் திகழ்ந்தார். இவரிடம் கற்ற மாணவர்கள் விஞ்ஞானத்துறையை உயர்தரத்தில் தெரிவு செய்து இன்று வைத்தியர்களாகவும், பொறியியலாளர்களாகவும், கணக்காளர்களாகவும், ஆசிரியர்களாகவும் திகழ்வதை என்னால் உறுதிபடக் கூறமுடியும். வகுப்பறைக் கற்பித்தலில் மட்டுமன்றி நிர்வாகத்துறையிலும் ஏனைய இணைப்பாடவிதானத்துறையிலும் நிர்வாகத்துக்கு தோள்கொடுத்து பாடசாலையின் வளர்ச்சியிலும் உயர்ச்சியிலும் பெரும்பங்காற்றினார் என்று கூறுவது மிகையல்ல. இல்லப் பொறுப்பாசிரியராக இந்துமன்ற பெரும் பொருளாளராக, கணித விஞ்ஞான மன்ற பொறுப்பாசிரியராக, பெண் சாரணிய பொறுப்பாசிரியராக, ஒழுக்காற்று சபை உறுப்பினராக, முகாமைத்துவக் குழு அங்கத்தவராக, கணிப்பீட்டு சபை உறுப்பினராக, பா.அ.சங்க உறுப்பினராக, ப.மா.சங்க ஆசிரிய உறுப்பினராக, ஆசிரிய நலன்புரிக்கழக செயலாளராக, பொருளாளராக, உலக உணவூட்டல் திட்ட குழு உறுப்பினராக இப்படி பல்வேறுபட்ட அமைப்புக்களில் பங்காற்றி மாணவர்களின் ஆளுமை விருத்தியிலும், தலைமைத்துவ பண்பு வளர்ச்சியிலும் தன்னாலான ஒத்துழைப்பை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. நான் அதிபராக இருந்த காலத்தில் எனது நிர்வாக வெற்றிக்குப் பின்புலமாக இருந்து செயலாற்றியமையை இன்று நன்றியுடன் நினைவு கூருகின்றேன். இவரது ஓய்வுக்காலம் நோய் நொடியின்றி சிறப்பாக அமையவும் நீண்ட ஆயுள் பலத்துடன் சகல சௌபாக்கியங்களையும் பெற்றுநீடுவாழவும் எல்லாம்வல்ல வைத்தீஸ்வரப் பெருமானை வேண்டுகின்றேன்.

**நா.வன்னியசிங்கம்,**
ஓய்வுநிலை அதிபர்,- யா/வைத்தீஸ்வராக் கல்லூரி.

விழா ஏற்பாட்டுக்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# அதிபர் நியமனத்துக்கான சுற்றறிக்கை விரைவில்

கொழும்பு, ஜூன் 19
உரிய தரத்தையுடைய அதிபர்கள் இல்லாத அனைத்து பாடசாலைகளினதும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக உரிய தரமுடைய அதிபர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.
அதற்காக அனைத்து மாகாண சபை, மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவினதும் ஒத்துழைப்புடன் சுற்றறிக்கை தயாரிக்கப்பட்டு, அமைச்சரவை அனுமதியை விரைவில் பெறுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.
கொழும்பு டீ.எஸ். சேனாநாயக்க வித்தியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இதனைக் கூறினார்.
மேலும், அதிபர்களின் சம்பளப் பிரச்சினை தொடர்பில், தான் அவதானம் செலுத்தியுள்ளதாகத் தெரிவித்த அமைச்சர், அனைத்து அதிபர்களுக்கும் அவர்களின் தொழில் தகைமைக்கு ஏற்ற சம்பளத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் கூறினார். (வ)

## மரண அறிவித்தல்கள்

### தவராஜா திருவேந்தன்
(கொழும்பு, யாழ்ப்பாணம் ஹயஸ் வாகன சாரதி)



குருவீதி, இறங்கனியவளவு குருநாதசுவாமி கோயிலடி "பத்மகோட்டம்" காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் முதலாம் குறுக்குத்தெரு ஊரெழு கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட தவராஜா திருவேந்தன் கடந்த (17.06.2016) வெள்ளிக்கிழமை அகாலமரண மடைந் தார்.

அன்னார் காலஞ்சென்ற தவராசா (உதவி பொலிஸ் அதிகாரி)-மனோரஞ்சிதமலர் தம்பதியரின் பாசமிகு சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற பொன்னம்பலம்-செல்லம்மா காலஞ்சென்ற சிற்றம்பலம்-சிவகாமிப்பிள்ளை ஆகியோரின் அன்புப் பேரனும் எழில்வேந்தன், பத்மவேந்தன், பத்மதர்ஷினி-புவனசிறிகரன் (கனடா), பத்மஜெனனி ஆகியோரது பாசமிகு சகோதரனும் பானுமதியின் பாசமிகு கணவரும் ஸ்ரீராம் (கப்ராஜ்), வைஸ்ணவி (வயாவிளான் மத்திய கல்லூரி மாணவர்கள்), சாய்ராம் (உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய மாணவன்) ஆகியோரின் அன்பு தந்தையும் புவனசிறிகரன் (கனடா), கார்த்திகா ஆகியோரது அன்பு மைத்துனரும் சஞ்சயன்,கிசானி ஆகியோரது மாமனும் சந்தீபின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.06.2016) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 9.00 மணிக்கு ஊரெழு மேற்கு பொக்கனை மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(J 2252)
(17,19)

முதலாம் குறுக்குத்தெரு,
ஊரெழு கிழக்கு.

தகவல்:
தாய், சகோதரன்,
தவராஜா எழில்வேந்தன்.

---



தோற்றம்
08 . 09 . 1959

மறைவு
17 . 06 . 2016

### சோமசுந்தரம் சதானந்தராஜன்

வேலணை 5ஆம் வட்டாரம், சோளாவத்தையைப் பிறப்பிடமாகவும் கொலனி, சுதந்திரபுரம், உடையார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் சதானந்தராஜன் கடந்த (17.06.2016) வெள்ளிக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் ரத்தினாம்பாள் தம்பதியரின் அன்பு மகனும் தளையசிங்கம்-இலக்குனேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் வனிதரஞ்சனாவின் பாசமிகு கணவரும் சதானந்தயோகன் (யோகன்-வேலணை), சதானந்தி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கலையரசி (வேலணை), திருவருள்செல்வன் (ராசன்-கனடா), சுகந்தினி, கிருபாகரன் ஆகியோரின் மைத்துனரும் தனுசன் (கனடா), பிரவீனன், நிருஜன், நவீனன் (கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), சஞ்ஜீவன் (யாழ்/ஸ்ரான்லி கல் லூரி) ஆகியோரின் அன்பு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.06.2016) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுதந்திரபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொலனி, சுதந்திரபுரம். (J 2251) (17,19)

தகவல்:
குடும்பத்தினர்

---

### திருமதி அருள்மணி பரராசசிங்கம்



சங்குவேலி வடக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருள்மணி பரராசசிங்கம் 17.06.2016 வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசசிங்கம் - மனோன்மணி தம்பதிகளின் மகளும், ஆறுமுகம் பரராசசிங்கத்தின் மனைவியும், தவமணி (ஜேர்மனி), சிவமணி, சிவநேசன் (வங்கி ஊழியர்), அருள்நேசன் (கமநல அபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணம்), விஜயமணி ஆகியோரின் சகோதரியும், பார்த்தீபன், சிரஞ்சீபன், சஞ்சீபன், சஞ்சிகா, சோபிகா (யாழ்.போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பிரியந்தி, நிதர்சினி, கபிஷாந் ஆகியோரின் மாமியாரும், அவினாஷ், சிஹரிந் ஆகியோரின் அப்பம்மாவும், கர்ணியின் அம்மம்மாவும், அருந்தவதேவியின் மச்சாளும், பாலசுப்பிரமணியத்தின் மைத்துனியும், பிரதீபனின் (ஜேர்மனி)சிறிய தாயும், ஷகிராஜ், ஜயநீ ஆகியோரின் பெரிய தாயும், கஷ்ணி, றதுஷ்மன் ஆகியோரின் பாசமிகு அத்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (19.06.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக [illegible]ரோடை, சங்கம்பிலவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

[illegible] அறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் [illegible] ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கணவர், பிள்ளைகள்,
சகோதரர்கள்

(J/2247)
(11,17,18)

---

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் அழகரட்ணம்



தோற்றம்
02.10.1932

மறைவு
18.06.2016

நவற்கிரி, புத்தூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் அழகரட்ணம் நேற்று (18.06.2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சுந்தரலட்சுமியின் அன்புக் கணவரும், சுப்பிரமணியம், சிவபரஞ்சோதி, பராசக்தி, சிவராசா, சிவகுமார், காலஞ்சென்ற சிவசௌந்தரராஜா ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.06.2016) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக நிலாவரை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவக்கிரி, புத்தூர். (J/2243) (11,17,18)

தகவல்:
பிள்ளைகள்.

---

### சங்கரப்பிள்ளை சுப்பிரமணியம்



யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, கொண்டலடிப் பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை சுப்பிரமணியம் நேற்று (18.06.2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நடேசு-தையல்அம்பாள் தம்பதியரின் மருமகனும் ரஞ்சிதமலரின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கனகம்மா, கந்தசாமி, நடராசா, லோகசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சந்திரமோகன், ராஜமோகன், நாகலோஜினி, மீனலோஜினி, அமுதலோஜினி, கமலலோஜினி, காலஞ்சென்ற பிரேமலோஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும் சுரேஸ்குமார், உதயகுமார், உதயகுமாரி, கில்டா, முகுந்தன், சசிக்குமார், பிரபாகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் கஜானன், சஜித், கஜானி, கார்த்திகன், விசால், கர்ஸ்மினா, கரு னிகா, கரீசன், ஜெகரீஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(19.06. 2016) ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

103/23, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
(17,19)

தகவல்:
குடும்பத்தினர்.
077 4661045

---

## மரண அறிவித்தல்கள்

### அருளப்பா சுந்தரமூர்த்தி



யாழ்.காரைநகர் சிவன்கோயிலடியைப் பிறப்பிடமாகவும் டென்மார்க் Struer ஐ வதிவிடமாகவும் கொண்ட அருளப்பா சுந்தரமூர்த்தி 17.06.2016 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளப்பா(Uma Tonic) - பத்மாவதி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நடராசா - பரஞ்சோதி தம்பதிகளின் அன்பு மருமகனும் சொரூபராணி (டென்மார்க்) அவர்களின் அன்புக் கணவரும் கண்ணதாசன் (பொறியியலாளர் - டென்மார்க்) அவர்களின் அன்புத் தந்தையும் உமாதேவி (இலங்கை), காலஞ்சென்ற கிருஷ்ணமூர்த்தி, சிவராசா(சங்கீதா ராஜன் - இலங்கை) காலஞ்சென்ற தியாகராசா, தவராசா(டென்மார்க்), உத்தரை (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை (21.06.2016) செவ்வாய்க்கிழமை டென்மார்க்கில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சிவன்கோயிலடி,
காரைநகர்.

தகவல்:
அருளப்பா சிவராஜா

---



தோற்றம்
15 . 02 . 1963

மறைவு
18 . 06 . 2016

### சுப்பிரமணியம் ஸ்ரீகாந்தன்
(இல.257, பாரதிநகர், யோகபுரம், மல்லாவி)

இல.257, பாரதிநகர், யோகபுரம், மல்லாவியைப் பிறப்பிடமாகவும் கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணி யம் ஸ்ரீகாந்தன் நேற்று (18.06.2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் வள்ளியம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற க.சிவகுரு மற்றும் ருக்குமணி தம்பதியரின் அன்பு மருமகனும் ஸ்ரீ.சிவநேசத்தின் பாசமிகு கணவரும் அஜித் (ஆஸ்திரேலியா), அருண் , அர்ஜின், அனுசா, அனுசன் ஆகியோரின் அன்பு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.06.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று கோப்பாய் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் மத்தி, கோப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்

தொடர்பு: ஸ்ரீ.சிவநேசம்-077 5284711
ஸ்ரீ.அருண்-077 6399325
(J 2253)
(17,19)

---



பிறப்பு
28 . 01 . 1958

இறப்பு
18 . 06 . 2016

### குழந்தைவேலு யோகரட்ணம் (சிவம்)

சரவணை கிழக்கு வேலணையைப் பிறப்பிடமாகவும் அம்மன் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட குழந்தைவேலு யோகரட்ணம் (சூர்யா லொறி சிவம்) நேற்று (18.06.2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை-செல்லம் தம்பதியரின் அன்பு மருமக னும் பத்மினிதேவியின் பாசமிகு கணவரும் சிந்துஷா, மிதுஷா, சரண்யா ஆகியோரின் அன்புத் தந்தையும் அன்னலட்சுமி, ராஜரட்ணம், காலஞ்சென்ற விஜயலட்சுமி மற்றும் தனலட்சுமி, விஜயரட்ணம் , ராஜலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதர னும் தனேஸ்வரி, இந்திராதேவி, காலஞ்சென்றவர்களான முத்துக்குமார், தவமணிதேவி மற்றும் தர்மராஜா (தர்மு தேங்காய்க் கடை), பரமானந்தம், ஜெயகாந்தன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.06.2016) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்திற்கு பிற்பகல் 2.30 மணியளவில் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்மன் வீதி, திருநெல்வேலி. (J 2258) (17,19)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இ.போ.சபையின் அதிக பஸ் சேவையால் தனியார் பஸ் உரிமையாளர்கள் பாதிப்பு

## பணிப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளோம் என்று வட இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜுன் 19

இலங்கைப் போக்குவரத்துச் சபையினரின் அதிகரித்தசேவையால் தனியார் தூர சேவைப் பஸ் உரிமையாளர்கள் பாதிப்படைந்துள்ளார்கள். இது தொடர்பாக வடமாகாணப் போக்குவரத்து அமைச்சுக்கு முறைப்பாடு கொடுக்கப் பட்டு, போக்குவரத்து அமைச்சரால் அது குறித்து விசாரிக்கப்பட்ட போதும் இதற்கான ஒரு தீர்வும் இதுவரை கிடைக்கவில்லை. அதனால் வட இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தினர் எதிர்வரும் 27 ஆம் திகதி பணிப்புறக் கணிப்புச் செய்யத் தீர்மானித்துள்ளனர். - இவ்வாறு வட இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தினர் தெரிவித்தனர்.

இதுகுறித்து அவர்கள் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டதாவது–

தனியார் போக்குவரத்துச் சேவையினரின் முறைப்பாட்டை ஆராய்ந்த போக்குவரத்து அமைச்சர், ஏற்கனவே நடைமுறையில் இருந்த தனியாருக்கு 60 வீதமும், இலங்கை போக்குவரத்துச் சபைக்கு 40 வீதமும் என்ற அடிப்படையில் இணைந்த நேர அட்டவணை தயாரிப்பதற்காக வடமாகாணத்தின் 5 மாவட்டச் செயலக கணக்காளர்கள், தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர்கள், வட இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்க நிர்வாகிகள், இலங்கைப் போக்குவரத்துச் சபையின் அதிகாரிகள் ஆகியோரை அழைத்து கிட்டத்தட்ட முப்பதுக்கும் மேற்பட்ட அமர்வுகளை நடத்தி அவர்களின் ஆலோசனையுடன் ஓர் இணைந்த நேர அட்டவணையைத் தயாரித்தார்.

கடந்த ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி நடைபெற்ற இறுதிக் கூட்டத்தில் நேர அட்டவணையில் சில திருத்தங்கள் செய்யப்பட்டு இரு சாராரின் சம்மதத்துடன் கடந்த மே மாதம் முதலாம். திகதியிலிருந்து புதிய நேர அட்டவணையின் அடிப்படையில் சேவைகள் ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப் பட்டது. அந்த அறிக்கையில் பொதுமக்களின் பாதுகாப்பான பயணத்துக்கும், வீதி விபத்துக்களை எதிர்காலத்தில் ஏற்படாமல் தவிர்ப்பதற்கும், உயர் நீதிமன்றின் அறிவுறுத்தல்களை நடைமுறைப்படுத்துவதற்காகவும், வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் முழுமையான சம்மதத்துடன் கையொப்பம் இட்டது.

புதிய நேர அட்டவணையில் சேவைகள் ஆரம்பிப்பது தொடர்பாக போக்குவரத்து அமைச்சரைத் தொடர்புகொண்டபோது இலங்கைப் போக்குவரத்துச் சபையினர் புதிய நேர அட்டவணையில் கையொப்பம் இடுவதற்குப் பின்னடிக்கிறார்கள் என்றும் எப்படியும் மே மாதம் 4 ஆம் திகதி இணைந்த நேர அட்டவணையின் அடிப்படையில் சேவைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் சங்கத்துக்கு உறுதியளித்தார்.

இலங்கை போக்குவரத்துச் சபையினர் இணைந்த நேர அட்டவணையில் சேவையாற்ற முன்வராது அதிகரித்த சேவைகளை நடத்தி தனியார் பஸ் உரிமையாளர்களைப்பலிக்கடாக்களாக்க முயற்சிக்கின்றார்கள். மே மாதம் 10 ஆம் திகதிக்கு முன் தயாரிக்கப்பட்ட இணைந்த அட்டவணையில் இலங்கைப் போக்குவரத்துச் சபை சேவையாற்ற மறுக்கும் பட்சத்தில் வடமாகாணத்தில் தூர சேவைகளை மேற்கொள்ளும் ஐந்து சங்கங்களின் அமைப்பான வட இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் மே மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்து, போக்குவரத்து அமைச்சர் மற்றும் ஊடகங்களுக்கும் அறிவித்திருந்தோம். இந்த அறிவித்தலின் பின் போக்குவரத்து அமைச்சரின் முயற்சியால் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வட பிராந்திய முகாமையாளர், வடக்கு மாகாணசபை ஆளுநர் அலுவலகத்தில் மே மாதம் 7 ஆம் திகதி ஆளுநர், வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர், அமைச்சரின் செயலாளர் வ.சத்தியசீலன், அகில இலங்கை தனியார் போக்குவரத்துச் சங்கத் தலைவர் கெமுனு விஜயவர்த்தனா, வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத் தலைவர் சி.சிவபரன் ஆகியோரது முன்னிலையில் அமைச்சரால் தயாரிக்கப்பட்ட இணைந்த நேர அட்டவணையில் முழுமையான உடன்பாட்டுடன் கையொப்பம் இட்டார்.

இணைந்த நேர அட்டவணையின் பிரகாரம் விரைவில் சேவையாற்றமுடியும்என்றஅமைச்சரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக மே மாதம் 16 ஆம் திகதி நடைபெறவிருந்த பணிப் புறக்கணிப்புக்கான அறிவித்தல் கால வரையறை இன்றி பிற் போடப்பட்டுள்ளது என்று நாம் அறிவித்தோம். ஆனால் எமது பணிப்புறக் கணிப்பு பிற்போடப்பட்டு ஒரு மாத காலமாகியும் இன்றுவரை அந்த நேர அட்டவணையின் அடிப்படையில் சேவைகளுக்கு ஆவன செய்யப்படவில்லை. எமது கடுமையான கட்டுப்பாட்டில் இணைந்த நேர அட்டவணை விரைவில் நடைமுறைப்படுத்தப் படும் என்ற நோக்குடன் சேவையாற்றிய உரிமையாளர்கள் தற்போது அதில் நம்பிக்கை இழந்துள்ளார்கள்.

இதனால் எமது நிர்வாக சபைக் கூட்டத்தில் இந்த நிலை ஆராயப் பட்டு, எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன் இந்த நேர அட்டவணையில் சேவையாற்ற சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை மேற் கொள்ளாதவிடத்து எதிர்வரும் 27 ஆம் திகதி முதல்வட இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் சேவைகளை முழுமையாகப் புறக்கணிப்பது எனவும், எமதுநிலைப்பாட்டைச் சம்பந்தப்பட்டவர்களுக்கு கடிதம் மூலமாகவும் ஊடகங்கள் ஊடாகவும்அறிவிக்கதீர்மானித்துள்ளோம். இந்தப் போராட்ட காலத்தில் தனியார் பஸ் உரிமையாளர் களுக்கு தொடர்பு இல்லாத விசமிகள் இந்தப் போராட்ட காலத்தில் சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்களுக்கு ஏற்படுத்தும் பாதிப்புக்களைத் தவிர்ப்பதற்காக அவர்களின் போக்குவரத்துச் சேவைகளையும் தவிர்ப்பது தொடர்பாக ஆவன செய்யுமாறும் கேட்டுக் கொள்கிறோம்– எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. (ற–ரி)

# எதிர்வரும் ஒக்ரோபர் மாதமளவில் அமைச்சரவையில் பெரும் மாற்றம்

## ஜனாதிபதி மைத்திரிபால முடிவு

கொழும்பு, ஜுன் 19

அமைச்சரவையில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதமளவில் பெரும் மாற்றங்களைக் கொண்டுவர ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இலக்காகக் கொண்டும், சில அமைச்சர்கள் முகங்கொடுத்துள்ள குற்றச்சாட்டுக்களைக் கருத்திற்கொண்டும் ஜனாதிபதி இந்த அதிரடி நடவடிக்கைக்குத் தயாராகி வருகின்றார் என்று கூறப்படுகின்றது.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் அடுத்த வருட முற்பகுதியில் நடைபெறும் என்று ஜனாதிபதி ஏற்கனவே தெரிவித்திருந்தார். தேசிய அரசு என்ற போதிலும், உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் வெவ்வேறாகச் செயற்பட இரண்டு பிரதான கட்சிகளும் எதிர்பார்த்துள்ளன. தேர்தலை எதிர்கொள்ளத் தேவையான முதற்கட்ட நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றன.

இது இவ்வாறிருக்க சில அமைச்சர்களது செயற்பாடுகள் திருப்திகரமாகவும், திறனாகவும் இல்லை என்ற முறைப்பாடு ஜனாதிபதி பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

அதையடுத்து அமைச்சரவையில் மாற்றம் கொண்டு வந்து, அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என்று அறிய முடிகின்றது. (ற–ஜ–4)

# மாற்றுத் திறனாளிகளுக்கான முன்பள்ளி மையம் தேவை

## மருத்துவர் எம்.மலரவன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜுன் 19

சைகை மொழி ஆய்வு மையம் ஒன்றும், மாற்றுத்திறனாளிகளுக்கான முன்பள்ளி மையமும் நவீல்ட் பாடசாலையில் உருவாக்கப்பட வேண்டும் என மருத்துவர் எம்.மலரவன் தெரிவித்தார்.

கைதடி நவீல்ட் பாடசாலையின் பரிசளிப்பு விழா அண்மையில் பாடசாலை முகாமையாளர் ஜி.சாள்ஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தெரிவித்ததாவது–

இலங்கைச் சைகை மொழியை மட்டும் எமது ஆசிரியர்கள் கற்காது பிறநாட்டுச் சைகை மொழிகளையும் கற்று அவற்றை எமது மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டும். எமது மாணவர்களைப் புதிய புதிய தொழிற்பயிற்சிகளில் ஈடுபடுத்திப் பயிற்சி அளிக்க வேண்டும். மாற்றுத் திறனாளிகளில் செவிப்புலக்குறைபாடு உள்ள மாணவர்களின் திறன்களைக் கண்டறிந்து அவற்றின் ஊடாக அவர்களை வழிப்படுத்த வேண்டும்.– என்றார்.

இந்த நிகழ்வில் யாழ். வலய விசேட கல்விக்குரிய ஆசிரிய ஆலோசகர் செல்வி சந்திரிகா நவரட்ணமும், பரிசுத்த கன்னி மரியாள் ஆலய பங்குத் தந்தை அருட்பணி இ.ஐ.ஜெயராஜும், பாடசாலை அதிபர் வாசுகி இராஜசிங்கமும் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். (ற–ரி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புற்றுநோய் வைத்தியசாலைகளுக்கு அடுத்த வருடமும் நிதி ஒதுக்கப்படும்

### இராஜங்க அமைச்சர் விஜயகலா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜுன் 19
தெல்லிப்பழை, மாத்தறை மற்றும் கண்டியிலுள்ள புற்று நோய் வைத்திய சாலைகளுக்கு இந்த ஆண்டு ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டதைப் போன்று, அடுத்த ஆண்டும் ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்படும் - இவ்வாறு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன உறுதியளித்துள்ளார் என இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

கடந்த வருட வரவு-செலவுத் திட்டத்தில் தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலைக்கு ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் கடந்த மாதம் 30 ஆம் திகதி தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முக்கியமானதொரு விடயம் தெரிவிக்கப்பட்டிருந்தது. தெல்லிப்பழை, மாத்தறை, கண்டி ஆகிய மூன்று புற்றுநோய் வைத்தியசாலைகளுக்கும் சேர்த்தே ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தாகக் குறிப்பிட்டுக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெல்லிப்பழை வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் கூட்டத்தில் குறிப்பிட்டிருந்தார். இதன் பின்னர் கடந்த மாதம் 31 ஆம் திகதி யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இடம்பெற்றது. இதிலும் மேற்படி விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

இதன்போது இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு ஒதுக்கிய நிதியை வழங்கவேண்டும் எனக் கோரி, சுகாதார அமைச்சர் ராஜித மற்றும் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகியோருக்குக் கடிதம் அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். இது தொடர்பில் என்ன பதில் கிடைக்கப்பெற்றுள்ளது என்று இராஜாங்க அமைச்சரிடம் வினவியபோது, மூன்று வைத்தியசாலைகளுக்கும் சேர்த்தே ஆயிரம் மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளன. மாகாண வைத்தியசாலைக்கு ஆயிரம் மில்லியன் ஒதுக்கீடு செய்து அவர்கள் குறுகிய காலத்துக்குள் கேள்வி கோரல் மேற்கொண்டு, வருட இறுதிக்குள் பணிகளை முடிக்க முடியாது. வருட இறுதிக்குள் செய்து முடிக்கப்படாவிட்டால் நிதி திறைசேரிக்கு மீளச் செல்லும். எனவே மூன்று வைத்தியசாலைகளுக்கும் சேர்த்து இந்த ஆண்டு ஆயிரம் மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. இதே போன்று அடுத்த ஆண்டும் ஒதுக்கப்படும் என்று சுகாதார அமைச்சர் உறுதியளித்துள்ளார் - என்றார். (த-ஐ-5)

## பொதுக்கூட்டம்

சாவகச்சேரி, ஜுன் 19
கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் இன்று பி.ப. 4 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என்று அதிபர் கு.ரவீந்திரா அறிவித்துள்ளார். (ற-9)

# தென்மராட்சிக் கடலோரிக் கரைகளில் வேறு பகுதியினரின் வாடிக்குத் தடை

சாவகச்சேரி, ஜுன் 19
தென்மராட்சிப் பிரதேச கட லோரியின் கரைகளில் ஏனைய பிரதேசங்களைச்சேர்ந்த கடற்றொழிலாளர்கள் வாடி அமைத்து தொழில் செய்ய பிரதேச செயலகத்தால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனை மீறுவோர்மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலிலேயே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட் டுள்ளது.

பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தலைமையில் நடை பெற்ற கலந்துரையாடலில் வட மாகாண நீரியல் வளத்துறை திணைக்கள உதவிப் பணிப்பாளர் சுரேஷ்கண்ணா, கடற்றொழில் பரிசோதகர் மகேஸ்வரன் மற்றும் பிரதேசத்தைச் சேர்ந்த கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

நீண்டகாலமாக தென்மராட்சி கடலோரியில் பிற பிரதேசங்களைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்ட போதிலும், தொழிலாளர்களிடையே காணப்பட்ட ஒற்றுமையின்மையால் கரைகளில் வாடி அமைக்கப்படுவதில்லை.

கேரதீவு கடலோரி படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த காலத்தில் தென்மராட்சிப் பிரதேச கடற் றொழிலாளர்கள் அந்தப் பகுதிக்குச் செல்ல முடியாததால், ஏனைய பிரதேச கடற்றொழிலாளர்கள் வாடி அமைத்து தொழில் செய்து வந் துள்ளனர். தென்மராட்சி பிரதேச கடற்றொழிலாளர்கள் ஏனைய கடற் பிரதேசத்தில் தொழில் செய்யக் கூடிய வசதிகளற்றவர்களாகக் காணப்படுவதால், பிரதேச கடலோரியை நம்பி வாழ்கின்றனர்.

ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் இங்கு வந்து வாடி அமைத்து தொழில் செய்வதால், தென்மராட்சி பிரதேச கடற்றொழிலாளர்கள் தமது வாழ்வாதாரத்துக்குப் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என பிரதேச சங்கங்களால் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

யாழ்ப்பாணம், அரியாலை போன்ற இடங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் தமது கடற் பரப்பில் தொழில் செய்யும் அதேநேரத்தில், தென்மராட் சிப் பிரதேச கடலோரிகளிலும் தொழில்களை மேற்கொண்டு பிரதேச தொழிலாளர்களின் நாளாந்த உழைப்பில் கை வைப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் தெரிவித்தனர். அதையடுத்து மேற்குறித்த தீர்மானம் எட்டப்பட்டது.

கடற்றொழிலாளர்களுக்கு உதவிப் பொருள்கள் வழங்கும் போது, தென்மராட்சிப் பிரதேச கடற்றொழிலாளர்கள் பலர் புறக்கணிக்கப்பட்டு எந்த உதவியும் வழங்கப்படவில்லை. இணைப்பு இயந்திரம் பொருத்தியுள்ள படகுகளின் உரிமையாளர்களுக்கே தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான கடற் றொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டு மானிய எரி பொருள்களும் வழங்கப்பட்டன.

ஏனைய ஏழைத் தொழிலாளர்களுக்கு எந்தவொரு உதவிப் பொருள்களும் இதுவரை வழங்கப்படவில்லை என்றும் கலந்துரையாடலில் மீனவர்கள் சுட்டிக் காட்டினர். (ற-ஐ-9)

## இலக்கிய விமர்சனத்தில் முதலிடம்

யாழ்ப்பாணம், ஜுன் 19

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மாணவி யாணசெல்வி சதுஷா நந்தகுமார் இலக்கிய விமர்சனப் போட்டியில் மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார் என பாடசாலை பிரதி அதிபர் ஆர். சிவலிங்கம் தெரிவித்துள்ளார். இவர் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளார். (ற-ரி)

## முல்லைதீவுக்கு வடக்கு மாகாண சபை சத்தமில்லாது அநீதி இழைத்துவிட்டது

### நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிவமோகன் ஆதங்கம்



முல்லைத்தீவு, ஜுன் 19
வடக்கு மாகாண சபை முல்லைத்தீவு மாவட்டத்துக்கு சத்தமில்லாது அநீதி இழைத்து விட்டது -இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிவமோகன் தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை முல்லைத்தீவு-புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்ட ஆய்வுகூடத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தெரிவித்ததாவது:
வடமாகாணத்தில் உள்ள பாடசாலைகளில், தொழில்நுட்ப பீடங்கள் உள்ள பாடசாலைகளில் ஒன்றாக முல்லைத்தீவு-புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியும் உள்வாங்கப்பட்டிருந்து. ஆனால் தற்போது இந்தப் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அந்த அட்டவணையில் இருந்து நீக்கப்பட்டுள்ளது.

கல்வி இராஜாங்க அமைச்சர் கல்விக்காக போராடியவர், மலை நாட்டில் துணை ஆசிரியர்களின் நியமனத்துக்காக போராடியவர், தன்னுடைய பதவியைக்கூட தூக்கி எறியத் துணிந்தவர். அதன் மூலம் இன்று மலையக ஆசிரியர்கள் துணையாசிரியர்கள் பட்டியலில் உள்வாங்கப்பட்டிருக்கிறார்கள்.

ஆனாலும் போரால் முற்றாக அடித்து நொருக்கப்பட்ட இந்த மாவட்டத்துக்கு அமைதியாக ஓர் அநியாயம் நடந்துள்ளது என்பது கவலைக்குரிய விடயம்.

வடமாகாணத்தில் ஓர் அமைதியான அநியாயம் இந்த மண்ணில் நிறைவேறி இருக்கின்றது. போரால் அழித்தொழிக்கப்பட்ட மண்ணான முல்லைத்தீவுக்கு, நிச்சயமாக முதலாவதாக ஓர் இடம் கொடுத்து தொழில்நுட்பபீடத்தை அமைத்திருக்க வேண்டும்.

ஆனால் அதற்குப் பொறுப்பான நிதியில், முதலாவதாக யாழ்ப்பாணம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, இரண்டாவதாக ஹாட்லிக் கல்லூரி, மூன்றாவதாக வவுனியா சைவப்பிரகாச கல்லூரி, நான்காவதாக மன்னார் சித்திவிநாயகர் இந்து கல்லூரி ஆகியன அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளன. யாழ் மாவட்டத்தில் தொழில் நுட்பக்கல்லூரி, பல்கலைக் கழகம் மற்றும் வளர்ச்சி அடைந்த பெரிய பாடசாலைகள் உள்ள இடத்தில் ஒரு சில கிலோமீற்றர் தூரத்தில் இரண்டு பாடசாலைகள் தொழில்நுட்ப பீடங்களாக குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

ஆனால் இந்த புதுக்குயிருப்பு மத்திய கல்லூரி அந்த அட்டவணையில் இருந்து எடுக்கப்பட்டு விட்டது என்பது கசப்புக்குரிய, கவலைக்குரிய விடயம்.

இது மட்டுமல்ல, இந்த நிதி மத்திய அரசிடம் இருந்து வரவில்லை. இந்த நிதி சி.எவ். என்றுதான் போடப்பட்டிருக்கின்றது. "சீவ் மினிஸ்ரர் ஓவ் பண்ட்". எனவே இந்த அநியாயம் வடமாகாண சபையிலேயே நடத்தப்பட்டிருக்கின்றது என்பது தெரிய வருகிறது.

இதனைத்தட்டிக் கேட்க வேண்டும். எமக்குரிய இந்தப் பாடசாலை மீண்டும் தொழில்நுட்ப பீடம் உள்ள பாடசாலை என்ற இடம் இங்கே வழங்கப்பட வேண்டும். அதற்காக இன்றே நான் முயற்சிகளை எடுப்பேன்.

வடமாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் முதலமைச்சரிடம் நேரடியாக இந்தப் பிரச்சினையை முன்வைப்பேன் -என்றார்.

நடாளுமன்ற உறுப்பினருடைய கருத்தை அடுத்து உரையாற்றிய கல்வி இராஜாங்க அமைச்சர், இந்தப் பாடசாலையினுடைய தொழில்நுட்ப பீடம் ஒன்று தற்போது இல்லாமல் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. உண்மையிலே மாகாண சபையில் இருந்து விவரம் ஒன்று வாசிக்கப்பட்டது. அதனடிப்படையிலேயே மத்திய அரசிடம் இருந்து அதற்கான நிதி கொடுக்கப்பட உள்ளது. புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியிலும் மூன்று தொழில்நுட்ப பீடத்துக்கான மூன்று மாடி கட்டடம் அமைத்து தரப்படும் என்று அவர் தெரிவித்தார். (ற-ஐ-21,ரி7)

நன்றி நவிலல்



திருமதி புவனேஸ்வரி லோகநாதன்
(சிரேஷ்ட விரிவுரையாளர் உயிரியல் விஞ்ஞானத்துறை, பிரயோக விஞ்ஞானபீடம், வவுனியா வளாகம், யாழ். பல்கலைக்கழகம்)

சுதுமலை வடக்கு, மானிப்பாய் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் இல.25, வைத்தியசாலை சுற்றுவட்ட வீதி, வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட எனது குடும்பத்தலைவி கடந்த 10.06.2016 சிவபதமடைந்த செய்தி அறிந்து நேரடியாக இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும்,மலர்வளையம், துண்டுப்பிரசுரம்,பதாகைகள் மூலம் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், தொலைபேசி ,மின்னஞ்சல் ஊடாக துயர் பகிர்ந்தவர்களுக்கும் எனது மனம் நெகிழ்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இல.25,
வைத்தியசாலை சுற்றுவட்ட வீதி,
வவுனியா.

கணவர்
திரு.இராமநாதன் லோகநாதன்

(13.17.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணல் அனுமதிப் பத்திரத்தில் குளறுபடி; சாரதிக்கு அபராதம்

சாவகச்சேரி, ஜூன் 19

மணல் ஏற்றுவதற்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தில், குளறுபடி செய்து மணல் ஏற்றிய சாரதிக்கு 75 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

குறித்த டிப்பர் சாரதியைக் கொடிகாமத்தில் வைத்து, பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் நேற்றுமுன்தினம் முற்படுத்தினர். அவர் பிரதேச செயலகத்தால் தனக்கு வழங்கப்பட்டிருந்த மணல் ஏற்றிச் செல்வதற்கான அனுமதிப் பத்திரத்தில் குளறுபடி செய்தார் என்றும், அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றி வந்தார் எனவும் கொடிகாமம் பொலிஸாரால், சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிவான் டிப்பர் சாரதி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றியமைக்கு 75 ஆயிரம் ரூபாவும், அனுமதிப் பத்திரத்தில் குளறுபடி செய்தமைக்காக ஆயிரம் ரூபாவுமாக மொத்தம் 76 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். (த-ஐ-9)

# கல்முனை இஸ்லாமியப் பெண்ணின் தூக்கை ஆயுள் தண்டனையாக்குங்கள்

## நீதிபதி இளஞ்செழியன் ஜனாதிபதிக்குப் பரிந்துரை

யாழ்ப்பாணம், ஜூன் 19

கல்முனை இஸ்லாமிய பெண்ணின் தூக்குத் தண்டனையை, ஆயுள் தண்டனையாகக் குறைக்குமாறு நீதிபதி இளஞ்செழியன் ஜனாதிபதிக்குப் பரிந்துரைத்துள்ளார்.

கல்முனை நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பகுதியில் கடந்த 2003 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் சின்னலெப்பை அலாவுதீன் என்பவரைக் கொலை செய்ததாக அவரது மனைவி கலந்தர் ரூபியா என்ற பெண்ணுக்கு கடந்த 6 ஆம் திகதி நீதிபதி இளஞ்செழியன் கல்முனை மேல் நீதிமன்றத்தில் சாவுத் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்திருந்தார். இந்த சாவுத் தண்டனையையே ஆயுள் தண்டனையாகக் குறைக்குமாறு அவர் ஜனாதிபதிக்குப் பரிந்துரைத்துள்ளார்.

ஒரு வழக்கில் சாவுத்தண்டனைத் தீர்ப்பு வழங்கிய பின்னர், அந்தத் தீர்ப்பை வழங்கிய நீதிபதி, தண்டனை விதிக்கப்பட்டவரை, தூக்கிலிட வேண்டுமா என்பது குறித்து, தனது தனிப்பட்ட அபிப்பிராயத்தை ஜனாதிபதிக்குப் பரிந்துரை செய்ய வேண்டும் என்ற சட்ட ரீதியான கடப்பாடு உள்ளது. அதனடிப்படையில் நீதிபதி இளஞ்செழியன் இந்தப் பரிந்துரையைச் செய்துள்ளார்.

அதன்படி, தண்டனை விதிக்கப்பட்டவர் ஒரு பெண்ணாகவும், 3 பிள்ளைகளின் தாயாகவும் இருப்பதால் அவருக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையைக் குறைத்து ஆயுள் தண்டனையாக நடைமுறைப்படுத்தவேண்டும் அல்லது ஜனாதிபதி விரும்புகின்ற குறைந்தபட்ச தண்டனையை நடைமுறைப்படுத்தும் படியும் கேட்டுள்ளார்.

போர்க்குற்றம் புரிந்த குற்றவாளிகளுக்குக் கூடச் சாவுத் தண்டனை இல்லையெனச் சர்வதேச போர்க் குற்றவியல் நீதிமன்றமும், ஐ.நா சர்வதேச குற்றவியல் நீதிமன்றமும் பிரகடனம் செய்துள்ளன. இலங்கையில் சாவுத் தண்டனைத் தீர்ப்பளிக்கப்படவேண்டும் எனச் சட்டப் புத்தககத்தில் கூறப்பட்டுள்ளது.

இருப்பினும் 1974 ஆம் ஆண்டின் பின்னர் பதவிக்கு வந்த ஜனாதிபதிகள், சாவுத் தண்டனை ஆவணத்தில் கையொப்பம் இடாதபடியால் சாவுத் தண்டனை நிறைவேற்றப்படாத நிலை இலங்கையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. நடைமுறையில் உள்ள இந்த இரண்டு காரணங்களின் அடிப்படையில் சாவுத் தண்டனை பெற்றுள்ள இஸ்லாமியப் பெண்ணின் சாவுத் தண்டனையைக் குறைத்து, அவர் உயிருடன் வாழ்வதற்கான சுதந்திரத்தை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன் என்றும் நீதிபதி தனது பரிந்துரையில் தெரிவித்துள்ளார். (த-ஐ-4)

# உள்ளகப் பொறிமுறை குறித்து ஐ.நாவில் விளக்குவார் மங்கள

> இவ்வருடம் பெப்ரவரி மாதம் இலங்கைக்குப் பயணம் மேற் கொண்டிருந்த ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் செயிட் அல்ஹுசேன், சர்வதேச நீதிபதிகளை கொண்டு வருவதா இல்லையா என்பதை இலங்கை அரசே தீர்மானிக்க வேண்டும் என்று கூறியிருந்தார்.

கொழும்பு, ஜூன் 19

ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையின் 32 ஆவது கூட்டத் தொடரில் எதிர்வரும் 29 ஆம் திகதி வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர உரையாற்ற வுள்ளார். அரசு முன்னெடுக்கவுள்ள உள்ளக விசாரணைப் பொறி முறையின் வடிவம் குறித்தும், அதன் கட்டமைப்புத் தொடர்பாகவும் அவர் விளக்கமளிப்பார் என வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தகவல் தெரிவித் துள்ளன.

எவ்வளவு காலப்பகுதியில் இந்த உள்ளக விசாரணைப் பொறி முறை முன்னெடுக்கப்படுமென்றும், எந்த அடிப்படையில் பாதிக்கப்பட்டோருக்கு நீதி நிலை நாட்டப் படுமென்றும் வெளி விவகார அமைச்சர் மங்கள சமரவீர ஜெனிவாவில் தனது உரையின் ஊடாக விளக்கமளிக்கவுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான பிரேரணைக்கு அமைவாக, அரசு உள்ளக விசாரணைப்பொறிமுறையை முன்னெடுப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அது தொடர்பிலும், அரசால் அமைக்கப்படவுள்ள காணாமல் போனோர் குறித்து ஆராயும் நிரந்தர அலுவலகம் தொடர்பிலும் மங்கள எடுத்துரைக்கவுள்ளார்.

அதுமட்டுமன்றி சர்வதேச நீதிபதிகளை உள்ளக விசாரணைப் பொறிமுறையில் உள்ளடக்க மாட்டோம் என்ற தகலையும் அமைச்சர் மங்கள சமரவீர தனது உரையில் வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன தொடர்ச்சியாக தான் எக் காரணம் கொண்டும் உள்ளக விசாரணைப் பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகளை ஈடுபடுத்தப் போவதில்லை என கூறிவருகின்றார்.

இது இவ்வாறிருக்க எதிர்வரும் 29 ஆம் திகதி செயிட் அல்ஹுசேன் இலங்கை தொடர்பான வாய் மூல அறிக்கையை வெளியிடவுள்ளார். அதன் பின்னரே அமைச்சர் மங்கள சமரவீர இலங்கையின் சார்பில் உரை யாற்றவுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 32 ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாகியிருந்த நிலையில் முதலாவது அமர்வில் உரையாற்றிய ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் செயிட் அல் ஹுசேன், இலங்கையானது நீதி வழங்கும் செயற்பாடு தொடர்பான பொறிமுறையின் உபாய மார்க்கத்தை வெளியிட வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தார்.

அமைச்சர் மங்கள சமரவீர தனது உரையில் இது தொடர்பான அனைத்து விடயங்களையும் உள்ளடக்குவார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வருடம் பெப்ரவரி மாதம் இலங்கைக்குப் பயணம் மேற் கொண்டிருந்த ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் செயிட் அல்ஹுசேன், சர்வதேச நீதிபதிகளை கொண்டு வருவதா இல்லையா என்பதை இலங்கை அரசே தீர்மானிக்க வேண்டும் என்று கூறியிருந்தார்.

ஆனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை வழங்கும் செயற்பாடானது நம்பிக்கை தருவதாக அமைய வேண்டும் என்றும் செயிட் அல்ஹுசேன் கூறியிருந்தார். (ற-ஐ-4)

# கிழக்கு பல்கலைக்கழகத்தில் பால் நிலை அலகு ஆரம்பிப்பு

கொழும்பு, ஜூன் 19

இலங்கை பல்கலைக்கழக வரலாற்றில் முதன் முறையாக கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பால் நிலைச் சமத்துவம் மற்றும் சமனிலைக்கான அலகு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த அலகு வாழ்நாள் பேராசிரியர் கலாநிதி உமா குமாரசுவாமியின் முயற்சியால் உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் தேவையறிந்து இலங்கைப் பல்கலைக்கழக ஆணைக் குழு இதற்கான ஒரு நிலைக் குழுவொன்றை அமைத்துள்ளது. பல்கலைக் கழகத்துக்கு உள்வாங்கிக் கொள்ளப்படும் மாணவர்கள் அதிகமாகப் பகிடிவதைகளுக்கும், பாலியல் துன்புறுத்தல்களுக்கும் உள்ளாகின்றனர்.

இந்தப் பிரச்சினையை அடியோடு அழிக்கும் வகையிலும், அது தொடர்பாக மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தல் மற்றும் இவ்வாறான குற்றங்களுக்கான முறைப்பாடுகளை வழங்கும் பொறிமுறைகளைக் கட்டமைத்தல் என்பனவும் இந்த அலகின் முக்கிய செயற்பாடு என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-4)

# பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 19

புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது என்று அதன் செயலாளர் தெரிவித்துள்ளார்.

பாடசாலையின் 140 ஆவது ஆண்டு நிறைவையொட்டி செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளதால் அனைத்து பழைய மாணவர்களையும் கலந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்துள்ளார். (ற-ரி)

# ஆதாரம் காட்டி கைப்பையை பெறலாம்

யாழ்ப்பாணம், ஜூன் 19

யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்தினுள் ஒரு தொகைப் பணத்துடன் கைப்பை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது என்றும், உரியவர்கள் தகுந்த ஆதாரத்தைக் காட்டி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் வைத்திய சாலைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ற-ரி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய வங்கியின் ஆளுநரைப் பதவியில் வைத்திருக்க பிரதமர் கடும் பிரயத்தனம்!

## பல்வேறு தரப்பினருடனும் பேச்சு

கொழும்பு, ஜூன் 19
மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனைத் தொடர்ந்து அந்தப் பதவியில் நீடிக்கச் செய்வதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பல்வேறு பொது அமைப்புக்களுடனும் பேச்சு நடத்தி வரும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சில தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடனும் தொலைபேசியில் உரையாடியுள்ளார் என்று தெரியவருகிறது.

அர்ஜுன மகேந்திரன் தனது பொருளாதாரக் கொள்கைகளை நன்றாக அறிந்து வைத்துள்ளார் எனவும், அவரையே மத்திய வங்கியின் ஆளுநராக தொடர வேண்டும் என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். பிரதமரின் கோரிக்கைக்கு ஜனாதிபதி எவ்வாறான பதிலை வழங்கினார் என்பது குறித்து இதுவரை தெரியவரவில்லை.

இதேவேளை – சமூக நீதிக்கான மக்கள் இயக்கத்தின் தலைவர் பேராசிரியர் சரத் விஜயசூரியவைச் சந்தித்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அர்ஜுன மகேந்திரன் மத்திய வங்கியின் ஆளுநராகத் தொடர்ந்து நீடிக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 30 ஆம் திகதியுடன் அர்ஜுன மகேந்திரனின் பதவி நிறைவடையவுள்ள நிலையில், ஜனாதிபதி எவ்வாறான தீர்மானத்தை எடுப்பார் என அனைத்து தரப்பினரும் எதிர்பார்த்துள்ளனர்.

அண்மையில் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற நிதியமைச்சர் ரவி கருணாநாயகவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தின் போது உரையாற்றிய சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் அர்ஜுன மகேந்திரன் பதவியில் மீண்டும் அமர்த்தப்படக்கூடாது என வலியுறுத்தினர். அந்த விவாதத்தில் உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்கள், அர்ஜுன மகேந்திரனுக்கு ஆதரவாக பேசியிருந்தனர்.

சில தினங்களுக்கு முன்னர் செய்தியாளர் மாநாடொன்றை நடத்திய அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல அர்ஜுன மகேந்திரன் மத்திய வங்கி ஆளுநர் பதவியில் நீடிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார்.

மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை அந்தப் பதவியில் தொடர்ந்தும் அமர்த்துவது தொடர்பில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் குறித்து ஆராய ஐக்கிய தேசியக் கட்சியினதும் சுதந்திரக் கட்சியினதும் பிரதிநிதிகளை கொண்ட குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

அர்ஜுன மகேந்திரன் தொடர்ந்தும் பதவியில் நீடிக்க வைக்க வேண்டுமாயின் ஜனாதிபதியே தீர்மானம் எடுக்க வேண்டும்.

அதேவேளை, மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரனின் பதவி நீடிப்பு தொடர்பில் நிதி அமைச்சரின் ஆலோசனைக்கமைவாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானம் எடுப்பார் என்று அரச தொழில் முயற்சி பிரதி அமைச்சர் எரான் விக்கிரமரட்ன தெரிவித்தார்.

குறித்த பதவியில் தொடர்ந்தும் நீடிப்பதா? இல்லையா? என்பது தொடர்பில் தனது நிலைப்பாட்டை மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் இன்னும் அரசுக்கு அறிவிக்க வில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மத்திய வங்கி ஆளுநர் விவகாரம் குறித்து இன்று பெரிதும் கருத்துக்கள் வெளியாகின்றன. இது புது விடயமல்ல. ஒரு வருட காலமாக இது தொடர்பில் பேசப்படுகின்றது. எவ்வாறாயினும் இந்த விடயம் தொடர்பில், நிதி அமைச்சரின் ஆலோசனைக்கு அமைவாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே தீர்மானம் எடுப்பார்.

தேசிய அரசில் இணைந்துள்ள அமைச்சரவை அந்தஸ்துள்ள பதவிகளில் இருப்பவர்கள் ஐக்கிய தேசியக் கட்சி, , சுதந்திரக் கட்சி என்று வேறுபட்ட கருத்துக்ளை வெளியிடுவது கவலைக்குரியதாகும் – என்று எரான் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, மத்திய வங்கி ஆளுநர் கோப் குழுவின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைக்கவில்லை என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரும், கோப் குழுவின் தலை வருமான சுனில் ஹந்துன்நெத்தி குற்றஞ்சாட்டியுள்ளார்.

(ற-ஜ-4)

## வற் வரி அதிகரிப்புக்கு எதிராக மகரகமவில் முழு கடையடைப்பு

கொழும்பு, ஜூன் 19
வற்வரி அதிகரிக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து, கொழும்பு மகரகம நகரில் வர்த்தகர்கள் முழு அடைப்புப் போராட்டம் மற்றும் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை முற்பகல் முன்னெடுக்கப்பட்டது. மொத்த மற்றும் சில்லறை வர்த்தகர்கள் மகரகம வர்த்தகர் சங்கத்துடன் இணைந்து இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

மகரகம பமுனுவ ஆலய வீதியிலிருந்து ஆரம்பமாகிய பேரணி, நகர மத்தியில் வந்து முடிவடைந்ததோடு அதன் பின்னர் ஆர்ப்பாட்டமும் நடத்தப்பட்டது. (து-ஜ-5)










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்க பொறிமுறைக்கான யோசனை சமர்ப்பிக்கும் காலம் வெள்ளியுடன் நிறைவு

பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்தும் பொருட்டு, உண்மைகளைக் கண்டறிவதற்காக நல்லிணக்கப்பொறிமுறைகள் பற்றிய கலந்தாலோசனைக்கான செயலணி, பொது மக்களிடமிருந்து யோசனைகளைப் பெற்றுக் கொள்ளும் கால எல்லை எதிர்வரும் வெள்ளிக் கிழமையுடன் நிறைவடைகின்றது.

ஆலோசனைகள் சமர்ப்பித்தல்களை பொது மக்களால் தனியாகவோ, குழுவாகவோ அல்லது அமைப்பு ரீதியாகவோ சமர்பிக்க முடியும். இரகசியங்கள் பேணப்பட வேண்டுமாயின் நல்லிணக்கப் பொறி முறைகள் பற்றிய கலந்தாலோசனைக்கான செயலணி அதற்கான உறுதிமொழியை வழங்கும் என்று செயலணி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

நல்லிணக்கப் பொறிமுறைகள் பற்றிய கலந்தாலோசனைக்கான செயலணி கடந்த ஜனவரியில் பிரதமரால் நிறுவப் பட்டது. உண்மைகளைக் கண்டறிந்து நீதியை நிலை நாட்டல் , மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புக் கூறலை உறுதிப் படுத்தல் , நல்லிணக்கத்துக்கான பொறி முறையை நிறுவுவதற்குப் பொதுமக்களிடமிருந்து கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதே செயலணியின் பணியாகும்.

இவற்றை மையப்படுத்தி, காணாமற் போனோர் தொடர்பான விடயங்களைக் கையாள்வதற்கான அலுவலகம், இழப்பீடுகளுக்கான அலுவலகம் , உண்மை, நீதி, நல்லிணக்கம் மற்றும் மீள் நிகழாமை தொடர்பான ஆணைக் குழு உள்ளிட்ட விசேட வழக்குத் தொடுப்பவரை உள்ளடக்கிய நீதிப் பொறிமுறையை ஏற்கனவே செயலணி நிறுவியுள்ளது.

இந்த நிலையில், சமர்ப்பித்தல்களுக்கான இறுதித் திகதி கடந்த மே மாதம் முதலாம் திகதி வரை நிர்ணயிக்கப் பட்டிருந்தது. ஆனால் பின்னர் வழங்கப்பட்ட கால நீடிப்பின் பிரகாரம் வெள்ளிக்கிழமையுடன் நிறைவடைகின்றது.

இந்தப் சமர்ப்பணங்களை ctf.srilankagmail.comஎன்ற மின்னஞ்சலுக்கு அல்லது கலாநிதி பாக்கியஜோதி சரவணமுத்து , செயலாளர், நல்லிணக்கப் பொறிமுறைகள் பற்றிய கலந்தாலோசனைக்கான செயலணி, நல்லிணக்கப் பொறிமுறைகளை ஒருங்கிணைப்பதற்கான செயலகம், குடியரசுக் கட்டம் , இலக்கம் - 01 , சேர்.பரோன் ஜயதிலக மாவத்தை , கொழும்பு - 01 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும் என்று ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-4)

# சுசந்திகா வைத்தியசாலையில்

கொழும்பு, ஜூன் 19

ஒலிம்பிக் தடகள வீராங்கனை சுசந்திகா ஜெயசிங்க தாக்குதலுக்கு உள்ளான நிலையில் கம்பஹா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவரது வீட்டில் வைத்து அவர் தாக்கப்பட்டுள்ளார் என்றும், அவரைத் தாக்கினார் என்று அவரது கணவன் மீது குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப் படுகின்றது.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலையில் இடம் பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் அவரது கணவர் தம்மிக நந்தகுமார பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள் ளார்.

சுசந்திகா ஜெயசிங்க ஒலிம்பிக் தடகளப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்று இலங்கைக்கு பெருமை சேர்த்தவராவார். (ற-ஐ-4)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**செல்வராசா கோணேஸ்**
(கிளி.செந்தாமரை உணவக உரிமையாளர்)



பிறப்பு
13.03.1980

இறப்பு
30.06.2015

நினைவு நாள்:
19.06.2016

எம் வாழ்வின் ஒளி விளக்காய் குடும்பத்தின் மெழுகுவர்த்தியாய்
எம்மைக் காத்து வந்த தெய்வமே! என்னிடம் இரு முத்துக்களைத் தந்துவிட்டு
மௌனமாக யாரிடம் சென்றீரோ? போன வழியைத் தேடி இன்னும்
கண்ணீருடன் தவிக்கின்றோம்! எம் அன்புத் தந்தையே!
ஓராண்டாகியும் உங்களைக் காணவில்லையே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!

A-9 வீதி,
கரந்தாய் - பளை. (ஞ/79) (11,17,18)

மனைவி, பிள்ளைகள்.

## 25ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**சந்திரபாலன் கொண்யூசியஸ்**
(டிக்சன்)



தோற்றம்
21.12.1973

மறைவு
19.06.1991

நீங்காத நினைவுதந்து நீண்ட தூரம் சென்றதேனோ?
வாழ்வு என்னும் பயணத்தில் - நீ கடந்ததுவோ பாதி வழி

பதினெட்டு ஆண்டுகள் எம்மோடு வாழ்ந்திட்ட எம் செல்வமே
நிரந்தரமாய் உங்களை விட்டுப் போகின்றேன்
என்று விடை சொன்னாயோ - மகனே

எல்லையில்லா அன்பும் வஞ்சகமில்லா புன்சிரிப்பும்
கானல் நீராய் கரைந்ததுவோ
உன் வரவை எண்ணி ஏக்கமுடன் காத்திருக்கின்றோம்
அழுத விழிகளுக்கு ஆறுதல் தாராயோ?

**உங்கள் பிரிவால் துயருறும்..**

3ஆம் குறுக்குத்தெரு,
பாண்டியூர். (ஞ/2230) (11,17,18)

ஐயா, அம்மா, சகோதரர்கள்,
மைத்துனர், பெறாமக்கள், மருமக்கள்.

# மரண அறிவித்தல்

## திருமதி இராசபூபதி இரத்தினசபாபதி



பிறப்பு
11.06.1938

இறப்பு
17.06.2016

இமையாணன் மேற்கு, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசபூபதி இரத்தினசபாபதி 17.06.2016 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினசபாபதியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கனகசபை - முத்தாச்சிப்பிள்ளை தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற சின்னப்பு - பொன்னுப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் தர்மவதனி(பிரான்ஸ்), தர்மபவானி (ஜேர்மனி), தர்மதேவன் (ஜேர்மனி), இரத்தினகுமார்(லண்டன்), தர்மபுஸ்பா(சுவிஸ்), உருத்திரநாதன் (கனடா), கேசவமூர்த்தி(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெயபாலகிருஷ்ணன்(பிரான்ஸ்), கிரிதரன்(ஜேர்மனி), அனுஷா (ஜேர்மனி), தமயந்தி(லண்டன்), யோகேஸ்வரன்(சுவிஸ்), சோபனா(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற மகாலிங்கம், காலஞ்சென்ற தியாகலிங்கம், காலஞ்சென்ற கணேச லிங்கம் மற்றும் இரத்தினபூபதி, கனகபூபதி, முத்துலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் நிரோஸ், அருட் செல்வி, நிதர்ஷன், கஜானன், செந்தூரன், துலாஞ்சலி, தர்சன், தருமித், சஜீனா, சயானா, அபிராஜ், ஆகாஷ், அஜய் ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்ற சிவபாக்கியம், காலஞ்சென்ற கனகம்மா, காலஞ்சென்ற சிங்கநாயகம் மற்றும் இராசம்மா, விநாயகராணி, சரோஜினிதேவி, காலஞ்சென்ற நவரட்ணம் மற்றும் பரராஜசிங்கம், கலாவதி ஆகியோரின் மைத்துனியும் பரிமளத்தின் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்களுக்காக 20.06.2016 திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**போக்காலை வீதி,**
**இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.**

**077 439 8833 /**
**021 373 7208**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

சித்தன்கேணியில் புதிதாக இயங்கவுள்ள எமது கிளைக்கு abacus கற்பிக்க பெண் ஆசிரியர்கள் தேவை.

தகைமைகள்
G.C.E O/L கணிதம், ஆங்கிலம் B or C தர சித்தி
G.C.E A/L இரண்டு பாடங்களுக்கு மேல் சித்தி

கற்பிப்பதற்கான பயிற்சி வழங்கப்படும். ஆர்வம் உள்ளோர் உங்கள் சுயவிவரக்கோவையை பின்வரும் முகவரிக்கு அல்லது மின் அஞ்சலுக்கு 27.06.2016 இற்கு முன் அனுப்பி வைக்கவும்.

Smartgrow Learning Center (Pvt) Ltd,
டச்சு றோட், சித்தன்கேணி.
Email: avajobs@yahoo.com

## கருமை தோற்றம் கொண்டவர்களுக்கு ஓர் அற்புதமான செய்தி (2Weeks Result)

ஆண், பெண் இருபாலாருக்கும் உகந்தது 2 வாரத்தில் நல்ல அழகான மேனியுடன் தோற்றமளிக்க France நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட
**Herbal Whitening Cream**
Cream விலை 2500/-,5500/-
முகப்பரு, கண் கருவளையம், முகச்சுருக்கம், உதடு கருப்பு, முதுகு கழுத்து கருப்பு, கை கருப்பு மற்றும் முகம் தாடைகளிலுள்ள தேவையற்ற ரோமங்களை அகற்றும் கிறீம் முகம் , உடம்பு பகுதியில் உள்ள காய்கள் அகற்றும் கிறீம் விற்பனைக்கு உண்டு.
ஆச்சரியம் கரும்புள்ளிகளை 10 நாள்களில் அகற்றும் Magic Peel எங்களிடம் உண்டு.
எங்களிடம்
மேலும் உடல் எடை, மார்பு கூட்டும் குறைக்கும் குளிசை ,டொனிக், பால்மா, தலைமுடி வளரச் செய்யும் ஆயுள்வேத எண்ணெய் விற்பனைக்குண்டு.
077 210 6155
221, நாவலர் றோட்,
(பிறவுண் றோட் சந்தி அருள் கொமினிகேஷன் அருகில்) யாழ்.

## அழகுக்கலைத்துறையில் ஆர்வமுள்ளவர்களுக்கு இதோ ஓர் அரிய வாய்ப்பு



**Blossum Beauty Care**
இரண்டாவது முறையாகவும் யாழ். மண்ணில் நடத்துகின்ற மாபெரும் மணப்பெண் அலங்கார பயிற்சிப்பட்டறை நாடளாவிய ரீதியில் பலரது அபிமானத்துக்குரிய அழகுக்கலை நிபுணர் ரா. மைதிலியினால் நடத்தப்படும் 02 நாள் அலங்கார பயிற்சிக்கருத்தரங்கம்

இடம் : யாழ். வீரசிங்கம் மண்டபம்
நேரம் : காலை 9.30 – மாலை 5.00
காலம்: 26.06.2016 – 27.06.2016
கட்டணம் அறவிடப்படும்
பதிவுகளுக்கு முந்துங்கள்
தொடர்பு : 077 435 1092, 077 397 3164

## SB TRAVELS & TOURS (PVT) LTD

SPECIAL AIR FARES
0% NET FARE

| | | | |
|---|---|---|---|
| CHENNAI | 21,400/- | LONDON | 59,000/- |
| MADURAI | 18,600/- | TORONTO | 89,000/- |
| TRICHI | 27,800/- | MALDIVES | 17,500/- |
| BOMBAY | 28,000/- | ITALY | 86,699/- |
| BENGALURE | 28,900/- | NEWYORK | 107,000/- |
| KALKATTA | 34,800/- | MELBOURNE | 99,800/- |
| DELHI | 47,400/- | CANTON | 56,900/- |
| MALAYSIA | 26,000/- | PERTH | 86,200/- |
| SINGAPORE | 28,400/- | NARITA | 75,900/- |
| BANGKOK | 29,900/- | AUCKLAND | 128,900/- |
| ONEWAY: ABUDHABI - 18,800/- | | SYDNEY | 81,600/- |

*Condition Apply
VISA CARD ACCEPTED.
குழுவாக டிக்கட் பெறுபவர்களுக்கு 5% கட்டணக்கழிவு
IATA

DUBAI- 16,800/- DOHA-16,800/- SHARJAH - 14,500/-

எதிர்பாராத மிகக்குறைந்த அதிக கட்டணக்கழிவுடன் டிக்கட்டுகளும், விசா ஏற்பாடு உட்பட அனைத்தும் ஒரே இடத்தில் சிறப்பாக செய்து கொள்ள இன்றே அழையுங்கள்:
0771083480,81,82,83 | 0766911080, 81, 82,83
0212229555 / 0212228555
Call us on : 0094 112540540 / Mobile: 0094 771083480/81
e-mail : bookings@sbairfares.com
No324, ALUTHMAWATHA ROAD, COLOMBO-15. TEL-011 2540280
No: 132, SRI KATHERASAN STREET, COLOMBO 13. TEL -011 2333322
NO:216, KASTHURIYAR ROAD, JAFFNA. TEL-021 2229555
E-mail: sbtravels99@yahoo.com Contact for Travel Insurence

## Study & Work Settle

இலங்கையர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு
Malasiya
பாடநெறி கட்டணத்தில் 80% கழிவு
துணையை அழைத்துச் செல்ல முடியும்
- Singapore
- New zealand
- Australia
- Japan

Eropean Union
LITHUNIA
(Schenagen Visa)
IRELAND (Part time)

அடிப்படை தகைமை
O/L or A/L மாத்திரம்
We help for Refused Visa
Visit Visa, Business Visa
Tourist Visa, Dependant Visa

Tamil Special Consultants
★ 0774181919 - NIHAN
★ 0777946185

Colombo Office
VTL MANAGEMENT
No-380, Galle Road,,
Colombo - 03.

Cool line:
077 4181919,0777946185
0115922125
E-mail: vtlmgt@gmail.com
(C/22704)(10.17)

### வங்கியில் பணவைப்பு

Canada, UK, German, Swiss, Italy, Australiya மற்றும் ஏனைய நாட்டு Visaக்களுக்கு வங்கியில் பணவைப்பு மற்றும் Loan வசதி செய்து தரப்படும்
077 363 7864

### வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம், பிறவுண் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய மாடி வீடு வாடகைக்கு
072 699 5175, 071 931 7967

### கார் விற்பனைக்கு

மிக நல்ல நிலையிலுள்ள 16 -XXXX தொடர் இலக்கமுடைய TOYOTA SPRINTER கார் உடன் விற்பனைக்குண்டு.
விலை-5,75,000/=
077 044 0570

### வேலைவாய்ப்பு

Computer காட்சியறைக்கு அனுபவமுள்ளவர்கள் உடன் தேவை.
i7 Computers
124B, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 0777 683676, 021 2224959

### உடன் விற்பனைக்கு

வவுனியாவில் NP BCT xxxx இலக்கமுடைய நல்லநிலையில் உள்ள Hero Pleasur 3500km பாவித்தநிலையில் உள்ள Bike உடன் விற்பனைக்கு உள்ளது.
024 222 6445

### மானிப்பாய் கட்டுடையில் காணி விற்பனைக்கு

மானிப்பாய், காரைநகர் பிரதான வீதியில் 3¾ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தரகர்கள் இன்றி நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.
077 299 9949

### விற்பனைக்கு

Robin நீர் இறைக்கும் இயந்திரம் விற்பனைக்கு. Brand New Japan Robin - M 200, 2x2 /HP 3.0
ஒரு வருட உத்தரவாதம்
077 746 0447

### அறைகள் வாடகைக்குண்டு

யாழ்.நகர், 4ஆம் குறுக்குத்தெருவில் சகல வசதிகளையும் கொண்ட அறைகள் வாடகைக்குண்டு. மாணவிகள், வேலை செய்யும் பெண்கள் மட்டும்.
071 986 1989,075 056 0651

### வேலையாள்கள் தேவை

எமது ஸ்தாபனத்துக்குப் பொதி செய்வதற்கு பெண்பிள்ளைகள் தேவை. நாள் ஒன்றுக்கு 400/= வேதனமாக வழங்கப்படும். வயது 18 தொடக்கம் 35வரை. வேலைநேரம் காலை 8 மணிதொடக்கம் மாலை 5.30 மணி வரை.
திங்கட்கிழமையிலிருந்து தொடர்பு கொள்ளவும்
தொடர்பு: 11 A ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்,
021 222 3857

### சுப மாங்கல்ய திருமண சேவை

எம்மிடம் கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் நிரந்தர வதிவிடம் உள்ள படித்த பட்டதாரி மற்றும் சாதாரண துறையில் படித்து தொழில்புரியும் மணமகள், மணமகன் ஸ்பொன்ஷர் செய்து வெளிநாடுகளுக்கு எடுக்கக் கூடியவர்கள் உள்ளனர்.
தொடர்புகளுக்கு:
Canada - 416 333 3544
Sri Lanka - 077 257 9919
Email -maruthampathi@gmail.com

### இந்திய சாஸ்திரியார் வருகை

யாழ்ப்பாணம் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார் ஓம் சக்தி அருள் வாக்குப் பெற்ற பரம்பரை ஜோதிடர்
S.N. குமாரசாமி
கைரேகை,ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித் தடையா, குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழிலில் முன்னேற்றம் இல்லையா? குடும்பப் பிரார்ச்சினையா? வெளிநாடு செல்லத் தடையா? மன உளைச்சலா? எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்.
காலை 9 மணி முதல் மாலை 6.00 மணிவரை.
பீப்பிள்ஸ் இன்
112/1, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்
T.P. 072 631 6631, 072 631 6691

## வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களில் தன்னிச்சையாகச் செயற்படவில்லை

### வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தெரிவிப்பு

வெளிநாட்டு வேலைவாய்ப்பு விடயம் தொடர்பாக ஒரு போதும் தன்னிச்சையாகத் தீர்மானம் எடுத்ததில்லை. அதே போன்று முகவர் நிறுவனங்களுக்குத் தேவையான முறையில் நடவடிக்கைகள் எடுத்ததுமில்லை. - இவ்வாறு வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துகோரல தெரிவித்தார்.

வெளிநாடுகளில் நாம் அமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுனில் ஹந்துன்னெத்தி வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பாகத் தெரிவித்த கருத்துக்கு, மறுப்புத் தெரிவித்து அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது–

வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பில் நான் தன்னிச்சையாக நடப்பதுடன், முகவர் நிறுவனங்களுக்குத் தேவையான முறையில் நடந்துகொள்கின்றேன் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்னெத்தி தெரிவித்திருப்பது குறித்துக் கவலையடைகின்றேன். நான் ஒருபோதும் தன்னிச்சையாக நடந்ததும் இல்லை. முகவர்களுக்குத் தேவையான முறையில் நடந்து கொண்டதுமில்லை.

எமது அரசு வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு சென்றிருப்பவர்களின் தேவைகள் மாத்திரம் அன்றி அவர்களின் பிரச்சினைகள் தொடர்பாகவும் தேடிப்பார்த்து அவற்றுக்குத் தீர்வுகளையும் பெற்றுக்கொடுக்கின்றது. 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரை பெரும்பாலானவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்துள்ளோம்.

வெளிநாட்டு தொழிலின் எதிர்கால நன்மையைக் கருத்திற் கொண்டுவெளிநாட்டுதொழிலாளர்களுக்காக அறிமுகப்படுத்திய காப்புறுதி தொடர்பாக பல்வேறுபட்டவர்கள் தெரிவிக்கும் கருத்தில் எந்த உண்மையும் இல்லை. அத்துடன் இந்தக் காப்புறுதி தொடர்பாக தெரிவிக்கப்படும் கருத்துக்கள் பேச்சளவில் வரையறுக்கப்பட்டுள்ளன.

இதற்குச் சிறந்த உதாரணமாக அண்மையில் கட்டாரில் உயிரிழந்த நந்தன பண்டாரவுக்கு, இந்த வெளிநாட்டுக் காப்புறுதியின் நட்டஈட்டுத் தொகையாக, அவரின் குடும்பத்துக்கு 10 இலட்சம் ரூபா கொடுத்ததைக் குறிப்பிடலாம்.

இந்தக் காப்புறுதி இல்லாமல் இருந்திருந்தால் எமது நாட்டு காப்புறுதியால் வழங்கும் 5 இலட்சம் மாத்திரமே கிடைத்திருக்கும்–என்றுள்ளது.(ற–ஐ–4)

## ஷிராணியின் வாகனம் மோதி பெண்ணொருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 19
ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஷிராணி விஜேவிக்கிரமவின் வாகனம் மோதியதில், பெண்ணொருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது. விபத்துத் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினரின் சாரதி கைது செய்யப்பட்டார் என்று தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணை மேற்கொள்ளப்படுகின்றது என்றும் தெரிவித்தனர்.

(ற–ஐ–4)

### வாடகைத்தாய் தேவை

கொழும்பிலுள்ள தம்பதியினருக்கு IUF மூலம் செய்வதற்கு 30 வயதுக்குக் குறைவான பெண் வாடகைத் தாயாகத் தேவை. தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
077 906 1406

### தேவை

கொழும்பு, வெள்ளவத்தையில் வசிக்கும் ஒரு சிறிய தமிழ்க் குடும்பத்துக்கு வீட்டு வேலைக்கு பெண்பிள்ளை தேவை. வயது 30-55. சம்பளம் 13000/=
077 347 0788

### மணமகள் தேவை

யாழ். இந்து, 1982, குறைந்த கிரகபாவம், ரேவதி, அரச உத்தியோகம் பார்க்கும் மணமகனுக்கு மணமகள் தேவை.
077 879 3563

### தேவை

சாவகச்சேரியில் உள்ள மின்சாரப் பொருள்கள், வர்த்தக நிலையத்துக்கு பெண்பிள்ளை வேலைக்குத் தேவை. சாவகச்சேரியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
077 176 6259

### வேலை ஆள்கள் தேவை

யாழ்ப்பாணம் - கொழும்பு ஆசன பதிவகத்துக்கு கொழும்பில் தங்கி நின்று ஆசனப் பதிவுகளை மேற்கொள்வதற்கு ஆள்கள் தேவை.
குறிப்பு: ஆண்கள் மட்டும்
தங்கும் இடம் இலவசம்.
077 325 8492

### வைத்தியம்

பல இலட்சங்கள் செலவு செய்துதான் உங்களைத்தாய் தந்தையர் ஆக்குவோம் என்கிறார்கள் சிலர். ஆனால் சில ஆயிரங்களுடன் நீங்கள் தாய் தந்தையர் ஆகக் கூடும் மனக்கவலை விடுத்து அனைத்து மருத்துவ சோதனைகளுடன் என்னைச் சந்திக்கவும். பல இலட்சங்கள் செலவழித்து வெற்றி பெறாதவர்களும் சந்திக்கலாம்
சித்த வைத்தியர் Dr.R. Sivagurunathan
No. 54, 33rd Lane, Wellawatte
யாழ்ப்பாணத்திலும் சந்திக்கலாம்.
077 730 1669.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# WE ARE LOOKING FOR

## AN OPERATIONAL EXECUTIVE

FOR OUR EDLOCATE OFFICE IN JAFFNA

**The ideal candidate must be;**

- Under 35 years old, Female
- A university graduate
- Excellent communication skills in English & Tamil
- Must be willing to undertake promotional visits to schools & educational establishments in Jaffna

**Having a motor scooter to be used for official work on travel reimbursement basis is an added advantage**

We follow a 5 day working week, provide excellent working conditions, a good remuneration package including bonus and profit share payments. Those with student counseling experience could be given preference.

If you are interested to join a good stable company looking after staff well send a comprehensive up to date CV by email **palitha@busiopps.com** immediately.

**Colombo:** 79/5, Horton Place,
Colombo 7.
T: 011 - 5 219 129 | 5 235 148

16 years of excellence
edlocate
Reach Light Beyond Borders
www.edlocate.lk

## "மாசற்ற நீரே குறைவற்ற செல்வம்"




**உங்கள் கிணற்று நீரில்:**

- கல்சியம், மக்னீசியம், நைட்ரேட்டு பெரும் பிரச்சினையா?
- கொடிய உயிர்கொல்லி நோய்கிருமிகள், மாசுக்கள் இருக்கலாம் என அச்சமா?
- உங்கள் வீடுகளில் பொருத்தப்பட்டிருக்கும் விலையுயர்ந்த Tiles, Bathroom Fitting, Washing Mechine மற்றும் வீட்டு பாவனை பொருட்களை காவி, கல்சிய படிவிலிருந்து பாதுகாத்து நீண்டகாலம் பாவிப்பது பெரும் சவாலாக உள்ளதா?

**நீர் சுத்திகரிப்புடன் தொடர்புடைய அனைத்து பிரச்சினைகளுக்கும் நம்பகரமான, உத்தரவாதத்துடனான தீர்வுகளுக்கும் நிபுணத்துவ ஆலோசனைகளுக்கும் இன்றே அணுகுங்கள்.**

**EVER PURE HI-TEC (PVT) LTD**
**341, K.K.S ROAD, JAFFNA.**
**TEL:- 0215677567, 0773626230**

### காணி விற்பனைக்கு

வலிகாமம் வடக்குப்பகுதி மயிலிட்டிக் கோவிற்பற்று வயாவிளான் இறை "பட்டனோடை" எனும் முகவரியில் அமைந்துள்ள 12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (J 2175) (14,17,18)

தொடர்பு : 077 325 1619

### காணி விற்பனைக்கு

நுணாவில் எல்லை வீதியில் A9 வீதியிலிருந்து 300 யார் தூரத்தில் 15 பரப்பு 8 ½ குளி காணி விற்பனைக்குண்டு. (J 1876)(12,18)

077 732 4996

### நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

நல்ல இன டாசோன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

077 035 5560, 077 079 0775

### காணி விற்பனைக்கு

பளை நகர்ப் பகுதியில் பத்து (10) பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

077 174 9285

## கட்டார் வேலைவாய்ப்பு

**TAXI DRIVERS**
டெக்சி சாரதி -100 பேர்



அடிப்படை சம்பளம் - 1200 QR
உணவு அலவன்ஸ் - 150 QR

**Terms & Conditions:**

*Subject to change according to exchange rates
1 QR= Rs.40/-

- தங்குமிடம், மருத்துவ வசதிகள் இலவசம்
- ஒப்பந்த காலம் 2 வருடம்.
- வாரத்தில் 6 நாட்கள், நாளொன்றுக்கு 8 மணித்தியால வேலை
- 2 வருட ஒப்பந்த காலம் முடிவடைந்து நாடுதிரும்பும்போது விமான டிக்கட் இலவசம்.
- ஏனையவை QATAR சட்டத்திற்கு உட்பட்டது.

CV collection only
No fees will be charged
AL/2453 Advt:/04/16

**HOTLINE: 0776277777**

**J.R.D. International. (Pvt) Ltd**
Licence No: 2453 No. 273/1, Galle Road, Mt. Lavinia. Tel: 0114 376001

வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களுக்கு அரிய சந்தர்ப்பம்........

## கட்டார் நாட்டிற்கு



18-30 வயதிற்கு
உட்பட்டவரா நீங்கள்?



**Super Market Stockers 100 பேர்**
(Helpers) உடனடி தேவை

மாத சம்பளம் 42,900 (1100 QR)

**Terms & Conditions**
> 02 years contract. Accommodation, medical,
> transport freely provided.
> Food not provided by company.
> Working hours: 08 hrs per day.
> Working Days: 6 days per week.
> After contract return air ticket provided by the company.
> CV collection only. No fees will be charged

நேர்முக பரிட்சை இம்மாதம் 22,23ம் திகதிகளில்

கடார் நாட்டிற்கு உடனடி பயணமாகும் ஓர் அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள் !!!

Send Your Cv's -cv@alakeem.com

**AL AKEEM ENTERPRISES (PVT) LTD**
Manpower Consultants And Recruiting Agents
103A Colombo Rd, Kurunegala, Sri Lanka.
Excellence Award Winners - 2014
License No: 1435
TÜV AUSTRIA HELLAS ISO 9001:2008

**077 - 37 37 100 / 077 - 37 37 100**

தற்போது யாழ்ப்பாண நகரிலும்..

# NSoft Academy

We Trust to Make You a Career

பதிவுகளுக்கு முந்துங்கள்

Register NOW!

- Spoken English
- IELTS
- Bachelor of Information Technology
- Higher National Diploma in Computing
- Industrial Training

For More Info

**NSoft Academy - Vavuniya**
Vairavarkovil Road,
Vairavapuliyankulam,
Vavuniya.
0244545061

**NSoft Academy - Jaffna**
320, 1st Floor,
Point Pedro Road,
Anaipanthy, Jaffna.
0214545293

www.nsoftedu.com
www.facebook.com/nsoftacademy

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## பதவி வெற்றிடம்

இலங்கையில் 20 வருடங்களுக்கு மேலாக இயங்கிவரும் Education நிறுவனத்தின் யாழ்.மாவட்ட கிளைக்கு கீழ்க்காணும் பதவி வெற்றிடங்கள் கோரப்படுகின்றன.

*** Marketing Executives * Education Consultant**

Qualification

* 35 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும்.
* G.C.E. O/L, A/L
* சிறந்த தொடர்பாடல் திறன் (தமிழ்/ ஆங்கிலம்)

Benifits :

* Basic Salary
* Traveling Alownce
* Commision Payment
* Telephone Facilities
* Bike Alownce
* Incentive and overseas trip.
* Career Development (Management Position)

Contact - Branch Manager
Mr.G.Anthany
Phone. No : **077 356 6835, 021 567 1130**

Address:
Pioneer House, No 100 2nd Floor
Manipay Road, Jaffna.
www.pioneerhouselearning.com
(ஜே/1696) (11.18)

## உடனடி வேலைவாய்ப்பு

இன்ஃபினிட்டி உயர் கல்வி நிலையத்தில் பின்வரும் முழு நேர, பகுதி நேர வேலை வாய்ப்புக்கள் உள்ளன. ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.

1. Marketing Manager Cum.location Manager
2. Administration officer
3. Teaching (IT Courses)

உங்கள் சுய விவரக்கோவையை பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்பு அனுப்பி வைக்கவும்.

Email Id: info@infinitycentre.lk
Infinity Centre for Higher Studies
No- 220A, Station Road.
Vairavapuliyankulam, Vavuniya.
**077 903 7001**

## தேவை

யாழ்.நகரில் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் ஹோட்டலுக்குக் கீழ்க்காணும் பதவிகளுக்கு அனுபவமும் ஆற்றலுமுடையவர்களிடமிருந்து பாஸ்போட் அளவு படத்துடன் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- விடுதி பிரதம முகாமையாளர் (ஹோட்டல் முகாமைத்துவத்தில் அனுபவமுள்ளவர்)
- சமையலாளர்(ஸ்ரீ லங்கன், இந்தியன், சைனீஸ், மேல்நாடு உணவுகள் தயாரிப்பதில் அனுபவமுள்ளவர்)
- சமையல் உதவியாளர்கள்
- உணவு பரிமாறுபவர்கள்
- காசாளர்
- விடுதி மேற்பார்வையாளர் (ஆகக் குறைந்தது 5 வருட அனுபவம்)
- வரவேற்பாளர் (ஆண்/பெண் – ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மொழிகள் சரளமாகப் பேசக்கூடியவர்)
- விடுதிப் பராமரிப்பாளர்/ சுத்திகரிப்பாளர் (20 வயதுக்கு மேற்பட்ட ஆண்/பெண்) விண்ணப்பிக்கவும்.

**விளம்பர இல: 5107**
(ஜே/2207) (11,17,18)
மே/பா உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

Masta Vant JR xxxx இலக்கமுடைய Petrol Convert நிறம் Silver விற்பனைக்குண்டு.

**076 846 7119**

## காணி விற்பனைக்கு

ஒரு ஏக்கர் தென்னந் தோட்டக்காணி விற்பனைக்குண்டு.
இடம்: அன்பு சகோதரர் இல்லறோட், தாழ்வுபாடு
காணி 1 பேர்ச் ரூபா 20,000/=
பேர்ச் கணக்கில் காணி வழங்கப்படும்.
(11,17,18)

## வாடகைக்கு உண்டு

நெல்லியடிச் சந்திக்கு நடை தூரத்தில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் அருகே வீட்டின் ஒரு பகுதி தனி வழியாக வாடகைக்கு உண்டு.
(J 1876)(12.18)

**077 238 6138**

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாண நகரில், டேவிட் வீதியில் 3 பரப்புக்காணி முழுமையாகவும் அல்லது பாதியாகவும் கொடுக்கப்படும். A-9 வீதியில் இருந்து 100M உள்ளுக்குள் உள்ளது.
(ஜே/2209) (11.18)

**077 593 7772**

## விற்பனைக்கு

சீனாவிலிருந்து இறக்குமதியான தரமான வர்ண பிறின்றட் BED SHEET Pillow Covers தைக்கக்கூடிய ஒரு தொகை துணி யாழ்ப்பணத்தில் உடன் விற்பனைக்குண்டு.

**077 3835132, 075 077 7631**

## வேலைவாய்ப்பு

இலங்கையில் பிரசித்தி பெற்ற பிரபல தொழிற்சாலைகளில் ஐஸ்கிறீம், யோகட், ஜேம், சொக்லேட், பால்மா, இந்த அனைத்தும் உற்பத்தி பிரிவுகளுக்கும் வேலை ஆள்கள் தேவை. நாள் சம்பளம் 1300/=, OT 150/= மாதம் 35000/=, நாள் சம்பளம், கிழமைச்சம்பளமும் பெற்றுக் கொள்ளலாம். உணவு, தங்குமிடம் முற்றிலும் இலவசம். ஆண், பெண். வயது 18-50

**076 980 4237, 075 286 9947**

'அன்பு உள்ளங்களே' வேலை செய்து மாதம் முடியும் தருணத்தில் கையில் பணமேதும் இல்லாமல் உள்ளதா? விமான நிலையத்தில் வேலைவாய்ப்பு Basic ரூ.25000- 35000 மூன்று மாத காலங்களின் பின்னர் ரூ.55000 - 75000 மேல் வழங்கப்படும். வயது 18-40. உணவு தங்குமிடம் இலவசம். இன்றே தொடர்புகளுக்கு

**077 025 1155, 075 060 6968**

## காசாளர் தேவை

புறக்கோட்டையில் அமைந்துள்ள மொத்த வியாபார கடையொன்றிற்கு வயது 20 - 50 இற்குட்பட்ட ஆண் காசாளர் ஒருவர் தேவை. தங்குமிட வசதி உணவு வழங்கப்படும். சம்பளம் பேசித் தீர்க்கலாம்.
(J 2179) (14,17,18)

**தொடர்பு: 077 013 6478**

## விஷேட பல் வைத்திய சேவை

- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

## தேவை

நிறுவனம் ஒன்றுக்கு Ticketing வேலை செய்வதற்குப் பயிற்சியுள்ள, பயிற்சியற்ற ஆண், பெண்கள் தேவை. வயது 19-45 தகைமை O/L, A/L. சம்பளம் 25000/= OT யுடன் 28000/= நேர்முகப் பரீட்சைக்கு சமுகம் தரவும்.

**071 087 4467**
Nilukshi Madushani, No.51, Minthu Road, Mount Lavinia.

## காணி விற்பனைக்கு

நெல்லியடிச்சந்திக்கு அருகில் குடிமனைக் காணி 4 பரப்பு 11 குளி விற்பனைக்குண்டு. இந்தக் காணியில் உள்ள கிணறு நன்நீராகும். மேலும் 18 தென்னை மரங்களும் மூன்று மா மரங்களும் உள்ளதோடு வசதியான மலசலகூடமும் அமைக்கப்பட்டுள்ளது. மூன்று பக்கங்களும் சுற்றுமதில் கட்டப்பட்டு பூசப்பட்ட நிலையிலுள்ளது. பாடசாலை, கோவில், சந்தை, பஸ்நிலையம் என்பவற்றுக்கு 10 நிமிடமளவில் நடந்து செல்ல முடியும். நில அளவையாளரின் உத்தரவு செய்யப்பட்ட காணிப்படமும் உண்டு. இந்தக்காணி மலிவு விலையில் விற்பனை செய்யப்படவுள்ளது. பரப்பு ரூபா 5லட்சம். விலைபேசித் தீர்க்கப்படும்.
(11,18)

**077 317 1947, 021 226 3555**

## Vacancies

வவுனியா மற்றும் யாழ்.நகர் பயிற்சி நிலையங்களில் கீழ்க்கண்ட பதவிகளுக்கான பணியிடங்களுக்கு தகுதியான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**Assistant Center Manager - Male**
கொம்ப்யூட்டர் Degree பட்டதாரிகள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட உயர் கொம்ப்யூட்டர் டிப்ளோமா / டிப்ளோமாதாரிகள் விண்ணப்பிக்கலாம்.

**Counseling Officer - Female**
பாடநெறிகள் பற்றிய விளக்கங்களை மாணவர்களுக்கு அளிப்பதுடன் மாணவர் தொடர்பு அலுவலராக பணிபுரிய உயர்தரம் மற்றும் கணனி டிப்ளோமா கற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். (Age 19-24)

**Graphics, Multimedia Instructor - Male / Female**

**Instructor for Tally & QB - Male / Female**

**Lecturer for Java, C, C++ - Male / Female**

சுயவிபரக்கோவையை 7 நாட்களுக்குள் மின்னஞ்சல் மூலம் அனுப்பிவைக்கவும்

**ASIAN COMPUTER EDUCATION**
asiansjobs@gmail.com

## Receptionist

**Are you equipped with:**

- Excellent English language skills in both speaking and writing (is a must),
- Excellent PR skills with pleasing personality,
- Basic computer literacy with Microsoft Office,
- Minimum of 02 year working experience in the same field.
  Working hours - 06 days per week from 7.30 a.m to 5.00 p.m

* Salary - 20,000/=

## English Lecturers

**Are you equipped with:**

- A degree, diploma or other equivalent qualification in English
- Pleasant personality with art of teaching
- Minimum 02 year working experience in teaching English
  Working hours - 06 days per week from 7.30 a.m to 4.30 p.m

* Salary - 30,000/= (above)

Please submit your resume with a recent photograph to the e-mail address mentioned below within 07 days.

**British Way® English Academy**
E-mail: vacancy.britishway@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Distributed by:
**Ceylon & Foreign Trades PLC.**
No. 414/18, K.Cyril C. Perera Mawatha, Colombo 13. Tele: 0114 343 444
Ayurvedic Board Approval Number: 02/01/PE/12/396

Available in Supermarkets, Groceries and Pharmacies Islandwide
LAUGFS ARPICO SUPERCENTRE KEELLS SUPER SUPER K

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழ்ப் பிரதேச மீனவர்களின் வாழ்வாதாரம் காக்கப்பட வேண்டும்

எந்தச் செய்தொழிலிலும் போட்டி இருக்கலாம். ஆனால், பொறாமையும், அடாவடித்தனமும் இருக்குமானால் அது பல கேடுகளையும், நட்டத்தையும் சம்பந்தப்பட்ட தரப்புக் களுக்கு விளைவிக்கும்.

நல்லாட்சி அரசு என்று தனக்குத்தானே மகுடம் சூட்டி எழுந்து நிற்கும் இப்போதைய ஆட்சியில், கடற்றொழில் சார்ந்த துறையில் எல்லைமீறும் அநியாயமும், அட்டகாசமும் அடாவடித்தனமும் நாளாந்தம் கொழுத்துப் பெருத்து வருகின்றன!

குறிப்பாக, கடற்றொழில் சார்ந்த தொழில் துறைகளில் வடபகுதிக்குள் அத்து மீறல்கள், அல்லும் பகலும் நாளும் பொழுதும் அதிகரித்து வருகின்றன.

ஆகப்பிந்தி, வடமராட்சி கிழக்கின் கடற்பரப்பில் தென்பகுதி மீனவர்களின் அதி அட்டகாசச் செயற்பாடுகள் தலைதூக்கி இருந்தன.

கட்டைக்காடு கடற்கரைக்கு கடலட்டை பிடிக்கச் சென்ற பிறமாகாண மீனவர்கள், சொந்தப் பகுதிக் கடற்றொழிலாளர்களின் வலைகளை அறுத்து நாசம் விளைவித்தனர் என்பது தகவல்.

வெகுண்டு எழுந்த கட்டைக்காடு மீனவர்கள், பிறமாகாணத்தில் இருந்து வந்தவர்களை துரத்திப் பிடித்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இரு தரப்புகளுக்கும் இடையில் உண்டான முறுகலின் விளைவாக ஆறு படகுகள் சேதமாக்கப்பட்டன. மூவர் காயமடைந்தனர்.

சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு கலகம் அடக்கும் பொலிஸார் மட்டுமன்றி இராணுவத்தினரும் விரைந்து சென்றனர் என்பது தகவல்.

மேற்போந்த அத்துமீறல் சம்பவம் குறித்து மீனவர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் மாவட்டச் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கும் இடை யில் கலந்துரையாடல் நடைபெற்றது.

வடக்கில் சுமார் முப்பது ஆண்டுகளாக நீடித்த போரினாலும், சுனாமிப் பேரிடரினாலும்--

பாதிக்கப்பட்டோர், நிமிர்ந்து எழுவதற்கு முன்னர், வடக்கு - கிழக்கு கடற்றொழிலாளர்கள் பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டிய நிலைமை, இப்போதும் அடிக்கடி, உயர்ந்து எழுந்து வாட்டுகிறது; சோதிக்கிறது.

அவற்றின் வெளிப்பாடுகளே, முல்லைத்தீவு மற்றும் வடமராட்சி கிழக்குக் கடற்றொழிலாளர்கள் எதிர் கொள்ளும் அத்துமீறல்களுக்கு பதிலடி கொடுக்க வேண்டிய நிலைமையை உருவாக்குகின்றன.

இந்த நிலைமையைப் போக்குவதற்கு, குறித்த பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காணப்பட வேண்டும். நல்லாட்சி அரசின் கடற்றொழில் அலகின் பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் மனமார்ந்து, கடமை உணர்வுடன் செயற்பட வேண்டும்.

அவர்கள் சாக்குப்போக்குகளை மேலுயர்த்தி, ஒவ்வாத காரணங்களைத் தாங்களே இயற்றி, பக்கம் சார்ந்து, விதண்டாவாதம் செய்து, தமிழ் மீனவர்களின் வாழ்வாதாரத்தை தவிடுபொடியாக்காது, தத்தமது பிரதேசங்களின் வளத்தை மட்டும் பயன்படுத்துவதே நியாயமும், நீதியும் ஆகும்.

எதிர்பார்க்கலாமா?

## போர்க்குற்ற விசாரணைகளில்

# தடம்மாறும் அரசு



சேரலாதன்

இறுதிப்போரின்போது தமிழர்கள் அனுபவித்த அவலங்களுக்கு நீதி கிடைக்கும் வரை இந்த நாட்டில் அமைதியும் சமாதானமும் வெறும் கனவாகவே இருந்துவிடப் போகின்றது.

இறுதிப் போரின் அந்தக் கணங்கள் மிகக் கொடுமையானவை. மனித குலம் எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாத சகித்துக்கொள்ள முடியாத கொடுமைகள் அங்கு அரங்கேறின. தெரு நாய்க்கு எவராவது கல்லால்எறிந்து அது வேதனையால் கதறி அழும் போதுகூட எமது இதயத்தின் இரக்கமான பகுதி விழிப்படைந்து துடிக்கின்றது. அந்த வாயில்லாத ஜீவனின் வேதனையில் பங்குகொள்கின்றது. இதைத் தான் மனிதாபிமானம், இரக்கம் கருணை என்றெல்லாம் அழைக்கின்றோம். ஆனால், இறுதிப்போரின்போது அப்பாவித் தமிழர்களுக்கு எதிரான ஆயுதங்களை நீட்டியவர்கள் மனம் என்ற ஒன்றைக் கொண்டிராதவர்களா? அல்லது மனம் என ஒன்றிருந்தால் அது இரும்பாலும் கல்லாலும் உருவாக்கப்பட்டதா? ஒன்றுமே புரியவில்லை. பொதுமக்கள் எவருக்கும் ஒரு சிறு கீறல் காயம் கூட ஏற்படாமல் மனிதாபிமானப் போர் ஒன்றை நடத்தியதாக மகிந்த வாய் கூசாமல் பொய்யுரைக்கின்றார். இதை ஆமோதிப்பவர்களும் இல்லாமலில்லை. அப்படியானால் பல்லாயிரக்கணக்கான தமிழர்களைக் கொன்று குவித்தது யார்? அதை மகிந்த தரப்பினர் ஏன் இதுவரை வெளிப்படுத்தவில்லை. தமிழர்கள் எவருமே இறக்கவில்லையெனக் கூறும் அவர், எவ்வாறு இதை வெளிப்படுத்த முடியும்? அழிந்தது தமிழர்கள் தானே. இதில் எமக்கென்ன கவலை? என்பது அவர்களின் நிலைப்பாடும் கூட. போர் வெற்றி வீரனான மகிந்த தோல்விகளையும் அழிவுகளையும் நினைத்துப் பார்ப்பது அவருக்கு இழுக்கையல்லவா கொடுத்துவிடும். ஆகவே தான் ஆயுள்முழுவதும் வெற்றி வீரனாக வலம்வரவே அவர் விரும்புகின்றார்.

### தமிழர்களின் வாக்குப் பலத்தால் கிடைத்த பதவி

ஆனால் தமிழர்களின் வாக்குப் பலத்தால் அரியணையில் அமர்ந்த மைத்திரிபால சிறிசேன என்ற நேர்மையும் எளிமையும் மிக்க மனிதருக்கு என்ன நடந்தது? தேர்தலின்போது தமது உயிருக்கு அஞ்சி ஏதோவொரு மறைவிடத்தில் மறைந்திருந்த அவர் தமிழர்களின் வாக்குப் பலத்தால் துணிந்து வெளியே வர முடிந்தது. தமிழர்கள் வாக்களியாது இருந்திருப்பின் அவரது நிலை என்னவாகியிருக்கும் என்பதைச் சொல்லத்தேவையில்லை. மகிந்தவை ஆட்சி பீடத்தில் அமர விடக்கூடாது என்ற வெறியுடன் முன்பின் அறிமுகமில்லாத மைத்திரிபால சிறிசேன என்ற மனிதருக்கு தமிழர்கள் தமது ஆதரவுக் கரங்களை நீட்டினர்.

மகிந்த போலன்றி புதியவர் தமக்கு நீதியை வழங்குவார் என்ற நம்பிக்கையும் தமிழர்களிடம் நிறையவே காணப்பட்டது. ஆரம்பத்தில் எல்லாமே நம்பிக்கை ஊட்டும் வகையில்தான் அமைந்திருந்தன.

வலிகாமம் வடக்கின் சிலபகுதிகள் மக்களிடம் மீள ஒப்படைக்கப்பட்டமை தற்போதைய ஜனாதிபதியின் பெருந் தன்மையைக் கட்டுகின்றது. ஆனால் ஏனைய பகுதிகளை விடுவிப்பதில் தாமதம் ஏற்பட்டு வருகின்றது. படையினரின் பிடிவாதமே இதற்கான பிரதான காரணமாகும்.

இறுதிப் போரின்போது இடம் பெற்ற போர்க்குற்றங்களும் மனித உரிமை மீறல்களும் உலகறிந்த விடயங்கள். ஐ.நா.மனித உரிமைகள் சபையில் இவை தொடர்பான நீதியான விசாரணைகளுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. ஆனால் இலங்கை அரசு விசாரணைகளுக்கு உள்ளகப் பொறிமுறையே கடைப்பிடிக்கப்படுமெனவும் வெளிநாட்டு நீதியாளர்களுக்கு இங்கு இடமில்லை எனவும் திரும்பத்திரும்ப வலியுறுத்தி வருகின்றது. மகிந்த விசாரணை என்ற சொல்லையே வெறுத்து ஒதுக்கினார். விசாரணை இடம் பெற்றால் தாமும் மாட்டி விடுவோம் என்ற அச்சம் அவரிடம் நிறையவே இருந்தது. தற்போதைய ஜனாதிபதியும் போர்க்குற்ற விசாரணைகளில் வெளிநாட்டு நீதிபதிகள் இடம்பெறமாட்டார்களென உறுதியாகத் தெரிவித்து விட்டார். போரை வெற்றி கொண்ட படையினரைக் குற்றவாளிகளாக்க முயல்வது துரோகத் தனமான செயலென அவர் கருதுவதாகத் தெரிகின்றது.

தற்போதைய ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கைக்கு வருகை தந்தபோது அரசுக்குச் சார்பான சமிக்ஞைகளைக் காட்டிச்சென்றுள்ளார். இது இலங்கை அரசுக்குத் தெம்பை அளித்துவிட்டது.

### இறுதிப் போரில் பேரழிவு

இறுதிப்போரில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் கொன்றொழிக்கப்பட்டனர். வெள்ளைக் கொடியுடன் சரணடையச் சென்றவர்கள் ஈவு இரக்கமற்ற வகையில் குரூரமாகக் கொலை செய்யப்பட்டனர். பல்வேறு தரத்திலுமிருந்த தமிழ்ப் பெண்கள் படையினரால் சீரழிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர். புலிகளின் தலைவர் பிரபாகரனின் இளைய புதல்வராகிய பாலச்சந்திரன் கொலை செய்யப்பட்ட விதம் மிகக்கொடுமையானது. இவற்றையெல்லாம் எவரோ அந்நியர்கள் செய்தார்களா? இங்குள்ளவர்கள் தான் செய்திருக்கிறார்கள். இதனால் தான் நீதியான விசாரணை இடம் பெற்று குற்றவாளிகள் எவராக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டுமென பாதிக்கப்பட்ட தமிழர்கள் வேண்டி நிற்கின்றனர். மகிந்த அரசு போன்று தற்போதைய அரசும் இதைத் தட்டிக் கழிக்குமாயின் நல்லாட்சி என்ற சொல்லே கேலிக்குரியதாகி விடும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களமூலம் மவ்பிம
சந்துன் ஜீவந்த
தமிழில் வீ எஸ் ரீ

# கோத்தபாய ஒருபோதும் கொப்பிழக்கப் பாயமாட்டார்

இராஜபக்சமாரும், பண்டார நாயக்கமாருமே சுதந்திரக்கட்சியின் உரிமைக்காரர்கள், நாங்களெல்லாம் அதிர்ஷ்டமற்ற சுதந்திரக் கட்சிக்காரர்கள்.

மகிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன, சந்திரிகா ஆகியோர் ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் வேளைகளில், அவரவர்களின் பக்கம் சார்ந்து நிற்கும் வழக்கமுடைய டிலான் பெரேரா அடிக்கடி உதிர்க்கும் கருத்து இது.

சுதந்திரக்கட்சி ராஜபக்ச மற்றும் பண்டார நாயக்க குடும்பங்களது சொத்தே என்பது டிலான் பெரேராவின் வாதம். தாம் அதிர்ஷ்டமில்லாதவர்கள் என அவர் கூறுவதன் மூலம் டிலானின் கருத்தை வெறுமனே புறம் தள்ளிவிடவும் இயலாதுள்ளது.



**ஆற்றிய சேவையே முக்கியம்**

உண்மையில் அது குறித்துத் தீர்மானிக்க முடிவது, குடும்பத்துச் சொத்து என உரிமை பாராட்டுவதன் மூலமன்றி அவரவர் சுதந்திரக்கட்சிக்கு ஆற்றிய சேவையைக் கருத்தில் எடுத்தேயாகும். அந்த விதம் சுதந்திரக்கட்சி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற ஆட்சி நிர்வாகத்தைச் செவ்வனே முன்னெடுக்க உதவிய ஒவ்வொருவரும் சுதந்திரக் கட்சியின் உரிமைக்காரர்களே. சுதந்திரக்கட்சியை - நலிவு எடுத்த சுதந்திரக் கட்சி அரசைப் பதவியிலிருந்து அகற்ற முயன்றவர்களெல்லாம் கட்சிக்குத் துரோகம் இழைத்தவர்களே.

இந்த உரிமை குறித்து உணர்ந்திருந்ததாலோ என்னவோதான் சுதந்திரக் கட்சியின் நீண்ட கால உறுப்பினரும் கட்சியின் உப தலைவருமான ஜோன் செனவிரத்ன முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாயவை சுதந்திரக் கட்சியின் இரண்டாம் நிலைத் தலைவராக்க வேண்டுமென அண்மையில் தெரிவித்திருந்தார். ஜோன் செனவிரத்ன இருந்தாற்போலிருந்து இத்தகைய கருத்தை வெளியிட நேர்ந்ததன் பின்னணிதான் என்ன? அவர் கூட்டு எதிரணி உறுப்பினரல்ல அரசில் முக்கிய அமைச்சுப் பதவியை வகிக்கும் ஒருவர். இரத்தினபுரி மாவட்ட சுதந்திரக் கட்சித்தலைவர். கட்சியின் பழம் பெரும் உறுப்பினரும் உப தலைவருமான ஜோன், அரசில் இருந்தவாறே கோத்தபாயவை சுதந்திரக்கட்சிக்குள் உள்வாங்கும் யோசனையை முன்வைத்துள்ளமை ஒன்றில் அரசு கோத்தபாயவுக்கு மேற்கொள்ளும் இடையூறுகளைப் பொறுத்துக்கொள்ள இயலாததால் அல்லது இரத்தினபுரி மாவட்ட சுதந்திரக் கட்சி ஆதரவாளர்களது அழுத்தங்கள் காரணமாகத்தான் இருந்தாகவேண்டும். இவையேதும் இல்லையாயின் சுதந்திரக் கட்சியை நலிவு நிலையிலிருந்து தூக்கி நிறுத்த பலமிக்க தலைவரொருவர் தேவையென அவரது மனச்சாட்சி உறுத்தியதன் காரணமாக இருக்கக்கூடும்.

**சுதந்திரக் கட்சியின் எதிர்காலத் தலைவரா?**

அந்த வகையில் சுதந்திரக் கட்சியின் எதிர்காலத் தலைவருக்கான ஜோனின் தெரிவு ராஜபக்ச குடும்பத்தின் மற்றொரு முக்கிய புள்ளியான கோத்தபாய ராஜபக்ச. ஜோன் செனவிரத்னவின் இந்தத் தெரிவுக்குக் காரணம், ராஜபக்சமார் மீது நாலாபுறமிருந்தும் குற்றச்சாட்டுக்கள் குவிந்து வரும் நிலையில், ராஜபக்சமார் இல்லாது சுதந்திரக் கட்சியைத் தூக்கி நிறுத்திச் சிறப்பாக செயற்பட வைக்க வேறெவராலும் இயலாது என்பதாய் இருக்கக்கூடும்.

ஜோனின் குறித்த கருத்துத் தொடர்பாக கோத்தபாய கூறும்போது, தம்மால் சுதந்திரக் கட்சியின் இரண்டாம் நிலையில்லல்லாது முதல் நிலையில்கூடச் செயற்பட இயலும் எனத் தெரிவித்திருந்தார். எத்தகைய நிலையாயினும் நாட்டின் சுயாதிபத்தியத்தைப் பாதுகாத்து, இராணுவத்தினரது கௌரவத்தைப் பாதுகாப்பதே தமது நோக்கம் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

நல்லாட்சி அரசில் அமைச்சராக இருக்கும் ஜோன் செனவிரத்ன கோத்தபாய குறித்து வெளிப்படுத்தும் நல்லெண்ணக் கருத்தை நோக்கும்போது, நல்லாட்சி அரசிலுள்ள பலர் கோத்தபாயவை கொலைகாரர், கொள்ளைக்காரர் என்றெல்லாம் வெளியிடும் விமர்சனங்கள் யாவும் பொய்யாகி பெறுமதியற்றுப் போய் விடுகின்றனவே. ஆனால் அதேவேளை மேர்வின் சில்வாவோ, கோத்தபாயவைக் கடுமையாக விமர்சித்து வெள்ளைவான் கலாசாரத்தின் தந்தையே கோத்தபாயதான் எனக்குற்றஞ்சாட்டியுள்ளமையும் கவனத்திற் கொள்ளத்தக்க தொன்றே.

முன்னாள் ஜனாதிபதிக்கான பாதுகாப்புப் படையினரது முதலாவது தொகுதியினர் விலக்கிக் கொள்ளப்பட்டதையடுத்து, களனி கங்கை பெருக்கெடுத்து பெரும் வெள்ள இடர் ஏற்பட்டது. இரண்டாவது தொகுதியினரும் விலக்கிக் கொள்ளப்பட்டு மகிந்த பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளப்பட்டதையடுத்து இராணுவத்தினரது மிகப்பெரிய ஆயுதக் களஞ்சியம் முற்றுமுழுதாக வெடித்துச் சிதறி பெருநாசம் விளைந்துள்ளது.

அந்த வகையில் முன்னர் களனி திஸ்ஸ அரசரது ஆட்சிக் காலத்தில் கடல் கோளால் நாட்டில் பெருநாசம் ஏற்பட்ட வேளை அதிலிருந்து நாட்டைக் காப்பாற்ற மன்னன் தனது மகள் விகாரமாதேவியைக் கடலுக்கு இரையாக்கி தெய்வக் கோபத்தில் இருந்து நாட்டைக் காப்பாற்றியதாக மகாவம்ச வரலாற்று நூல் கூறுகிறது. அதே விதத்தில் இன்று, மகிந்தவின் சகோதரர் கோத்தபாயவை சுதந்திரக் கட்சியின் இரண்டாம் நிலைத் தலைவராக்கி நாட்டுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தினின்றும் நாட்டைக் காப்பாற்ற அமைச்சர் ஜோன் செனவிரத்ன முயற்சிக்கின்றாரோ என எண்ண வேண்டியுள்ளது. ஆனால் இதிலிருந்து ஒன்று மட்டும் தெளிவாகப் புரிகிறது. ராஜபக்சமாரை அரசியல் அரங்கிலிருந்து அப்புறப்படுத்திவிட எவ்வளவுதான் முயன்றாலும், அது அவ்வளவு லேசில் கை கூடத் தக்க விடயமல்ல என்பது தெளிவாகப் புலப்படுகிறது.

உண்மையில் கோத்தபாய இந்த ஜோன் செனவிரத்னவின் யோசனையைக் கணக்கில் எடுக்க வேண்டியதில்லை. அரசில் இணைவதாயின் அவர் இரண்டாம் நிலைத் தலைவராக இணையாது முதல் நிலைத் தலைவராக ஆகவேண்டிய ஒருவராவார். உலகின் மிக வலுமிக்க பயங்கரவாத அமைப்பெனக் கருதப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பைத் தோற்கடித்ததன் மூலம் கோத்தபாய தாம் உலகின் முதல்நிலை அதிகாரி என்பதை நிரூபித்துள்ளார். எனவே கோத்தபாய ஒரு போதும் இரண்டாம் நிலையில் இருக்க வேண்டியதில்லை. அப்படி இருப்பதானால் மகிந்த முதலாம் நிலையில் இருக்கும் ஒரு நிலையில் அந்த விதம் கோத்தபாய இரண்டாம் நிலையை வகிக்க முடியும்.

## மனங்களைச் சீரழித்துவரும் தொலைக்காட்சி நாடகங்கள்

இந்தியத் தொலைக்காட்சிகளில் வேளை தவறாமல் தொடர் நாடகங்கள் ஒளிபரப்பப்படுவதை அனைவரும் அறிவார்கள். இந்தத் தொடர் நாடகங்களுக்கு இங்கு பலத்த வரவேற்பும் உள்ளது. அதிலும் பெண்கள் இவற்றைப் பார்ப்பதைத் தவறவிடுவதில்லை.

ஆனால் அந்த நாடகங்களில் இடம் பெறுகின்ற காட்சிகளில் 90 வீதமானவை தீய எண்ணங்களைத் தூண்டுவனவாக இருக்கின்றமைதான் மனதை நெருடுகின்றது. ஒருவரை எவ்வளவு சதி செய்து கவிழ்க்கலாம்? குடும்பத்தில் கலகத்தை ஏற்படுத்தி எந்த வகையில் குழப்பங்களை ஏற்படுத்தலாம்? ஒருவரை எவ்வாறு மற்றவர்கள் அறியாதவாறு கொலை செய்யலாம்? பெண்களை எவ்வாறு ஏமாற்றலாம்? பிறர் சொத்துக்களைத் தவறான வழிகளில் எவ்வாறு அபகரிக்கலாம்? இவ்வாறு தீய எண்ணங்களும், செயல்களும் அந்த நாடகங்களில் முக்கியமான இடத்தைப் பிடித்துள்ளன.

இதனால் இவற்றைப் பார்ப்பவர்களும் மனரீதியில் பாதிக்கப்படுகின்றனர். தீய எண்ணங்கள் அவர்களது மனங்களில் விதைக்கப்படுகின்றன. சினிமா, தொலைக்காட்சி என்பன மக்களின் பொழுது போக்குச் சாதனங்கள். மக்கள் தமது கடமைகளுக்கு அப்பால் எஞ்சியிருக்கும் நேரங்களில் பொழுதைக் கழிப்பதற்காக இவற்றை நாடிச் செல்கின்றனர்.

ஆனால் பொழுதுபோக்கு என்பதும் பயனுள்ளதாக இருக்கவேண்டும் என்பதை நாம் மறந்து விடலாகாது. அது மட்டுமல்லாது தீய எண்ணங்களைப் பரப்பும் வகையில் இவை அமைந்திருப்பதும் நல்லதல்ல. தொலைக்காட்சி நிலையங்கள் தமது வசதிக்கு ஏற்றவகையில்தான் நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவார்கள். ஆனால் அதைப் பார்ப்பவர்கள்தான் நல்லவற்றையும், கெட்டவற்றையும் ஆராய்ந்து நல்லதைத் தெரிவு செய்ய வேண்டும். மாறாக தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படுகின்ற தீமையை விளைவிக்கும் நிகழ்ச்சிகளைப் பார்ப்பதால் குடும்ப வாழ்க்கையிலும் தீமைகள் இடம்பெறுவதற்கு வழி வகுத்துவிடும்.

மா.தனலட்சுமி, கோண்டாவில்.

## குடாநாடு அமைதிச் சோலையாக மாறும் நாள் விரைவில் மலரட்டும்

யாழ்.குடாநாட்டில் இடம்பெற்று வந்த குற்றச் செயல்கள் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதை உணர முடிகின்றது. இதற்கு முதலில் நீதிபதி இளஞ்செழியன் ஐயாவுக்குத்தான் நன்றி கூறவேண்டும். அவர் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதியாகப் பொறுப்பு ஏற்ற தினத்திலிருந்து குடாநாட்டின் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு அயராது பாடுபட்டார். அதில் வெற்றியும் கண்டுள்ளார். குடாநாடு வாள்வெட்டு, திருட்டு, கொள்ளை ஆகியன நிறைந்த பூமியாகக் காணப்பட்டபோது இங்கு வாழ்கின்ற மக்கள் பயம், வேதனை, கவலை, ஆகியவற்றுக்கு அப்பால் வெட்கமும் அடைந்தார்கள். கல்வி, பண்பாடு, கலாசாரம் ஆகியன உச்சத்தில் இருந்த ஒரு பிரதேசம் யாழ்ப்பாணம். ஒரு சில குற்றவாளிகளால் சீரழிக்கப்பட்டதை அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அது ஒரு காலத்தில் பொடியன்கள் என்ற சொல்லுக்கு ஒரு தனிமதிப்பு இருந்தது. ஒழுக்கம், சிறந்த கட்டமைப்பும் கொண்ட அந்தப் பொடியன்கள் மக்களுக்குக் காவல் அரண்போல இருந்து பாதுகாத்தார்கள். தீய செயல்கள் நிகழ்வதை அவர்கள் அனுமதிக்கவேயில்லை. ஆனால் இன்று என்ன நடக்கின்றது? நினைத்துப் பார்க்கவே நெஞ்சு பதறுகின்றது. குடாநாட்டின் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு நீதித்துறையும் காவல் துறையும் விழிப்பாக இருந்தால் மட்டும் போதாது. இங்கு வாழ்கின்ற மக்களும் தமது பொறுப்புக்களை உணர்ந்து தமது கடமைகளை ஆற்றவேண்டும். பயந்து பயந்து வாழ்வதால் பயன் எதுவும் கிடைக்கப் போவதில்லை. தீயவர்களை ஒற்றுமையுடன் எதிர்க்கும்போதுதான் அவர்களை ஒடுக்கிவிட முடியும்.

குடாநாடு மீண்டுமொரு அமைதிச் சோலையாக விளங்கப்போகும் அந்த நாள் விரைவில் மலரும் என்ற நம்பிக்கையுடன் காத்திருப்போம்.

த.ஜனார்த்தனன், கோப்பாய்.

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விபரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சூரியகாந்தி

சக்தீனா

"ஆளும் பேருமா எவ்வளவு பேர் வாழ்ந்தணாங்கள். இப்ப ஒருத்தரும் இஞ்ச இல்ல. எல்லாரும் போயிட்டினம். நான் மட்டும் தான் தனியக் கிடக்கிறன்."

மெல்லிய புன்சிரிப்புடன் இராசநாயகம் ஐயாவிடம் இருந்து வார்த்தைகள் பிறக்கின்றன. கழுத்துக்குக் கீழே துருத்தி நிற்கும் எலும்புகளைக் வெளிக்காட்டி நிற்கும் மெலிந்து ஒட்டிய உருவம். சுருக்கம் விழுந்துவிட்ட தோல்கள், வெண் பஞ்சுத் தலை முடி, எல்லாமும் சேர்ந்து அவரது வயதை எக்கச்சக்கத்திற்கு உயர்த்திக் காட்டுகின்றன. சாரத்தின் மீது முழுவதும் மூடப்படாத மேல் சட்டை அணிந்திருக்கிறார். கண்களில் வெறுமை படிந்திருக்கிறது. பார்வையில் ஏராளம் ஏக்கம் மிதந்து வழிகின்றது.

பொன்னாவெளிக் கிராமம் என்றால் இராசநாயகம்; இராசநாயகம் என்றார் பொன்னாவெளி. ஊரை வாழவைத்துக் கொண்டிருக்கும் ஒரேயோரு சீவன் அவர் மட்டும்தான்.

"இருந்ததெல்லாம் உடையார்மார். செழிப்போட எவ்வளவு சந்தோசமா இருந்த கிராமம்." இராசநாயகத்தின் கண்களை பழைய நினைவுகள் ஊடறுக்கின்றன. போர் கலைத்துப்போட்ட இலங்கையின் வடபகுதியில் மீண்டும் கருக்கட்டாமலேயே போய்விட்ட ஊர் பொன்னாவெளி.

பூநகரியின் பூர்வீகக் கிராமங்களில் ஒன்று. ஒரு காலத்தில் அதிகார வர்க்கமான உடையார்களின் கொலுவிடம். ஆனால் இப்போது அந்தக் கிராமத்தில் யாருமில்லை.

# ஒரு கிராமம் ஒரேயொரு மனிதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"வெள்ளக்காரன் வாறத்துக் முன்னமே இந்தக் கிராமம் இருந்தது'' என்ற இராசநாயகத்தின் கூற்றை ஆமோதிக்கிறார்கள் இன்று சிதறுண்டு எஞ்சியிருக்கும் ஊர்ப் பெரியவர்கள். வரலாற்றுக் காலம் முதல் இருந்த கிராமம் என்கிறார்கள்.

கிராமத்தில் உள்ள படகுத் துறைக்குப் பெயர் புளியன் துறை. 6 முதல் 9ஆம் நூற்றாண்டு வரை இந்தியாவின் தென்பகுதியை ஆட்சி செய்த பல்லவ மன்னர்களின் படைத் தளபதி வந்திறங்கிய துறைமுகம் என்று அதற்கு ஆதாரம் கூறுகிறார்கள். புலியன் என்கிற பல்லவத் தளபதி கப்பலில் வந்திறங்கிய இடம் என்பதால் அந்த இடம் புலியன்துறை என்றாகிப் பின்னர் மருவி புளியன்துறை ஆகிவிட்டதாம்.

"நாவலர் ஆரம்பிச்ச திண்ணைப் பள்ளிக்கூடம் இங்க இருக்கு. நாவலருடைய ஒறிஜினல் படமும் இங்கதான் பள் க்கூடத்தில இருந்தது. அதையும் விட்டிட்டுப் போட்டாங்கள். " இராசநாயகம் ஐயா பெரிதும் கவலைப்படுகிறார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் முதலாவது திண்ணைப் பள்ளிக்கூடமும் முதன்முதலில் இங்கேதான் ஆரம்பிக்கப்பட்டது என்பதை பூநகரி பிரதேச செயலகத்தின் வெளியீடான 'பூந்துணர்' தெரிவிக்கிறது. 1505ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்தே பொன்னாவெளிக் கிராமம் இருந்ததற்கான ஆதாரம் உள்ளது என்று கிராமத்தின் பெரியவரான பொன்னம்பலம் தருமலிங்கம், 'பூந்துணர்' என்கிற வருடாந்த சஞ்சிகையிலே தெரிவித்திருக்கிறார்.

இலங்கையின் வடபகுதியில் ஆங்கிலேயர்கள் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பியபோது அதை எதிர்த்து சைவ மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவரான ஆறுமுகநாவலர்தான் அந்தப் பாடசாலைக்கு சைவப் பிரகாச வித்தியாசாலை என்று பெயர் சூட்டினார். நாவலரின் சீடரான சின்னத்தம்பி உடையார்தான் இங்கு கல்வி கற்பித்தார்.

பெரிதாய் எழுந்து நிற்கும் பற்றைகள் கிராமத்தையே மூடி மறைத்திருப்பதைப் போலவே காலமும் இந்த விவரங்கள் எல்லாவற்றையும்கூட மூடி மறைத்துவிட்டது. சிதிலமடைந்துபோன வீடுகளும், பாடசாலைக் கட்டங்களும் இன்னமும் பொலிவிழக்காத கோயில்களும் மட்டுமே மனிதர்கள் அங்கு வாழந்தனர் என்பதன் எச்சமாகப் பற்றைகளின் நடுவே பதுங்கிக்கிடக்கின்றன.

"போர் முடிஞ்சாப் பிறகு கொஞ்சப் பேர் திரும்பி வந்து இஞ்சதான் இருந்தவை. 3 மாசம் வரைக்கும் இருந்திருப்பினம். பிறகு எல்லாரும் மெல்ல மெல்ல வெளிக்கிட்டுப் போட்டினம். ஒருத்தருக்கும் ஊரைப் பற்றிக் கவலையில்லை. இப்ப எங்கை எங்கையோ எல்லாம் இருக்கினம். ஆனா ஊரில இருக்க வர மாட்டினமாம்.





நாங்கள் கிராமத்துக்குத் திரும்பி வரேக்கையே கடற்படை இங்கு முகாம் அமைச்சிருந்தது. சிலநேரம் அவங்கள்தான் எனக்குச் சாப்பாடு தாறவங்கள். எவ்வளவத்தைச் செய்துபோட்டாங்கள். அந்தச் சாப்பாடு எனக்கென்னத்துக்கு!"

இராசநாயகம் ஐயாவின் பார்வை ஓரிடத்திலில்லாமல் வெறித்து நிலைக்கிறது. உள்ளே ஆயிரம் கோபங்கள் கொப்பளித்திருக்கக்கூடும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இலங்கை அரசுக்கும் இடையில் தீவிரமான இறுதிச் சண்டை 2008 ஆம் ஆண்டு பூநகரியை எட்டும் வரைக்கும் பொன்னாவெளியில் மக்கள் குடியிருந்தார்கள். 37 குடும்பங்கள் அங்கு வாழ்ந்துள்ளன என்கிறது பிரதேச செயலகப் புள்ளிவிவரங்கள். இப்போது ஒரு குடும்பம்கூட இல்லை. சில கிலோ மீற்றர்கள் தள்ளி உள்ள வேரவில் என்ற கிராமத்தில் பொன்னாவெளியைச் சேர்ந்த பல குடும்பங்கள் இருக்கின்றன. அங்கேதான் பொன்னாவெளி மாதர் சங்கமும் இருக்கிறது. வேறு பல குடும்பங்கள் முரசுமோட்டை, வட்டக்கச்சி, வன்னேரி, முழங்காவில், பூநகரி, தெளிவரை ஆகிய பல கிராமங்களிலும் சிதறுண்டு கிடக்கின்றன.

கிராமங்களில் பெண்களின் மேம்பாட்டைக் கவனிப்பவை மாதர் சங்கங்கள். அரச உதவிகள் பல இந்தச் சங்கங்கள் ஊடாக பெண்களுக்குக் கிடைப்பது உண்டு. வன்னியில் இந்தச் சங்கங்களுக்குப் முக்கிய இடம் இருக்கின்றது. வேரவிலில் அந்தக் கிராமத்துக்கென்று ஒரு மாதர் சங்கம் ஏற்கனவே உண்டு. பொன்னாவெளி மாதர் சங்கத்திற்கு அங்கு அந்தக் கிராமத்தில் எந்த உரிமையும் கிடையாது; அது சொந்தக் கிராமத்தில் இல்லாமல் வேறு கிராமத்தினுள் இருப்பதால் மதிப்பிழந்திருக்கிறது. அரச உதவிகள்கூட அதற்குக் கிடைப்பதில்லை. அது வெறும் பெயருக்கான அமைப்புத்தான்.

(46ஆம் பக்கம் பார்க்க)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீள்-நியமன விவகாரத்தில் உருட்டப்படும் மகேந்திரனின் தலை!

ஸுடோ ஸ்வாமி

தன் முயற்சியில் சற்றும் தளராத விக்கிரமாதித்தன் மீண்டும் முருங்கை மரத்தின் மீது ஏறிய கதையாக ஒன்றிணைந்த எதிர்க்கட்சித் தரப்பு, மத்தியவங்கி ஆளுநருக்கு எதிராக தமது கத்தியை தீட்ட ஆரம்பித்துள்ளனர். அண்மையில் நிதியமைச்சருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை, தோல்வியில் முடிந்ததை அடுத்து மத்தியவங்கி ஆளுநருடைய மீள்-நியமனத்தைத் தடுக்கும் வகையிலான நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளனர். அதன் ஓர் அங்கமாக எதிர்வரும் 24ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை இலங்கை மத்தியவங்கி கட்டடத்துக்கு முன்பாக இடைவிடாத போராட்டத்தை நடத் துவதற்கும் தீர்மானித்திருக்கிறார்கள்.

இலங்கை மத்திய வங்கியின் தற்போதைய ஆளுநராகப் பதவி வகிக்கும் அர்ஜுன மகேந்திரனின் பதவிக்காலம் எதிர்வரும் 30ஆம் திகதியுடன் முடிவடைகிறது. அவர் பதவியில் தொடரவேண்டுமானால், ஜனாதிபதி அவருக்கு மீள் நியமனம் வழங்கவேண்டும். அந்த மீள்-நியமனத்துக்கு எதிராகப் பலரும் தமது குரலைப் பதிவு செய்துவருகின்றனர்.

**கவனம் ஈர்த்த நியமனம்**

2005 ஜனவரியில் நிகழ்ந்த ஆட்சிமாற்றத்தைத் தொடர்ந்து இடம்பெற்ற பதவியேற்புகளில் மத்தியவங்கி ஆளுநரின் நியமனம் குறிப்பிடத்தக்க கவனத்தை ஈர்த்திருந்தது. அர்ஜுன மகேந்திரனின் பெயர் ஐக்கிய தேசியக் கட்சித் தரப்பினரால் முன்வைக்கப்பட்டிருந்த போதிலும், அவருடைய சிங்கப்பூர் குடியுரிமை காரணமாக நியமனம் கேள்விக்குட்படுத்தப்பட்டிருந்தது. அது சரி செய்யப்பட்டு பிரச்சினை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. பிற்பாடு பங்கு முறிகள் தொடர்பில் மோசடி செய்தார் என்னும் குற்றச்சாட்டு அவர் மீது சுமத்தப்பட்டது. இதையடுத்துச் சிறிது காலம் பணியிலிருந்தும் அவர் விலகியிருந்தார்.

இந்த விவகாரம் தொடர்பாக அடிப்படை உரிமை மீறல் வழக்கு ஒன்றும் உயர் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தது. குறித்த வழக்கு சட்ட அடிப்படையற்றது எனத் தெரிவித்து, கடந்த மாதம்தான் தள்ளுபடி செய்யப்பட்டிருந்தது. இதன் மூலம் மகேந்திரன் மீது தெரிவிக்கப்பட்டிருந்த குற்றச்சாட்டிலிருந்து அவர் விடுவிக்கப்பட்டார்.

இந்த ஒன்றிணைந்த தரப்பினரின் கூச்சலுக்கு வலுச்சேர்க்கும் வகையில் மேலும் சில தரப்புக்களும் மீள்-நியமனத்துக்கு எதிராக குரல் கொடுத்திருக்கின்றனர். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவும் அர்ஜுன மகேந்திரனின் மீள்-நியமனத்தை நிராகரிப்பதாகத் தெரிவித்துள்ளது. இது தொடர்பான அறிவிப்பு அமைச்சர் சரத் அமுனுகமவினால் கடந்த வியாழக்கிழமை தெரியப்படுத்தப்பட்டிருக்கிறது.

அரசில் அங்கம் வகிக்கும் சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் சிலரிடமிருந்தும் மகேந்திரனை நிராகரிக்கும் மன நிலை வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அமைச்சரவைப் பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரத்ன, தனிப்பட்ட ரீதியில் அர்ஜுன மகேந்திரனின் பதவிக் காலம் நீடிக்கப்படுவதை தாம் விரும்பவில்லை என வெளிப்படுத்தியிருக்கிறார்.

ஐ.ம.சு.முவின் செயலாளரும், மீன்பிடித்துறை அமைச்சருமான மகிந்த அமரவீர மற்றும் சமூக அபிவிருத்தி மற்றும் நலன்புரி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்கா ஆகியோரும் மகேந்திரனின் பதவிக்கால நீடிப்புக்குச் சாதகமான போக்கைக் காண்பித்திருக்கவில்லை.

முன்னதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மகிந்த அமரவீர, ஜகத் புஷ்பகுமார மற்றும் எரிக் வீரரட்ன என்போரினால் மத்திய வங்கி ஆளுநருக்கு எதிராக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவிலும் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

குளோபல் சிறிலங்கா போரம் என்னும் அமைப்பு மகேந்திரனின் பதவிக்கால நீடிப்புக்கு எதிராக பிரதமர் மற்றும் ஜனாதிபதி ஆகியோருக்கு அழுத்தம் வழங்கும் வகையில் முறைப்பாட்டு நடவடிக்கை ஒன்றினை முன்னெடுத்திருக்கிறது. அர்ஜுன மகேந்திரனுக்கு எதிராக 17 குற்றச்சாட்டுக்களை அடுக்கியிருக்கும் அந்த அமைப்பு, அது தொடர்பில் முழு அளவிலான விசாரணை மேற்கொள்ளப் படவேண்டும் என்று கோரியிருக்கிறது.

**ஜே.வி.பி யும் எதிர்ப்பு!**

அர்ஜுன மகேந்திரனின் பதவிக் காலத்தை நீடிக்கக்கூடாதென ஜே.வி.பியும் கோரியிருக்கிறது. திறைசேரி முறிகள் தொடர்பில் பிரச்சினை கிளம்பிய போதே ஜனாதிபதி மத்திய வங்கி ஆளுநரின் பதவிக் காலத்தை முடிவுறுத்த ஆலோசனை விடுத்திருந்தார். எனினும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஜனாதிபதி தேர்தலில் கொடுத்த வாக்குறுதிக்கு அமைவாக ஊழலற்ற நாட்டைக் கட்டியெழுப்பும் வகையில் மகேந்திரனின் பதவிக்காலம் நீடிக்கப்படக்கூடாது என்கிறார் ஜே.வி.பியின் அரசியற்குழு உறுப்பினர் லால் காந்த.

**ஜனாதிபதியின் பொலனறுவை உரை!**

கடந்த ஏப்ரல் மாதம் தமிழ் – சிங்கள புது வருட கொண்டாட்டங்களுக்காக தனது ஊரில் மக்களைச் சந்தித்த ஜனாதிபதி மைத்திரிபால, வரி அதிகரிப்பின் மூலம் மக்களுக்குச் சுமையேற்றும் பொருளாதார நிபுணர்களைத் தாம் அனுமதிக்கப் போவதில்லை என்று தெரிவித்திருந்தார். வற் வரி அதிகரிப்புத் தொடர்பான முன்மொழிவு செய்யப்பட்டிருந்த காலப்பகுதியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

மக்களுக்குச் சுமையேற்றும் பொருளாதார வல்லுநர்கள் என்று ஜனாதிபதி அழைத்து அழுத்திக் கூறியது மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரனையும் தேசியக் கொள்கை திட்டமிடல் மற் றும் பொருளியல் விவகார அமைச்சின் ஆலோசகராக விளங்கும் ஆர். பாஸ் கரலிங்கம் ஆகிய இருவரையுமே என்று நம்பப்படுகிறது.

ஆர்.பாஸ்கரலிங்கம், முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாசவின் வலது கையாகச் செயற்பட்டவர் என்பதுடன், முன்னாள் நிதி அமைச்சின் செயலாளராகவும் பணியாற்றினார்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் நெருக்கமான தொடர்பை கொண்டிருக்கும் அர்ஜுனவை ஐ.தே.க. பாதுகாத்துக் கொள்ளவே எத்தனிப்பதாகத் தெரிகிறது.

**மகேந்திரன் பதவியில் நீடிக்க ஐ.தே.கவுக்கு விருப்பம்!**

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, அர்ஜுன மகேந்திரன் மத்தியவங்கி ஆளுநர் பதவியில் நீடிக்கவேண்டும் என்றிருக்கிறார். ஐ.தே.கவின் மூத்த உறுப்பினரும் திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சருமான பாலித ரங்கே பண்டார, மகேந்திரனுக்கு எதிராகச் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்கள் எவையுமே நிரூபிக்கப்படாத நிலையில் குற்றவாளியாக, காணப்படாத ஒருவரை எவ்வாறு தண்டனைக்குள்ளாக்க முடியும் என்று கேள்வியெழுப்பியிருக்கிறார்.

அதேவேளை, பொருளியலாளரும் அமைச்சர் ஜோன் அமரதுங்கவின் மருமகனுமாகிய டினேஷ் வீரக்கொடியின் பெயரை அர்ஜுன மகேந்திரனின் இடத்துக்கு முன்மொழிய ஆலோசித்திருக்கிறார் எனவும் உத்தியோகபூர்வமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரண்டு வருடகால புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் தேசிய அரசு அமைத்துக் கொண்ட இருபெரும் கட்சிகளுக்குமான நீயா – நானா போட்டியின் இந்தக் கட்டத்தில் உதைபந்தாக மாறியிருப்பது அர்ஜுன மகேந்திரன் மாத்திரமல்ல ஜனாதிபதி மைத்திரிபாலவும் தான்.

> “ இலங்கை மத்திய வங்கியின் தற்போதைய ஆளுநராகப் பதவி வகிக்கும் அர்ஜுன மகேந்திரனின் பதவிக்காலம் எதிர்வரும் 30 ஆம் திகதியுடன் முடிவடைகிறது. அவர் பதவியில் தொடர வேண்டுமானால், ஜனாதிபதி அவருக்கு மீள் நியமனம் வழங்கவேண்டும். அந்த மீள் நியமனத்துக்கு எதிராகப் பலரும் தமது குரலைப் பதிவு செய்துவருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தூக்கம் கண்களை தழுவட்டும்

தமிழில் : சாரி

நரகம் என்றால் என்ன என்பதைத் தூக்கமின்மையால் அவதிப்படுகிறவர்களைக் கேட்டால்தான் புரியும்! உடலைத் தளர்வாக வைத்து, மனதை லேசாக்கிக்கொண்டு, எப்படி எப்படியெல்லாமோ படுத்துப் பார்த்தாலும்கூட இமையை மூடமுடியாத அந்த இம்சை இருக்கிறதே..! எந்தத் தண்டனையும் அதற்கு ஈடாக முடியாது.

அப்படி என்ன இம்சை அதில்? கண்ணை மூட முடியாதது மட்டும் அல்ல மனம் அல்லது மூளை விழித்தே இருக் கும் தருணம் அது! அடுத்தடுத்து ஏதாவது சிந்தனைகளாகத் தோன்றிக் கொண்டே இருக்கும். ஒருவித பதற்றம் தலைதூக்கும். இந்த நிலை முற்றமுற்ற உங்களுடைய கவலை, சோர்வு, எதிலும் கவனம் செலுத்த இயலாமை என்று எல்லாமுமே அதிகரிக்கும். இப்படி அவதிப்படுவது யாரோ ஒருவர், ஓரா யிரம், சில லட்சம் அல்ல; உலகில் கோடிக் கணக்கான வர்கள் இரவில் இன்றைக்கு இப்படிப் படுக்கையில் பாம் பாக நெளிகிறார்கள் (இப்போது உங்க ளுக்குச் சற்று நிம்மதியும் ஆறுதலும் ஏற்பட்டிருக்குமே!)

பிரிட்டனைச் சேர்ந்த நடிகை கிம் காட்ரால், 'ரேடியோ டைம்ஸ்' இதழுக்கு அளித்த பேட்டியில், தூக்கமின்மை ஒரு நோயாகத் தன்னைக் கடுமையாகப் பாதித்துக்கொண்டிருப்பதாகச் சமீபத்தில் கூறியிருக்கிறார்.

பிரிட்டனின் அனைத்துப் பகுதி மக்களின் சுகாதாரம் குறித்துத் தொடர்ந்து ஆய்வு செய்வோர் அவர்களுடைய தூக்க நேரம் குறித்து மட்டும் கவனம் செலுத்தியதில் பல உண்மைகள் வெளிவந்துள்ளன. நாட்டு மக்களில் மூன்றில் ஒரு பங்கினர் தூக்கமின்மையால் அவதிப்படுகின்றனர். 2010இல் நடத்திய ஆய்வில் இந்த அளவு 27% ஆக இருந்தது. 2012இல் நடத்திய ஆய்வின்போது, தூக்கமின்மையால் பாதிக்கப்படுகின்றனர் எனத் தெரிவித்தோர், 11 ஆண்டுகளுக்கும் மேலாகத் தாங்கள் இதை அனுபவித்துவரு கின்றனர் எனக் கூறியுள்ளனர். 'தி கார்டி யன்' பத்திரிகை தன்னுடைய வாசகர்களிடம் இதுபற்றிக் கேட்டபோது 147 வாசகர்கள் தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் தூக்கமின்மை நோய் பற்றி விவரித்துள்ளனர். அவர்களில் சிலர் இதையும் மீறி எப்படித் தூங்கப் பழகினோம் என்றும் தெரிவித்துள்ளனர்.

### யோகம் தரும் உத்வேகம்

அன்னி டாயல் (45): இது பரம்பரையாக வரும் குடும்ப நோய். மன அழுத்தம் அதிகரிக்கும்போது தூக்கமின்மை மட்டுமல்ல; தூக்கமற்ற - பக்கவாதம்கூட ஏற்பட்டு விடுகிறது. மனம் விழித்துக்கொண்டே இருக்கிறது. அதேசமயம் கை, கால்களைக்கூட விருப்பப்படி நீட்டவோ, மடக்கவோ முடிவதில்லை. கனவு வராமல் இருப்பதற்காகக் கண்விழி அப்படியும் இப்படியுமாக உருண்டுகொண்டே இருப்பதைப் போன்ற ஒரு நிலை.

தூக்கமின்மை ஏற்பட்டுவிட்டால் மனம் உற்சாகமிழந்துவிடுகிறது; உடலியக்கமும் மெத்தனமாகிவிடுகிறது. பக்கத்தில் யாராவது இருப்பதை விரும்புவதே இல்லை. அந்த நேரத்தில், எந்த முடிவெடுத்தாலும் சரியாகவே இருப்பதில்லை. யாராவது வந்து ஏதாவது கேட்டால்கூட எரிந்து விழத் தோன்றுகிறது. காரை ஓட்டிச் செல்லும்போது எதன் மீதாவது மோதிவிடலாமா என்றுகூட ஆத்திரம் ஏற்படுகிறது. ஆசிரியர் ஒருவரின் உதவியுடன் யோக நித்திரை என்ற பயிற்சியை மேற்கொண்டேன். அமைதியற்ற மன நிலையிலிருந்து நீங்கி, நல்ல தூக்கத்துக்குக் காரணமாக இருக்கும் அமைதியான மன நிலைக்குச் செல்ல யோகாசனம் உதவுகிறது. மன அழுத்தத்தை அதிகரிக்கும் நிலையிலிருந்து விலகி வாழவும் கற்றுக்கொண்டுவிட்டேன்.

### ஆடுகளை எண்ணுங்கள்

லைன் (48): நண்பரின் இறப்பினால் தூக்கத்தை இழந்து அவதிப்பட்டேன். 2005 ஜனவரியில் நண்பர் இறந்தார். அந்த ஆண்டு செப்ரெம்பர் வரையில் நாள் முழுக்க ஓரிரு மணி நேரம் மட்டுமே அரைகுறையாகத் தூங்குவேன். ஒரு நாள் இரவு விமானத்தில் ஏறி வெளியூர் சென்றேன். அப்போது தூங்க ஆரம்பித்தேன்; மறுநாளிலிருந்து வழக்கமான 7 மணி நேரத் தூக்கம் கிடைத்துவிட்டது. தூக்கம் வராவிட்டால் அதையே நினைத்துக் கொண்டிருக்காதீர்கள், தூக்கம் இல்லை என்று புலம்பாதீர்கள்; தூக்கம் வராதபோது முதலில் கடிகாரத்தைப் பார்ப்பேன். சிறிது நேரம் கழித்து மீண்டும் பார்ப்பேன். தூங்குவதற்காக மந்தையில் உள்ள ஆடுகளை எண்ணுவதைப் போன்று கற்பனை செய்துபார்த்தேன். ஆடுகள் ஆயிரக் கணக்கில் இருந்தனவே தவிர, தூக்கம் வரவில்லை. இப்போது அப்படிப்பட்ட நிலை வந்தால் மணி என்ன என்று கடிகாரத்தைப் பார்ப்பதில்லை. அறையில் விளக்குகளை அணைத்துக் கூடுமானவரை இருட்டாக்குவேன். அறை மிகவும் சூடாகவோ, மிகவும் குளிர்ச்சியாகவோ இல்லாமல் உற்ற தட்ப வெப்பத்தில் இருக்கும் படி மாற்றுவேன். மூச்சைத் தொடர்ந்து லேசாக இழுத்து விடுவேன். அது தூக்கத்தைக் கொண்டுவந்து சேர்க்கும்.

### மன அழுத்தத்துக்கு மருந்து

லின் (44): மன அழுத்தமும் பதற்றமும்தான் தூக்கமின்மைக்குக் காரணம். வாழ்நாளின் பெரும் பகுதியிலும் தூக்கமில்லாமல் அவதிப்பட்டுவருகிறேன்.

தூக்கத்தை வரவழைப்பதற்காக ஆரம்பத்தில் மதுசாரம் அல்லது ஒவ்வாமையை முறிக்கத் தரப்படும் மாத்திரை போன்றவற்றைப் பயன்படுத்தத் தொடங்கினேன். தூக்கம் வராவிட்டால் மருந்து மாத்திரைகளைச் சாப்பிடுவதோ மதுவை நாடுவதோ பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதிலாகப் பெரிதாக்கிவிடும்.

தூக்கம் வராவிட்டாலும் கை - கால்களைத் தளரவிட்டு, சும்மா படுத்திருப்பதே நல்லது. மன அழுத்தத்தைப் போக்க சிகிச்சை பெற ஆரம்பித்ததும் தூக்கம் வரத் தொடங்கிவிட்டது. இப்போதும் தினந்தோறும் அதிகாலை 3 மணிக்கு விழிப்பு ஏற்படுகிறது.

(36ஆம் பக்கம் பார்க்க)



“ தூக்கமின்மை ஏற்பட்டுவிட்டால் மனம் உற்சாகமிழந்து விடுகிறது; உடலியக்கமும் மெத்தனமாகிவிடுகிறது. பக்கத்தில் யாராவது இருப்பதை விரும்புவதே இல்லை. அந்த நேரத்தில், எந்த முடிவெடுத்தாலும் சரியாகவே இருப்பதில்லை. யாராவது வந்து ஏதாவது கேட்டால்கூட எரிந்து விழத் தோன்றுகிறது. காரை ஓட்டிச் செல்லும் போது எதன் மீதாவது மோதிவிடலாமா என்றுகூட ஆத்திரம் ஏற்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சரசு இந்த நிலைக்கு வரமுன்பாக ஓர் இராசாத்தி போல் வாழ்ந்தவள். நகரத்தின் முடிசூடா இளவரசி இவள் தான். வாழிப்பான உடலழகு. விதம் விதமான ஆடை. அணிகலன்கள். வீதிகளில் நடை பயின்றால் இளவட் டங்கள் அவளைச் சுற்றி வட்ட மிடும். நாளுக்கொரு இடம். உல்லாசம். உண்டி. போதை எல்லாமே அவளது காலடியைச் சரணடையும். கைகளில் நோட்டுகள் புரளும்.

# அதிக விலை கொடுத்து...

தேவி பரமலிங்கம்

குடாநாட்டின் பெரிய இடப்பெயர்ச்சி 1995இல் இடம்பெற்றது. அதுவும் வருட இறுதிப் பகுதியில் ஒக்ரோபர் 30ஆம் திகதி. அதுவரை யாழ்ப் பாணக் கடைத்தெரு, போதனா வைத்தியசாலைப் பகுதிகளில் சோடாமூடியின் நடமாட்டங்கள் இருந்தன. 1996இல் சித்திரை வருடப் பிறப்பைத் தொடர்ந்து மீண்டு வந்த பின்பாக சோடா மூடி யைக் காணவில்லை. சோடாமூடியின் இறுதி நாள் கள் அதுவாகத்தான் இருந்திருக்கவேண்டும். சோடாமூடி இடம்பெயர்ந்து குடாவுக்கு அப்பால் நகர்கையில் சாவு ஏற்பட்டதோ, இல்லாமல் இங்கே தங்கி நின்று உணவு கிடைக்காமல் தாக்குதல் இடையில் அகப்பட்டு சாவடைந் தாளோ அறியமுடியவில்லை.

அதுபோலவே சோடா மூடியின் நாமாகரணம் என்பதும் அறிய முடியாமல் போன மற்றொன்று. சோடாமூடி என்பது நகரப் பகுதிகளில் சூட்டப்பட்ட பெயராக விளங்கியது. "சோடாமூடி... எங்கை போறாய்...?" குரல் வந்த பகுதியைத் திரும்பிப் பார்த்து பற்கள் கொட்டிப்போன ஏறுவாயால் கண்களில் மயக்கம் தெரியப் புன்னகைப்பாள். சோடாமூடிக்குக் கதை சொல்லி வசதியாக சரசு எனப்பெயர் சூட்டி வைத்துள்ளார். சரசு நகரப் பகுதிகளில் திரிந்து பெற்றுக்கொள்ளும் தர்மப் பணத்தில் அன்றாடப் பசியைப் போக்கிக் கொள்வாள். வாட்டசாட்டமான உடல். ரவிக்கை போட்டு சேலை கட்டிக்கொள்வாள். அவ்வப்போது குளம், கேணிகளுக்குப் போய் குளிப்பு, முழுக்கை யும் முடித்துக் கொள்வள். அழுக்காகும் சேலை, ரவிக்கைகளைத் தோய்த்துக் காயப்போட்டுப் பாவிப்பாள். தீபாவளி, பொங்கல், சித்திரை வருடம், கிறிஸ்மஸ், புதுவருடங் களில் பெரிய கடை வியாபாரிகள் வழங்கும் சேலை, ரவிக்கைகள் என்றில்லாமல் வீடுகள் தோறும் பெண் கள் கழித்து விடும் சேலை, ரவிக்கைகளும் கிடைத்துக்கொண்டிருப்பதால் மானத்தைக் காக்கவும் முடிந்தது. நோய் நொடிகள் வந்தால் இருக்கவே இருக்கிறது தர்மாஸ்ப்பத்திரி!

இரவு, மழை, வெயில் நேரங்களில் ஒதுங்கு வதற்கும், குந்திக் கொள்ளவும் 'கோடி இல்லாதா ருக்குப் பல கோடி' என பஸ் நிலையக் கொட்டகை கள், வர்த்தக நிலையங்களின் விறாந்தைகள், மரக்கறி, மீன் சந்தைக் கட்டடங்கள் உள்ளன. ஆங்காங்கே சின்னச் சின்னப் பொதிகளில் இவ ளது சேலை, ரவிக்கைகளை பொதுக்கிப் பொதுக்கி வைத்திருப்பாள். அவற்றை யார்தான் சீண்டுவார்? துப்புரவுப் பணி செய்கையில் எடுத்து வீசி விடுவர். பணமோ, நகை நட்டோ அவளிடம் ஏது? அன்றாடம் காய்ச்சியாக அன்றன்றைக்கு அளக் கும் இறைவனாக யாழ். நகரக் கடைகள் இருந் தன. விடிந்தால் வழமைபோல் நகர்வுகள். இருட்டி விட்டால் ஓரிடத்தில் ஒதுங்கிவிடல். அவளுக்கு இல் லாமை என்பதும் இல்லை; கவலைகளும் இல்லை. சரசு இந்த நிலைக்கு வரமுன்பாக ஓர் இராசாத்தி போல் வாழ்ந்தவள். நகரத்தின் முடிசூடா இளவரசி இவள்தான். வாழிப்பான உடலழகு. விதம் வித மான ஆடை, அணிகலன்கள், வீதிகளில் நடை பயின்றால் இளவட்டங்கள் அவளைச் சுற்றி வட்டமிடும். நாளுக்கொரு இடம், உல்லாசம், உண்டி, போதை எல்லாமே அவளது காலடியைச் சரணடையும். கைகளில் நோட்டுகள் புரளும். இவளை எசமானாகக் கொண்ட எத்தனையோ குமருகள் இவளின் அரவணைப்பால் வீட்டு வறுமை நிலைமையைப் போக்கிக் கொண்டும் வாழ்ந்தன. அந்த வாய்ப்புக்கள் இவளைத் தேடிவர முன்னதாக இவளைத் தெரிந்தும், அனு பவித்துக் கொண்டும் இருக்கும் நகர வர்த்தக மையம், வந்தேறுவாசிகள், இளையோர் வட்டத் துப் பலர் முன்வந்தனர். சிலருக்கு இவள் குரு வாகவும் திகழ்ந்துள்ளாள். ஏறக்குறைய இருபது வருடங்கள் சரசுவின் வாழ்க்கையில் தென்றல் வீசியது. அதன் பின்பே சரசுக்கு இயல்பாக வந்த முதிர்ச்சி, இளமை தந்த லாவண்யத்தைக் குறைத் ததால் எல்லா வகைகளி லும் வறுமையை அவ ளுக்கு வழங்கி விட்டது.

"சரசு... நீ ஒதுங்கிக் கொண்டு... புதிசா ஆரும் வந்தாக் கொண்டா.. உனக் கும் வாசி கிடைக்கும் தானே..."

அந்த வகையிலும் இரண்டொரு ஆண்டுகள் உருண்டன. சரசுவின் இடத்துக்குப் புதிசா சிலுக்கு வந்து சேர்ந்தாள். சரசுவின் காட்டில் பெய்த மழை இப்பெல்லாம் சிலுக்கு இருக்கும் பக்கமாகத்தான் கொட்டியது. "சரியினி என்ர செல்வாக்கெல்லாம் சரிஞ்சு போச்சு..." மனம் பாதித்து நடைப்பிணமாக நடமாடிய சரசு, தற்கொலை என்னும் பாத்திரத்தை ஏந்தவில்லை. பிச்சா பாத்திரத்தைத் தூக்கிக் கொண்டாள். தற்கொலை தெரிவாக இருப்பின் முப்பது வருடங் களுக்கு முன்பாகவே எடுத்திருக்கவேண்டும். அந்தளவுக்கு அவள் கோழையாக இருக்க வில்லை. அவளை இந்த நிலைமைக்குத் தள்ளி விட்ட சமூகத்தில் வாழ்ந்து காட்ட வேண்டு மென்றே துணிந்தாள். பொக்குவாய் கிழவியாக உருமாறி சோடாமூடியெனக் கேலிக்குப் பாத்திர மாகிய சரசு யாழ். கோட்டை முனியப்பர் ஆலயச் சூழலில் வீதியோரமாக நிற்கும் பெரிய ஆலமர நிழலில் சாக்குத் துண்டை விரித்துப் படுத்துக் கிடந்து நினைவுகளை மீட்டினாள். சரசுவுக்கு இந்த உலக நடைமுறை தெரியவரும் பராயம் இருக்கும், அவளைப் பெற்று வளர்த்த தாயார் நோயில் படுத்தவள் போய்ச்சேர்ந்துவிட்டாள்.

"ஐயோ... செல்லம்மா... என்னேம் புள்ளையேம் விட்டுட்டுப் போக உனக்கு எப்புடி மனம் வந்தே..!"

அழுது புலம்பிய தகப்பன், எப்ப ஆண்டுத்திவசம் வருமென்று எதிர்பார்த்திருந்ததுபோல, மறுநாள் தெய்வயானையை இவளுக்குச் சித்தியாகக் கூட்டி வந்தார். "எனக்கொண்டும் அவசரமில் லை... என்ர பெட்டை இண்டைக்கோ நாளைக்கோ எண்டிருக்கிறவள். அவளுக்குப் பாதுகாப்புக்காகத்தான்..."

ஊரவர்களின் ஒச்சத்தை வாயடைக்க அப்படிச் சொல்லி வைத்தது; ஊருலகத்தில் புதுமை ஒன்றுமில்லை. வேலாயுதம் றேகடி, கிட்டங்கிக்குப் போய் நாட்டாமை செய்வதால் உழைப்பான். அதில் கொஞ்சம் பாவிப்பது போக மீதியைக் கொண்டு வந்து தெய்வானையிடம் கொடுப்பான்.

"இதென்னத்தைக் காணும் உங்களுக்கு அவிச்சுக் கொட்ட..." எந்த நாளும் அவளது வாயால் இந்தப் பொச்சரிப்புத்தான் வெளிவரும். கஷ்டப்பட்டுத் தொழில் செய்யும் வேலாயுதம், கொடுக்கிறதை வயிற்றில் கொட்டிக்கொண்டு படுத்துவிடுவான்.

வயதுக்கு வந்த சரசுவின் மேனி அழகு பூரிக்க ஆரம்பித்தது. எங்கிருந்தோ தெய்வானையின் தம்பி எனக்கூறி ஒருவன் வந்து போனான். பகலில் வேலாயுதம் வீட்டில் நிற்கமாட்டான். வருபவன் தெய்வானையுடன் தம்பியாகவா நடந்து கொள்கிறான்?

"ஐயோணோய்.. நீயில்லாத நேரம்.. ஒருவனிங்க வந்து போறானணை...."

"அது புள்ளே... அவளோட ஒண்டுவிட்ட தம்பி.. அவன் வருவான்... போவான்..."

"அதில்லையனே.... அவன் என்னோடையும்... சேட்டையள் விடுறானெல்லே..!"

"மாமன்தானே..."

அசட்டையாகக் கூறிய தகப்பனின் மூளைக்கு ஏறவில்லை, குமரின் பாதுகாப்புக்காகத்தான் இரண்டாந்தாரம் எடுத்தது.

சரசு வீட்டில் இருப்பது தன்னுடைய சுதந்திரத்துக்குக் குந்தகம் என நினைத்தாள் தெய்வானை, உள்ளதால் திட்டமொன்றைப் போட்டாள்.

"இஞ்சை கேள் மனிசா... உவன் செல் லக்கண்டன் தன்ரை அரிசி மில்லில தொட்டாட்டு வேலை செய்யிறதுக்கு ஆளொண்டு தேடுறான். இவள் சரசு சும்மாதானை இருக்கிறாள். அங்கேபோய் வேலை செய்தா... அவனேதும் பார்த்துக் குடுப்பான். அப்பதான் ஒருமாதிரிச் சீவியம் ஓடும் கண்டியோ..."

வேலாயுதம் தலையணை மந்திரத்துக்கு மசியாதவனா?

(43 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# நூல்களும் நம்மிடம் பேசும்



ஹெர்மன் ஹெஸ் எழுதிய சித்தார்த்தா என்னும் நாவலின் முக்கியப் பாத்திரமான சித்தார்த்தன் ஆன்மிகத் தேடல் கொண்டவன். எதிலும் எளிதாகத் திருப்தியுற மறுப்பவன். கேள்விகளும் தேடலும் நிறைந்தவன். ஞானத்தைத் தேடி, வாழ்வின் மெய்ப்பொருள் தேடி அவன் பல இடங்களுக்கும் சென்றான். பல குருமார்களைச் சந்தித்தான். பல உபதேசங்களைக் கேட்டான். பல்வேறு அனுபவங்களுக்கு ஆளானான். கடைசியில் ஒரு நதியின் மடியில் அவனுடைய தேடல் முடிவுக்கு வந்தது. நதி அவன் கேள்விகளுக்குப் பதில் சொன்னது. நதியால் பதில் சொல்ல முடியுமா என்ற கேள்வி எழலாம். இதற்குத் தர்க்கம் சொல்லும் விடை ஒன்றே ஒன்றுதான்: பேசாது. ஆனால், உளவியல் ரீதியாகவும் ஆன்மிக ரீதியாகவும் இதற்கான பதில் வேறாக இருக்கலாம். அவரவர் அனுபவத்தில் மட்டுமே அறியக்கூடிய அம்சம் இது.

இந்த வகையில் பார்த்தால் நதி மட்டுமல்ல. மலை, அருவி, கடல், மரம், மழை ஆகியவைகூடப் பேசலாம். அவற்றின் குரல் சிலருக்குக் கேட்கும். சிலருக்குக் கேட்காது. பேசுவது நதியா, அல்லது கேட்பவரின் அந்தராத்மாவின் எதிரொலியா என்னும் கேள்வி சுவாரசியமானது. அனுபவ தளத்தில் மட்டுமே விடை காணக்கூடியது.

### எது சரியானது?

யாருக்குத்தான் இல்லை அனுபவங்கள்? யாரிடம் இல்லை கேள்விகள்? விடைகளும்கூடக் கொட்டிக் கிடக்கின்றன. பல்வேறு கேள்விகள். பல்வேறு விடைகள். பல்வேறு கோணங்கள். பல்வேறு தரப்புகள். இதில் எது சரியான விடை? எது சரியான தீர்வு?

வாழ்வின் கேள்விகளுக்குச் சரியான விடை என எதுவும் கிடையாது. இருப்பவை பார்வைகள், தரப்புகள். நமக்கான விடை, நமக்கான தீர்வு என்பதே சரியாக இருக்கும். அத்தகைய விடைகளை எங்கிருந்து பெறுவது?

அனுபவங்கள் சிறந்த ஆசான்கள். அனுபவங்கள் சார்ந்த தீவிரமான விசாரணைகளும் கறாரான அலசல்களும் தெளிவைத் தரக்கூடியவை. ஆனால், தனி மனித அனுபவங்கள் வரையறைக்கு உட்பட்டவை. நூறாண்டு வாழ்ந்தாலும் ஒருவர் பெறக்கூடிய அனுபவங்கள் மனித குலத்தின் அனுபவப் பரப்போடு ஒப்பிட்டால் சிறு துளி என்றுதான் சொல்லவேண்டும். வரம்புக் குட்பட்ட தனிநபரின் அனுபவங்கள் வாழ்வின் அடிப்படையான கேள்விகளுக்குப் பதில் சொல்லிவிடும் என்று சொல்வதற்கில்லை. இந்த நிலையில், பரந்த அனுபவப் பரப்பில் நின்று நமது விசாரணையின் பரப்பை விரிவாக்கிக்கொண்டுபோக என்ன வழி?

### எல்லையற்று விரியும் பாதை

ஆத்மார்த்தமாக எழுதப்பட்ட புத்தகங்கள் அனுபவங்களின் களஞ்சியங்கள். தான் அனுபவித்திருக்கவே முடியாத தளங்களில் புத்தகங்களின் மூலம் ஒருவர் சஞ்சரிக்கலாம். தன் அனுபவப் பரப்பை விரித்துக்கொள்ளலாம். நாம் பார்த்திராத உலகங்கள், சந்தித்திராத மனிதர்கள், கேட்டிராத குரல்கள், உணர்ந்திராத உணர்வுகள், சுவாசித்திராத காற்று, தரிசித்திராத அருவிகள், மலைகள், கடல்கள், நதிகள், மலர்கள், பறவைகள் என எல்லையற்று விரியும் பாதை இது.



வாழ்வின் நேரடிப் பதிவுகள் சாத்தியப்படுத்தும் அனுபவங்கள் ஒருபுறம் இருக்க, இலக்கியப் படைப்புகளில் கலைப் பார்வையோடு உருமாற்றம் பெறும் அனுபவங்கள் தரும் தரிசனங்கள் மன அரங்கில் ஆழமான சலனங்களை ஏற்படுத்துகின்றன. இந்த வகையில், உலகெங்கிலும் உள்ள படைப்பாளிகள் நமது அனுபவ உலகை அர்த்தபூர்வமாக விரிவாக்குகிறார்கள். நமது தேடலின் பரப்பை அதிகரிக்கச்செய்து கேள்விகளின் கூர்மையைக் கூட்டுகிறார்கள்.

### பேசும் நூல்கள்

லியோ டால்ஸ்டாயின் அன்னாவைப் புரிந்து கொள்ளும் போது அன்னாவை மட்டுமின்றி அன்னாவைப் போன்ற பல நூறு பெண்களையும் நாம் புரிந்துகொள்கிறோம். காப்ரியல் கார்ஸியா மார்க்கேஸ் காட்டும் கொலம்பியாவில் உள்ள மகந்தோவின் சித்திரம், அது போன்ற பல்வேறு சமூகங்களை நமக்குப் புரியவைக்கிறது. தி.ஜானகிராமன் காட்டும் தஞ்சையும் அசோகமித்திரனின் எழுத்தின் வழியே உருப்பெறும் செகந்திராபாதும் அப்படியே. வியாசனின் கர்ணன், வால்மீகியின் சீதை, இளங்கோவின் கண்ணகி, காளிதாசனின் சகுந்தலை, ஜானகிராமனின் யமுனா, ஜெயகாந்தனின் கங்கா, இமையத்தின் ஆரோக்கியம் ஆகிய பாத்திரங்கள் நமக்குச் சாத்தியப்படுத்துவதும் இதைத்தான். தாராசங்கர் பானர்ஜி, ஃப்ரன்ஸ் காஃப்கா, ஆல்பெர் காம்யூ, ஹார்ப்பர் லீ, வைக்கம் முகமது பஷீர் ஆகியோர் படைத்தளிக்கும் உலகங்களும் நம் உலகின் எல்லைகளை விரிவுபடுத்துகின்றன. நமது உலகினையும் வாழ்வினையும் மேலும் துல்லியமாகப் புரிந்துகொள்ள உதவுகின்றன. சித்தார்த்தன் நதியிடம் திரும்பினான். நாம் நூல்களிடம் திரும்பலாம். நதி சித்தார்த்தனிடம் பேசியதைப் போன்றே, நூல்களும் நம்மிடம் பேசும். வரையறைக்குட்பட்ட நம் வாழ்வை எல்லையற்ற அனுபவப் பரப்பாக மாற்றக் கூடியவை நூல்கள். பொதுவான விடைகளை அல்ல, நமக்கான விடைகளை இவை தரலாம். நமக்கான கேள்விகளையும் அடையாளம் காட்டலாம். நீள அகலம் காண இயலாது விரிந்திருக்கும் இந்த நூல் வெளியில் நமக்குக் கிடைக்கக்கூடிய தரிசனங்கள் எண்ணற்றவை. நமது தேடலுக்குத் துணை நின்று நம் வாழ்வை மாற்றக்கூடிய தரிசனங்கள் இவை.

## கடவுளைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

இறைவன் ஒரு திறமையான படைப்பாளி. ஒவ்வொரு படைப்புக்கும் அந்தந்தக் கருப்பொருளின் செயற்பாடுகளுக்கு ஏற்ப சந்தோசம், துக்கம், செல்வம், வறுமை, இப்படியாக நன்மைகளையும், தீமை[illegible]யும் சேர்த்தே படைக்கின்றான். அவனின் படைப்புக்களைச் [illegible] மனிதனால் புரிந்து கொள்வது கடினமாகவே இருக்கும். [illegible] சிந்தித்துச் செயற்படுபவன் படைப்பின் இரகசியத்தை [illegible]ணர்ந்து அதற்கேற்றபடி வாழ்ந்து வானுறையும் தெய்[illegible] வைக்கப்படுகிறான். இறைவனின் படைப்பானது அற்புத[illegible] நினைந்து நினைந்து உருகுபவர்களுக்கு இனிப்பானது. தத்துவார்த்த வாழ்வில் இருந்து எவருமே தப்பிவிடமுடியாதபடி சித்திரித்துள்ளான் இறைவன். சிறிய உதாரணம்- கவிஞர் ஒருவர் ஒருநாள் மாலை நேரம் வானத்திலே ஏராளமான நாரைகள் கூட்டம் கூட்டமாகப் பறந்து செல்லும் அழகை மெய் மறந்து ரசித்துக்கொண்டிருந்தார். அவருடைய எதிரியொருவர் முற்பகை காரணமாக அவரைக் கொல்வதற்கு அடியாள்களை அனுப்பியிருந்தார். அடியாள்கள் வந்து இரசனையிலிருந்த கவிஞரை அடித்துத் துன்புறுத்தி அவர் அணிந்திருந்த நகைகளையும் பறித்துக் கொண்டு ஓடிவிட ஆயத்தமானனர். அப்போது குருதி வெள்ளத்தில் இருந்த கவிஞர் வானத்தில் பறந்து கொண்டிருந்த நாரைகளைப் பார்த்து "நாரைகளே! இந்த நிகழ்ச்சியை நன்றாக நினைவில் வைத்திருந்து . இவர்களைப் பழி வாங்க வேண்டும்" என்று கதறியபடி உயிரிழந்தார்.

இதைச் செவி மடுத்த அடியாள்கள் சிரித்துக் கொண்டு அந்த இடத்தை விட்டுச் சென்றனர். சில நாள்களுக்குப் பின்பு அந்த அடியாள்களின் தலைவரை இந்த நாரைக் கூட்டங்கள் துரத்தவே அவனுக்கு கவிஞரின் கதறல் ஞாபகம் வந்தது. அந்த இடத்தைவிட்டு பாதுகாப்பான இடத்துக்குச் சென்று விட்டான். சில காலம் கழித்து திரும்பவும் நாரைக் கூட்டம் அந்த அடியாள்களை கொத்துவது போல துரத்தத் தொடங்கின. பயந்துபோன அடியாள்களும் தலைவனும் வேறு வழி தெரியாது அரசிடம் வந்து "நாங்கள்தான் கவிஞரைக் கொன்றோம்" எனக் கூறி சரணடைந்தனர்.

- தெல்லியூர்த் தேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தனி அகதிகளாகும் சிறுவர்களின் அவலம்!

தமிழில்: சாரி

சொந்த நாட்டில் உயிருக்குப் பாதுகாப்பு இல்லாததால் பெற்றோரோ, உறவினர்களோ இல்லாமல் தனியாகவே சுவீடன் நாட்டுக்கு அகதிகளாக வரும் 18 வயதுகூட நிரம்பாத குழந்தைகள் படும்பாடு கல்மனதையும் கரைய வைக்கும். இவர்கள் வெவ்வேறு நாடுகளிலிருந்து வருகின்றனர். 9 வயது முதல் 17 வயது வரையிலான 50 குழந்தைகளை மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பினர், எந்தவித வற்புறுத்தலும் இன்றி செவ்வி கண்டபோது இந்த விவரங்கள் வெளிவந்தன.

கடந்த ஆண்டில் மட்டும் தனியாக வந்த 35,000 குழந்தைகளை சுவீடன் ஏற்றுக்கொண்டு அவர்களை முகாம்களில் தங்க வைக்காமல் காப்பாளர்களாக ஏற்கத் தயாராக இருப்போரின் வீடுகளுக்கு அனுப்பி வைத்தது. அவர்கள் தங்களுடைய கல்வியைத் தொடரவும், மருத்துவ சிகிச்சையும், மன ஆறுதலும் பெற வழி செய்தது.

குழந்தைகளில் பலர் அடி உதைகளுக்கு ஆளானது முதல் பாலியல் வன்புணர்வுகளுக்கும் பலியாகியிருக்கின்றனர். மத்திய தரைக்கடல் பகுதியில் சக அகதிகள் கடலில் சாவு ஓலமிட்டபடி நீரில் மூழ்கியதைப் பார்த்தவர்களும், ஐ.எஸ். தீவிரவாதிகளால் கொடூரமாகச் சித்திரவதை செய்து கொல்லப்படுவதைப் பார்த்தவர்களும் இதில் அடங்கியிருந்தனர்.

ஜே.நாடியா (16), ஆப்கானிஸ்தான்: துருக்கிக்கு வந்து சேர்ந்தபோது உடன் வந்தவர்களை இழந்துவிட்டேன். ஆள்களை வெளிநாடுகளுக்குப் படகில் அனுப்பி வைக்கும் முகவரைச் சந்தித்தேன். நான் மட்டும்தான் குடும்பத்தில் மிஞ்சினேன். என்னிடம் பணம் இல்லை. சுவீடன் போக உதவுவீர்களா என்று கேட்டேன். ஓ... தாராளமாக என்று கூறிய அவர், என்னைத் தனியாக ஓரிடத்தில் 12 நாள்கள் அடைத்துவைத்துப் பாலியல்ரீதியாகத் துன்புறுத்தினார். வேறு வழியில்லாமல் பொறுத்துக் கொண்டேன். அங்கிருந்து தப்பிக்கவும் வழி தெரியவில்லை. பிறகு, மற்றவர்கள் உதவியுடன் அங்கிருந்து வெளியேறி சுவீடன் வந்திருக்கிறேன்.

பி.கரம் (16), சிரியா: ஐ.எஸ். படையினர் என்னை 5 மாதங்கள் கைதியாகச் சிறைப்பிடித்து வைத்து வேலை வாங்கினர். மற்றவர்களைச் சித்திரவதை செய்து கொல்வதையெல்லாம் என்னைக் கட்டாயப்படுத்திப் பார்க்க வைத்தனர்.

டி.அபீத் (16), ஆப்கானிஸ்தான்: என்னுடைய பெற்றோர்களை இழந்துவிட்டேன். என்னுடைய உறவுக்காரர் என்னைத் தலிபான் படையில் சேர்க்க முற்பட்டார். அவரிடமிருந்து தப்பி பொலிஸ்காரர்களிடம் சென்று முறையிட்டேன். அவர்கள் என்னைக் காப்பாற்றுவதற்குப் பதிலாக 4 நாள்கள் சிறையில் அடைத்து வைத்தனர். பிறகு, அவர்களிடமிருந்து தப்பி நாட்டை விட்டே வெளியேறிவிட்டேன்.

டி.ரசூல் (9), ஆப்கானிஸ்தான்: படகில் வந்தபோது கடல் சீற்றம் காரணமாக எங்களுடன் வந்த சிலர் நீரில் விழுந்து மூழ்கியதைப் பார்த்தோம். எனக்கு அச்சமாக இருந்தது. என்னைத் தேற்ற யாரும் இல்லை. எனக்குத் துணையும் இல்லை. அதற்குப் பிறகு உடல் அசதியில் சிறிது நேரம் தூங்கினாலும்கூட அந்தக் காட்சிகள் மீண்டும் கனவாகத் தோன்றும். அச்சப்பட்டு கண் விழித்து விடுவேன்.

வி.சாரே (16), லிபியா: நானும் எனது 3 சகோதரர்களும் பெற்றோரை விட்டுப் பிரிந்துவிட்டோம். இனி, லிபியாவில் இருந்தால் வாழ முடியாது என்று தெரிந்தது. நாங்கள் தனியாகத்தான் வந்தோம். வேறு வழியே இல்லை.

தலிபான்களிடமிருந்து தப்பிப்பதற்காகவே நாட்டைவிட்டு ஓடி வந்ததாகப் பல ஆப்கானிஸ்தான் சிறுவர்கள் தெரிவித்தனர். நாட்டைவிட்டு ஓடும் வழியிலும் சிறுவர்கள் தாக்கப்பட்டுள்ளனர்.

சுவீடனிடம் புகலிடம்கேட்டு விண்ணப்பித்தவர்களில் 53 பேரை மனித உரிமைகள் அமைப்பினர் செவ்வி கண்டனர். அவர்களில் 50 பேர் 18 வயதை எட்டாத குழந்தைகள். 9 பேர் பெண்கள். 3 பேருக்கு சுவீடன் வந்தவுடன் 18 வயது ஆனது. அவர்களை 17 அடைக்கல மையங்களில் அரசு தங்க வைத்திருக்கிறது. செவ்வியளித்தவர்களில் 37 பேர் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்தவர்கள். 4 பேர் எரித்திரியாவிலிருந்து வந்தவர்கள். 4 பேர் சிரியா, 3 பேர் சோமாலியா, 2 பேர் ஈராக், 2 பேர் எத்தியோப்பியா, ஒருவர் யேமன்.

கேள்வி கேட்டு குழந்தைகளைத் துயரத்தில் ஆழ்த்தக்கூடாதென்று, தாங்களாக முன்வந்து பேசியவர்களிடம் மட்டும் செவ்வி காணப்பட்டது.

### சுவீடனுக்குப் பாராட்டு

அகதிகளுக்குப் புதுவாழ்வு தருவதில் சுவீடன் முன்னோடி. இங்கே வந்த குழந்தைகள் இறப்புப் பயம் நீங்கி, நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றனர். அவர்களுக்கு உணவு, உடை, தங்குமிடம் ஆகியவற்றைத் தருவதுடன் தொடர்ந்து படிக்கவும் அரசு வசதிசெய்கிறது. மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கு சுவீடன் முன்மாதிரியாகத் திகழ்கிறது என்று மனித உரிமைகள் அமைப்பைச் சேர்ந்த ரெபேக்கா ரிட்டல் பாராட்டுகிறார்.

அதற்காகக் குறைகள் இல்லாமல் இல்லை. அகதிகளின் மனுக்களை ஏற்பதில் முறையான நடைமுறைகள் இல்லை. மனுக்களைப் பரிசீலிக்கவும் ஏற்கவும் அதிக காலதாமதம் ஆகிறது. இதனால் திருப்பி அனுப்பிவிடுவார்களோ என்ற அச்சம் குழந்தைகளிடம் நீடிக்கிறது. ஏற்கெனவே பல சோதனைகளுக்கு ஆளாகிவிட்டதால், இங்கும் திருப்பி அனுப்பிவிட்டால் எதிர்காலம் எப்படி என்ற பெருங்கவலை குழந்தைகளை வாட்டுகிறது என்றும் ரெபேக்கா சுட்டிக்காட்டுகிறார். கடந்த ஆண்டு மட்டும் புகலிடம் கேட்டு 160,000 பேர் விண்ணப்பித்தனர். சில குழந்தைகள் இங்கு வந்து தங்கி 5 மாதங்கள் முழுமையாகிவிட்டன. தாம் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்பட்டனர் எனக் கூறிய சில பெண் குழந்தைகளுக்கு உளவியல் ரீதியிலான ஆறுதல் இன்னும் வழங்கப்படவில்லை.

“என்னைப் பையன்களோடு சேர்த்துத் தங்க வைக்காதீர்கள், பெண்களோடு மட்டும் தங்க வையுங்கள்” என்று நாடியா கோரியிருந்தார். ஆனால், அவர் இருக்கும் முகாமில் பெண்கள் மட்டுமின்றி 15 பையன்களும் இருக்கின்றனர். அவரை மகப்பேறு மருத்துவர் யாரும் இதுவரை சோதிக்கவில்லை.

### விரைவில் பரிசீலனை

தனியாக வரும் சிறுவர்களின் எண்ணிக்கை இப்போது குறைந்துவிட்டதால் ஏற்கெனவே விண்ணப்பித்தவர்களின் மனுக்கள் இனி விரைந்து பரிசீலிக்கப்படும் என்று சுவீடனின் சுகாதார நலத்துறை அதிகாரி ஒருவர் தெரிவிக்கிறார். சுவீடனுக்குள் அகதிகள் வந்த உடனேயே அவர்களுடைய உணவு, உடை, தங்குமிடம், பொதுவான மருத்துவ சேவை போன்ற தேவைகள் வழங்கப்படுகின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டினார். குழந்தைகள் பாதுகாப்பாக, காவலர்களின் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர். வெகு விரைவில் அனைவரின் கோரிக்கைகளும் பரிசீலிக்கப்படும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவிக்கிறார்.

மூலம்: தி கார்டியன்.

அகதிகளுக்குப் புதுவாழ்வு தருவதில் சுவீடன் முன்னோடி. இங்கே வந்த குழந்தைகள் இறப்புப் பயம் நீங்கி, நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றனர். அவர் களுக்கு உணவு, உடை, தங்குமிடம் ஆகிய வற்றைத் தருவதுடன் தொடர்ந்து படிக்கவும் அரசு வசதிசெய்கிறது. மற்ற ஐரோப்பிய நாடு களுக்கு சுவீடன் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று குரங்குகள்



## குழம்பிய மனித உளவியலின் புதிய வடிவம்

கெட்டதைக் கேட்கக்கூடாது, கெட்டதைப் பார்க் கக்கூடாது, கெட்டதைப் பேசக் கூடாது. என்று இருத்தல் உத்தமம். ஆனால் நம் மைச் சூழ்ந்துள்ள சமூகநிலை நம்மை அப் படியா விட்டு வைக்கிறது? சந்தர்ப்பவசத்தால் சூழ்நிலைக் கைதிகளாகச் சிக்கும் மனிதர்களின் கதையைச் சொல் கிறது மூன்று குரங்குகள் (Three monkeys) எனும் துருக் கிய நாட் டுத் திரைப்படம்.

நடைபெற உள்ள பொதுத் தேர்தலுக்காக ஓய்வில்லா மல் பரப்புரையில் ஈடுபடுகிறார் பணக்கார தொழிலதி பர் செர்வெத். அவர் தேர்தல் நேரத்தில் காரை ஓட்டிக் கொண்டே தூங்கி வழிந்ததில் வீதி விபத்து நேர்ந்து விடுகிறது. அன்று கார் ஓட்டுநராகத் தான் இருக்கவில் லையென்றாலும் இந்தக் குற்றத்தை தான் செய்ததாக



பொறுப்பேற்று தன் முதலாளியைக் காப்பாற்ற வேண் டியசூழ்நிலைஐயூப்என்றஅவருடையகார்ஓட்டுநருக்கு. அவன் தன் முதலாளிக்காகச் சிறைக்குச் செல்கிறான்.

அவன் சிறைசென்ற நேரம் அவன் சொந்த விடயங்கள் பலதும் எக்கச்சக்கமான சிக்கல்களுக்கு உள்ளாகி விடுகின்றன. அதற்குக் காரணம் செர்வத் என்ற அந்தப் பணக்காரன். யாரோ செய்த தவறுக்குச் சிறையில் இருந்து வந்ததுதானே இதற்குக் காரணம் எனக் குமுறு கிறான். அவன் சிறையிலிருந்து விடுதலையாகி வீட்டுக் குத்திரும் பும்போது குடும்ப சூழ்நிலை முற்றிலும் மாறியி ருக்கிறது. அவன் மகன் இஸ்மாயிலும் இதைப் புரிந்து கொள்கிறான். வீட்டில் தவறாக நடப்பது எதையும் அவ னால் தடுக்கமுடியாத கோழைத்தனமும் அவனை வாட்டுகிறது.

அன்று இரவு அந்தப் பணக்காரன் செர்வெத் கொலை யுறுகிறார். அதற்கு ஐயூப் மற்றும் அவன் மகன் இஸ்மா யில் ஆகியோரின் மீது பொலிஸார் சந்தேகப் படுகின்ற னர். அதைத் தொடர்ந்து இருவரையும் பொலிஸ் கைது செய்து அழைத்துச் செல்கிறது.

உண்மையில் கொலை செய்தது இஸ்மாயில் தான்.ஆனால்அவன்சிறை செல்ல விரும்பவில்லை. சிறை வாசத்திலிருந்தும் இந்த வழக்கிலிருந்தும் தப்பவேண் டுமே என யோசிக்கிறான். ஒருமுறை சிறைவாசம் அனுபவித்ததற்கே குடும்பம் பல சிக்கல்களில் மாட்டிக் கொண்டது. தான் இந்த முறை சிறைக்குப் போனால் குடும்பத்தையும் குழந்தைகளை யும் மறந்துவிட வேண்டியதுதான் என நினைக்கிறான். அதற்குப் பதிலாக டீக்கடையோரம் படுத்துக்கிடக்கும் ஒரு பஞ்சப் பராரியைக் கண்டுபிடிக்கிறான். அவனையே சிறைக்குச் செல்லவும் தகுந்த ஏற்பாடுகளைச் செய்கிறான்.

தான் மற்றவருக்காக சிறைசென்றதால் எவ்வளவு பிரச் சினைகள் என்பதை நன்குணர்ந்தவன், சாமான்யனான அந்தச் சாரதி ஐயூப். ஆனால் தனக்கு ஒன்று என்றவுடன் இன்னொருவனைச் சிறைக்கு அனுப்பிவைக்கிறவனும் அவன்தான். சூழ்நிலை மனிதர்களை எப்படிப் புரட்டிப் போடுகிறது என்பதை இத்திரைப்படம் சாதாரணமாகச் சொல்லிச் செல்கிறது. தேவையற்ற பூதாகரக் காட்சிப் படுத்தல்களும் நாடகத்தனமும் இன்றி ஒருவித 'சிபியா டோன்'இல் நம்மைச்சுற்றியுள்ள சதிவலைப் பின்னல் களைக் காட்ட 'அக்ரிலிக்' படிமம் போன்ற இரகசிய தொனியிலான பிம்பங்களை உருவாக்கும் ஒளிப்பதிவு வேண்டியிருக்கிறது. சிலநேரங்களில் நாம் வாழ்வின் அழுத்தமான கணங்களையும் ஒரு கனவைப்போல உணரக்கூடும். மனம் தடுமாறும் பேதலிக்கும் நிலைக் கேற்ப புறநிலை வெளிப்புறத் தோற்றங் களை உருவாக்குவது சாதாரணமில்லை. வானத்திற்குக்கீழே மேகங்களும் கட்டடங் களும்கூட ஒருவித வண்ணத்தில் சில நேரங்களில் நம்மனதின் உள்நிலையை வெளிப்படுத்துவது போலவே இருக்கும். ஓர் அக்ரிலிக் ஓவியம்போலக் காட்சிகளை ஒளிப்பதிவு செய்துகொடுத்த கோகன் டிர்யாகி சூழ்நிலைக்குத் தகுந்த ஒழுங் கான, சரியான மதிப்பீடுகளோடு தர விரும்பினார்.

எனில், நாம் வழக்கமாகப் பார்க்கும் படங்களில் பார்க்கும் வண்ணங்களிலி ருந்து மாறுபட்ட தன்மையைத் தரவிரும்பி னார். டிஜிட்டல் கேமராவில் முயற்சிக் காமல், நேர்க்கோட்டு வண்ண இடைவெளி களை பெருக்கிக்காட்டும் ஹெச்டி கேமராவில் இதைத் துல் லியமாகக் கொண்டுவந்தார்.

துருக்கிய திரைப்பட இயக்குநர் நூரி பில்கே செலான் இயக்கிய மூன்று குரங்குகள் திரைப்படம், 'ஆரண்ய காண்டம்' போன்ற முயற்சிகளுக்கு அடித்தளமிட்ட உத் வேகம் எனலாம். மூன்று குரங்குகள் கேன்ஸ் திரைப்பட விழாவில் இயக்குநர் நூரி பில்கே செலானுக்கு சிறந்த இயக்குநருக்கான விருதைப் பெற்றுத்தந்தது.

ஏமாற்றுதல், ஏமாறுதல், பழிவாங்குதல்கள் எனக் குழம்பியமனிதஉளவியலைநவீனதொழில்நுட்பங்களில் கூடிவந்த புதிய சாத்தியங்களை நிகழ்த்திய படம் இது.

> அவன் சிறைசென்ற நேரம் அவன் சொந்த விடயங்கள் பலதும் எக்கச்சக்கமான சிக்கல் களுக்கு உள்ளாகி விடுகின்றன. அதற்குக் காரணம் செர்வத் என்ற அந்தப் பணக்காரன். யாரோ செய்த தவறுக்குச் சிறையில் இருந்து வந்ததுதானே இதற்குக் காரணம் எனக் குமுறுகிறான். அவன் சிறையிலிருந்து விடுதலையாகி வீட்டுக்குத் திரும்பும்போது குடும்ப சூழ்நிலை முற்றிலும் மாறியிருக்கிறது.



## சிரிப்பே சிறந்த மருந்து

தமது ஞாபக சக்தியைச் சோதிக்க 3 மறதிப் பேராசிரியர்கள் மருத்து வரிடம் போனார்கள். முதலாவது மறதிப் பேராசிரியரிடம் மருத்துவர் கேட்டார் 3X3 எவ்வளவு? பதில் 300 என வந்தது. இரண்டாவது பேராசிரியரிடம் கேட்க ஞாயிற்றுக் கிழமை எனப் பதில் வந்தது. மூன்றாவது பேராசிரியர் ஒன்பது எனச் சொல்ல, "சரியான விடையை எப்படி கண்டுபிடித்தீர்கள்?" என்றார் மருத்துவர். "மிகவும் சுலபம், ஞாயிற்றுக்கிழமையிலிருந்து 300ஐக் கழித்தால் வருவது ஒன்பதுதானே" என்றார்.

கலாபூணம்
மு.மாசிலாமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களின் சாதனையும் துணிவும்



இணையவள்

ஆணாதிக்கத்தால் தங்கள் திறமைகளை உணராத பெண்கள் இப்போது கிடைக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்தி தங்களுக்குள் மறைந்து கிடக்கும் ஆற்றலை வெளிக்காட்டத் தொடங்கி இருக்கிறார்கள்.

காலம் மாறி விட்டது. சாதிக்கப்பிறந்தவர்கள் பெண்கள் என்பதை ஒவ்வொரு துறையிலும் நிரூபித்து வருகிறார்கள். 'அடுப்பூதும் பெண்களுக்கு கல்வி எதற்கு'-என்று பெண்களை அடக்கி வைத்த காலம் ஒன்று இருந்தது.

அந்தக் காலம் மலையேறிவிட்டது. பெண்கள் பூவிலும் மென்மையானவர்கள். கவிஞர்களின் கற்பனைக்கும், கவிதைக்கும் கருப்பொருளாக காட்சி அளித்தார்கள். இன்று வியத்தகு சாதனைகளால் வியக்க வைக்கிறார்கள்.

எந்தத் துறைகளிலெல்லாம் பெண்களால் சாதிக்க முடியாது என்று நினைத்தோமோ, அந்தத் துறைகளிலெல்லாம் முத்திரை பதித்து தங்கள் திறமையை நிரூபித்து வருகிறார்கள்.

அன்பைச் சுமக்கும் பெண்களால் துப்பாக்கிகளையும், ஏவுகணைகளையும், குண்டுகளையும் சுமப்பது எளிதா? என்ற கேள்வியை சுக்கு நூறாக்கி விட்டார்கள். இந்தப் பூக்கள் புயலானால் எதையும் புரட்டிப் போடும் என்று புரிய வைத்துள்ளார்கள்.

ஜான்சி ராணி லட்சுமிபாய், தில்லையாடி வள்ளியம்மை, வீரமங்கை வேலு நாச்சியார், ராணி மங்கம்மாள், மனித குண்டாக மாறிய குயிலி என்று பலரது வீரம் செறிந்த வாழ்க்கை என்றென்றும் பெண்களின் வீரத்துக்கு உரமாக உள்ளன.

முறத்தால் புலியை விரட்டிய நமது பெண்களின் வழித்தோன்றல்கள் வீரமிக்கவர்கள் தான்.

ஆனால் இடைப்பட்ட காலத்தில் ஆணாதிக்கத்தால் தங்கள் திறமைகளை உணராத பெண்கள் இப்போது கிடைக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்தி தங்களுக்குள் மறைந்து கிடக்கும் ஆற்றலை வெளிக்காட்டத் தொடங்கி இருக்கிறார்கள்.

பெண்கள் பூக்கள் மட்டுமல்ல. புயலாய் உருவெடுப்பவர்கள்! அழகானவர்கள் மட்டுமல்ல. ஆபத்தையும் தருபவர்கள். அதனால்தான் அழகான ராட்சசி என்றார்கள்! பெண்களால் ஆக்கவும் முடியும். பகைவனை அழிக்கவும் முடியும் என்பதற்கு உண்மையான இலக்கணத்தைப் படைத்துள்ளார்கள். எனவே பெண்களைப் போற்றுவதும், வணங்குவதும் நமது பண்பாடு.

# பெண்களின் மாற்றம்

பெண்களின் விருப்பங்களும் எதிர்பார்ப்புகளும், ரசனைகளும் காலத்துக்குத்தக்கபடி மாறிக்கொண்டே இருக்கின்றன. நேற்று போன்று அவர்கள் இன்று இல்லை. இன்று போல் அவர்கள் நாளை இருக்க போவதும் இல்லை. பெண்களின் முதன்மையான எதிர்பார்ப்பு அருகில் இருக்கும் அன்பானவர்(ஆண்) தன்னைக் கவனிக்க வேண்டும். தன்னைப்பற்றிப் பேச வேண்டும் என்பது தான். ஆண் அருகில் இருக்கும் பெண்ணைக் கவனிக்காமல் அவளைப் பற்றிப் பேசாமல் வேறு ஏதோ பரபரப்பில் மூழ்கியிருப்பதை பெண் விரும்புவதில்லை. ஆண்கள் எப்போதும் தங்களுடன் ஒட்டிக்கொண்டிருப்பதை பெரும்பாலான பெண்கள் விரும்புவதில்லை என்பது தெரியவந்துள்ளது. தனியாகவோ அல்லது மனதுக்கு பிடித்த தோழிகளுடனோ வெளியே செல்ல விரும்பு கிறார்கள். அப்போது மகிழ்ச்சியாக இருக்கவும், சாகசங்கள் செய்யவும் விரும்புவார்கள். மனதுக்குப் பிடித்தவர்களுடன் ஆடிப் பாட வும், விளையாடவும் அந்த குழந்தை மனம் விரும்பும் என்பதை ஆண்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று பெண்களில் பெரும்பாலானவர்கள் கருத்து. பெண்கள் தங்கள் அடிப்படைத் தேவையைப் பூர்த்தி செய்ய போதிய வசதி இன்றி தவிக்கிறார்களாம். பணத்தின் மீது அவர்கள் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள். சம்பா திக்க புதிய வழிமுறைகள் இருக்கிறதா? என்றும் அவர்கள் பல விதங்களில் யோசிக் கிறார்கள். அதனால் தங்களது பணத்தேவையைப் பூர்த்தி செய்து நல்லபடியாக தங்களை பேணும் ஆண்கள் மீது அவர்கள் பார்வை ஆழமாகப் பதிகிறது. பெருளாதார ரீதியாக சுதந்திரமாக இருக்கவும், விரும்பியதைத் தேர்ந்தெடுக்கும் உரிமையுடன் திகழவும் பெண்கள் விரும்புகிறார்கள். இத்தனை மாற்றங்கள் பெண்ணில் ஏற்பட்டுள்ளதை நாம் உணர்வோமா?





# குடும்ப உறவுகள் பெண்களின் கைகளில்

ஒரு மனிதனுக்கு தனது மகிழ்ச்சியைத், துக்கத்தைப் பகிர்ந்து கொள்ள நெஞ்சுக்கு நெருக்கமான ஆள் வேண்டும். அது தான் குடும்பம்.குடும்பம் என்பது ஒரு மனிதனுள் பின்னிப் பிணைந்தது. குடும்பம் இல்லாத ஒரு மனிதன் முழுமை இல்லாதவன் ஆகின்றான். ஆக மனிதனுக்கு குடும்பமே முக்கியம். அவனுக்கு பெற்றோர், மனைவி, குழந்தைகள், அண்ணன், அக்கா, சித்தப்பா, அத்தை, மாமா என அவனது உறவுகள் நீண்டு கொண்டே செல்லும். ஒரு குடும்பத்தின் முழுப் பொறுப்பும் அதில் உள்ள அனைத்து நபர்களையும் சாரும். இதுதான் அந்த குடும்பத்தை மகிழ்ச்சியாய் வாழ வைக்கும்.

பல குடும்பங்கள் சேர்ந்தது ஒரு சமுதாயம், ஒரு நாடு என்று விரிவடையும். குடும்பம் மகிழ்ச்சியாக இருந்தால் அந்த மனிதன் வெளிச் சமுதாயத்தில் மகிழ்ச்சியாய் இருப்பான். ஒழுங்காய் இருப்பான். ஏனெனில் அவனுக்குப் பின்னே ஒரு குடும்பமே அதாவது பல நபர்கள் அவன் உறவுகளாய், அவன் முதுகெலும்பாய் நிற்கிறார்கள். இங்கு அவன் என்று நான் குறிப்பிடுவது பொதுவாகத்தான். இங்கு கூறப்படுபவை அனைத்தும் ஆண் பெண் இருபாலாருக்குமே. குடும்பம் இரண்டு கை, இரண்டு கால் கொண்ட சமூக மிரு கத்தை மனிதனாக மாற்றுகின்றது. இதற்கு வேராக பெண்களின் பங்களிப்பு அதிகமாக இருக்கும். பெண் பொறுமைக்கு முன்மாதியாக இருப்பவள் என்பதால் கூடுதலான குடும்பப் பொறுப்புக்கள் அவளிடம் தான் உள்ளது. ஒரு குடும்பம் நல்லதாகவோ, கெட்டதாகவோ பேசப்படுவதற்கும் அவளின் பெயரே சமூகத்தில் விமர்சிக்கப்படும். ஆக குடும்பத்தை முழுமையாகத் தாங்க முடியாவிட்டால் கிடைத்திருக்கும் பொறுப்புக்களை பொறுப்புணர்வுடன் நிறை வேற்ற வேண்டியது பெண்ணின் கடமையல்லவா?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# இந்த வாரம்

**19.06.2016 முதல் 26.06.2016 வரை**

*உங்களுக்கு எப்படி?*

## மேடம்

சூரியன், குரு, கேது, சுக்கிரன் வியத்தகு அளவில் நன்மை வழங்குவர். பேச்சில் அறிவாற்றல் நிறைந்திருக்கும். உடன்பிறந்தவர்கள் கருத்து பேதம் கொள்வர். பயணங்கள் அதிகரிக்கும். புத்திரர்கள் விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். திட்டமிட்ட செயல் ஒன்று நிறைவேறும். மனைவியின் ஒத்துழைப்பால், குடும்பத்தில் முன்னேற்றமும், மகிழ்ச்சியும் கூடும். தொழில், வியாபாரத்தில் போட்டி குறைந்து பணவரவு அதிகரிக்கும். பணியாளர்கள் பணிகளை விரைந்து முடித்து, அதிகாரிகளிடம் நற்பெயர் பெறுவர். பெண்கள் வீட்டு அலங்கார பொருள் வாங்குவர். மாணவர்கள் முயற்சியுடன் படித்து முன்னேற்றம் காண்பர்.

## இடபம்

சுக்கிரன், சந்திரன் ஓரளவு பலன் தருவர். பணவரவு மற்றும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப திட்டங்களை வகுப்பது நல்லது. நண்பர்களுடன் கருத்து வேறுபாடு வரலாம். அரசு சார்ந்த உதவிகள், கடும் முயற்சி செய்தால் தான் கிடைக்கும். புத்திரர்கள் படிப்பு, செயற்றிறனில் முன்னேறுவர். சொத்து பராமரிப்பில் கவனம் வேண்டும். உடல்நலத்துக்கு ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம். மனைவி, உங்கள் எண்ணங்களைச் செயற்படுத்துவார். பயணங்களால் அதிக பலன் இருக்காது. தொழில், வியாபாரத்தில் இலாபம் ஓரளவுக்கே இருக்கும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்க தாமதமாகலாம்.

## கடகம்

குரு, புதன், சுக்கிரன் அனுகூல அமர்வில் உள்ளனர். நற்செயல்களால் நன்மை பெறுவீர்கள். எவரிடமும் நிதானித்து பேசுவது நல்லது. தம்பி, தங்கை கேட்ட உதவியை வழங்குவீர்கள். வாகன பராமரிப்புச் செலவு குறையும். புத்திரர்களின் அறிவுத்திறன் வளர தேவையான பணிபுரிவீர்கள். சிரமங்களை மதிநுட்பத்துடன் சரிசெய்ய வேண்டும். உடல்நிலை பலம் பெறும். மனைவி கருத்து ஒற்றுமையுடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் புதியவர்களின் வருகை போட்டியை உருவாக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தின் வழிகாட்டு தலை தவறாமல் பின்பற்ற வேண்டும். பெண்களுக்கு பணப்புழக்கம் தாராள அளவில் இருக்கும்.

## மிதுனம்

செவ்வாய், சனி, ராகு, சுக்கிரனால் நன்மை ஏற்படும். திட்டங்களில் புதுமையைப் புகுத்த முயற்சிப்பீர்கள். பொது இடங்களில் நடக்கும் விவகாரங்களில் தலையிடவேண்டாம். உடன்பிறந்தவர்களுக்கு, மங்கள நிகழ்ச்சி நடக்க அனுகூலம் உண்டு. வீட்டில் பாதுகாப்பு ஏற்பாடு செய்வது நல்லது. புத்திரர்கள், தங்கள் நற்செயலால் பெற்றோருக்கு பெருமை தேடித்தருவர். கடனாக கொடுத்து வராது என நினைத்த பணம் திரும்பக்கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகி, அபிவிருத்திப் பணி சிறப் பாக நிறைவேறும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்ட திட்டத்தை பின்பற்றி நன்மை பெறுவர்.

## சிங்கம்

சூரியன், சுக்கிரன், புதனால் நன்மை உண்டாகும். பணிகளை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். வாழ்வில் முன்னேற உதவியவர்களுக்கு நன்றி சொல்வீர்கள். ஆடம்பரச் செலவைத் தவிர்க்கவும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரர்கள் பிடிவாத குணத்துடன் செயற்படுவார். பூர்வீச் சொத்துப் பராமரிப்பில் உரிய கவனம் வேண்டும். மனைவி, உங்கள் திட்டங்களுக்கு ஒத்துழைப்பார். எதிர்பார்த்த சுபசெய்தி வரும், கவனம். பணியாளர்கள் வாய்ப்புகளைப் பயன்படுத்தி முன்னேறுவர். மாணவர்களுக்கு ஞாபகத்திறன் வளரும்.

## கன்னி

பெரும்பான்மை கிரகங்கள் நற்பலன் தருவர். புத்திரர்கள் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். முக்கிய செயல்கள் நிறைவேற கடுமையாகப் பாடுபடுவீர்கள். எதிர்ப்பு விலகி முன்னேற்றம் ஏற்படும். கணவன், மனைவி ஒற்றுமை பலப்படும். வாகன பராமரிப்புச் செலவு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் போட்டி குறைந்து இலாபம் கூடும். பணியாளர்கள் தங்கள் திறமையை வளர்த்து அதிக சலுகைகள் பெறுவர். பெண்களுக்கு நகை, புத்தாடை, சேமிப்பு பணம் என, முன்னேற்ற சூழ்நிலை இருக்கிறது. மாணவர்கள் முயற்சித்து படித்து முன்னேற்றம் காண்பர்.

## துலாம்

ராகு, குரு, சுக்கிரன், புதன் நற்பலன் தருவர். முன்னேற்றத்துக்கான புதிய சூழல் உருவாகும். பணிகளை ஆர்வமுடன் செய்வீர்கள். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரர்கள், உங்கள் அறிவுரையைப் பின்பற்றி நற்பலன் பெறுவர். கடனில் ஒரு பகுதியைச் செலுத்துவீர்கள். மனைவியின் மனதில் இருந்த குழப்பம் விலகும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை செழிக்கும். பணியாளர்கள் சுறுசுறுப்பாக பணிபுரிவர். பெண்களுக்கு தாய் வீட்டு உதவி கிடைக்கும். மாணவர்களுக்கு படிப்பில் கவனம் வேண்டும்.

## தனுசு

குரு, புதன், கேது அதிக நன்மை தருவர். உழைப்புக்கான பலன் திருப்திகரமாக கிடைக்கும். நிம்மதி நிறைந்த வாழ்வு உருவாகும். பயணங்கள் இனிதாக அமையும். புத்திரர்கள் சில விடயங்களில் பிடிவாதம் செய்வர். வழக்கு, விவகாரத்தில் மாற்றுத்தீர்வுக்கு வழி ஏற்படும். குடும்பத்தில் மங்கள நிகழ்வு ஏற்படும். மனைவியுடன் அனுசரணையான போக்கு நல்லது. தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகி உற்பத்தி, விற்பனை கூடும். கடன் கொடுத்த பணம் வசூலாகும். பணியாளர்கள் குறித்த காலத்தில் இலக்கு நிறைவேற்றுவர். பெண்கள், உடல்நலத்தில் அதிக கவனம் கொள்ள வேண்டும். மாணவர்கள், நண்பர்களின் ஒத்துழைப்புடன் படிப்பில் சிறந்து விளங்குவர்.

## விருச்சிகம்

சுக்கிரன், சந்திரனால் ஓரளவு நன்மை கிடைக்கும். பணிகளில் அதிக கவனம் வேண்டும். தாய்வழி உறவினர்கள் உதவி கேட்டு அணுகுவர். புத்திரர்களின் சேர்க்கை சகவாசம் மனதுக்கு வருத்தம் தரலாம். உடல்நலனில் அதிக கவனம் வேண்டும். மனைவி வழி உறவினர்கள் அன்புடன் நடந்து கொள்வர். வெளியூர் பயணம் இனிய அனுபவம் தரும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்ட திட்டங்களை மதித்து நடந்தால்தான், சலுகைகளைப் பெற முடியும். மாணவர்கள் விரும்பிய கல்லூரியில் இடம் கிடைக்க கடும் பிரயத்தனம் செய்ய வேண்டும்.

## மகரம்

சூரியன், செவ்வாய், சனீஸ்வரர் நற்பலன் வழங்குவர். நற்பண்பு நிறைந்தவர்களின் வாழ்த்து கிடைக்கும். மனதில் உற்சாகம் அதிகரிக்கும். வளர்ச்சிப் பாதையில் நடை போடுவீர்கள். உடன்பிறந்தவர்கள் கருத்து வேறுபாடு கொள்வர். புதிய வீடு, வாகனம் வாங்க யோகம் உண்டு. புத்திரர்களின் போக்கு மனதுக்கு அதிருப்தி தரலாம். விவகாரங்களில் சுமுக தீர்வு கிடைக்கும். மனைவியின் உடல்நலத்தில் கவனம் வேண்டும். தொழில், வியாபாரம் செழிக்க, மாற்றுத் திட்டங்கள் செய்வீர்கள். பணியாளர்கள் நிர்வாகத்தை அனுசரித்துச் சென்றால் தான் சலுகை கிடைக்கும். மாணவர்கள் படிப்புடன் விளையாட்டிலும் சாதனை புரிவர்.

## மீனம்

சுக்கிரன், ராகு, சந்திரன் நற் பலன் வழங்குவர். செயல்களில் நிதானம் வேண்டும். உறவினர்கள் பாசத்துடன் நடந்து கொள்வர். வீடு, வாகனத்தில் உரிய பாதுகாப்பு வேண்டும். புத்திரர்கள் விரும்பிய பொருளைச் சிக்கன செலவில் வாங்கித் தருவீர்கள். உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும். மனைவியின் பாசத்தில் மனம் நெகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் புதியவர்களின் ஆதரவு வளர்ச்சியைத் தரும். பணியாளர்கள் சிறப்பாக பணிபுரிந்து பாராட்டு, வெகுமதி பெறுவர். மாணவர்கள் படிப்புடன் பொது அறிவிலும் மேம்படுவர்.

## கும்பம்

குரு, புதன், சுக்கிரனால் நன்மை ஏற்படும். தாயின் அன்பு ஆசி கிடைக்கும். ஒதுக்கி வைத்த பணிகளை நிறைவேற்றுவீர்கள். உடன்பிறந்தவர்களுக்கு உதவுவீர்கள். புத்திரர்கள் விரும்பிக்கேட்ட பொருள் வாங்கித் தருவீர்கள். உடல் ஆரோக்கியம் பலம்பெறும். வெளியூர் பயணத்தில் பாதுகாப்பு வேண்டும். இனிய அணுகுமுறையால் தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சீராகும். பணியாளர்கள் தங்கள் திறமையால் நிர்வாகத்தின் அன்பையும், அதிக சம்பளத்தையும் பெறுவர். பெண்கள் செலவைக் குறைத்து சேமிப்பில் ஆர்வம் கொள்வர். மாணவர்கள் படிப்பில் முன்னேற தேவையான உதவி கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குரங்கு



குட்டியை வயிற்றில் சுமக்கும் - அது
குதித்தே எங்கும் நடக்கும்
திட்டிய பேர்களை முறைக்கும் - பல
தெருக்களில் சேர்ந்தே இருக்கும்!

கைகளில் உள்ளதைப் பறிக்கும் - முகக்
கண்ணாடி கிடைத்தால் சிரிக்கும்
பையவே அருகினில் நெருங்கும் - வாழைப்
பழங்களை எடுத்து ஒதுங்கும்!

சட்டென்று கூரையில் விரையும் - நாம்
சந்திக்க முயன்றால் மறையும்
பட்டென்று முன்வந்து திரியும் - அதன்
பழக்கத்தால் குரங்கென்று புரியும்!

குழந்தைகள் பார்த்ததை மகிழும் - தினம்
குரங்கு தன் சேட்டைகள் திகழும்
இழந்ததை நெஞ்சம் மறக்கும் - குரங்கு
எதிர்ப்பட்டால் துன்பம் பறக்கும்!!

## அடையாளங்கள்

புனிதனுக்கு புத்தகங்கள் வாசிப்பதில் அதிக ஆர்வம் உண்டு. விஞ்ஞான புத்தகங்கள் கிடைத்தால் மேலோட்டமாக அதை வாசித்துவிட்டு கீழே வைத்து விடுவான்.

வாழ்க்கை வரலாற்று புத்தகங்கள் என்றால் அதை முழுமையாகப் படித்து விடுவான்.

பலருடைய கடந்த காலத்தை நாம் படிப்பதன் மூலம் நமது நிகழ்காலத்தை நன்றாக அமைத்துக் கொள்ள முடியும் என்பது அவனது நம்பிக்கை.

புனிதன் யார்? என்பது நகரத்தில் அனேகமாக எல்லோருக்கும் தெரியும். அதற்குக் காரணம் புனிதனின் சிறப்பு அல்ல. அவன் 10ஆம் வகுப்பு மாணவன்தான்.

அவனது தந்தை அழகுரத்தினம் பெரு வணிகர். கூலித்தொழிலாளியாகஇருந்து கோஸ்வரர் ஆனவர். அவர் பழையதை நினைத்துப் பார்க்கும் பக்குவம் கொண்டவர். அதனால் ஏழைகளுக்கு நிறைய உதவுவார்.



அப்பா, புனிதனின் அருகில் இருப்பது அவனுக்கு அதிக சந்தோசத்தைக் கொடுக்கும்.

அவரோ தினமும் தாம் முற்காலத்தில் பட்ட கஷ்டங்களையும் அதில் இருந்து மீண்டு வந்ததையும் சுவைபட வர்ணிப்பார்.

"அப்பா நான் கொடுத்து வைத்தவன். விலை கொடுத்து பல புத்தகங்களை வாங்கி, விழித்திருந்து அதைப் படித்து கிடைக்கும் அறிவை நீங்கள் உங்கள் அனுபவத்தை சொல்வதன் மூலம் எனக்கு தந்து விடுகிறீர்கள்" என்று சொல்வான்.

புனிதன் லட்சாதிபதியின் மகன் என்பதால் பணச் சூழ் நிலைக்கு தக்கபடி வாழ்ந்து வந்தான். பள்ளிக் கூடத்தில் அவனுக்கு நிறைய நண்பர்கள் உண்டு.

புனிதனின் வீட்டில் நிறையப் பெண்கள் வேலை பார்த்தார்கள். அதில் சாந்தகுமாரி என்பவரின் மகன் சுந்தரராமசாமியும், ஜமுனாவின் மகன் ஆனந்தராஜும் புனிதனைவிடப் பெரியவர்கள், இளைஞர்கள்.

புனிதன் எங்கேயாவது தனியாக வெளியே செல்ல வேண்டி இருந்தால் இரண்டு பேரில் ஒருவரை தந்தை அவனோடு அனுப்பி வைப்பார்.

ஆனால் ஒவ்வொரு முறையும் புனிதன் வெளியே செல்லும்போது ஆனந்த ராஜையே விரும்பி தன்னோடு அழைத்துச் செல்வான்.

அன்றும் அவனுக்குப் பள்ளி உபகரணங்கள் சில வாங்கக் கிளம்பினான்.

காரில் செல்லும் அவன் உதவிக்காக ஆனந்தராஜையே அழைத்தான்.

அவர்கள் திரும்பி வந்ததும் தந்தை புனிதனை அழைத்தார்.

"நீ எப்போதும் ஆனந்தராஜையே உன்னோடு அழைத்துச் செல்கிறாய். அவனது தேவைக்கு பணமும் கொடுத்து சில பொருள்களும் வாங்கிக் கொடுக்கிறாயே...?ஏன்" என்று கேட்டார்.

"ஆனந்தராஜ் மரியாதை நிறைந்தவன். எப்போது என்னைக் கண்டதும் எழுந்து கும்பிடுவான். கையை கட்டிக் கொண்டு என்னோடு வருவான். சுந்தரராமசாமி அந்த அளவுக்கு எனக்கு மரியாதை தருவதில்லை அப்பா" என்றான் - புனிதன்.

அதைக் கேட்ட தந்தை உள்ளபடியே மனம் நொந்தார்." இந்த வயதிலே தன் மகன் கூழைகும்பிடுக்கு அடிமையாகி விட்டானே, நல்லவர்கள் யார் என்பதையும் நிஜமான மரியாதை எது என்பதையும் இவன் உணரவில்லையே என்று நினைத்து வருத்தப்பட்டார்.

அதே நேரத்தில் உண்மையில் மரியாதை செய்பவர் யார்? என்பதை மகனுக்கு ஆதாரபூர்வமாக உணர்த்த வேண்டிய கட்டாயமும் அவருக்கு ஏற்பட்டது.

மகனை அழைத்துக் கொண்டு தென்னந்தோப்புக்குச் சென்றார். அங்கே தூரத்தில் ஆனந்தராஜும் சுந்தரராமசாமியும் வெட்டிப் போட்ட தேங்காய்களைப் பொறுக்கிக் கொண்டிருந்தார்கள். உடனே அவர் புனிதனை ஒரு மரத்தின் பின்னால் ஒளிந்து நிற்கச் சொல்லிவிட்டு தோப்புக்குள் நடந்தார்.

அவரைத் தூரத்தில் பார்த்த ஆனந்தராஜ் உடனடியாக ஒரு பீடியை எடுத்துப் பற்ற வைத்தான். அவர் அருகில் சென்றதும் அவர் அவனைப் பார்க்கும்போது பவ்வியமாக பீடியை தூக்கித் தூர வீசி விட்டு, வாயை பொத்திக்கொண்டு அவர் அருகில் ஓடோடி வந்து கும்பிடு போட்டான். வாயை பொத்திக் கொண்டு அவர் பின்னாலேயே சென்றான்.

முதலாளியைப் பார்த்ததும் சுந்தரராமசாமி கும்பிடு போட்டு வணக்கத்தை தெரிவித்து விட்டு தனது வேலையில் கண்ணுங்கருத்துமாக இருந்தான்.

சிறிது நேரத்திலே அவர் திரும்பி, மரத்தின் அருகில் ஒளிந்திருந்த மகனிடம் வந்தார்.

அவனோ தன் தலையிலே அடித்துக் கொண்டான்.

"அப்பா நான் ஆனந்தராஜின் போலித்தனமான மரியாதையைக் கண்டேன். நீங்கள் தூரத்தில் வருவது தெரிந்ததும் பீடியை பற்ற வைத்து விட்டு நீங்கள் அவனைப் பார்த்தும் அதிக மரியாதை தருவதாக நினைத்து பீடியை தூர வீசிவிட்டு வாயை ஊதி விட்டு, உங்கள் அருகில் பவ்வியமாக நின்றான். அவன் வெளிப்படுத்துவது போலித் தனமான மரியாதைதான். சுந்தரராமசாமி தருவது தான் நிஜமான மரியாதை. இனி மேல் நான் சுந்தரராமசாமியைத்தான் அழைத்துச் செல்வேன்" என்றான்.

"மகனே பணமும் செல்வாக்கும் அதிகம் வந்ததும் வசதி படைத்தவர்கள் கூழை கும்பிடுக்கு அடிமையாகி விடுவார்கள். நிஜமான மரியாதைக்கு அவர்களுக்கு அர்த்தம் தெரியாது. நீயும் அப்படி ஆகிவிடக் கூடாது" என்றார். அவனும் தலையசைத்துச் சம்மதம் சொன்னான்.



## வரலாற்றில் இன்றைய தினம்

1269 - பிரான்சின் 9 ஆம் லூயிஸ் மன்னனால் இனங் காணத்தக்கவாறு மஞ்சள் அடையாள ஆட்டை அணியாத யூதர்கள் பொது இடங்களில் காணப்பட்டால் 10 லிவ்வர் வெள்ளி தண்டமாக அறவிட கட்டளையிடப்பட்டது.

1586 - வட அமெரிக்காவில் முதலாவது நிரந்தர வகுவிடத்தை அமைத்துக்கொள்ள முடியாத நிலையில், ஆங்கில குடியேற்றவாசிகள் றோவனோக்தீவை விட்டு வெளியேறினர்.

1910 - வோஷிங்டன் ஸ்போகேனில் "தந்தையர் தினம்" முதன் முதலாகக் கொண்டாடப்பட்டது.

1917 - சந்திர கிரகணம் தோன்றியது.

1936 - சந்திர கிரகணம் தோன்றியது.

1961 - ஐக்கிய ராச்சியத்திடமிருந்து சுதந்திரத்தை குவைத் பிரகடனப்படுத்தியது.

1966 - சிவசேனா என்ற அரசியல் கட்சி இந்தியாவின் மும்மையில் தொடங்கப்பட்டது.

1982 - ஹிஷ்புல்லாவின் முதல் இராணுவத் தாக்குதலில் பெய்ரூட் அமெரிக்க பல்கலைக் கழகத்தின் தலைவர் டேவிட் எஸ்.டொட்ஜ் கடத்தப்பட்டார்.

1985 - மத்திய அமெரிக்க தொழிலாளர் புரட்சிக் கட்சியினர் சல்வடோர் இராணுவம் போன்று சீருடை தரித்து சன் சல்வடோர் ஷோனா றோசா பகுதியில் தாக்குதலை நடத்தினர்.

1991 - ஹங்கேரியில் சோவியத்தின் ஆக்கிரமிப்பு முடிவுக்கு வந்தது.

2004 - சவூதி அரேபியாவில் கடத்தப்பட்ட அமெரிக்கப் பொறியியலாளரின் தலையை வெட்டிக்கொன்றனர் தீவிரவாதிகள்.

2004 - ஈராக்கில் தொடர்ந்து பணியாற்ற ஜப்பான் படையினருக்கு ஜப்பான் பிரதமர் கொய்சுமி அனுமதி.

1992 - அரசியல் தீர்வு தொடர்பான தெரிவுக் குழுவின் திட்டத்தை தமிழ்க் கட்சிகள் நிராகரித்தன. வடக்கு - கிழக்கு இணைப்பு இல்லாத யோசனையை ஏற்க முடியாதெனவும் அறிவிப்பு.

1992 - வருட இறுதிக்குள் அரசியல் தீர்வு ஏற்படுமென ஜனாதிபதி நம்பிக்கை கொண்டுள்ளார் என அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு.

1990 - சென்னையிலுள்ள கோடம் பாக்கத்தில் பத்மநாபா, கிருபா உட்பட 13 பேர் சுட்டுக் கொலை. மேலும் 15 ஈ.பி.ஆர்.எல்.எப் உறுப்பினர்களுக்குக் காயம்.

1990 - யாழ்.போதனா வைத்தியசாலை தற்காலிகமாக மூடப்பட்டது.

2007 - பாக்தாத்தில் அல் - கிலான மசூதி மீதான குண்டுத் தாக்குதலில் 78பேர் உயிரிழந்ததுடன், 210 பேர் காயமடைந்தனர்.

2012 - வீக்கிலீக்ஸ் ஸ்தாபகர் ஜீலியன் அசஞ்சே லண்டன் ஈடுவடோரிய தூதுவராலயத்தில் தஞ்சம் கோரினார். அமெரிக்க இராணுவத்தால் பொது மக்கள் கொல்லப்பட்ட ஆவணங்களை வெளியிட்டமையால் அமெரிக்காவுக்கு நாடு கடத்தப்படலாம் என்ற அச்சத்தில் அவர் தஞ்சம் கோரினார்.



என்.யுகப்பிரியா,
தரம் 6 ஏ,
வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை.



சி.பிரவீன்,
தரம் 2.
விசாலம் சர்வதேச பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# 20 நிமிடத்தில் அழகாக மாற...

பெண்களை விட ஆண்களுக்குத்தான் வெளியில் அலைச்சல் அதிகம். அதிலும் வேலைக்கு செல்பவர்களுக்கு முகம் புத்துணர்ச்சியுடன் இருக்க வேண்டியது அவசியம். ஆனால் வெயில் காலத்தில் ஒருமுறை வெளியில் சென்று வந்தாலே முகம் கறுத்துவிடும். எனவே முக அழகைப் புத்துணர்ச்சியோடு பாதுகாக்க வீட்டிலேயே பேஸ் மாஸ்க் போட்டுக்கொள்ளலாம்.

### தக்காளி பழ மாஸ்க் :

ஒரு சில ஆண்களுக்கு முகத்தில் எண்ணெய் வடியும். அவர்களுக்கு தக்காளிப்பழம் எளிதான சிறந்த அழகு சாதனப்பொருளாக விளங்குகிறது. நன்கு கனிந்த தக்காளிப் பழத்தைத் தோல் நீக்கி அதனை பிசைந்து கொள்ளவும். அதில் சிறிதளவு பால் கலந்து பேஸ்ட் போல செய்து முகத்துக்குப் பூசலாம். இதனால் முகத்தில் உள்ள அதிகப்படியான எண்ணெய்ப் பசை நீங்குவதோடு முகம் பளிச் என்று ஆகும்.

### தேன், முட்டை :

ஒரு கரண்டி தேனுடன், முட்டை வெள்ளைக்கரு, ஆப்பிள் கூழ் ஆகியவை கலந்து முகத்தில் பூசவும். 15 முதல் 20 நிமிடம் வரை இந்த கலவையை ஊறவைத்து பின்னர் குளிர்ந்த நீரில் கழுவ முகம் புத்துணர்ச்சியாகும்.

### வெள்ளரிக்காய் மாஸ்க் :

வெயில் காலத்தில் வெள்ளரிக்காய் சிறந்த ஊட்டச்சத்து உணவாகவும், அழகுப் பொருளாகவும் பயன்படுகிறது. இது முகத்தில் இறந்துபோன செல்களை நீக்கவும், முகத்துக்குத் தேவையான எண்ணெய்ப் பசையை தக்கவைக்கவும் உதவுகிறது.

வெள்ளரிக்காயை நன்றாக மைய அரைத்து அதனுடன் ஒரு கரண்டி தேன் சேர்த்து முகத்தில் பூசவும். 20 நிமிடம் ஊறவைத்து முகத்தைக் குளிர்ந்த நீரில் கழுவவேண்டும். வாரம் இருமுறை இந்த மாஸ்க் செய்தால் வெயிலால் முகம் கறுக்காது. புத்துணர்ச்சியோடு இருக்கும். வெள்ளரிக்காயைத் தயிருடன் கலந்தும் மாஸ்க் போடலாம்.

# பர்கர்

### தேவையான பொருள்கள்

- பணிஸ் 2
- நறுக்கிய கோவா 3 கரண்டி
- தக்காளி 2 (வட்டமாக நறுக்கியது)
- வெங்காயம் 3 (வட்டமாக நறுக்கியது)
- தக்காளி சோஸ் 2 கரண்டி
- சீஸ் 2 துண்டுகள்

### உள்ளே வைப்பதற்கு...

- காய்கறிகள் ஒன்றரைக் கப்
- சோம்புப் பொடி 2 கரண்டி
- வெங்காயம் பாதி (பொடியாக நறுக்கியது)
- இஞ்சி பூண்டு பேஸ்ட் 3 கரண்டி
- மிளகாய் தூள் 3 கரண்டி
- உப்பு தேவையான அளவு

### செய்முறை

முதலில் காய்கறிகளை நன்கு மென்மையாக வேக வைத்து தனியாக வைத்துக் கொள்ள வேண்டும். பின்னர் ஒரு சட்டியை அடுப்பில் வைத்து, அதில் எண்ணெய் ஊற்றி, சோம்புப் பொடி சேர்த்துக் கிளறி, பின் வெங்காயத்தை சேர்த்து பொன்னிறமாக வதக்க வேண்டும். பின்பு அதில் இஞ்சி பூண்டு பேஸ்ட் சேர்த்து கிளறி, மிளகாய் தூள் மற்றும் உப்புச் சேர்த்து நன்கு புரட்டி விட வேண்டும். பிறகு அதில் உப்பு மற்றும் உருளைக்கிழங்கை நன்கு மசித்து சேர்த்து கிளறி இறக்கி, இரு பாதியாக பிரித்து, கட்லெட் போன்று வட்டமாக தட்டி தனியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

அடுத்து பணிஸை எடுத்து, பக்கவாட்டில் இரண்டாக வெட்டி, அடிப்பாகத்தின் மேல் கட்லெட்டை வைத்து அதன் மேல் சீஸ் துண்டுகளை வைத்து, மேலே சிறிது கோவாவைத் தூவி, பின் வெங்காயம் மற்றும் தக்காளித் துண்டுகளை வைத்து, அதன் மேல் தக்காளி சோஸ் சேர்த்து பனிஸின் மறுபாதியை வைத்து பரிமாற வேண்டும்.





# கண்ணுக்கு கீழ் கருமையை அகற்ற..

சில பெண்களுக்கு கண்களைச் சுற்றி கறுப்பு வளையம் இருக்கும். இந்த பிரச்சினை தான் பெண்களை வயதானவர் போல் காட்டும். இதை எளிதாக நீக்கி விடலாம். வெள்ளரிக்காய், உருளைக்கிழங்கு இரண்டையும் சம அளவு எடுத்து அதை நன்றாக அரைத்துக் கொள்ளவும். ஒரு மெல்லிய வெள்ளைத் துணியை பன்னீரில் நனைத்து கண்களின் மீது வைத்து, அதன் மேல் அரைத்த கலவையை வைத்துப் படுக்க வேண்டும். இப்படி முப்பது நிமிடம் இருக்க வேண்டும். இவ்வாறு 5 நாள்கள் செய்தாலே போதுமானது.

கரு வளையம் இருந்த இடம் தெரியாமல் போய்விடும். சரியான தூக்கம் இல்லாமல் போனாலும் கண் களில் கரு வளையம் தோன்றும்.தின மும் குறைந்தது எட்டு மணி நேரமாவது தூங்க வேண் டும்.

வெள்ளரிக்காய்ச்சாற்றை முகத்தில் தேய்த்து, ஒரு மணி நேரத்துக்குப் பின் கழுவிவிட வேண்டும். தொடர்ந்து இதுபோல் செய்து வந்தால், கண் அழகைப் பாழாக்கும் கரு வளையம் படிப்படியாக மறைய ஆரம்பித்து விடும். உணவில் அதிகளவு காய்கறிகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.தினமும் குறைந்தது நான்கு லீற்றர் தண்ணீர் குடிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்த மண் எங்களின் சொந்த மண்

செ.உமாசுதன்

இலங்கையின் வட பிரதேசம் என்பது வளமானது.மிக நீண்டு பரந்தது. தமிழர்கள் பூர்வீகமாக வாழ்ந்த, வாழ்ந்து வருகின்ற நிலமது.சர்வதேச கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த கடல் எல்லைகளின் வழியே பிரதானமான துறைமுகம் ஒன்றினை கொண்டமைந்த பிராந்தியமது. அந்த வகையிலே கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த அந்த துறைமுகத்தின் சூழமைவில் கடல் சார்ந்து கொட்டிக்கிடக்கின்ற மீன் வளமும் நிலம் சார்ந்து சிறந்திருக்கின்ற.சிவந்திருக்கின்ற மண் வளமும் அளப்பரியது.கிடைத்தற்கரியது. வலிகாமமாகி அங்கே செல்வச் செழிப்பும்,வளச் செழிப்பும் நிறைந்திருந்த ஊர்களின் அழகென்பதும்,கொண்டிருந்த வலிமை என்பதும் சொல்வதற்கான வார்த்தைகளுள் உள்ளடக்கமாகாதவை. உண்மையில் அந்தப் பிரதேசம் கொண்ட நாமம் என்பது பின்னைய நாள்களில் அதிகமான வலிகளை அந்த ஊர்மக்களுக்கு பரிசளித்தது.1987 களில் இந்திய அமைதிப் படைகளின் வருகை, இடம் பெயர்வு.பின்னர் மீண்டும் ஊர் திரும்பல்.1990 ஆம் ஆண்டு ஆனி மாதம் 15 ஆம் திகதி இலங்கை இராணுவத்தின் ஊடுருவல் ஊர் எல்லைகள் தாண்டிய ஓட்டமானது.26 ஆண்டுகள் நீட்சியான திண்டாட்டமானது.மாறாத வடுவாகி சுவடாகி மீட்சியற்ற வலி தந்தது. இப்போதும் தந்து கொண்டிருக்கிறது.



யுத்த வலிகளின் காவிகளாக, அது வலிந்து தந்துவிட்ட பாவங்களை சுமந்திருக்கும் பாவிகளாக, அந்த ஊர் மக்களை நீண்ட நெடிய காலமாகத் துன்புறுத்தி வருகின்றது. சுய முகம் தொலைத்து அகதி முகம் சுமந்த வேடமுகதாரிகளாக மீட்சி இன்றி பல இடம் நோக்கி அலையும் கால்நடைகளாக்கிவிட்டிருக்கின்றது. அகதி முகாம் என்ற எந்தவித நலன்களுமற்ற நலன்புரி நிலையங்களில் நலிவுறச் செய்திருக்கின்றது. இராணுவ ஆக்கிரமிப்பில் இன்னமும் 6000 ஏக்கர் காணிகள் சிறைப்பட்டுக்கிடக்கின்றன.15 கிலோ மீற்றர் நீளமான கடல்வலயம் சோகம் சுமந்து அமைதி காக்கின்றது. மயிலிட்டி, பலாலி, தையிட்டி, ஊரணி, காங்கேசன்துறை எனச் சூழ்ந்திருக்கும் கிராமங்களின் அழகு தனிச்சிறப்பு.வளங்களின் கொழிப்பு. இத்தகைய பிரதேசங்கள் இப்பில் இப்பில் காடுகளால் சூழ்ந்து புதர் மண்டிப் போய் காட்சிதருகின்றன.

பாடசாலைகள்,இந்துக்கோவில்கள்,கிறிஸ்தவ தேவாலயங்கள்,ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, மயிலிட்டி காசநோய் வைத்தியசாலை,மயிலிட்டி சுகாதார வைத்தியசாலை,பலாலி ஆரம்ப சுகாதார வைத்திய நிலையம்,வலி வடக்கு பிரதேச சபையின் தலைமைக் காரியாலயம், மயிலிட்டி கிராம சபையும் ஆரம்ப நீதிமன்றமும், சீமெந்து தொழிற்சாலை, காங்கேசன் துறை துறைமுகம்,மயிலிட்டி மீன்பிடித்துறை முகம் என அத்தனையும் ஆதாரமின்றி இடிபாடுகளாய் மிளிர் வின்றி அடக்கமாகிக் கிடக்கின்றன.

இந்த நிலையிலே கடந்த 2 ஆம் திகதி வியாழக்கிழமை வலி வடக்கின் உயர்பாதுகாப்பு வலயம் என்கின்ற அரச ஆக்கிரமிப்பின் கரங்களுக்குள் அகப்பட்டு 26 வருடங்கள் அலங்கோலமாகிப் போயிருந்த தமிழரின் கல்வியின் ஒளி தரும் ஆதார சொரூபமான கல்லூரி ஒன்று விடுவிக்கப்பட்டிருக்கின்றது. இருந்த போதும் இருள் சூழ்ந்த நிலைகளினுள்ளே விடுதலை என்ற சிறை வைப்பினையே அது மீண்டும் பெற்றுள்ளது. சுதந்திரமான கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் என்பது கேள்விக்குட் படுத்தப்பட்டிருக்கின்றது.நடேஸ்வர கனிஷ்ட வித்தியாலய வளாகம் என்பது முற்றுமுழுதாக விடுவிக்கப்படவில்லை. அங்கே முட்கம்பி வேலிகள் நிமிர்ந்து நின்று கல்வியின் சுதந்திர உலவலுக்கு அரணாக அன்றி முரண் செய்கின்றன.

கால் நூற்றாண்டு கடந்த நிலையிலே கந்தக வாடையும் வளச் சுரண்டலோடான காட்டுமிராண்டித் தனமும் கதகதத்துக் கொண்டே இருக்கின்றன.மிக அண்மிதமாக விடுவிக்கப்பட்ட நிலப்பரப்புகள் கூட இயல்பு நிலையின் மீள்தலை அடையவில்லை.அழிவின் இடைவெளிகளை இட்டு நிரப்பி வாழ்வு சமனிலை பெற நீண்ட காலங்கள் செல்லும்.நல்லியக்கமற்ற இந்த மக்களிடம் சொல்லிணக்கமான நல்லிணக்கம் என்பது எப்படிச் சுகம் தரும்? ஆதரவும் ஆதாரமும் இன்றிய மக்களிடம் சமனிலையற்ற சமத்துவம் எப்படிச் சாத்தியமுறும்?

இந்த நிலையிலே அரசின் பிரதிநிதியாக காணாமல் போனோருக்கு பொறுப்பேற்க இராணுவம் முன்வராது என சந்திரிகா அம்மையார் பழியின் மீதான புது மகுடம் தனை சூட்டியுள்ளார்.காணாமல் போனவர்கள் உயிருடன் உள்ளனர் என்ற நம்பிக்கை பாதிக்கப்பட்ட உறவினர்களின் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்துள்ளது.எனவே தான் இறப்புச் சான்றிதழ்களுக்குப் பதிலாக காணாமல் போனோருக்கான சான்றிதழ்களை வழங்க அரசு தீர்மானித்தது என்பதான மெத்தனப் போக்கையும் உணர்வற்ற ஏளனப்போக்கையும் வெளிப்படுத்தியிருக்கிறார்.

இராணுவத்தினரோ வடக்கில் உள்ள இராணுவ முகாம்களை அகற்றச் சொல்லும் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள முடியாது.இராணுவ முகாம்கள் அசாதாரண சூழல் ஏற்படும்போது மக் களை பாதுகாக்கவே அமைக்கப்பட்டுள்ளன என்ப தாக நல்லபிள்ளைத்தனத்தை வெளிக் கிளப்பி படபடத்திருக்கின்றனர். இந்த சந்தர்ப்பத் திலே மனித உரிமை ஆர்வலர் மஸ்மின் சூகா இலங்கை அரசு தமிழர் விடயத் தில் காட்டிவரு கின்ற அசமந்தப் போக்கையும் ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாத போக்கின் செல் நெறியில் இராணுவத்தின் நலன் சார்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நடவடிக்கைகள் தொடர்பில் சுட்டிக் காட்டியுள்ளார்.

தமிழ் மக்கள் அழிவுகளின் ஆழத்திலிருந்தும் அது தந்தவிட்ட மாறாத வடுவிலிருந்தும் இன்னமும் மீளவில்லை.உயர் பாதுகாப்பு வலயம்,திட்டமிட்ட நில அபகரிப்பு,திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம்,தமிழர் பிராந்தியங்கள் எங்கும் பௌத்த மதச் சார்புகளின் நிலை நிறுத்துதல் என அத்தனை அழிவுகளின் ஆதார மூலகங்களும் போரின் மறு வடிவமாக தொடர்புறுகின்றன.தமிழர்கள் தங்களின் பூர்வீக நிலங்களில் மீள் குடியமர்தல்,தங்களை மீள் தகவமைத்துக் கொள்ளல் என்பதான ஆத்மார்த்தமான செயல் முனைப்புக்கள் சிதைவுறுகின்றன.முடிவுறுத்தப்படுகின்றன. சுதந்திரமான உலவுதல்,அமைதியான சூழலை உருவகித்தல் என்பன இன்னமும் எம்மிடமிருந்து தூரவே விலகி நிற்கின்றன. காத்திருப்பெனும் காலத்தின் வழி நடந்திருக்கிறோம். எங்களின் சொந்த மண் மீதான சுதந்திரமான பற்றுதல் எப்போது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதையிலிருந்து மீட்ட கிரிக்கெட்

மத்திய அமெரிக்காவில் மெக்ஸிக்கோவிற்கு அருகிலுள்ள சிறிய நாடு கவுதமாலா. ஜேம்ஸ் பொண்ட் படங்கள் உள்பட சில அதிரடி ஆங்கிலப் படங்களில் போதைப் பொருள் கடத்தலின் மையமாக இந்த நாடு காட்டப்பட்டிருக்கும். அது உண்மைதான். இந்த நாட்டை திரையில் காட்டும் வேளைகளில் எல்லாம் திரையில் ஏகப்பட்ட குருதித் தெறிப்பு இருக்கும்.

ஏறத்தாழ ஒரு லட்சம் சதுர கிலோ மீற்றர்களே பரப்பளவுள்ள இந்த நாட்டில் இராணுவ ஆட்சி, உள்நாட்டுக் கலவரங்கள், பழங்குடிகளுக்கு இடையிலான மோதல்கள் என ஆயிரம் பிரச்சினைகள் இருந்தாலும் இவை எல்லாவற்றையும்விடத் தலைபோகும் பிரச்சினை போதை மருந்துக் கடத்தல்காரர்களும் அவர்களுக்கு இடையான குழு மோதலும்தான்.

## போதை எமன்

சிறிய நாடான கவுதமாலாவில் போதைப் பொருள் கும்பல்களுக்கு இடையிலான மோதல்களில் ஆண்டு தோறும் பல்லாயிரக்கணக்கானவர்கள் இறந்தனர். ஆனால், இன்று கவுதமாலாவில் இது போன்ற மோதல்களால் இறந்து போகிறவர்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துவிட்டது. இதற்குக் காரணமாக அவர்கள் கிரிக்கெட்டை கைகாட்டுகிறார்கள்.

ஜியோவானி என்ற இருபது வயதான இளைஞர் தனது வாழ்க்கையை இப்படியாகச் சொல்கிறார்... "எனது நண்பர்கள் எல்லோருமே தங்களது பதின்ம வயதுகளில் போதைப்பொருள் கடத்தும் குழுக்களில் இணைந்து கொண்டார்கள். சிறிது காலத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்கள். இல்லை, அவர்களுக்குள்ளேயே குழுச் சண்டையிட்டு இறந்து போனார்கள். நானும் போதைப் பொருள் கடத்தும் குழுவொன்றில் இணைந்துகொள்ளவே இருந்தேன். அப்போதுதான் எனக்குக் கிரிக்கெட் அறிமுகமானது. கிரிக்கெட் விளையாட்டில் ஏற்பட்ட ஆர்வம் காரணமாக இப்போது நான் பட்டப் படிப்பை முடித்து ஆசிரியராக உள்ளேன்" என்கிறார்.

## மத்திய அமெரிக்காவில் கிரிக்கெட்

மத்திய அமெரிக்காவில் உள்ள நாடுகளில், பிரிட்டிஷ் ஹாண்டுராஸ் எனப்படும் பெலீசும், கோஸ்ட்டாரிக்காவும் ஆங்கிலம் பேசுகின்ற நாடுகள். இவை பிரிட்டிஷ் ஆதிகத்தின் கீழ் இருந்தவை என்பதால் இங்கே ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்ட ஆங்கிலமும் கிரிக்கெட்டும் பிரபலமாகியிருந்தன. ஆனால், ஸ்பெயினின் ஆக்கிரமிப்பின் கீழ் இருந்த கவுதமாலா, கிரிக்கெட்டுடன் எந்த வகையிலும் தொடர்பில்லாமல் இருந்தது.

கிரிக்கெட் என்றொரு விளையாட்டைப் பற்றி சில ஆண்டுகளுக்கு முன்பு வரைக்கும் அவர்கள் அறிந்திருக்கவில்லை.

அமெரிக்காவைச் சேர்ந்த கம்டன் கிரிக்கெட் கிளப்தான் கவுதமாலாவில் கிரிக்கெட்டை அறிமுகப்படுத்தியது. அமெரிக்காவில் உள்ள வறிய மற்றும் வீடற்ற இளைஞர்கள் தவறான பாதையில் செல்வதைத் தடுக்கும் பொருட்டு இந்தக் கிரிக்கெட் கிளப் 1995ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

அமெரிக்காவில் வெற்றிகரமாக இயங்கிப் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களைப் போதையின் பிடியில் இருந்து மீட்ட இவர்கள், போதைப்பொருள் கடத்தலால் சீரழிந்து போயிருந்த கவுதமாலாவில் சில ஆண்டுகளுக்கு முன்பாக தங்களது செயல்பாடுகளை ஆரம்பித்தனர்.

அவர்கள் கவுதமாலாவில் கிரிக்கெட்டை அறிமுகப்படுத்தியபோது கிட்டத்தட்ட 165,000 போதைப் பொருள் கடத்தல் கும்பல்கள் மற்றும் போதைப் பொருள் கடத்தல் மன்னர்கள் கவுதமாலாவில் இருந்தனர்.

## வாழ்வின் மகத்துவம்

ஒவ்வொரு போதை மன்னனுக்கும் கீழே பல்லாயிரக் கணக்கான உதவியாளர்கள் என அந்தத் தேசத்தின் ஒட்டுமொத்த இளைஞர் சமுதாயமும் ஏதோ ஒரு வகையில் போதைப் பொருள் கடத்தலிலும் குழு மோதல்களிலும் தொடர்பு கொண்டிருந்தன. இப்போது போதைப் பொருள் கடத்தல் கும்பலில் இருந்தவர்களில் பெரும்பாலானவர்கள் கிரிக்கெட் வீரர்களாகிவிட்டனர். கவுதமாலா நாட்டுக்கென இப்போது அதிகாரபூர்வமானதொரு கிரிக்கெட் அணி உருவாகிவிட்டது. போதைப் பொருள் கும்பலிடம் இருந்து மீண்டு வந்தவர்களே அதில் பெரும்பான்மையாக அங்கம் வகிக்கின்றனர்.

போதைப் பொருள்களில் இருந்து இளைஞர்களின் கவனத்தைத் திசை திருப்ப கிரிக்கெட்டைப் பயன்படுத்தியதற்குப் பதிலாக வேறு எதாவது விளையாட்டைப் பயன்படுத்தி இருக்கலாமே என பத்திரிகையாளர் ஒருவர் கம்டன் கிரிக்கெட் கிளப்பின் நிறுவுநரும் சமூக சேவையாளருமான டெட் ஹேஸ் என்பவரிடம் கேட்டபோது, "மற்றைய எல்லா விளையாட்டு களையும்விட கிரிக்கெட் விளையாட்டானது அதிகளவில் வாழ்தலின் மகத்துவத்தைச் சொல்லித் தருகிறது. ஒரு விக்கெட்டைக் காப்பதற்காகப் போராடும் ஒரு பேட்ஸ்மேனுக்கு, உயிர் வாழ்தலின் மகத்துவம் இலகுவாகப் புரிந்துவிடும். உயிர் வாழ்தலின் மகத்துவத்தைப் புரிந்து கொண்டவன், அடுத்தவனின் உயிரை எடுக்க மாட்டான்" என்றார். எவ்வளவு உண்மை...?



ஜெ.காயா

# ஆட்டுக்கல்லும் தோசையும்

அடுத்தநாள் தோசை சுடுவதற்கு அந்த ஆட்டுக்கல்லில்தான் ஆச்சி உழுந்தரைப்பா. ஐந்தாறு தடவைகளுக்கு மேல் ஆட்டுக்கல்லைக் கழுவிச் சுத்தம் செய்யும் ஆச்சி பலகைக்கட்டையில் உட்கார்ந்திருந்து உழுந்தாட்டும்போது நாங்களும் சுத்தி நிற்பம். அது அடுத்த நாள் தோசைக்கு இண்டைக்குப் பின்னேரம் ஆச்சி அரைக்கும் உழுந்து. நடுவில் குழியாயுள்ள அந்த ஆட்டுக்கல்லின் குழவியைத் தூக்கி விட்டு அந்தக் குழிக்குள் ஊறவிட்ட உழுந்தை நிரப்பி ஆச்சி உழுந்தரைப்பதும் ஒரு தனித்திறமைதான்.

குழிக்குள் நிரப்பிய உழுந்தை குழவியால் அமர்த்தியபடி சுத்திச் சுத்திக் குழவியை அசைத்தும் வெளியே வரும் உழுந்தை தன் மறுகையால் வழித்து உள்ளே தள்ளியபடியும் ஆச்சி உழுந்தரைப்பா. அந்த ஆட்டுக்கல்லில் ஐந்தாறு தடவைகளில் உழுந்தை அரைத்து முடித்த பின்னர் அந்த ஆட்டுக் கல்லையும் கழுவி அந்தத் தண்ணியையும் ஒன்று சேர்த்துப் பிசைஞ்சு ஒன்றாக்கி வைச்சிருப்பா. அப்பதான் நல்லைபரும் அங்க பின்னேரக் கள்ளுச்சீவ வருவார். சீவி முடித்து ஐயாவுக்கென வைத்த அந்தப் போத்தலில் கள்ளுவிட்டு வைப்பார் நல்லையர். பொழுது சாய்ந்த பின் அதைப் பருகும் ஐயாவும் ஆச்சி உழுந்தரைத்ததால் முடியும் நிலையிலுள்ள அந்தக் கள்ளுமண்டியைப் போத்தலோடு கவனமாக வைப்பார். அதை எடுத்து அரைத்த உழுந்துக்குள் விட்டு மூடி வைத்துவிடும் ஆச்சி மறுநாள் விடிவெள்ளி தெரியேக்கயே எழும்பித் தோசை சுட ஆரம்பிச்சிடுவா. பூப்போல பூரித்திருக்கும் ஆச்சியின் தோசை. ஆச்சிவிட்ட அந்தக் கள்ளு மண்டியால் புளிக்க வைத்தும் ஆட்டுக்கல்லில் மென்மையாக அரைத்தெடுத்ததன் சுவை சேர்ந்ததுமான ஆச்சி சுட்ட தோசை இன்று இல்லாமல் போய்விட்ட ஆச்சியோடும் அந்த ஆட்டுக்கல்லோடும் மறைந்துவிட்டது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# புளுகும் புகழும் பாராட்டும்!

சொல்லத்தான் நினைக்கிறார் செல்லத்தம்பி 10

செ.மகேஷ்

‘பொய்யும் புளுகும் புகழும் பாராட்டுகளும்...” என்று எதையோ நினைந்து புறுபுறுத்துக் கொண்டிருந்தார் சிவபாதத்தார். அவரது புறுபுறுப்புக்கான காரணம் செல்லத்தம்பியருக்குப் புரிந்திருந்தது. புன்னகைத்துக்கொண்டார்.

கடந்த வாரம் கருணாமூர்த்தியார் பதவியிலிருந்து ஓய்வு பெற்றிருந்தார். ஓய்வு பெற்ற அந்தத் தினமே அவர் செய்தவற்றை மறைத்து என்னவெல்லாமோ செய்ததாய்ப் புளுகிப் பாராட்டிப் பலரும் கூடி விழா ஒன்றை நடத்தியிருந்தார்கள். அந்தப் பாராட்டு விழாவிலே சிவபாதத்தாரும் ஒரு பேச்சாளர். கருணாமூர்த்தியை நல்லவர், வல்லவர் என்று நாக்கூசாமற் பாராட்டிப் பேசியிருந்தார். ஆனால் சிவபாதத்தார் சொன்னவற்றுக்கு எதிராகவே கூடி இருந்தோர் சிந்தனையெல்லாம் சிதறிப் பரவி இருந்தது.

அன்று கருணாமூர்த்தி பற்றிச் சிவபாதத்தார் சொன்ன பொய்யிலும் புளுகிலும் செல்லத்தம்பியருக்கு மாத்திரமல்ல சிவபாதத் தாருக்கும் விருப்புக்கள் இருந்திருக்கவில்லை. அது இன்று வெளிப்பட்ட அவரது புறு புறுப்பிலிருந்தே தெரிந்தது. இவற்றுக்குச் சிவபாதத்தார் மீது அனுதாபப்பட்டு ஆறுதல் சொல்லச் செல்லத்தம்பியர் துணியவில்லை.

அன்று கருணாமூர்த்தியின் மேல் பொன்னாடையும் புளுகாடையும் போர்த்திய எல்லோரின் மீதும் செல்லத்தம்பியருக்கு ஆத்திரம் தான். முன்னைய நாள் புலவர்கள் புரவலர்களைப் புகழ்ந்து பாடிப் பொன் பெற்றதாக எழுந்த இலக்கியங்களைப் படித்த ஞாபகம் செல்லத்தம்பியரின் நினைவில் புகைந்தது.

குண்டும் குழியும் குறுகி வழிநடந்து
என்றுவிடியுமெமக்குஎன்கோவே–ஒன்றும்
கொடாதானைக் கோவென்றும் காவென்
றும் கூறில் இடாதோ நமக்கிவ் விடி

இது இரட்டைப் புலவர்கள் பாடிய கவிதை வரிகள். பொய்யுரைத்த பழி நம்மை வருத்தும் என்பதாய் அழுது பிதற்றுகின்றனர் புலவர்கள்.

பொய்யும் புளுகும் ஒருபோதும் நன்மை தரப்போவதில்லை. இரட்டையர் தமக்கேற்பட்ட துன்பங்களுக்கெல்லாம் காரணம் பொய்யாய்ப் புகழ்ந்து தீயவரைப் பாராட்டியதால் வந்த வினையென்று புலம்புகிறார்கள். செல்லத்தம்பியர் இந்த வெண்பாவைச் சிவபாதத்தாருக்குச் சொல்லி அச்சுறுத்த விரும்பினார். ஆனால் சொல்லவில்லை.



> பொய்யும் புளுகும் ஒருபோதும் நன்மை தரப் போவதில்லை. இரட்டையர் தமக்கேற்பட்ட துன்பங்களுக்கெல்லாம் காரணம் பொய்யாய்ப் புகழ்ந்து தீயவரைப் பாராட்டியதால் வந்த வினையென்று புலம்புகிறார்கள்.

எவருடைய பாராட்டு விழாவிலும் சிவபாதத்தார் பேசுவதற்கு இடமிருக்கும். ஏனென்றால் அவர்தான் ஊரறிந்த பேச்சாளர். பாராட்டு விழாவென்றால் அவரையும் அழைப்பது வழக்கம். பொய்யும் புளுகும் முன்னிற்கப் பேசுவதே அவரின் மரபு. விழா நாயகரைப் பாராட்டும் வகையும் அதுவேதான். இப்படி ஏன்தான் பாராட்டு விழாக்களை ஏற்பாடு செய்கிறார்களோ? எல்லாமே சுயநலந்தான்.

கல்லாத ஒருவனை நான் கற்றாயென்றேன்
காடெறியுமவனை நாடாள்வாயென்றேன்
பொல்லாத ஒருவனை நான் நல்லாயென்றேன்
போரமுகத்தை அறியானைப் புலியேயென்றேன்
மல்லாரும் புயனென்றேன்– சும்பற்தோளை
வழங்காத கையனை நான் வள்ளலென்றேன்
இல்லாது சொன்னேனுக்கு இல்லை என்றான்
நானும் எந்தன் குற்றத்தால் ஏகின்றேனே

இங்கே இல்லாத பொல்லாத எல்லாம் சொன்ன புலவனுக்கு எதுவும் தரமாட்டேன் என்றான் மன்னன். அது தனது குற்றமே என ஏற்றுக் கொண்டு தன்வழியே திரும்பும் புலவனின் கூற்று இது. அதேபோல் இல்லாத பொல்லாத எல்லாம் சொல்லிப் புளுகுகின்ற விழாவுக்குப் பெயர்தான் பாராட்டு என்பதை எண்ணிய செல்லத்தம்பியர் மௌனமானார். ஆனாலும் உண்மையாகவே பாராட்டப்பட வேண்டியவர்கள் பலர் இருக்கின்றார்கள் என்பதை எண்ணினார் செல்லத்தம்பி. அவர் பற்றிச் சொன்னால் யார்தான் இலாபமில்லாமல் இவருக்கு விழா எடுக்கப் போகிறார்கள். இந்த ஊரும் உலகமும் இலாபத்தை நோக்கித்தான் நடை போடுகிறது. இவற்றை யாரிடம் சொல்வது? செல்லத்தம்பியர் நினைத்தார் சொல்லவில்லை.



# எப்படி தோன்றின சக்தி பீடங்கள்?

மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன்

“தட்ச”யாகம் பற்றி புராணங்களிலிருந்து அறிகின்றோம். இந்த யாகமே சக்தி பீடங்கள் தோன்ற மூலகாரணம் எனலாம். தன்னுடைய மகள் தாட்சாயிணி தனது சொல்லைக் கேட்காது சிவனை மணம் முடித்துக் கொண்டதால் கோபம் கொண்ட தட்சன் மாபெரும் யாகம் ஒன்றை நடத்தினான்.

யாகத்துக்கு சிவனைத் தவிர எல்லோருக்கும் அழைப்பு விடுத்தான். தன் தந்தையாகிய தட்சனின் இந்த சிவ நிந்தனையால் கோபம் கொண்ட தாட்சாயிணி யாகம் நடைபெறும் இடத்துக்கு வந்தாள். தன் கணவருக்கே யாகத்தின் அர்பாகம் தர வேண்டும் என வாதிட்டாள். தட்சன் தாட்சாயிணியையும் இழி சொல்லால் அவமதித்தான். இதனால் சீற்றம் கொண்ட தேவியானவள் யாகத் தீயில் பாய்ந்து கொண்டாள். அகிலமே அரண்டு போனது. ஈசன் சிவன் ருத்ரமானான். கயிலையை விட்டு கீழிறங்கி தேவியின் உடலை ஏந்தியபடி ஊழித்தாண்டவமாடத் தொடங்கினார்.

தன்னிலை மறந்து ஈசன் கூத்தாடினால் உலக இயக்கங்கள் என்னாவது? பாற்கடல் பரந்தாமன் கண் விழித்தார். அவரது திருக்கரத்திலிருந்து புறப்பட்ட அதர்ணம் ஈசனின் கையிலிருந்த தேவியின் ஸ்தூல உடம்பைத் துண்டுகளாக்கி சிதறச் செய்தது. அப்படி துண்டுகளாகிய தேவியின் உடற் பாகங்கள் பூமியில் விழுந்த இடங்களே சக்திபீடங்களாக புகழ்பெற்றன என்பார்கள். இப்படி உருவான சக்தி பீடங்கள் 18 என்று பத்மாசலி புராணம் கூறுகிறது. தேவ கீதையில் அம்பாளுக்கு 38 பீடங்கள் உண்டு எனக்கூறப்பட்டுள்ளது.

ஆன்மிக ஆன்றோர்கள் ஆதிசக்தி பீடங்கள் 51 என்பர். ஆனால் தேவி பாகவதம் 108 சக்தி பீடங்களின் பெருமையை பறைசாற்றுகிறது. அம்பிகையில் அருள் பொங்கும் அந்த 108 திவ்விய தலங்களையும் அத்தலங்களில் உறையும் அந்த மனிதன் நாமங்களையும் புராணங்கள் வாயிலாக அறிந்து கொண்டாலும் தேவிபாகவதம் கூறும் இந்த சக்தி பீடங்களை வாழ்நாளில் தரிசிக்க அம்பிகையின் திருவருள் பெருக வேண்டும். முயற்சிப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை

உலக தந்தையர் தினம் இன்று

செல்வி மிஷாந்தி செல்வராஜா

உலகில் வாழும் அனைத்து உயிரினங்களும் அம்மாவுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை தந்தைக்கு கொடுப்பது மிகவும் அரிதே. ஏனைய உயிரினங்களைவிட மனித இனத்திலே தந்தையின்றி எந்தக் குழந்தையும் பிறப்பதில்லை.

ஒவ்வொரு ஆணும் திருமணமானபின் கணவன் என்ற பெயர் எடுக்கும் சந்தோசத்தை விட ஒரு பிள்ளைக்கு நான் அப்பாவாக ஆகி விட்டேனே என்ற மனமகிழ்வுடன் இரட்டிப்பான மன நிறைவை அடைகின்றார்கள்.

ஒரு தாயானவள் பத்துமாதம் தன் குழந்தையை கருவில் சுமக்கும்வரை அவளின் நிறை பாரத்தையும் அதாவது தன் பிள்ளையையும் மனைவியையும் கூடவே சுமக்கின்றார்கள் தந்தையர்கள்.

பொறுப்புக்கள் அதிகரிக்கின்றன. அதிகரித்தாலும் தன் மனைவியை ஒரு தாயாகவும் பராமரித்து பாதுகாப்பைக் கொடுக்கின்றான். தம் மனைவியரின் கருவில் தன் குழந்தை உருப்பெற்று வளரும் காலமுதல் பாதுகாப்பைக்கொடுக்கின்றான். அப்பாவாகத் தன் கடமையை கருவில் குழந்தை தங்கிய போதே அன்புடன் அறிவான கதைகளைச் சொல்லிக் கொடுக்கின்றார்கள். ஒரு சில ஆண்கள் தகப்பன் ஸ்தானத்தில் இருந்து குழந்தை வளர்ச்சியடையும் காலமுதல் தன் தொடுகையை வெளிப்படுத்துவதுடன் நல் ஆரோக்கிய உணவுகளை மனைவியர்களுக்கு வழங்குவதன் ஊடாக தன் பிள்ளை வளர்ச்சிக்காகவும் பாடுபடுகின்றார்கள்.

எந்தவொரு தந்தையும் தன் பிள்ளை கெட்டுப் போகவோ, தப்பான வழி சென்றிடவோ வழி காட்டமாட்டார்கள். அதிலும் பெண் குழந்தைகளை வழி நடத்துவதில் தான் மிகவும் அக்கறையுடன் வழிகாட்டுவார்கள். ஒவ்வொரு பெண் குழந்தைகளினதும் முதல் காவலன், முதல் ஆண் எவன் என் நோக்கினால் அது அப்பாவே. அதேபோல் ஒவ்வொரு ஆண் குழந்தைகளினதும் முதல் நண்பன் அவனது அப்பாவே.

அப்பாவே எமது சொத்து. சிறு குழந்தை பருவம் முதல் வளர்ந்து உயர் பள்ளிப் படிப்பு படிக்கும் வரை எமக்காக மழை,வெயில் எனப் பாராமல் தன் உடல் வருத்தி வியர்வை சிந்தி உழைத்துப் பெறும் சிறுபணத் தொகையிலே தான் எம் கல்விக்காக, உண்ணும் உணவுக்காகப் பாடுபடும் தெய்வம் என்றால் அப்பாதான். தன்னை அப்பா என்றழைக்க எனக்கென மகனோ, மகளோ நல்லபடி பிறக்க மருத்துவமனை வாசல் தவம் கிடக்கின்றன. மழையானாலும் வெய்யிலானாலும் தான் நனைந்தாலும் எம்மை நனையாமல் வீடு நோக்கித் தன் கால் வலிக்கச் சைக்கிளில் அழைத்துச் செல்பவர் என்றால் அது அப்பா தான். தன் மகளுக்கோ, மகனுக்கோ நல்ல துணையை தேர்ந்தெடுத்து புகுந்த வீட்டு வாசல் வரை வந்து வழியனுப்பி கண்களில் கண்ணீர் சிந்தாமல் மனதினால் நொந்தழுபவர் என்றால் அது பொய்யாகாது. ஒவ்வொரு பெண்களையும் உள்மனதோடு எந்த எதிர் பார்ப்பில்லாமல், தன் மகள் அழகோ, அழகில்லையோ எப்படி இருந்தாலும் அன்புடன் நேசித்து அறிவு புகட்டும்,கன்னிப் பருவத்தை பேணிப் பாதுகாக்கும் காவற்காரர்கள் ஒவ்வொரு அப்பாக்களும் தான்.

இன்றைய கால கட்டத்தில் அரச தொழில் புரியும் அப்பாக்களின் வீதத்தை விட கூலி வேலை செய்து வயிற்றுப் பிழைப்பை நடத்தும் அப்பாக்களின் வீதமே அதிகம். அப்பாவின் உழைப்பு சாகும்வரை நீடிப்பதனால் தான் ஒரு அன்னையால் தன் பிள்ளையின் பசியை நீக்க முடிகிறது. எமக்காகக் கஷ்டப்பட்டு வியர்வை சிந்தி மழை, வெயில் , தூசி படாமல், நோய் நொடியின்றி வளர்த்த தந்தையரை, ஒவ்வொரு பிள்ளைகளும் வெயில், மழைக்குள் விடாமல் நோய் நொடி ஏற்படாமல் அன்பாகவும் அக்கறையாகவும் பேணிக்காத்து தந்தை சொல்மிக்க மந்திரமில்லை என்ற வாக்குக்கு இனங்க இறுதிவரை தந்தையின் சொற்படி வாழ்ந்து நாட்டில் முதியோர் இல்லங்களை இல்லாது ஒழித்திடுவோமாக.





# தூக்கம் கண்களை...

(தொடர்ச்சி)

**உடலை வறுத்தெடுங்கள்**

டேவிட் ஆண்ட்ரூஸ் (49): அதிகாலையில் நல்ல உடற்பயிற்சிகளைச் செய்வது இரவில் நல்ல தூக்கத்தைக் கொடுக்கும். சுவாசப் பயிற்சிகளால் இதயத் துடிப்பு குறைந்து நல்ல நிவாரணம் கிடைக்கும். சில வேளைகளில் தூக்கம் வராத அறையைவிட்டு வேறு அறைக்குச் சென்று தூங்க முயல்வதுகூட நல்லது.

ஜான் வாட்சன் (70): தூக்கமின்மைக்குச் சாப்பாடும் முக்கிய காரணம். சமீபத்தில்தான் கொஞ்சம்கூட மாவுச்சத்து இல்லாத உணவுக்கு மாறினேன். அதிலிருந்து தினமும் 7 மணி நேரம் இரவில் தூங்குகிறேன். தூக்கமின்மை போய் விட்டதா என்று என்னை நானே வியப்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**படுக்கையறை தூங்க மட்டும்**

அமி (28): நல்ல படுக்கையறைப் பழக்கங்களும் சுகாதாரமும் முக்கியம். 25 வயது முதல் 27 வயது வரை தூக்கமின்றி மிகவும் அவதிப்பட்டேன். பிறகு, நண்பர்களிடம் அதுகுறித்துப் பேசினேன். அவர்கள் கூறிய ஆலோசனைப்படி மன இறுக்கத்தைத் தளர்த்திக் கொண்டேன். படுக்கை அறையில் நல்ல காற்றும் வெளிச்சமும் வரச் செய்தேன். தூய்மையைப் பராமரித்தேன்.

இப்போதைய உலகில் நிரந்தர வேலை கிடைக்கும் என்பது உத்தரவாதமல்ல, அதற்காக மனதை அலட்டிக்கொள்ளக் கூடாது என்ற பாடத்தை எனக்கு நானே படித்துக்கொண்டேன். இப்போது இர்வில் நன்றாக உறங்குகிறேன்.

படுக்கை அறையைத் தூங்க மட்டும் பயன்படுத்துங்கள். அங்கே மடிக்கணினியோ தொலைக்காட்சியோ இருக்கக் கூடாது. சாப்பாடு, பானம் ஆகியவற்றிலும் கவனம் தேவை. இரவு 7 மணிக்கு மூலிகைத் தேநீர் சாப்பிடுவது நல்லது. வேலைக்குப் பிறகு ஓய்வு தேவை என்ற நிலையில் யாராவது பேச வந்தாலோ, வெளியில் அழைத்துச்செல்ல வந்தாலோ தயவு காட்டாதீர்கள். எனக்கு ஓய்வு தேவை – நான் தூங்க வேண்டும் என்று சொல்லிவிடுங்கள்.

**எளிய வழி தூக்கம்**

பிரான்சல் டெஸ்மாண்ட் (30): தொடர்ந்து 3 நாள்களுக்கு வெறும் 3 மணி நேரம் மட்டுமே தூங்குவேன். அடுத்தடுத்து 2 முழு இரவுகள் தூக்கமில்லாமல் தவித்திருக்கிறேன். சில வாரங்களில் மொத்தமே 2 அல்லது 3 மணி நேரம் மட்டுமே தூங்கியிருக்கிறேன். தேர்வுகளுக்கு முன்னாலும் அலுவலகத்தில் முக்கியமான வேலைகளுக்கு முன்னதாகவும் இரவுகளில் தூக்கம் வராமல் தவிப்பேன். தூக்கம் வரவில்லை என்பதற்காகக் கோபமோ ஆத்திரமோ கொள்ளாதீர்கள். நமக்கு ஏதோ ஆகிவிட்டது என்று அச்சப்படாதீர்கள். மூச்சை நன்றாக இழுத்துவிடுங்கள். உங்களுக்குப் பிடித்த இசையைக் கேளுங்கள். தூக்கம் வரவில்லை என்பதை யதார்த்தமாக எடுத்துக்கொள்ளுங்கள்.. அதற்காகக் கத்திக் கூச்சலிட்டு தலையணையைக் குத்திக் கிழித்து ஆர்ப்பாட்டம் செய்யாதீர்கள். அமைதியாக இருங்கள். தூக்கமின்மையைத் தூங்கியே வெல்லுங்கள்.

மூலம்: தி கார்டியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரசியல் ஆர்வம் கொண்டோரின் தேவையே 30 ஆண்டு காலப் போர்

இரா.பிரம்மா

மனிதன் இயல்பிலேயே ஓர் அரசியல் விலங்கு என்பது அரசறிவியலின் தந்தை அரிஸ்ரோட்டில் கூறியது மறுக்க முடியாத உண்மை யாகும். இதைத் தாயின் கருவறையில் அறிவைப் பெறும் குழந்தையில் இருந்து அத்தனை பேருக்கும் உணரக் கூடியதாய் இருக்கும். மேலும், அரசியல் ஆர்வம் என்பது மனிதன் வளர வளரவே, அந்த அறிவு முதிர் நிலை அடைகின்றது. இத்தகைய முதிர் நிலை அறிவைப் பெறுவதென்பது சாதாரணமான விடயமல்ல.

இந்த விடயத்திலே மூன்று விடயங்களைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அரசறிவி யலில் ஒரு கோப்பு போன்ற கோட் பாடு அரசியல் கலாசாரம் என்பதாகும். ஒரு நாட்டில் இடம்பெறும் அரசியல் சார் மக்கள் நடவடிக்கைகளைத் தொகுத்துப் பார்க்கின்றபோது, அரசியல் கலாசாரம் குறித்த ஒரு நாட்டில் எத்தகை செல்நெறியில் இருக்கின்றது என கண்டுபிடித்து விடலாம். அந்த அடிப்படையில்.

1. பங்கேற்கும் அரசியல் கலாசாரம்
2. குறுகிய நோக்கிலான அரசியல் கலாசாரம்
3. கீழ்ப்படிந்து போகும் அரசியல் கலாசாரம் என மூன்று வகையாக அரசியல் கலாசார பிரிவுகள் காணப்படுகின்றன. இந்த விடயத்திலே இலங்கையின் வட பகுதியின் யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத்தளபதி மகேஸ் சேனநாயக்கவின் அரசியல் ஆர்வம் கொண்டோரின் தேவையே 30 ஆண்டு காலப் போர் எனும் (12.06.2016 ஞாயிற்றுக்கிழமை உதயன் பத்திரிகை) செய்திக்கு இணங்க இராணுவத் தளபதியின் கூற்றைத் தவறு என தெளிவுபடுத்த விளைகிறேன். இதற்கு ஆதாரமாக பின்வரும் வினாக்களைத் தொடுக்கின்றேன்.

1. அரசியல் ஆர்வம் என அவர் எதை இனங்கண்டார்.
2. அரசியல் ஆர்வம் கொண்டோரின் தேவை என்ன என ஏன் குறிப்பிடவில்லை?
3. இலங்கையில் 30 வருடங்களுக்கு முன்னர் அரசியல் ஆர்வம் உடையவர்கள் வாழவில்லையா?
4. 30 வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் போர்கள் இடம்பெறவே இல்லையா?

2ஆம் துட்டகைமுனு என முன்னாள் ஜனாதிபதி வர்ணிக்கப்பட்டால், முதலாம் துட்டகைமுனு யார்?
6. அவர் காலத்தில் அரசியல் ஆர்வம் கொண்டோர் இருந்ததாக மகாவம்சம் கூறவில்லையா?
7. சேர, சோழ, பாண்டிய காலங்களிலும் இலங்கையர், இலங்கையில் அரசியலில் ஆர்வமற்றா இருந்தார்கள்?
8. பிரித்தானியர் ஆட்சியின் போது, வீர புரன் அப்பு கொங்காலே கொடபண்டா மீ கெண்டு வந்த குணானந்த தேரர் ஹிக்கடுவ ஶ்ரீசுமங்கல தேரர் போன்றோரின் தேவை என்ன?
பிரித்தானிய முடிவை எதிர்த்து போர் செய்த கிளர்ச்சியாளர்களான இலங்கையரின் தேவை என்ன?
10. 30 வருடங்களாக ஒரு தரப்பு மட்டும் போரில் ஈடுபடமுடியுமா? அப்படியானால் மறு தரப்பின் தேவை என்ன?

எனவே இந்த அடிப்படையில் உயர் அரசியல் கலாசாரமான பங்கேற்கும் அரசியல் கலாசாரத்தை அடியோடு கிள்ளி எறிய முற்பட்டமை வேதனை அளிக்கின்றது. கருத்துக்களின் அடிப்படையில் பார்க்கும்போது, தாழ்நிலை அரசியல் கலாசாரத்தையே தொடர்ந்து எதிர்பார்க்கின்றமை புலப்படுறது. அதற்காக மக்களை அச்சத்துக்குள் அமிழ்த்தி அவர்களின் சுதந்திர உணர்வுகளையும், தனிமனித உரிமைகளையும் கூட்டம் கூடும் கருத்து வெளியிடும் ஒன்று சேரும் அனைத்து அரசியல் உரிமைகளையும் சிதைத்து சிறைப்படுத்தி செயற்றிறன் அற்றவர்களாய் இருக்கச்செய்து, தமது ஆட்சிக்காலத்தில் கதிரைகளைக் காப்பாற்ற மக்களை மந்த குணம் கொண்ட பிரசைகளாகவே எதிர்பார்க்கின்றனர்.

இராணுவ நலன்களை தாங்கள் பெற வேண்டுமானால் அரசியல் ஆர்வம் வளர்ச்சி அடையக்கூடாது என்பதில் குறியாய் இருப்பது தெளிவாகின்றது. ஏன் மக்கள் அரசியலில் பங்கு பற்றவில்லை? வாக்களிப்பதில் ஏன் ஆர்வம் இல்லை? வாக்காளராக அனைவரும் பதிவு செய்வதில் ஆர்வம் இன்றி சலிப்படைவது எதற்காக? பெண்கள் ஏன் அரசியலில் பங்குபற்ற இடர்படுகின்றார்கள்? என ஆய்வு செய்யும் போது இத்தகைய ஆயுதம் தரித்தோரின் போர் தூண்டுகருத்துக்களே பிரதான காரணிகளாக அமைகின்றது. மேலும், இங்கு குறிப்பிடவேண்டியது போர் பற்றிய கருத்து. போர் என்றால் என்ன என நோக்கினால் அருமையான வளங்களைப் பெற்றுக்கொள்ள முற்படும், இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட நபர்கள் குழுக்கள் அல்லது தரப்புக்கள் அல்லது நாடுகள் தமக்கிடையில் ஏற்படுத்தும் போட்டியின் இறுதிக்கட்டமே போர். இவை கருத்து ஒவ்வாமையின் அடித்தளத்தில் பின்னப்பட்டிருக்கும். போர் ஒரு வகை அச்சுறுத்தலாகவும் கருதப்படுகின்றது. இதன் விளைவு சமாதானமாக இருக்க முடியாது. அதிகமான அழிவுகளையே அள்ளி வழங்கும் இந்தப்போரானது பல யுகங்களாகவும் நடைபெறலாம். அதற்கு கால எல்லை நிர்ணயம் செய்ய முடியாது.

ஒரு நாட்டுக்குள் போர் இடம்பெறும் போது ஒட்டு மொத்த நாடுமே ஓர் ஆபத்தான நிலைக்குச் சென்றுவிடும். மேலும் போருக்கு பல நாடுகளைப் பக்க பலமாய் துணைக்கு அழைத்து, ஒரு அரசு தன் நாட்டு மக்களையே கொன்று குவித்துவிட்டு, சமாதானத்தை ஏற்படுத்தியதாக தளபதிகள் கூறுவதும் போரை மீண்டும் உருவாக்கலாம்.

சமூகநீதி பிறழும்போது நல்லாட்சியின் அவசியம் உணரப்பட்டது. இலங்கையில் நல்லாட்சிக் காலத்தில்தான் இருந்த சமூக நீதி அழிந்து வருகின்றது. மக்கள் மனங்களில் நிம்மதி இல்லை. பிள்ளைகள் கெட்டு வருகின்றனர் என்ற அச்சம் மன உளைச்சலை ஏற்படுத்தி விட்டிருக்கின்றது. நல்லாட்சிக் காலத்தில் மக்களுக்கான நலன்கள் மேம்படுத்தப்படும்போது இராணுவம் பற்றிய சிந்தனை எதற்கு? இந்தக் காலப்பகுதியில்அவர்களின் பிரசன்னம் எதற்கு? வீண் கருத்து வெளியீடுகள் எதற்கு. எனவே ஜனநாயக ஆட்சியில் இராணுவ ஆட்சி எதற்கு? இரண்டும் இலங்கையில் தேவையா? இரண்டும் ஓரணியில் பயணிக்கக் கூடியவையா? ஒன்றின் இருப்புக்கு மற்றையது அவசியமா? அப்படியானால் நல்லாட்சி எனும் பதத்தை பயன்படுத்த முடியுமா? ஆட்சியாளர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். ஊடகங்களும் மக்களும் தெளிவுபட்டிருக்கும் வேளையில், மேடைப் பேச்சுக்களில் கூட போரை வெற்றி கொண்டோம் என்றும் அதனால் இந்த சமாதானத்தை தொடர்ந்து பேணுவோம் என்ற கூற்றுக்களையும் கூறி மக்களை ஏமாற்றும் எண்ணம் வேண்டாம்.

ஏனென்றால் 30 வருடகாலப் போராட்டம் அதனை முடிவுக்கு கொண்டு வந்தோம் என கூறிக் கொண்டு, மக்களின் கருத்து வெளியிடும் சுதந்திரத்தை தூக்கில் போட்டுவிட்டு, வாழ்விடங்களை அபகரித்து விட்டு, அரசியல் கைதிகள் என்ற பாணியில் சட்டக் கோவைக்குள் இல்லாத முறைகளை தோற்றுவித்து, சிறைகளில் காரணமில்லாமல் பட்டினி போட்டு, சுக தேகிகளுக்கு நின்று கொல்லும் நஞ்சுகளைக் கொடுத்து, சமாதானம் நிலைநாட்டியதென்று சாணக்கியம் பேசுவதாக நினைக்கக் கூடாது. இராணுவ நலத்திட்டம் விறுசற இவர்கள் நடத்திய கட்டாய போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விறுத்தும் கெட்ட ஆட்சி அஞ்சிய நல்லாட்சி படைகளின் பொறுப்புக்கெட்ட கருத்தாடல் நோஞ்சான் மக்கள் என அத்தனையும் குழப்பம் செய்யும் எப்படிப்பிறக்கும் சுதந்திரம் எங்கு நிகழும் அரசியல் அபிவிருத்தி. இராணுவ பிரசன்னமும் அந்தப்பிரிவுகளின் கருத்துக்களும் நல்லாட்சியை வல்லாட்சி நோக்கிப் பயணிக்கச் செய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒபாமாவின்

## இலங்கை தொடர்பான வெளியுறவுக் கொள்கையின்

# தோல்வி

சிவா செல்லையா

இன்றைய உலகின் போக்கு பெரும்பாலும் ஐக்கிய அமெரிக்காவினாலேயே கட்டுப்படுத்தப்படுகின்றது. இதனால் அமெரிக்க அதிபரை உலக நாயகனாகச் சித்திரிப்பதும் உண்டு. இலங்கையின் இனமுரண்பாடு ஆயுத மோதலாக இருந்த சூழலில் தமிழ் மக்களுக்கு எதிராக பெரிய இராணுவ நடவடிக்கையை இலங்கை அரசு மேற்கொண்டது. அமெரிக்காவின் பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற வெளியுறவுக் கொள்கையை அமெரிக்க இராணுவச் செயலாளர் றிச்சாட் ஆர்மிடேசின் அனுசரணையின் பின்னனியிலேயே அரசு மேற்கொண்டது.

இந்த நிலையிலேயே 2009 இல் அமெரிக்க அதிபர் தேர்தல் நடைபெற்றது. இதற்கு அமெரிக்கா வாழ் தமிழர்கள் ஒபாமாவுக்கான தமிழர்கள் என இணைந்து ஆதரவு வழங்கினர். ஆனால், ஒபாமா அமெரிக்காவின் அதிபராக வந்த பின்பும், பெரிய தமிழின அழிப்பு இலங்கையில் நிகழ்ந்தது. இந்த அழிப்பை நவீன செய்மதித் தொடர்பாடல்கள் மூலம் உலகம் கண்டும் அதனை இன்னமும் மறைக்கவே முயற்சி செய்கின்றது.

இந்த இன அழிவின் 90 வீதம் முடிவுற்ற நிலையில் ஐ.நா.செயலாளரே இலங்கைக்கு நேரில் வருகை தந்து பாதிக்கப்பட்டவர்களை வானத்தில் நின்ற வாறே வட்டமிட்டுப் பார்த்தார். ஐ.நா.மனித உரிமை சபை இலங்கை அரசைப் பாராட்டத் தீர்மானத்தை மேற்கொண்டது. பின் சனல் 4 ஊடகத்தில் சில இன அழிப்பு ஆவணங்கள் வெளியானதைத் தொடர்ந்து போர்க்குற்ற விசாரணை என்பதாக காலத்தைக் கடத்தியது. பின்னர் அது உள்ளக விசா ரணைப் பொறி முறை என மாற்றப்பட்டது.

அது தற்போது வெறு மனே மனித உரிமை மீறல் என மாற்றப் பட்டு உள்ளது. அமெரிக்க அதிபர் ஒபாமாவின் ஆட்சியில் இருந்து வந்த வெளியுறவுக் கொள்கையின் பலவீன வெளிப்பாடுகளே இவை. அதாவது ஒபாமாவின் ஆட்சியில் வளர்முக நாடு ஒன்றில் சிறுபான்மை இனம் பெரிய இன அழிப்புக்கு உட்பட்டது மட்டுமன்றி, அந்த அழிப்பினால் பாதிக்கப்பட்ட இனத்துக்கு நீதியும் வழங்கப்படவில்லை.

நிகழ்ந்த துன்பியல் நிகழ்வை நவீன தொழில்நுட்ப ஆரவாரங்களால் மறைக்கும் முயற்சியே நிகழ்கின்றது. இதனை எதிர்வரும் ஐ.நா மனித உரிமைகள் சபை அமர்விலும் எதிர்பார்க்கலாம். வெளிப்படையாகக் கூறின் இஸ்ரேல் பலஸ்தீன மக்களை அடக்குவதற்கு அமெரிக்க எவ்வாறு இஸ்ரேலுக்கு உதவுகின்றதோ அவ்வாறே இலங்கையில் தமிழ் மக்களை அடக்குவதற்கு அமெரிக்கா மட்டுமல்ல இந்தியா, சீனா போன்ற பிராந்திய வல்லரசு நாடுகள் தொடர்ந்தும் உதவுகின்றன. இதனால் பலஸ்தீன மக்கள் எதிர்கொள்ளும் தொடர் நெருக்கடிகள்போல் இலங்கையில் வாழும் தமிழ் மக்களும் சந்ததி சந்ததியாக நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டி உள்ளது.

ஐ.நா. மனித உரிமை சபையின் 2016 ஆம் ஆண்டுக்கான ஜூன்மாத கூட்டத்தொடரே ஒபாமா நிர்வாகத்தின் இறுதிக் கூட்டத்தொடராகும். இதில் 2009 ஆம் ஆண்டில் இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்ட தமிழ் மக்களுக்கு எதிரான அநீதிகளுக்குச் சாத்தியமான தீர்வு கிடைக்கும் என்று கூற முடியாது. மாறாக இலங்கை அரசு மேற்கொள்ளும் கண்துடைப்பு நடவடிக்கைகளுக்குப் பாராட்டுக் கிடைக்கும். இதற்காகவே இலங்கை அரசு தற்போது காணாமற் போனோர் தொடர்பாக அலுவலகம் அமைக்க முயற்சிக்கின்றது. ஆனால், காணாமற் போனோர் தொடர்பாக கண்துடைப்பு ஆணைக்குழுவே அமைக்கப்பட்டது. காணாமற் போன தமிழ் மக்கள் தொடர்பாக நீதிமன்றில் எவரும் குற்றவாளிகளாக இனம் காணப்படவில்லை. அடுத்து காயமடைந்தவர்களின் சாட்சியங்கள் எதனையும் நீதிமன்று இதுவரை பதிவு செய்யவில்லை. உயர் பாதுகாப்பு வலயங்கள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. இறுதியாக உள்ளக விசாரணையில் ஐ.நா.மனித உரிமை சபையின் தீர்மானமான வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்பை இலங்கை அரசு நிராகரித்துள்ளது. ஐ.நா. மனித உரிமைச் செயலரின் இலங்கைப் பயணத்தின் யாழ்ப்பாணம் சபாபதிப்பிள்ளை முகாமுக்கு சென்றிருந்தபோது நிலைமைகளை அவதானித்திருந்தார். தான் மறு தடவை வரும் போது அங்கு இடம் பெயர்ந்து வாழும் மக்கள் தங்கள் சொந்த இடங்களில் குடி யேற்றப்பட்டு விடுவர் என்பதான வாக்குறுதியை யும் வழங்கி இருந்தார். இவை யாவும் கானல் நீராகவே இன்னமும் உள்ளது.

இந்த நிலையிலே ஐ.நா. மனித உரிமைச் செயலர் 2016 ஜூன் கூட்டத் தொடரில் முழு இலங்கையரின் ஒத்துழைப்பைக் கோருவது குற்றவாளிகளையே நீதியாளர்களாக மாற்றும் நடவடிக்கையாகும்.

இறுதியாகத் தமிழ் மக்களுக்குரிய அரசியல் தீர்வு விடயத்திலும் மேற்கத்தைய அனுசரணையிலான தற்போதைய நல்லிணக்க அரசும் தனது மெத்தனப் போக்கையே காட்டுகின்றது. தமிழ் மக்களின் ஏகோபித்த அபிலாசையான சமஷ்டி அரசியலமைப்பை பிரிவினையாகவே சிங்களம் பார்க்கின்றது. பெரிய இன அழிப்புக்கு உள்ளான தமிழ்ச் சமூகம் இனவழிப்புக்குப் பின்பான சமஷ்டி அரசியல் அதிகாரத்தைப் பெறுவதற்கு சட்டரீதியான அருகதை உடையது. இத்னை ஒபாமாவுக் குப் பின்பான அமெரிக்க வெளிவிவகாரம் கடைப்பிடிக்க வேண்டும் என்பது தமிழ் மக்களது எதிர்பார்ப்பாகும். தற்போதைய மாகாணசபை அதிகாரத்தையும் மாகாண ஆளுநர் தட்டிப்பறித்து அரசியல் குழப்பத்தை ஏற்படுத்துகின்றார். இவை நல்லிணக்க அரசின் இன சமத்துவ நிலையில் இருந்தாதன தூரநிலையை தமிழ் மக்களுக்கு எடுத்துக் காட்டுகின்றது. ஒட்டுமொத்தத்தில் உலகநாயகனின் வெளிவிவகாரக் கொள்கை, ஈழத்தமிழருக்கு நீதி கிடைக்காத தன்மை வெளிப்பாட்டின் அழிவுடன் முடிவடைகின்றது.

> இதில் 2009 ஆம் ஆண்டில் இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்ட தமிழ் மக்களுக்கு எதிரான அநீதிகளுக்குச் சாத்தியமான தீர்வு கிடைக்கும் என்று கூறமுடியாது. மாறாக இலங்கை அரசு மேற்கொள்ளும் கண்துடைப்பு நடவடிக்கைகளுக்குப் பாராட்டுக் கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சூட்டுச் சம்பவங்களால் அல்லாடும் அமெரிக்கா

அதிரன்

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தின் ஓர்லாண்டோ நகரில் துப்பாக்கி ஏந்திய இளைஞர் ஒருவர் நடத்திய திடீர்த் தாக்குதலில் 50 பேர் உயிரிழந்த சம்பவம் முழு உலகையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியிருக்கின்றது. தாக்குதலில் ஈடுபட்ட ஓமர் மாட்டீனும் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டுவிட்டதால், இந்தப் படுகொலைக்கான காரணங்கள்–பின்னணிகள் உடனடியாகத் தெரியவரவில்லை என்றாலும், இரு விடயங்கள் குற்றத்தின் பின்னணியைத் தெளிவாகச் சுட்டுகின்றன. அமெரிக்காவின் துப்பாக்கிக் கலாசாரம், ஓரினச் சேர்க்கையாளர்கள் மீதான வெறுப்பு ஆகியனவே அந்த இரு விடயங்களும். இந்தத் தாக்குதலை நடத்திய ஓமர் ஆப்கானிலிருந்து குடியேறிய பெற்றோருக்குப் பிறந்தவர். தாக்குதலுக்குள்ளான இடம் ஓரினச் சேர்க்கையாளருக்கான பல்ஸ் இரவு விடுதி. இந்தக் கொடூரத்தை நிகழ்த்தும் முன் அவசரத் தேவைக்கான 911 எண்ணைத் தொடர்புகொண்ட ஓமர், தன்னை ஐ.எஸ். அமைப்பின் விசுவாசி என்று அறிவித்துள்ளார்.

அமெரிக்க உயர்நீதிமன்றமே ஓரினச் சேர்க்கையாளர்களின் திருமணம் செல்லுபடியானது என்ற வரலாற்றுத் தீர்ப்பை அளித்துவிட்டாலும்கூட, பலருக்கு அத்தகைய பந்தம் ஏற்றுக்கொள்ள முடியாததாகவே உள்ளது என்பதில் ஐயமில்லை. இதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று பழைமைவாத மனநிலை. மத அடிப்படைவாத அமைப்புகளின் சித்தாந்தங்களில் ஊறிப்போனவர்கள் இயல்பாகவே பழைமைவாத மனநிலையிலும் சிக்கிக் கொள்கின்றனர்.

ஓரினச் சேர்க்கையாளர்கள் கூடும் இரவு விடுதிக்குச் சென்ற ஓமர், ஏராளமானோரைச் சுட்டுக் கொல்வதற்குத் தயாராகக் குழல் துப்பாக்கியையும் கைத்துப்பாக்கியையும் மறைத்துக் கொண்டு சென்றுள்ளார். வெறுப்பை மூலதனமாக்கிக்கொண்டவர்களிடம் நவீன துப்பாக்கிகள் கிடைத்தால் விளைவு எப்படி இருக்கும் என்பதற்கு இது முதல் உதாரணம் அல்ல. அப்படியிருந்தும் அமெரிக்க ஆட்சியாளர்களால் துப்பாக்கி வைத்திருப்பதற்கான சட்டத்தைத் திருத்த முடியவில்லை. பராக் ஒபாமா அதிபரான பிறகு, தனியொரு நபர் துப்பாக்கியைக் கொண்டு அப்பாவிகளான நிராயுதபாணிகளைச் சுட்டுக்கொல்லும் 16 ஆவது சம்பவம் இது.

அமெரிக்காவில் குறைந்த பட்சம் ஒவ்வொருவருக்கும் ஒரு துப்பாக்கி என்ற எண்ணிக்கையில் துப்பாக்கிகள் புழக்கத்தில் இருக்கின்றன. வீட்டில் இருக்கும் குண்டு நிரப்பப்பட்ட கைத்துப்பாக்கியை விளையாட்டுப் பொருளாகக் கருதி தன்னுடைய தம்பி – தங்கைகளைச் சுட்டுவிடும் சம்பவங்கள் பல நடந்துவிட்டன. எனினும், துப்பாக்கி நிறுவனங்களைத் தாண்டி அரசியல்வாதிகளால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

அமெரிக்க அதிபர் தேர்தலுக்கான முன்னேற்பாடுகளும் பிரசாரங்களும் உச்சம் தொட்டுவரும் நிலையில், அமெரிக்க அரசியல் கட்சிகள் பேச வேண்டிய அல்லது இனியும் தவிர்க்க முடியாத ஒரு பிரச்சினையை ஓர்லாண்டோ படுகொலை சுட்டிநிற்கிறது. ஹிலாரி கிளின்டனும், டொனால்ட் டிரம்ப்பும் இனியும் இந்த விடயத்தில் வாய் மூடியிருக்க முடியாது. துப்பாக்கிகள் பயன்பாட்டை முடக்காமல், தனிப்பட்ட நபராகப் படுகொலைகளில் ஈடுபடுகிறவர்களைப் பொலிஸார் அடையாளம் காண்பதும் கண்காணிப்பதும் சாத்தியமற்ற செயல். அமெரிக்க ஊடகங்கள் வெளியிடும் பல்வேறு செய்திகள் இந்தச் சம்பவத்தை ஐ.எஸ், மத அடிப்படைவாத இயக்கத் தொடர்பு, இஸ்லாமியர்கள் மீதான சந்தேகக் கண்ணோட்டம் எனும் கோணத்தை நோக்கி பொதுச் சமூகத்தைத் தள்ளுகின்றனவோ எனும் எண்ணத்தை உருவாக்குகின்றன.

அண்மைக் காலமாக அமெரிக்காவில் தனியார் மற்றும் தீவிரவாத துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. அதிலும் சமீபத்தில் நடைபெற்ற ஓர்லாண்டோ துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை அடுத்து மற்றுமொரு தடவை அமெரிக்க அரசு தனது தனிநபர் துப்பாக்கி வைத்திருப்பது தொடர்பான சட்ட திட்டங்களை இன்னமும் கடினமாக்க உள்ளதாக அறிவித்துள்ளது. முக்கியமாகத் தவறான நபர்கள் மற்றும் தீவிரவாதிகள் கையில் துப்பாக்கி சென்றடையாது இருக்கக் கூடுதல் கவனம் செலுத்தப்படும் என அமெரிக்க அரசு அறிவித்துள்ளது. இது தொடர்பாக செனட் சபையின் ஜனநாயகவாதிகளது மிக உணர்ச்சிகரமான விவாதம் 15 மணித்தியாலங்களுக்கு இடம் பெற்றதை அடுத்தே அமெரிக்காவில் துப்பாக்கி தொடர்பான சட்ட திட்டங்கள் இன்னமும் இறுக்கம் அடைந்துள்ளன.

இந்தக் கட்டுப்பாடுகள் மூலம் அமெரிக்காவில் இனித் தீவிரவாதத் தாக்குதல்கள் குறைவடைய வாய்ப்புள்ளதா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

> அமெரிக்க உயர்நீதிமன்றமே ஓரினச் சேர்க்கையாளர்களின் திருமணம் செல்லுபடியானது என்ற வரலாற்றுத் தீர்ப்பை அளித்துவிட்டாலும்கூட, பலருக்கு அத்தகைய பந்தம் ஏற்றுக்கொள்ள முடியாததாகவே உள்ளது என்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** சவால்களை ஏற்று, திறம்படச் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில், நிலுவைப் பணியை கூடுதல் உழைப்பால் நிறை வேற்றுவீர்கள். வருமானம் அதிகரிக்கும். விருந்து, விழாவில், கலந்து கொள்வீர்கள்.

**இடபம்:** அன்புக்குரியவர்களின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். உபரி வருமானமும் வந்து சேரும். மாணவர்கள் படிப்பில் சிறந்த தேர்ச்சி பெறுவர்.

**மிதுனம்:** மனதில் உதித்த திட்டம் செயல் வடிவம் பெறும். தொழிலில், அதிக ஆதாயம் கிடைக்கும். குடும்பத்தில் ஒற்றுமை மேலோங்கும். மாணவர்கள் படிக்கும் நேரத்தை அதிகப்படுத்துவர்.

**கடகம்:** குடும்பப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில், மிதமான வருமானம் கிடைக்கும். வாகனப் பயணத்தில் மிதவேகம் பின்பற்றவும். பெண்களுக்கு, தாய் வீட்டுச் சீதனம் கிடைக்கும்.

**சிங்கம்:** உறவினர்களின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், ஆதாயம் சராசரி அளவில் இருக்கும். பெண்கள், கௌரவத்துக்காக பணம் செலவழிப்பர். உடல் நலனில் அக்கறை கொள்வது நல்லது.

**கன்னி:** ஆன்மிகச் சிந்தனை மேலோங்கும். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் உயரும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். பிள்ளைகளின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**துலாம்:** நிதானத்துடன் பேசினால், நற் பெயரைப் பாதுகாக்கலாம். தொழிலில் உருவாகிற இடையூறைச் சரி செய்ய முயல்வீர்கள். இலாபம் சுமாராக இருக்கும். மாணவர்கள், பாதுகாப்புக் குறைவான இடத்துக்குச் செல்ல வேண்டாம்.

**விருச்சிகம்:** வாழ்வில் இனிய அனுபவம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில், திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். பணவரவும் நன்மையும் அதிகரிக்கும். பணியாளர்கள், சலுகை கிடைக்கப் பெறுவர்.

**தனுசு:** அறிமுகம் இல்லாதவரிடம், பொது விடயம் பற்றிப் பேசக் கூடாது. தொழிலில், அளவான உற்பத்தி, விற்பனை இருக்கும். பெண்கள், ஆடம்பரச் செலவைத் தவிர்ப்பது நல்லது. எதிர்பார்த்த சுப செய்தி வரத் தாமதமாகலாம்.

**மகரம்:** இனிய பேச்சால், நண்பருக்கு ஆறுதல் அளிப்பீர்கள். தொழிலில், அபரிமிதமான வளர்ச்சியால், வருமானம் அதிகரிக்கும். பெண்கள், புத்தாடை அணிகலன் வாங்குவர். மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பர்.

**கும்பம்:** அன்பு மனதுடன் அனைவரிடமும் பழகுவீர்கள். தொழிலில், திட்டமிட்ட இலக்கை எளிதில் அடைவீர்கள். வருமானம் திருப்திகரமாக இருக்கும். சகோதரர்களுக்குத் தேவையான உதவி செய்வீர்கள்.

**மீனம்:** மறைமுக எதிரியால், தொல்லைக்கு ஆளாகலாம். தொழிலில், ஆதாயம் சுமாராக இருக்கும். திடீர் செலவால், சேமிப்புக் கரையும். பெண்கள், பணம், நகை, இரவல் கொடுக்கக் கூடாது.







எழுத்தாளன்

**"மனிதர்கள் பல வண்ணங்களில் உள்ளவர்கள். அவர்களில் அழகானவர்கள் நல்லெண்ணம் உடையவர்கள் மட்டுமே...!"**

**டாக்டர்:** மண்டையில் அடிபட்டதால உங்க மாமியாருக்குப் பழசெல்லாம் மறந்து போச்சு

**மருமகள்:** அப்ப.. பழைய சண்டையை எல்லாம் மறுபடியும் போடலாமா டாக்டர் ?

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 5 | 6 | 1 | 8 | 2 | 4 | 9 | 7 |
| 4 | 2 | 1 | 6 | 9 | 5 | 5 | 8 | 3 |
| 9 | 8 | 7 | 5 | 3 | 4 | 1 | 2 | 6 |
| 5 | 6 | 3 | 4 | 2 | [illegible] | 8 | 7 | 9 |
| 2 | 1 | 9 | 3 | 7 | 8 | 6 | 5 | 4 |
| 2 | 7 | 4 | 9 | 5 | 6 | 3 | 1 | 2 |
| 1 | 4 | 5 | 7 | 6 | 9 | 2 | 3 | 8 |
| 6 | 9 | 8 | 2 | 1 | 3 | 7 | 4 | 5 |
| 7 | 3 | 2 | 8 | 4 | 5 | 9 | 6 | 1 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | 9 |
| | | | | 5 | 4 | | 6 | |
| | 1 | | 6 | | 7 | 2 | | 3 |
| | | 1 | | | 8 | 6 | | |
| | 8 | | | 1 | | | 7 | |
| | | 2 | 4 | | | 3 | | |
| 7 | | 4 | 8 | | 5 | | 3 | |
| 1 | 2 | | 3 | 4 | | | | |
| 5 | | | | | | | | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப் படை. 1–9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக் கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உப சதுரங் கள் என்றும் அழைக் கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரை யிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தட வைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகை யில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டி ருக்கும். தர்க்கரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்ப தாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன மான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது.

2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# பேய் மாளிகையில் இன்னொரு திகில்



பேய் படமென்றாலே ஏதாவது ஓர் அரண்மனை, மாளிகையில் நடக்கும் சம்பவங்களாகவே வந்துகொண்டிருக்கின்றன. அந்த வரிசையில் உருவாகிறது 'மாயா பவனம்'. பலநூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த ஒரு மருத்துவ ஆராய்ச்சியாளர், இறந்த தனது மனைவிக்கு உயிர் கொடுக்க முயல்கிறார். அதை அந்த ஊர் ஜமீன்தார் தடுப்பதுடன் ஆராய்ச்சியாளரையும் கொல்கிறார். அதன் பிறகு அந்த மாளிகையில் திகில் சம்பவங்கள் தொடர்கின்றன. யாரும் அதற்குள் நுழைய முடியாமல் பூட்டப்படுகிறது. இந்த நூற்றாண்டில் அந்தச் சம்பவம் பற்றி படமாக்க டி.வி நிறுவன குழு ஒன்று மாளிக்கைகுள் நுழைகிறது. பிறகு நடப்பது என்ன என்பது உச்சம். எழுதி, தயாரித்து, இயக்கி நாயகனாக நடிக்கிறார் ஓம் ஸ்ரீ கண்ணாஜி. ஆத்மா, மம்தா, ஏஞ்சல்ராய், சேகர் ஆகியோரும் நடிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இது புதுசு

## கண்ணாடி தரை மாபிள்கள்

கண்ணாடி மேற்பரப்புடைய தரை மாபிள்கள் அறிமுகமாகியுள்ளன. 3 ஆம் தலைமுறை மாபிள்கள் என்று இவை அழைக்கப்படும். இவை 750 இருந்து 850 ரூபா வரை விற்பனை செய்யப்படுன்றன.

# காரா பூந்தி



## தேவையானவை

கடலை மா - 2 கப்
பச்சரிசி மா - 6 கரண்டி
உப்பு - தேவைக்கேற்ப
எண்ணெய் - பொரிப்பதற்கு
பேக்கிங் சோடா - ஒரு சிட்டிகை
கலர் -3 முந்திரிப் பருப்பு - தேவைக்கேற்ப
வேர்க்கடலை - விரும்பினால் தேவைக்கேற்ப
கறிவேப்பிலை - ஒரு கைப்பிடி
பெருங்காயம் - சிறிது
மிளகாய் தூள் - தேவைக்கேற்ப.

## செய்முறை

ஒரு பாத்திரத்தில் கடலை மா, அரிசி மாவைக் கலந்து, உப்பு, பேக்கிங் சோடா, பெருங்காயம், தண்ணீர் சேர்த்து தோசை மாப் பதத்துக்குக் கலக்கவும். இதை மூன்று பாகமாக வேறு வேறு பாத்திரத்தில் பிரித்து வைத்துக் கொள்ளவும். ஒரு பாகத்தில் பச்சை நிறம் சேர்த்து, ஒரு பாகத்தில் மிளகாய் சேர்த்து, ஒரு பாகத்தில் இன்னொரு நிறம் சேர்த்து நன்றாகக் கலந்துகொள்ளவும். சட்டியில் எண்ணெய் காய வைத்து, எண்ணெயின் மேல் காரா பூந்தி துளையிடப்பட்ட கரண்டியைக் கொண்டு ஒரு குழிக்கரண்டி முதல் பாகத்தை ஊற்றி தட்டிக் கொண்டே இருந்தால் பூந்திகள் விழுந்து விடும். எண்ணெய் ஒலி குறையும் வரை வறுக்கவும்.

இப்படி முதல் பாகத்தை முடித்து விட்டு இரண்டாவது கலர் பாகத்தையும் மூன்றாவது கலர் பாகத்தையும் பொரித்து வடிக்கவும். ஒரு ரிசு கடதாசி மேல் பொரித்தவற்றை வைத்து ஆறவிடவும். ஆறியதும் எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து சூடாக இருக்கும் போதே, சிறிது மிளகாய்த் தூள் சேர்த்துக் கலந்து எண்ணெயில் வறுத்த முந்திரி, வேர்க்கடலை, கறிவேப்பிலை சேர்த்து, வீட்டில் ஓமப்பொடி இருந்தால் அதையும் சேர்த்துக் கலந்து பரிமாறவும்.

## நாளை ஆனி-06

திங்கட்கிழமை -20.06.2016
திதி: பூரணை பி.ப.05.15வரை
நட்சத்திரம்: கேட்டை கா.07.03 வரை
ராகுகாலம்: 07.24-08.54 வரை
சுபநேரம்: 11.54-01.24 வரை
பூரணை விரதம்

## தெரிந்து கொள்ள வேண்டியவை



- வெண்டைக்காயைப் பொடியாக நறுக்கி வெயிலில் அரை மணி நேரம் வைத்து பின்னர் பொரியல் செய்தால் வெண்டைக்காயில் உள்ள வழுவழுப்பு நீங்கி விடும்.
- குளிர்சாதனப்பெட்டியைச் சுத்தப்படுத்த அரைத் தேக்கரண்டி பற்பசையை எடுத்துத் தண்ணீரில் கலக்கி மெல்லிய பருத்தித் துணியால் துடைத்து பின்னர் வெறும் தண்ணீரில் துடைத்தால் பளிச்சென்று ஆகிவிடும்.
- ரவைத் தோசை சுடும்போது மாவில் இரண்டு தேக்கரண்டி கடலைமாச் சேர்த்து செய்தால் தோசை நல்ல முறுகலாக வரும்.
- தோசை ஊற்றுவதற்கு முன்பு தோசைக் கல்லில் எண்ணெய் தேய்ப்பதற்குப் பதிலாக தண்ணீர் தெளித்து துடைத்து விட்டு ஊற்றினால் தோசை நன்றாக விரிந்து வரும்.

## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்



| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 150 | 100 | 120 | 160 | 100 | 120 | – | 60 |
| கத்தரி | 120 | 140 | 120 | 180 | 160 | 200 | – | 80 |
| கரட் | 200 | 140 | 240 | 220 | 240 | 300 | – | 160 |
| மரவள்ளி | 80 | 70 | 70 | 80 | 70 | 80 | – | 40 |
| பயிற்றை | 180 | 160 | 180 | 180 | 180 | 120 | – | 80 |
| பாகல் | 200 | 220 | 140 | 240 | 200 | 200 | – | 160 |
| கருணைக்கிழங்கு | 120 | 110 | 120 | 160 | 120 | – | – | 70 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 80 | 80 | 75 | 100 | – | 80 |
| சி.வெங்காயம் | 120 | 140 | 120 | 180 | 140 | 200 | – | 130 |
| பூசணி | 70 | 80 | 80 | 80 | 80 | 100 | – | 80 |
| தக்காளி | 180 | 170 | 200 | 260 | 160 | 200 | – | 150 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 | 80 | 60 | 80 | – | 40 |
| கீரை | 30 | 50 | 30 | 20 | 20 | 40 | – | 20 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 30 | 45 | 20 | 40 | – | 10 |
| பச்சை மிளகாய் | 400 | 600 | 600 | 600 | 500 | 800 | – | 500 |
| புடோல் | 80 | 120 | 100 | 140 | 100 | 120 | – | 80 |
| கோவா | 180 | 160 | 200 | 240 | 160 | 220 | – | 140 |
| வெண்டி | 200 | 100 | 100 | 160 | 180 | 200 | – | 80 |
| போஞ்சி | 200 | 180 | 240 | 200 | 200 | 240 | – | 160 |
| லீக்ஸ் | 200 | 160 | 200 | 240 | 200 | 250 | – | 100 |
| தேங்காய் | 40 | 30 | 40 | 35 | 25 | 35 | – | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 80 | 100 | 90 | 90 | 100 | – | 100 |
| தேசிக்காய் | 400 | 350 | 240 | 240 | 200 | 150 | – | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 20 | – | 10 |
| கறிமிளகாய் | 200 | 220 | 240 | 240 | 300 | 200 | – | 150 |
| இராசவள்ளி | 160 | – | 200 | 180 | – | 160 | – | 120 |
| முருங்கைக்காய் | 700 | 400 | 400 | 400 | 400 | 300 | – | 400 |

## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 600 | 700 | 800 | 900 | 700 |
| நண்டு | 250 | 200 | 300 | 400 | 400 | 300 | 400 |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 700 | 700 | – |
| பாரை | 550 | 600 | 500 | 650 | 700 | 650 | 450 |
| சுறா | 500 | 700 | 600 | 800 | 700 | 800 | 450 |
| சீலா | 300 | 500 | 400 | 800 | 500 | 500 | – |
| விளை | 650 | 500 | 400 | 800 | 600 | 500 | 400 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 400 | 400 | – |
| கும்பிளா | 400 | 350 | 300 | 450 | 600 | 500 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 450 | 400 | – |
| ஓரா | 400 | 400 | – | – | 350 | – | 400 |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 200 | – | – |
| நகரை | 250 | 300 | – | 300 | 350 | 300 | 350 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 200 | 100 |
| ஒட்டி | 300 | 250 | 150 | 400 | 350 | 300 | – |
| திருக்கை | 150 | 400 | 200 | 350 | 300 | 300 | 170 |
| மதனம் | 150 | 300 | 180 | – | 250 | – | 200 |
| கொய் | 100 | 200 | 60 | 100 | 120 | 100 | – |
| பாலை | 400 | 300 | 250 | 400 | 400 | 400 | – |
| வாழை | 100 | 200 | 200 | – | 300 | – | – |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிங்கங்களுடன் செல்பியால்



# சிக்கலில் ரவீந்திர ஜடேயா

இந்திய கிரிக்கெட் அணி வீரர் ரவீந்திர ஜடேஜா, சிங்கங்களுடன் நின்று செல்பி எடுத்துக் கொண்ட விவகாரம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

சமீபத்தில் திருமணமான ரவீந்திர ஜடேஜா, தனது மனைவி ரீவா சோலங்கியுடன் இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் உள்ள கிர் காடுகளுக்கு சுற்றுலா மேற்கொண்டுள்ளார்.

அங்குள்ள சிங்கங்கள் சரணாலயத்தை வாகனத்தில் சென்று சுற்றிப் பார்த்தபோது, அவரும், அவரது மனைவியும் வாகனத்தில் இருந்து இறங்கி புகைப்படம் எடுத்துள்ளனர். கிர் காடுகளில் சிங்கங்கள் வசிக்கும் பகுதிகளில் வாகனத்தில் இருந்து இறங்கக்கூடாது என சட்டம் இருக்கும் போது, ரவீந்திர ஜடேஜா சிங்கங்களுடன் புகைப் படம் எடுத்தது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், வனசட்டங்களை ஜடேஜா மீறியதாக அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளதுடன் இது தொடர்பாக விசாரணை நடத்த வனத்துறை உத்தரவிட்டுள்ளது.



# கோக்லிக்கு எமனான அம்லா

சச்சினின் சாதனைகளை கோக்லி முடியறிப்பார் என்ற கருத்துக் கணிப்புக்கள் ஓர் முனையில் இருக்க மறுமுனையில் கோக்லியின் சாதனைகளை தென்னாபிரிக்க வீரரான அம்லா முறியடித்து வருகிறார். ஆஸ்திரேலியா, மேற்கிந்தியத் தீவுகள், தென்னாபிரிக்கா அணி களுக்கு இடையிலான முத்தரப்புத் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் அம்லா தீவுகளுக்கு எதிராக சதம் கடந்திருந்தார். இது அவரது 23ஆவது சதமாகும். இந்த சதத்தின் மூலம் குறைந்த இன்னிங்ஸில் (132 இன்னிங்ஸ்களில்) 23 சதங்களை விளாசிய வீரர் என்ற சாதனைக்கு அம்லா சொந்தக்காரராகியுள்ளார். இதற்கு முன்னர் இந்த சாதனைக்கு (157 இன்னிங்ஸ்) கோக்லி உரிமையாளராக இருந்தார். இந்தச் சாதனையை மட்டுமல்லாமல் விரைவாக 5 ஆயிரம், 6 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்தவர் என்ற கோக்லியின் சாதனைகளையும் அம்லா தகர்த்திருந்தார்.



# ஐஸ்லாந்தை விமர்சிக்கிறார் கிறிஸ்டியானோ ரொனால்டோ

யூரொ கிண்ணத் தொடரில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் போர்த்துக்கல்லை சமன்செய்தது ஐஸ்லாந்து. போர்த்துக்கல் பலமான அணியென்பதால் அந்த அணிக்கு எதிராக சமன்செய்தமையே ஐஸ்லாந்தின் சிறந்த அடைவுமட்டமாகக் கருதப்பட்டு பாராட்டப்பட்டுவரும் நிலையில், ஐஸ்லாந்து அணியை சீண்டியுள்ளார் ரொனால்டோ. போர்த்துக்கல்லை சமன்செய்த பின்னர் ஐஸ்லாந்தின் வீரர்கள் வெளிப்படுத்தியிருந்த கொண்டாட்டங்களும் ஆரவாரங்களுமே ரொனால்டோவின் விமர்சனத்துக்குக் காரணமாகிவிட்டன.

இறுதியில் அவர்கள் கொண்டாடிய விதத்தைப் பார்க்கும்போது, யூரோ கிண்ணத்தை அவர்கள் வென்றுவிட்டார்கள் என நினைத்தேன், நம்ப முடியாதிருந்தது. ஆட்டத்தை வெல்வதற்கு நாம் கடுமையாக முயன்றோம். ஐஸ்லாந்து எதையும் முயலவில்லை. என்னைப் பொறுத்தவரை இது, சிறுமைத்தனத்தை வெளிப்படுத்துகிறது. அத்தோடு, இந்தத் தொடரில் அவர்கள் எதனையும் செய்யப் போவதில்லை என்பதையும் வெளிப்படுத்துகிறது. ஏனெனில் அவர்கள் சமநிலைக்காகவே இங்கு வந்துள்ளார்கள் என்று விமர்சித்திருந்தார். மட்டுமல்லாமல் குறித்த ஆட்டம் முடிந்த பின்னர் ஐஸ்லாந்து வீரர்களுடன் கைகுலுக்கவும் மறுத்திருந்தார்.



# செரபோவாவும் விடுவதாயில்லை

ஊக்க மருந்து விவகாரத்தில் சர்வதேச ரென்னிஸ் சம்மேளனத்தால் செரபோவா இரு வருடங்கள் தடை செய்யப்பட்டுள்ள நிலையில் குறித்த தடையை எதிர்த்து அவர் மேல் முறையீடு செய்துள்ளார். மெல்டோனியம் என்ற மருந்தைப் பயன்படுத்தியமையால் செரபோவாவை இரு வருடங்கள் தடை செய்வதாக சர்வதேச ரென்னிஸ் சம்மேளனம் கடந்த வாரம் அறி வித்திருந்தது. மெல்டோனியம் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதியே தடை செய்யப்பட்டது. ஒருவர் மெல்டோனியத்தை எடுத்துக்கொண்டால் அது அவரது உடலில் எவ்வளவு காலம் தாக்கம் செலுத்தும் என்று நிறுவப்படவில்லை. எனவே செரபோவா குறித்த மருந்தை டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னதாகவே எடுத்துக் கொண்டதாக தெரிவித்து வாதிட முடியும்.

இந்த நிலையில் குறித்த வாதத்தை முன்வைத்து தடைக்கு எதிராக செரபோவா மேல்முறையீடு செய்துள்ளார். தனக்கு இருந்த ஒருசில நோய்களுக்கான நிவாரணியாகவும் இதைப் பயன்படுத்தினேன். எனவும் அவர் விளக்கம் தெரிவித்துள்ளார். மொத்தத்தில் இந்த விடயத்தில் செரபோவாவும் விடுவதாயில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிக விலை கொடுத்து...

(25 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சரசுவும் மில் வேலைக்குப் போய் வந்து கொண்டிருந்தாள். காலப்போக்கில் வேலைகளைச் சொல்லிக்கொடுக்கும் சாட்டில் செல்லக்கண்டு சரசுவின் வதனக் கவர்ச்சிக்கு அடிமையாகிப் போனான்.

"நானினி... அங்கை வேலைக்குப் போகமாட்டன்... அவன் சரியில்லாத ஆள்..."

தகப்பனுக்கு முன்பாகக் கண்ணீர் சிந்தினாள் சரசு. தலையணை மந்திரத்தில் மயங்கிய வேலாயுதம் அதைப் பொருட்டாக எடுத்துக் கொண்டதாய்த் தெரியவில்லை.

"சரி... சரி... அங்கை போகாட்டாப் போ... கமக்காறன் மயிலர்... வீட்டில வேலை இருக்காம்.. அங்கை போடி...."

சித்தி தெய்வானை போட்டதுதான் சட்டம். மாதங்கள் மூன்று செவ்வனே கழிந்தது. சரசு தனியாக நெல்லுக் கொட்டிலில் நிற்பது, மயிலருக்கு வசதியாகப் போய்விட்டது. பலநாள் குறிவைத்த வேட்டைப் பொருள் கிடைத்துள்ள சூழல்!

"விடடா என்னை... விடாட்டிக் கடிப்பன்...'

"ஆ..ஹா.. ஐயோ..!"

திமிறியவள் ஓட்டம் பிடித்தாள். மேல்மூச்சு, கீழ் மூச்சு வாங்க வீடு வந்த சரசுவுக்கு என்ன நடந்திருக்கும், சூத்திரதாரி தெய்வானைக்கு சொல்லியா தெரியவேண்டும்?

வேலாயுதத்துக்கு, மகளை எவனாவதொருவன் கைகளில் பிடித்துக் கொடுத்துவிட்டால் தொல்லையொன்று நீங்கியதாக இருக்குமெனச் சிந்தனை பிறந்தது. நாட்டாமைத் தொழிலில் கல்யாணம் செய்து கொள்ளாத இளைஞர்களும் ஈடுபட்டு வந்தனர். இந்திரன், அவர்களின் சரசுக்குத் தோதாக இருப்பான். அவனைக் கதைச்சுப் பேசி முடிக்கலாம். அவனும் ஆருமில்லாத தனிப் பேர்வழி. வேலாயுதத்துக்கு வசதியாகவேபட்டது.

இருக்கிற காணியும் இரவல் காணி. அதுபோல கொட்டடியிலை எத்தனையோ காணிகள் தரவையாக் கிடக்கு. காணிக்காரனோடை கதைச்சுக் கேட்டுக் கொட்டில் ஒன்றைப் போட்டுக் குடுத்து பிரிச்சு விட்டால் தொல்லை இராதென எண்ணிய வேலாயுதம் காரியத்தில் இறங்கினான். தெய்வானையும் அதுக்கு மறுப்பில்லை.

இந்திரன், சரசு வாழ்க்கை குடியும், கும்மாளமுமாக நகர்ந்து கொண்டிருந்தது. ஆறுமாத இடைவெளியில் இந்திரன், நான்கு பேர்களையும் கூட்டிக்கொண்டு வீடு வந்து சேர்ந்தான்.

"சரசு இவங்க என்னோடை வேலை செய்யிறவங்க... இண்டைக்கு இறைச்சி.. முட்டை எல்லாம் சமைச்சுக் குடுத்து... எங்கடை கல்யாண நாளைக் கொண்டாடுவம்.."

இந்திரன் கூறிய வார்த்தைகள் சரசுவுக்கு இனித்தன. வேலாயுதமும், தெய்வானையும், வெறுமனே 'சோத்தைக் குடுத்துச் சேத்துவிட்ட' கல்யாணத்தில் எந்தவித சுவாரஸ்யமும் இருக்கவில்லை.

சாராயம் குடித்த, பூராயம் இரவு பன்னிரண்டுமணிவரை நீடித்தது. சரசுக்கும் வார்த்து வார்த்துக் குடுக்க வெறி உச்சியைத் தொட்டது. அங்கேயே எல்லாரும் விழுந்து படுத்தும் விட்டனர். மதுமயக்கத்தில் கணவன் சரசமாடுவதாய் சரசு உணர்ந்தாள்.

அதற்கொரு முடிவே இருக்கவில்லை. ஈனஸ்வரத்தில் சரசு அனுங்குவதும் தெரியாமல் உறக்கத்தில் கிடந்தான் இந்திரன். விடிந்த பொழுது அந்த நான்கு பேர்களும் இருக்கவில்லை.

"இதுதானா கல்யாணக் கொண்டாட்டம்... இதுக்குத்தானா அவங்களைக் கூட்டி வந்தனீங்க..." சிதைக்கப்பட்ட சிலையாகக் காட்சியளித்த சரசு கண்ணீர் விட்டு அழுதாள்.

"சரசு... நடந்தே நடந்திட்டுது... பேசாம விட்டிட்டு இரு..." இந்திரன் சொன்னான்.

"இல்லை... அவங்களைச் சும்மாவிடப் போறேல்லை... பொலிசுக்குப் போய்... அவங்களைப் புடிச்சடைக்கச் செய்யவேணும்.."

இந்திரன் எத்தனையோ தடவை தடுத்தும் சரசு பொலிசுக்குப் போனாள். இவளது முறைப்பாட்டைப் பதிவு செய்து கொண்ட காவல்துறை அவளிடம் பாலியல் லஞ்சம் கேட்பான் என்பதைக் கிஞ்சித்தும் பேதைப் பெண் எதிர்பார்க்கவில்லை.

"நீங்களுமா ஐயா... என்னை விடமாட்டேன்ங்கிறீங்க... எனக்கு நீதி எங்க எப்படிக் கிடைக்கும்..?"

சமூகத்தில் எல்லா மட்டங்களிலும், பெண்ணை லாகிரிப் பொருளாக மதிக்கப்படுவது சரசுவுக்கு விரக்தியை ஊட்டிவிட்டது.

காவல்துறை நிலையத்தால் வெளியேறியவள், வீடென்னும் அந்த நரகக் கொட்டிலுக்குத் திரும்ப விரும்பவில்லை. கால்போன போக்கில் அலைந்தவளை நகரமும், கடைத்தெருவும் அணைத்துக் கொண்டன. ஏறத்தாழ இருபது வருடங்கள் அரசியாகச் சிம்மாசனம் வைத்துக் கொண்டிருந்த அவளை முதுமை தூக்கி எறிந்தது. அவளது அறிமுகம் இன்றைக்கும் ஜீவனோபாயத்தை நடத்த நகரப் பகுதியில் துணையாக இருப்பதை நினைத்துக் கொண்டாள் சரசு.

அவளுக்கு இரண்டு ஆண்களும், ஒரு பெண்ணுமாக மூன்று பிள்ளைகள் பிறந்தன. "தான் போக வழியைக் காணோம். மூஞ்சூறு விளக்குமாத்தைக் காவின" மாதிரி அவளால் முடியவில்லை. ஆஸ்பத்திரியில் ஒப்படைத்து விடுவாள். அதனால் அவள் அநாதை இல்லை. வாரிசுகள் எங்கோ வாழ்ந்தும் வருகின்றன.

முனியப்பர் கோயில் மணியோசை அவளை நினைவுகளில் இருந்து மீளச் செய்தது. இந்தச் சமுதாயம் தனக்குத்தானே போட்டுக் கொண்டுள்ள கற்பு நெறி, பண்பாடு, மனித நேயம் என்னும் வரம்பு வட்டங்களை உடைத்துக் கொண்டே முன்னேறிச் செல்கிறது. பெரிய குடாநாட்டு இடப்பெயர்வு உரையில் யாழ்ப்பாணக் கடைத் தெருக்களில் சோடாமூடியென அழைக்கப்பட்ட சரசுவின் வாழ்க்கை எவ்விதம் முடிந்தது என்பது அறியப்படாத ஒன்று. எனினும் அவளது வாழ்க்கைப் பின்னணி எத்தனை பேர்களைத் திரும்பிப் பார்க்க வைக்கப் போகிறது.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 425

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | 5 | |
| 6 | | | ■ | 7 | | | ■ |
| 8 | | | 9 | | ■ | 10 | 11 |
| | ■ | 12 | | ■ | 13 | | |
| ■ | 14 | | ■ | 15 | | ■ | |
| 16 | | ■ | 17 | | ■ | 18 | |
| 19 | | 20 | | ■ | 21 | | |
| | ■ | 22 | | | | | |

அனுப்புபவர் பெயர்:........................................

பூரணமான தபால் விலாசம்: ........................................

........................................

கையொப்பம்:........................................

### இடமிருந்து வலம்

1. திருமணம்
4. கால்
6. துப்பாக்கிச் சூடு
7. காடும் காடு சாந்த இடமும்
8. ஒரு காதணி வகை
10. ரக
12. ஒரு வகை வேட்டி இந்த நிறமானது
13. ஒன்றைப் போன்றதென உதாரணம் காட்டப்படுவது
14. பிசாசு
15. நீர் நிலைகளை அண்டி வளரும் ஒரு தாவர வகை
16. ஒரு குறியீடு
17. குழு
18. மிகச் சிறந்த / மிகக் கூடிய
19. குடும்பகாரன்
21. அசைய
22. அதிசயம்

### மேலிருந்து கீழ்

1. புத்தி சாதுரியம்
2. வாடப் பண்ணு
3. ஆயுர்வேத வைத்தியத்தில் பயன்படுத்தப்படுவது
4. வெளுத்ததெல்லாம் இது வல்ல
5. சிரசில் எழுதப்பட்டது
7. ஒன்றுக்கு முன்னால் எனப் பொருள்படும்
9. பாடல்
11. மிடி
13. ஒரு தமிழ் மாதம்
14. ஒன்றுக்குப் பதில் மற்றொன்றை வழங்குவதாக ஒப்புக் கொள்ளல்
15. திண்மத்துக்கும் திரவத்துக்கும் இடைப்பட்ட நிலை
16. பத்து
17. சோறு சமைப்பது இதன் மூலம்
18. தமிழ்மொழிக்குத் தலையாய எழுத்து
20. திறப்பு
21. ஆறு

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக் கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 423இற்கான சரியான விடைகள் வருமாறு:-

### இடமிருந்து வலம்

(1) அமாவாசை (5) ஊர்தி (7) சமர்த்தன் (9)தின் (10) தாடி (11)அணை (12) மகான் (14) கதி (15) முகடு (16) எண்பது (18) கள் (19) குழு (20) திரி (21) நீதிபதி (23)புகார் (24)துண்டம்

### மேலிருந்து கீழ்

(1) அசதி (2) மாமன்மகள் (3) வார் (4) சைத்தான் (5) ஊன் (6) திண்ணை (8) தடி (11) அதிபதி (13) காடு (14) கண் (15) முகப்பு (16) எழுபது (17) துரிதம் (19) குதி (21)நீர் (22)திண்

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1.வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3.உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இல.425 பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (29.06.2016 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.425இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 03.07.2016 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 423 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
**பி.ரிசாளினி,**
ஆரணி பதிப்பகம்,
நுணாவில் மத்தி, சாவகச்சேரி.

**2 ஆம் பரிசு**
**ந.பொன்னம்பலம்,**
உப தபாலகம்,
மல்லாகம்

**3 ஆம் பரிசு**
**கோ.பத்மாஜினி,**
சரஸ்வதி வித்தியாலய வீதி, மயிலியோடை,
கரவெட்டி வடக்கு, கரவெட்டி.

**4 ஆம் பரிசு**
**ஈ.கஜானி,**
இல.109, பெயின்ரேர்ஸ் வீதி,
எழுத்தூர், மன்னார்.

**5 ஆம் பரிசு**
**லோஜி செந்திலிங்கம்,**
இல.189, ஸ்கந்தபுரம்,
கிளிநொச்சி.

### பாராட்டுப் பெறுவோர்

**க.அமலதாசன்,**
இல.969/4, வளன்புரம்,
கொழும்புத்துறை.

**செந்தில் விசாலன்,**
கற்சிலைமடு பிள்ளையார் கோவிலடி,
ஒட்டுசுட்டான்.

**சி.மஞ்சு,**
சிவகாமி அம்மன் கோவிலடி,
காரைநகர்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

சொற்சிலம்பம் போட்டி 423இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுரைகளும் வழிகாட்டல்களும்

சி.சிவன்சுதன்

மனிதன் ஒவ்வொருவனும் தனித்துவமானவன். அவனின் ஆற்றலும் ஆளுமையும் கூட தனித்துவமானவைதான். ஒவ்வொரு மனிதனுள்ளேயும் அவனுக்கே உரித்தான பல திறமைகள் புதைந்திருக்கின்றன. ஒருவன் போன்று இன்னொருவன் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. அவ்வாறு இருக்கவும் முடியாது.

எமது பழைய பதிவுகளை புரட்டிப் பார்ப்போமாக இருந்தால் பாரதியார் போன்று திருவள்ளுவர் இல்லை. அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி போன்று ஆறுமுகநாவலர் இல்லை. தியாகி பொன். சிவகுமாரன் போன்று தந்தை செல்வா இல்லை. நடிகர் விவேக் போன்று வடிவேலு இல்லை. இவர்கள் ஒவ்வொருவருமே ஆற்றலும் அர்ப்பணிப்பும் உள்ளவர்கள்தான், ஆனால் ஒருவர் போல் மற்றவர்கள் மாறுவதற்கு முயற்சி செய்யவில்லை. ஒவ்வொருவருமே தமது பாணியில் பயணித்து மக்களின் மனதில் இடம்பிடித்திருக்கிறார்கள்.

துரதிர்ஷ்ட வசமாக நாம் எமது பிள்ளைகளையும் மாணவர்களையும் வழிநடத்த அல்லது நல்வழிப்படுத்த முயலும் பொழுது இன்னொருவருடன் ஒப்பிட்டுப் பேசும் பழக்கத்தை வளர்த்து வைத்திருக்கின்றோம். இது ஒரு வேதனையான உண்மை. 'அவனைப்பார் 4 மணிக்கு எழும்பிப் படிக்கின்றான். ஆனால் நீ..., அவனுடைய எழுத்தைப் பார் உன்னுடைய எழுத்தையும் பார், அவன் எழும்பி எவ்வளவு உசாராய்க் கதைக்கின்றான். அவனைப் பார்த்துப் பழகு. அந்தக் காலத்திலே நான் என்னமாதிரி எல்லாம் செய்தனான், ஆனால் நீ'.

இவ்வாறாக ஒருவனைப் போல இன்னொருவனை புடம்போட்டு மாற்றுவதற்கு கடுமையாக முனைந்து நிற்கின்றோம். எதற்கு எடுத்தாலும் ஒப்பிட்டுக் கதைப்பதை அன்றாட நடவடிக்கையாகக் கொண்டிருக்கின்றோம்.

ஒருவனுக்கான அறிவுரைகளும் ஆலோசனைகளும், வழிகாட்டல்களும் அவன் சார்ந்த அவனது நிறை குறைகள் சார்ந்ததாக அவனது சுபாவம் சார்ந்ததாக இருக்கவேண்டுமே அன்றி ஒப்பிடும் பொறிமுறையாக இருக்க முடியாது. ஒப்பிட்டு அறிவுரை சொல்ல முயல்வது அவர்களை காயப்படுத்தி பல எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தி விடுவதுடன் குளிக்கப் போய் சேறு பூசிய கதை போல அல்லது பிள்ளையார் பிடிக்க குரங்காக மாறிய கதை போல் ஆகிவிடுவதுடன் அது அவர்களின் பல சுகாதாரப் பிரச்சினைகளையும் தோற்றுவிக்கும்.




> துரதிர்ஷ்டவசமாக நாம் எமது பிள்ளைகளையும் மாணவர்களையும் வழிநடத்த அல்லது நல்வழிப்படுத்த முயலும் பொழுது இன்னொருவருடன் ஒப்பிட்டுப் பேசும் பழக்கத்தை வளர்த்து வைத்திருக்கின்றோம். இது ஒரு வேதனையான உண்மை.

ஒப்பிட்டுப் பேசுவதால் ஏற்படும் தீய விளைவுகளை வரிசைப்படுத்திக் கொண்டே போகலாம். அவற்றில் முக்கியமானவை மனக்குழப்பம், விரக்தி, பொறாமை உணர்வு, தாழ்வு மனப்பான்மை, மனச்சோர்வு, கற்றல் செயற்பாடுகளில் ஆர்வக் குறைவு போன்றவையாகும். சகோதரர்களிடையே பொறாமை உணர்வு வளர்வதற்கும் இது காரணமாகி விடுகின்றது.

பிள்ளைகளை வழிநடத்தும் போது எமது முக்கியமான இலக்கு எதுவாக இருக்க வேண்டும் என்று சிந்திப்பது பயனுடையதாக அமையும். இந்த இலக்கு பரீட்சைகளில் சித்திபெறுவதா? உயர்கல்வி கற்பதா? போட்டிகளில் வெற்றி பெறுவதா? செல்வம் சேர்ப்பதா? அல்லது நல்ல மனம் கொண்ட மனிதாபிமானமுள்ள ஒரு மனிதனாக உருவாக்குவதா? என்பதை தீர்மானிக்க வேண்டும்.

ஒரு நல்ல மனிதனை உருவாக்குவதற்கு ஒப்பிட்டு பேசப்படும் பேச்சு உதவியாக அமையாது.

சுயமாக ஒருவன் சிந்தித்து வாழ்வில் உயர்ச்சி அடைவதற்கு அவனில் உள்ள திறமைகள் அடையாளப்படுத்தப்பட்டு ஊக்கப்படுத்தப்பட வேண்டும். அந்தத் திசையிலே அவன் முன்னேறுவதற்கு அவன் சார்ந்த அறிவுரைகளும் வழிகாட்டல்களும் உதவியாக இருக்கும். ஆனால் இது ஒரு பொழுதும் ஒப்பிட்டுப் பேசும் பேச்சாக அமைந்து விடக்கூடாது.




மருத்துவர் எம்.அரவிந்தன்

**கேள்வி: எனது 8 வயது மகனின் உயரமானது அவரது வகுப்பு மாணவர்களுடன் ஒப்பிடும் போது குறைவாக உள்ளது. எனினும் அவரது உடல் நிறையானது வயதுக்கு ஏற்ற அளவில் போதுமானதாக இருப்பதாக குடும்ப வைத்தியர் அண்மையில் கூறியிருந்தார். இதற்கு எவ்வாறான சிகிச்சை முறைகள் உள்ளன என விளக்கிக் கூறவும்?**

**பதில்:** உங்கள் மகனைப் போன்று பல சிறுவர்கள் உயரம் குறைந்த நிலை (Short stature) பாதிப்புக்கு ஆளாகி இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. நீண்டகாலமாக சத்தான உணவை உட்கொள்ளாத விடத்து சிறுவர்களின் உயரமும், உடல்நிறையும் குறிப்பிட்ட அளவில் அதிகரிக்காது செல்கின்றது. இதனால் அவர்கள் உயரம் மற்றும் உடல் நிறை குறைந்தவர்களாக இருப்பார்கள். (Chronic mal nutrition)

உயரம் மாத்திரம் குறைவாக இருப்பதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. சிறுநீரக நோய், இருதய வால்வில் ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் நீண்டகாலமாக உடலில் இருக்கின்ற நோய்கள் போன்றவற்றாலும் இந்தப்பிரச்சினை ஏற்பட நேரிடலாம். பலவகையான ஹோர்மோன் குறைபாடுகளும் இதற்குக் காரணமாக அமையலாம்.

அரிதாக வளர்ச்சி ஓமோனின் (Growth hormmone) அளவு உடலில் குறைவாகச்சுரக்கப்படும் போது சிறுவர்கள் சாதாரணமாக வளரமுடியாமல் போகின்றது. எனவே உங்கள் மகனைப் போன்ற உயர வளர்ச்சி குன்றியவர்களுக்கு வளர்ச்சி ஹோர்மோனின் அளவை பரிசோதிப்பது மிக அவசியமாகும். ஏனெனில் வளர்ச்சி ஹோர்மோனின் அளவு குறைவாக இருக்கும் போது அதனை வழங்குவதன் மூலம் உயரங்குறைந்த சிறுவர்களின் உயரத்தை சாதாரண அளவுக்கு படிப்படியாக அதிகரிக்க முடியும். உயர வளர்ச்சி குறைவாக இருப்பதை ஆரம்பத்திலேயே கண்டறிந்து சிகிச்சை வழங்கும்போது குறிப்பிட்ட உயர இலக்கை அடைவது சாத்தியமாகின்றது.

எனவே உங்கள் மகனை மிக விரைவாகப் பரிசோதிப்பது அவசியமாகும். உங்களதும் உங்கள் கணவரினதும் உயரத்தை மதிப்பிடுவதன் மூலம் மகனின் உயர வளர்ச்சி தொடர்பாக அறிந்து கொள்ள முடியும். அவருக்கு தேவையான இரத்த ஹோர்மோன் பரிசோதனைகளையும் எலும்பு வயதை அறிந்து கொள்ளும் (Boneage)Xray பரிசோதனையையும் மேற்கொள்வது அவசியமாகும்.

உங்கள் மகனுடைய உடற் சோதனை (Clinical examination) Xray மற்றும் இதர பரிசோதனைகளின் முடிவுக்கேற்ப தேவையான சிகிச்சைமுறையை துரிதமாக ஆரம்பித்துக் கொள்வதன் மூலம் உயரம் தொடர்பான பிரச்சினைக்கு தீர்வைக் கண்டு கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ழ். போதனா வைத்தியசாலை, நீரிழிவு, அகஞ்சுரக்கும் தொகுதி சிறப்பு வைத்திய நிபுணர்.

# இந்துமத சகோதரர்களாலும் அதிகம் தரிசிக்கப்படும் மானிப்பாய் புனித அந்தோனியார் யாத்திரைத்தலம்

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
ஊடக வருகை விரிவுரையாளர் – யாழ் பல்கலைக்கழகம்

இலங்கையின் வடபகுதியில் அதிக அந்தோனியார் பத்தர்களை ஈர்க்கும் இரண்டாவது பதியாக விளங்கும் மானிப்பாய் புனித அந்தோனியார் யாத்திரைத்தலத் திருவிழா இன்று ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுவதையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

மானிப்பாய் புனித அந்தோனியார் யாத்திரைத்தலத் திருவிழா ஜூன் மாதம் 13 ஆம் திகதிக்குப் பின்னர் வரும் ஞாயிற்றுக்கிழமை வழமையாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. ஜூன் மாதம் 13 ஆம் திகதி பாசையூர் புனித அந்தோனியார் யாத்திரைத்தலத் திருவிழா என்பதை அந்தோனியார் பக்தர்கள் அனைவரும் அறிவர். யாழ். ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை யாழ். ஆயர் பொறுப்பை ஏற்ற பின்னர் பங்கேற்கின்ற முதல் மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலய திருவிழா இதுவாகும் என்பது இங்கு முக்கியத்துவத்துடன் நோக்கப்பட வேண்டியதாகும். மேலும் தற்போதைய பரிபாலகர் எஸ்.கியு.ஜெயரஞ்சன் அடிகளாரின் முதற் திருவிழாவும் இதுவாகும். வேஸ்பர் ஆராதனையை யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் யோசப்தாஸ் ஜெபரட்ணம் அடிகளார் தலைமை தாங்கி நடத்தினார்.

இந்தக்கட்டுரை மானிப்பாய் புனித அந்தோனியார் யாத்திரைத்தலப் பரிபாலகர் எஸ்.கியு.ஜெயறஞ்சன் அடிகளார் மற்றும் பங்கு மகன் பர்ணாந்து அன்ரனி சாள்ஸ் ஆகியோர் வழங்கிய தகவலில் இருந்து தயாரிக்கப்பட்டது.

**1972ஆம் ஆண்டு முதல் மானிப்பாய் புனித அந்தோனியார் யாத்திரைத்தலம்**

மா, பலா, வாழை என முக்கனிகளும் ஒன்றோடு ஒன்று இணைந்து செழித்து வளரும் இயற்கை எழில் கொண்ட மானிப்பாய் மண்ணுக்கு மகுடம் சேர்ப்பது போல் மானிப்பாய் புனித அந்தோனியார் யாத்திரைத் தலம் விளங்குகிறது. மானிப்பாய் புனித அந்தோனியார் யாத்திரைத்தலம் அதிக இந்துமத சகோதரர்களால் தரிசிக்கப்படுகின்ற ஒரு யாத்திரைத்தலம் என்பது இங்கு சிறப்பு முக்கியத்துவத்துடன் நோக்கப்பட வேண்டியதாகும். மானிப்பாய் புனித அந்தோனியார் யாத்திரைத்தலம் 1972ஆம் ஆண்டு யாழ். மறைமாவட்டத் துணை ஆயர் எல். ஆர்.அன்ரனி ஆண்டகையால் திறந்து வைக்கப்பட்டது. மானிப்பாய், நாவாந்துறை, ஆனைக்கோட்டை, பண்டத்தரிப்பு, மாதகல், சில்லாலை, இளவாலை ஆகிய சுற்று வட்டப் பங்குகளில் இருந்தே பக்தர்கள் இங்கு முதலில் வந்து குவியத் தொடங்கினார்கள். இன்று இப்பதியானது மத பேதமின்றி அனைவராலும் தரிசிக்கப்படுகின்ற ஓர் அந்தோனியார் பதியாகும்.

> இன மத பேதமின்றி அந்தோனியார் பதிகளில் கூடுகின்ற அனைத்துப் பக்தர்களுக்கும் அந்தோனியார் அன்பின் தந்தையாக என்றும் விளங்கி தமிழ் மக்கள் வாழ்வில் மகிழ்வும் சுதந்திரமும் சுபீட்சமும் நிறைய தம் அருள் வளங்களை அள்ளிப் பொழிவாராக.

**மானிப்பாய் புனித அந்தோனியார் யாத்திரைத் தலத்தின் சிற்பி எஸ்.ஜே. இம்மானுவேல் அடிகளார்**

1972ஆம் ஆண்டு மானிப்பாய் புனித அந்தோனியார் யாத்திரைத்தலத்தை கட்டி எழுப்பிய பெருமை எஸ்.ஜே.இம்மானுவேல் அடிகளாரையே சாரும். எஸ்.ஜே.இம்மானுவேல் அடிகளார் மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலய சரித்திரப் பதிவேட்டில் கூறுகின்ற விடயம் முக்கியமானது. எஸ்.ஜே. பிரான்சிஸ் அ.ம.தி அடிகளாரிடமிருந்து மானிப்பாய் பங்கை பொறுப்பெடுப்பதற்கு முன்னதாக யாழ். மறை மாவட்ட ஆயராக இருந்த மேதகு கலாநிதி எமிலி யானுஸ்பிள்ளை ஆண்டகையிடம் 10 அடி 20 அடி கொண்ட சிறு கொட்டிலாக இருந்த மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தை புதிதாகக் கட்டியெழுப்புதவற்கு உத்தரவு பெற்றேன். வெறும் 5 ஆயிரம் ரூபாவை மட்டும் கையில் வைத்துக்கொண்டு ஆலயத்தைக் கட்டும் பணியை ஆரம்பித்து மொத்தமாக 85 ஆயிரம் ரூபாவைச் சேர்த்து 75 ஆயிரம் ரூபாவை ஆலயப் பணிகளுக்குச் செலவழித்தேன். அப்போது மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயம் 12 குடும்பங்களுடன் ஒரு பங்கு ஆலயமாகவே திகழ்ந்தது. மானிப்பாய் பங்கில் உள்ள பத்து ஆலயங்களுக்குமான யாத்திரைத்தலமாக மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தை கட்டி எழுப்பி யாழ். மறை மாவட்டத் துணை ஆயர் எல்.ஆர்.அன்ரனி ஆண்டகை அவர்கள் 1972 ஆம் ஆண்டு ஜூலை மாதம் திறந்து வைத்த பின்னர் பங்கை விட்டு கண்டி தேசிய குருத்துவக் கல்லூரிக்கு, தான் விரிவுரையாளராகச் சென்றதாக அவர் தெரிவிக்கிறார். இதுவே மானிப்பாய் புனித அந்தோனியார் யாத்திரைத்தலம் பற்றிக் கிடைக்கின்ற ஆரம்ப வரலாறாகும்.



**ஏ.எவ்.பெனட் அடிகளார் காலத்தில் மானிப்பாய் புனித அந்தோனியார் யாத்திரைத்தலம்**

1999 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரை மானிப்பாய் புனித அந்தோனியார் யாத்திரைத்தல பரிபாலகராக இருந்த ஏ.எவ்.பெனட் அடிகளாரின் காலத்தில் ஆலயத்துக்கு முன்புறமாக அமைந்துள்ள நான்கு பரப்புக் காணி கொள்வனவு செய்யப்பட்டமை முக்கியமான விடயமாகும். சுவாமி ஞானப்பிரகாசர் ஆற்றிய பணிகளை நன்றியோடு நினைவுகூரும் விதமாக இயுஜின் பிரான்சீஸ் அடிகளாரால் திட்டமிடப்பட்ட சுவாமி ஞானப்பிரகாசரின் சொரூபம் ஏ.எவ்.பெனட் அடிகளாரால் நிறுவி வைக்கப்பட்டது. மானிப்பாய் புனித அந்தோனியார் யாத்திரைத்தலத்துக்கு மேலும் மெருகூட்டும் விதமாக அழகிய போட்டிக்கோவும் அதனுடன் இணைந்த மணிக் கூட்டுக் கோபுரமும் இவரின் காலத்தில் கட்டி எழுப்பப்பட்டது. நற்செய்தி அறிவிப்புப் பணியை மேலும் முன்னெடுக்க நற்செய்தி அறிவிப்பு மண்டபம் கட்டப்பட்டது.

**எக்ஸ்.டபிள்யு.ஜேம்ஸ் அடிகளார் காலத்தில் மானிப்பாய் புனித அந்தோனியார் யாத்திரைத்தலம்**

2011 ஆம் ஆண்டு மானிப்பாய் புனித அந்தோனியார் யாத் திரைத்தலத்தை பொறுப்பேற்ற எக்ஸ்.டபிள்யு.ஜேம்ஸ் அடிகளார் மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்துக்கு மேலும் புது மெருகூட்டியுள்ளார். பிரமாண்டமான வரவேற்பு அந்தோனியார் சொரூபம் அந்தோனியார் பக்தர்கள் அனைவரையும் கவரும் விதமாக அமைக்கப்பட்டமை ஒரு சிறப்பு அம்சமாகும். ஆலயத்தின் பீடம் புதிதாக வடிவமைக்கப்பட்டு சில்வராலான கிறாதி என்பவற்றுடன் மெருகூட்டப்பட்டமை



இங்கு குறிப்பிடப்பட வேண்டியதாகும். மேலும் செபமாலைக் கடைக்கு புதுமெருகூட்டியமை, மெழுகுவர்த்தி ஏற்றுவதற்குப் பிரத்தியேக இடம் அமைத்தமை, ஆலயத்தின் உள்ளே பக்தர்கள் வசதியாக அமர்வதற்கு வாங்குகள் செய்தமை, ஆலயத்துக்கு முன் புறமாக நிலத்தில் அமர வசதியாக கற்களாலான தரை அமைத்தமை, வரவேற்புச் சிலுவையில் தொங்கும் ஆண்டவருக்கு குடை என்பன எல்லாம் இவான் காலத்தில் நடந்தேறியவையாகும்.

தற்போது எஸ்.கியு.ஜெயரஞ்சன் அடிகளார் மானிப்பாய் புனித அந்தோனியார் யாத்திரைத் தலத்தின் பொறுப்பை ஏற்றுள்ளார். இவரின் திட்டமிடலிலும் தூர நோக்கிலும் மானிப்பாய் புனித அந்தோனியார் யாத்திரைத்தலம் இன்னும் புது மெருகு் பெற வாழ்த்துகிறோம்

வெறும் 36 ஆண்டுகள் மட்டுமே இவ்வுலகில் வாழ்ந்த புனித அந்தோனியார் தம் அர்ப்பணிப்பு மிகக் பணியாலும் ஆற்றிய அதிக புதுமைகளாலும் பதுவைப் பதியர், நாவழியாப் புனிதர், கோடி அற்புதர், காணாதபொருள்களைக் காட்டிக்கொடுப்பவர் எனப் பல பெயர்களில் அழைக்கப்படுகிறார். ஐரோப்பாவில் போர்த்துக்கல் நாட்டின் தலைநகரான லிஸ்பன் மாநகரில் 1195 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி வேத அன்னையினுடைய விண்ணேற்பு தினத்தன்று பிறந்த இவரின் பெயர் பர்ணாந்து என்பதாகும். 1219 ஆம் ஆண்டு தனது 24 ஆவது வயதில் புனித அகுஸ்தீன் சபையில் சேர்ந்து குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட பின்னர் 1221 ஆம் ஆண்டு புனித அகுஸ்தீன் சபையை விட்டு விலகிப் புனித பிரான்சீஸ்கன் சபையில் சேர்ந்த போது பர்ணாந்து என்ற பெயரை மாற்றி மடத்தின் பெயரால் அந்தோனி என்ற பெயரை எடுத்துக் கொண்டார். 1231 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 13 ஆம் திகதி தனது 36 ஆவது வயதிலேயே இறந்து போன போது பதுவையில் அடக்கம் செய்யப்பட்டார். இவரின் கல்லறை 336 ஆண்டுகளின் பின்னர் தோண்டப்பட்ட போது அவரது நாக்கு அழியாமல் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டு இன்றும் பதுவை நகரக் கோவிலில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. எனவே தான் இவர் நாவழியாப் புனிதர் என அழைக்கப்படுகிறார். புனித அந்தோனியார் இறந்து ஓராண்டு நிறைவடைவதற்கு முன்னரே கத்தோலிக்க திருச்சபையால் புனிதராகப் பிரகடனப்படுத்தப்பட்டார் என்பது இங்கு குறிப்பிடப்படவேண்டிய தகவலாகும். 36 ஆண்டுகள் மட்டுமே இவ்வுலகில் வாழ்ந்து இறந்த ஒருவர், இன்றும் மக்கள் மனதில் அசைக்கப்பட முடியாத ஒரு புனிதராக , ஒரு கோடி அற்புதராக, கத்தோலிக்க மக்கள் மனதுகளில் மட்டுமல்ல, இந்து சமய மக்கள் மத்தியிலும் வாழ்ந்து வருவது ஒரு பெரும் புதுமையாகும்.

**புனித அந்தோனியார் கத்தோலிக்க திருச்சபையின் மறை வல்லுநர்**

1946 ஆம் ஆண்டு புனித அந்தோனியார் கத்தோலிக்க திருச்சபையின் மறை வல்லுநராகத் திருத்தந்தை 12ஆம் பத்திநாதர் பாப்பரசரால் பிரகடனப்படுத்தப்பட்டார் என்பது இவரின் மறைப்பணிக்கு மேலும் மெருகூட்டும் ஒரு தகவலாகும். லிஸ்பன் நகரில் இவர் பிறந்திருந்தாலும் பதுவைப் புனிதர், புனித அந்தோனியார் என்றே அழைக்கப்படுகிறார் என்பது இங்கு நோக்கப்பட வேண்டிய விடயமாகும். புனித அந்தோனியார் லிஸ்பன் நகரில் பிறந்திருந்தாலும் பதுவை நகரே அவரை உரிமை கொண்டாடுகிறது. பதுவைப் பதியர் புனித அந்தோனியார் என்று இவர் அழைக்கப்படுவதற்கு பதுவைப் பதியில் புனித அந்தோனியார் தங்கியிருந்த 3 ஆண்டுகளில் அங்கு நிறைவேற்றிய அதிக அளவிலான புதுமைகளும் , இறுதியில் புனித அந்தோனியார் மரித்து அங்கு அடக்கம் செய்யப்பட்டதுமே காரணமாகும். புனித அந்தோனியாருக்கு கடவுள் அளித்த விசேட கொடையால், தமது வாழ் நாள் காலத்திலும் இறந்த பின்னரும் செய்த புதுமைகளாலும், அருஞ்செயல்களாலும், கோடி அற்புதர் புனித அந்தோனியார் என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகிறார். புனித அந்தோனியார் குழந்தை இயேசுவைக் காட்சியில் கண்டு கையில் ஏந்தியதாக கூறப்படுகிறது. இதனால்தான் புனித அந்தோனியார் ஒரு கையில் குழந்தை இயேசுவையும் மறு கையில் வேதாகம நூலையும் வைத்திருப்பதாக படத்தில் காட்சிப்படுத்தப்படுகிறது. இன மத பேதமின்றி அந்தோனியார் பதிகளில் கூடுகின்ற அனைத்துப் பக்தர்களுக்கும் அந்தோனியார் அன்பின் தந்தையாக என்றும் விளங்கி தமிழ் மக்கள் வாழ்வில் மகிழ்வும் சுதந்திரமும் சுபீட்சமும் நிறைய தம் அருள் வளங்களை அள்ளிப் பொழிவாராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வீரமாகாளி இன்று தேரேறி வருகிறாள்

மதுரகவி
காரை எம்.பி.அருளானந்தன்

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை அருள்மிகு வீரமாகாளி அம்மன் ஆலயம் சரித்திரப் பிரசித்தி பெற்ற திருத்தலமாகும். நாற்றிசையும் புகழோங்கத் தமிழையும் சைவத்தையும் ஒருங்கே வளர்த்து ஆட்சி செய்துவந்த சக்கரவர்த்திகளால் ஸ்தாபிக்கப்பட்ட இந்த ஆலயம் நல்லூர் இராசதானியின் எல்லைக்கு அண்மையில் இருந்ததால் நல்லூருக்குள் நுழைய முயன்ற அன்னியருடன் நடைபெற்ற போர்கள் பல இந்தப் பகுதியில் நிகழ்ந்ததாகத் தெரிகிறது. இது பற்றி யாழ்ப்பாண வைபவமாலை யில் வரும் கூற்றிலிருந்து அறிய முடி கின்றது.

யாழ்ப்பாண மன்னர்களின் போர்த் தெய்வமாக வீரமாகாளி அம்மன் விளங்கியதால் அந்தக்காலத்திலிருந்தே இந்த ஆலயம் சிறப்புப் பெற்று விளங்கி வருகின்றது. மன்னர்கள் வீரத்தை வேண்டி நவராத்திரி விழாவின் போது தங்கள் படைக்கலன்களை கொலுவில் வைத்து வழிபட்டு அம்பாளின் அருட்கடாட்சம் பெற்று வெற்றிகளைக் குவித்து வந்தார்கள்.

இலங்கையிலே முதல் முதலில் மகிடாசுர சங்காரம் நடைபெற்ற அம்மன் ஆலயம் என்ற சிறப்பும் இவ்வாலயத்துக்கு உண்டு. வடக்கு வாயில் நோக்கி மைந்துள்ள வீரமாகாளியம்மன் ஆலயம் யாழ்.நகரிலிருந்து பருத்தித்துறை வீதியை மையமாகக் கொண்டு அமைந்துள்ளது.

கோயிலின் உள்ளே புகுந்ததும் கண்ணைக் கவர்வது அங்குள்ள கொடித்தம்பம் ஆகும். ஆலய உட்பிரகாரத்தில் கிழக்கு வீதியில் யாகசாலையும் வாகனசாலையும் தெற்குப் பிரகாரத்தில் வடக்கு நோக்கி எழுந்தருளியுள்ள விநாயகர், நாகதம்பிரான், மகாவல்லி கஜாவல்லி சமேத சுப்பிரமணியரும், மேற்குப் பிரகாரத்தில் கிழக்கு நோக்கியவாறு சனிஸ்வரர் ஆலயமும் பிரதான வடக்கு நோக்கிய வாசலில் சப்த தளங்களைக் கொண்ட வானளாவ உயர்ந்த இராஜ கோபுரம், மணி மண்டபம், கம்பீரமாகக் காட்சியளிக்கும் தேர்முட்டி, புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அழகுறு தீர்த்தத்தடாகம், வைரவப் பெருமான் ஆலயம் அன்னை பூரணி மடாலயம் போன்ற அமைப்புக்களைக் காணலாம்.

ஆதி மூலம் எனும் கருவறையில் கர்ப்பக்கிரகத்தினுள் எழுந்தருளியுள்ள சிவாவிக்கிரகம் கருணாம்பிகை வடிவமாயுள்ளது. மூர்த்தி கரமான வடிவத்தில் மகிடாசுரமர்த்தினி எனவும் கூறப்படுகிறாள். இந்த ஆலயத்தில் காணப்படும் தேர் வரலாற்றுச் சிறப்பைக் கொண்டு விளங்குகின்றது. 1941 ஆம் ஆண்டு இந்தத் தேர் அமைக்கப்பட்டது.

இலங்கையில் யாழ்ப்பாணத் தமிழ் ஆச்சாரியார்களால் செய்யப்பட்ட முதலாவது தேர் இதுவாகும். விநாயகர் ஆறுமுகம் என்ற சிற்பாச்சாரியாரே இந்தத் தேரை அமைத்தார். இந்தத் தேர் வெள்ளோட்டம் விடப்பட்ட வேளை தேர் அசைய முடியாமல் நின்ற பொழுது வெள்ளை நிற ஆடையுடன் அங்கு வந்த வயதான மூதாட்டி அந்தச் சிற்பாச்சாரியாரிடம் ஐந்து ரூபா காசு கொடுத்து விட்டு மறைந்த பின் அந்தத்தேர் அசைந்தது என்று கூறப்படுகிறது.

இந்த ஆலயத்தில் அழகிய திருமஞ்சம், புஸ்பரதம், சப்பறம் கண்ணைக் கவரும் பல வாகனங்கள் எல்லாம் அம்பிகையின் ஆலயத்துக்கு சிறப்புக்களைப் பெருக்கி நிற்கின்றன.

மகோற்சவ காலங்களில் ஒவ்வொரு நாள் உற்சவமும் விசேடமானது. இவ்வாறாக வரலாற்றுச் சிறப்புக்களைக் கொண்டு விளங்கும் வண்ணை வீரமாகாளியம்பாளின் தேர்த்திருவிழா இன்று (2016.06.19) ஞாயிற்றுக்கிழமை மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது. அழகுக் கொருவரும் ஒவ்வாத வல்லி யாகபகை யறுத்து வாழ்வதூர் வீரவாளேந்தி தேரோடு வருகின்ற திருக்காட்சியைக் காண யாழ்ப்பாணக் குடாநாடே வண்ணை வீரமாகாளி அம்பாளின் ஆலயத்தில் சங்கமமாகும் திருக்காட்சி யைப் பார்க்கலாம். வீரமாகாளியை சரண் புகுந்து நாமெல்லாம் வீரசக்தி பெறுவோம் வாரீர்.

# ஒரு கிராமம் ஒரேயொரு மனிதன்...

(22 ஆம் பக்கத் தொடர்ச்சி)

“கிராமத்தின் பெயர் விட்டுவிடக்கூடாதே என்பதற்காகத் தொடர்ந்து நடத்திக் கொண்டு வருகின்றோம்”என்கிறார் சங்கத்தின் தலைவி துசாயினி கதிர்காமநாதன்.

“இங்கு இருக்கிற கோயிலை வந்து வந்து பராமரிக்கினம். கிராமத்திலயே வந்திருந்து அதுகளைச்செய்யவேண்டியதுதானே! அம்மாளாச்சி (பெண் தெய்வம்)தான் என்னை இங்கு இருக்க வைச்சிருக்கிறா, ஏதோ ஒரு தேவைக் காகத்தான். நான் கிராமத்தை விட்டிட்டு ஒருநாளும் போகமாட்டன்.” இராசநாயகம் ஐயாவிடம் கட்டுறுதியான



வீரியம் தெரிகிறது. கிராமத்தின் மீதான அவரது பாசம் அளவுக்கதிகமானது. கிராமத்தின் ஒவ்வொரு அடியையும் அக்குவேறு ஆணிவேறாக ஞாபகம் வைத்திருக்கிறார். “இங்கதான் பாடசாலை. இதையாவது பாதுகாத்திருக்கலாம். ஆறுமுகநாவலரின் உண்மையான படம் இங்கதான் இருந்தது. அதுவும் அழிஞ்சு போச்சுது. இது சிவன் கோயிலடி. இந்தப் புளியமரத்துக்கு முன்னாலதான் ஒரு கொலை விழுந்தது. 32 குத்து. நான்தான் அந்த ஆளைத் தூக்கி வைத்தியசாலைக்கு ஏற்றி அனுப்பி வைச்சனான். இது பொது மண்டபம். இப்ப ஆமிக்காரர் இருக்கினம். ஆனால் ஆக்கள் எல்லாம் போயிட்டினம். இது ..... உடையாற்ற வீடு, இது ........ உடையாற்ற வீடு, நல்ல பெரிய வீடு.”

அவரது ஞாபக அடுக்குகள் அவரது உடலைப் போலத் தளர்ந்துவிடவில்லை. வீரியமாகவே இருக்கின்றன.

“ஒருநாள் எல்லாரும் திரும்பி வருவார்கள்.” இராசநாயகத்தின் பார்வை பல பத்து வருடங்களாகப் புழுதியில் புரண்டிருக்கும் வீதியை வெறிக்கிறது.

அரசு வீட்டுத் திட்டம் தந்தால் போயிருக்கலாம். போக்குவரத்து, குடி தண்ணீர், பாடசாலைவசதிகளும் செய்யப்படவேண்டும் என்கிறார் கதிர்காமநாதன் துசாயினி.

“கிராமத்திற்கு மக்கள் மீளச் சென்று குடியமர்ந்தால் அரச உதவிகளை வழங்கலாம். ஆனால் வீட்டுத் திட்டம் கொடுக்க முடியாது. அது ஏற்கனவே வேரவிலில் அவர்களுக்கும் சேர்த்துக் கொடுக்கப்பட்டுவிட்டது. மீண்டும் ஒரு தடவை அவர்களுக்கு வீடுகள் கொடுக்க முடியாது. அவர்களின் பிரச்சினைகள் பற்றி எடுத்துச் சொல்லுமாறு அவகாசம் கொடுத்தோம். ஆனால் யாரும் வரவில்லை” என்கிறார் பிரதேச செயலரான சி.ச.கிருஷ்ணேந்திரன்.



“பிரதேச செயலரின் அறிவித்தல் எதுவும் எங்களுக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் போய்ப் பிரச் சினைகளைச் சொல்லி யிருப்போம்” என்கிறார்கள் வேரவிலில் உள்ள பொன்னாவெளி மக்கள். அவர்களுக்கே அது தெரியவில்லை என்றால் ஏனைய கிராமங்களில் இருந்தவர்களுக்கு நிச்சயம் தெரிந்திருக்க வாய்ப்பேயில்லை.

ஏற்கனவே அடிப்படை வசதிகள் ஏதுமற்றிருந்த அந்தக் கிராமத்தைக் கவனிப்பார் யாரும் இருக்கவில்லை. மொத்த வன்னி நிலப் பரப்புமே அவலத்தை எதிர்கொண்டிருந்த நிலையில் அதிகாரிகளுக்கு இந்தச் சிறிய கிராமத்தின் மீது அக்கறை காட்ட நேரமும் இருக்கவில்லை.

“குடிதண்ணீர் பிரச்சினை முன்னரும் இருந்தது. முன்னர் விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் பௌசர் மூலமாகக் குடிதண்ணீர் வழங்கி வந்தனர். மீளக் குடியமர்ந்தபோது அதற்கான ஏற்பாடுகள் ஏதும் இருக்கவில்லை. பஸ் சேவைகள் ஏதும் இல்லை. அதனால் போக்குவரத்தும் பெரிய பிரச்சினையாக இருந்தது. பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்ல முடியாதிருந்தது. கிராமத்தில் உயர் தரம் படிக்கவும் வசதியில்லை. யானைகளின் தொல்லையும் அதிகரித்துவிட்டது” என்று துசாயினியின் கணவர் கதிர்காமநாதன் காரணங்களை அடுக்கிக் கொண்டே செல்கிறார். பேர் பெற்ற தமது கிராமம் இப்படிச் சில மாதங்களிலேயே காணமற் போனமை தொடர்பில் அவருக்கும் நிறைய மனவருத்தங்கள் உண்டு.

வீடுகள் தந்தால் ஊரில் மீளக்குடியமரலாம் என்று அந்த மக்கள் இப்போது சொன்னாலும் அது மட்டுமே அவர்களின் பிரச்சினை இல்லை என்பது தெளிவாகப் புரிகிறது. கிராமத்தில் பல கல்வீடுகளின் எச்சங்கள் இப்போதும் கிடக்கின்றன. அவற்றின் முன்னைய செழுமையைப் பறைசாற்றும் வகையில் அவை இன்னும் நிமிர்ந்தேதான் நிற்கின்றன. விதம் விதமான வடிவமைப்புகளுடன் அந்தக் காலத்திலேயே வீடுகளை அமைத்து வாழ்ந்த மக்கள் அங்கு மீளக்குடியமர மறுப்பதற்கு அதையும் தாண்டிய வேறு பயம் அவர்களுக்கு இருக்கிறது.

“எல்லாரும் திரும்பி வந்து கிராமம் பழையபடிக்கு வந்ததைப் பார்த்துட்டுத்தான் சாவேணும்.” நம்பிக்கையோடு மரப் பரணில் அமர்ந்திருந்து பாதையையை நோக்கிப் பார்த்தபடியே அமர்ந்திருக்கிறார் இராசநாயகம் ஐயா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கைதடி மேற்கு பராசக்தி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் சர்வதேச மகளிர் தின விழா அண்மையில் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. சங்கத் தலைவி திருமதி சு.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனும், சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரனும் கலந்து கொண்டனர்.நிகழ்வில் சங்கத்தின் நீண்ட கால அங்கத்தவர்கள் கௌரவிப்பும், மாதர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ஐ-9)



யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் 'ஞானக்கதிர்' மாதாந்த சஞ்சிகையின் சித்திரை மாத இதழ் மருதடி விநாயகர் ஆலயத்தில் இடம்பெற்ற தேர்த்திருவிழாவின் போது வெளியிடப்பட்டது. சஞ்சிகையின் ஆசிரியரிடமிருந்து சிறப்புப் பிரதியை ஆலய திருப்பணிச் சபைச் செயலாளர் இராமநாதன் சிவசுப்பிரமணியம் பெற்றுக் கொள்கிறார். (ஐ-250)





இலங்கையில் இயங்கும் 28 இளைஞர் கிறிஸ்தவ சங்கங்களில் கடந்த வருடம் சிறந்த செயற்பாடுகளை மேற்கொண்டமைக்காக யாழ். வை.எம்.சீ.ஏ. நிறுவனம் தெரிவு செய்யப்பட்டு வெற்றிக் கிண்ணம் வழங்கப்பட்டது. தேசியத் தலைவர் நிர்மால் டி பொன்சேகா வெற்றிக் கிண்ணத்தை யாழ். கிளையின் தலைவர் இ.வினோத், பொதுச் செயலாளர் சி.ஜெயராஜசிங்கம், பொருளாளர் வணபிதா வி.டானியேல் ஜெயரூபன் ஆகியோரிடம் கையளித்தார். (ஐ-9)







மாலபே தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப பல்கலைக் கழக மாணவர்களின் தமிழ் மாணவர் அமைப்பான "கலாநேத்திரா" அமைப்பினர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகளைச் சேர்ந்த உறவுகளுக்குச் சுமார் ஒரு இலட்சம் பெறுமதியான பொருள் உதவிகளை வழங்கினர். (ஐ)





உலக சுற்றாடல் வாரத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபை ஊழியர்களால் கோண்டாவில், இருபாலை வீதிகளிலுள்ள பாதீனியக் களைகள் அழிக்கப்பட்டன.(ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணியம்மன் தேர்த்திருவிழா சிறப்பிதழ் - 2016

## 'பழைமையின் பெருமையையும், புதுமையின் பொலிவையும் கண்ட நயினை நாகபூசணித் தாய்"

ஆலயத்தலவிருட்சம் வன்னிமரம்
நாகசாந்தி, நாகப்பிரதிட்சை
நேர்த்திக்கடனுக்காக முடியிறக்கல்
அன்னம் ஊட்டுதல்
விற்றுவாங்குதல்
பௌர்ணமி தினங்களில் சுமங்கலி பூசைவழிபாடு (ஸ்ரீசக்கரபூசை)

நித்திய அன்னதானம் வழங்கல் போன்றன இந்த ஆலயத்தின் சிறப்பு நிகழ்வாகக் காணப்படுகின்றது. அலைகடல் நடுவே வீற்றிருக்கும் அன்னை நாகபூசணி அம்பாள் ஆலயம் அறுபத்திநான்கு சக்திபீடங்களில் புவனேஸ்வரி பீடம் எனப்போற்றி வழிபடும் ஆலயமாகும். நாட்டின் பலபாகங்களிலிருந்தும், பக்தர்களின் யாத்திரைத் தலமாகவும், சிங்கள, பௌத்த மக்களும் வந்து வழிபடும் பத்தினித் தெய்வமாகவும் போற்றி வழிபடுவதையும் காணக் கூடியதாக உள்ளது. இந்த ஆலயம் அண்மையில் இந்தியச் சிற்பக்கலைஞர்களால் திருத்தி வடிவமைக்கப்பட்டு புதுப் பொலிவுடன் காணப்படுகிறது.



நயினாதீவுக்கு சமீபமாக அனலை தீவு என்னும் ஓர் அழகிய தீவுஉண்டு. அதன்தெற்குப் பகுதியில் புளியந்தீவு என்னும் சிறிய தீவு உண்டு. அங்கு பண்டையகால வரலாற்றுடன் கூடிய நாகதம்பிரான் ஆலயம் உள்ளது. அந்த ஆலயப் பகுதியில் இருந்து நாகபாம்பு பூக்கொண்டு வந்து நயினாதீவு நாகபூசணி அம்மனைப் பூசித்ததாகவும் வரலாறுகள் கூறுகின்றன. நாகம் வந்து பூசித்தமையால் நாகபூசணி எனப்பெயர் வருவதற்கு காரணமாயிற்று. இதன் அடையாளச் சின்ன மாக ஆலய வடக்குக்கடல் பகுதியில் இருபெரிய கற்கள் காணப்படுகிறது. ஒருகல் பாம்பு சுற்றியகல் எனவும் மற்றையகல் கருடன்கல் எனவும் குறிப்பிடப்படுகிறது.

நாகபாம்பு பூக்கொண்டு அம்மனை வ்ழிபடச் சென்றபோது கருடன் பாம்பை வழிமறித்துக் கல்லில் அமர்ந்து கொண்டதாகவும் பாம்பு மற்றைய கல்லின்மீது சுற்றிக்கொண்டு இருந்ததாகவும் கூறப்படுகிறது. அந்த வழியால் கடல் மார்க்கமாக வந்த வணிகச் செட்டியார் அதனைக்கண்டு அம்மனை நோக்கி வழிபட்ட தாகவும் கருடன்பின் அந்த இடத்தை விட்டு பறந்து சென்றதாகவும் நாகபாம்பு பின்பு பூக்கொண்டு சென்றதாக அறியமுடிகிறது. பாம்பு சுற்றி இருந்த கல்லைபாம்பு சுற்றிய கல் எனவும் கருடன் இருந்த கல்லை கருடன்கல் எனவும் கூறப்படுகிறது. ஆலயத்துக்கு வரும் பக்தர்கள் இவ்விரு கற்களையும் கடல் வழியாக நடந்து சென்று வழிபடுகின்றனர். இந்த இரு கற்களும் ஆலய புராதன சின்னமாக போற்றப்படுகிறது.

இந்த ஆலய பதினொராம் திருவிழா அன்று இந்தப் புராதன கற்களுக்கு விஷேடபூசை, அபிஷேகம் நடைபெறுகிறது. அந்தவேளை தனில் பல வருடங்களாக அந்தப் பகுதியின் மேல் கருடன் வட்டமிட்டு பறப்பதைக் கண்டு பக்தர்கள் ஆனந்தக் கூத்தாடி மகிழ்வதைப் பக்தியுடன் காணக்கூடியதாக வுள்ளது. ஆலயத்தில் பல்வேறு இடங்களில் இருந்து பக்தர்கள் வந்து தங்கி நின்று நாகதோஷ நிவர்த்தி செய்துவருகிறார்கள். அம்பாள் அவர்களுக்குக் கேட்ட வரங்களை அள்ளிக் கொடுக்கிறாள். பௌர்ணமி தினங்களில் ஸ்ரீசக்கர பூசைவழிபாடு நடைபெறுகிறது. இதில் திருமணமாகாத பெண்கள் திருமணப் பாக்கியம் வேண்டியும் திருமணமானவர்கள் தாலிபாக்கி யம் நிலைத்திருக்க வழிபடுகின்றனர்.

ஆலய கல்யாண மண்டபத்தில் பலவருடங்களாக நித்திய அன்னதானம் சிறப்பாக நடை பெறுகிறது. பிறந்தநாள், திருமணநாள், தாய், தந்தையர், நினைவுநாள்கள் போன்றவற்றுக்கு ஆலய நிர்வாகத்திடம் ஐயாயிரம் ரூபா மட்டும் ஒருதடவை செலுத்தினால் வருடா வருடம் நினை வாக அன்னதானம் அடியவர்களுக்கு அன்றைய தினம் வழங்குவதுடன் விபூதிப் பிரசாதமும் அனுப்பப்படும். ஆலய அறங்காவலர் சபையின் இந்த முயற்சி மிகவும் போற்றுதற்குரியது.

ஆலயப்பெருந்திருவிழாவுக்குஅமுதசுரபிஅன்னதானசபை இரவுபகல் அன்னதான சேவையைச் செய்யகின்றது. ஆலயத் தென்கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள தம்பையா தாகசாந்தி நிலையம், ஆலய முகப்பில் அபிவிருத்திச்சபை தாகசாந்தி நிலையம் என்பன செயற்படுகின்றன. அடியார்களது பாதுகாப்புக்கு சாரணர்கள் சென்ஜோன்ஸ், அம்புலன்ஸ், கடல் பாது காப்புச் சேவையினர், தொண்டர் சபையினர் சேவை வழங்கத் தயாரான நிலையில் உள்ளனர். ஸ்ரீநாகபூசணி அம்மன் இந்தவருடத்துக்கான உயர்திருவிழா 06ஆம் திகதி திங்கட்கிழமை கொடி யேற்றமும், 15 ஆம் திகதி புதன் கிழமை மஞ்சத் திருவிழாவும், 18ஆம் திகதி சனிக்கிழமை சப்பறத் திருவிழாவும், இன்று 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும், 20ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும், 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பூங்காவனத் திரு விழாவும் நடைபெறுகின்றன. அன்னையின் திருவருள்பாலித்துள்ளது. அன்னையை வணங்கி அவளது திருவருளைப் பெறுவோமாக.

"எனக்குளன்னமனக்கவலைஎன்தாய்க்குஅன்றேதினம்தினம்என்கவலை"
"நயினையின்நாயகியே தேரேறிவந்து நல்வழிகாட்டுதாயே"

அலைகடல் நடுவினிலே வீற்றிருந்து அருள்பாலிக்கும் தாயே!
அடியவர்கள் குறைகள் அனைத்தும் போக்கும் தாயே!
ஆர்ப்பரிக்கும் கடலருகே அலங்காரக் கோயில்கொண்ட தாயே!
நல்லாட்சிதனில் நாள்கள் நகர்கின்றன பயன் ஏதும் எம்மக்களுக்கு இல்லை தாயே!
ஒன்றுபடா எம்மினத்தை ஒன்றாக்கிவிடு தாயே!
நயினையின் நாயகியே தேரேறிவந்து நல்வழிகாட்டு தாயே!

**நயினை விசு இராசநாயகம்**

## தேரேறிபவனிவரும்நாகபூஷணியே

தேரேறிவருகின்றநாயகியேநாகபூஷணியே
பாராளும்பார்வதியே
அகிலத்துநாயகியேஅன்னைஅம்பிகையே
எம்அன்னைபூரணியேஅமுதசுரபியே
தமிழரின்தாயவளே
எம்மினத்தைக்காத்திடம்மா
தேரேறிவருகின்ற கைலாயநாயகியே
எம்துயரெல்லாம்களைந்திடம்மா
பாரெங்கும்பகைவிரட்ட
நீதேரேறிபவனிவரவேணுமம்மா
நல்லருளைத்தாருமம்மாநாகபூஷணியே
அகிலமெங்கும்உணவளிக்கும்நீ
எம்அன்னைஅமுதசுரபியே
பவனிவரும்நாயகியேநாகபூஷணியே
நல்லருளைத்தாருமம்மா
நாகினியேநாகபூஷணியே

**த.அமலா - மீசாலை**



## வல்லமை தாருமம்மா நாகபூஷணியே

நாகினியே நாகபூஷணியே
நாகபூஷணியே நாகநாயகியே
நல்லருள் தாருமம்மா அன்னை பூரணியே
அகிலத்தை ஆளும் நாயகியே நாகபூஷணியே
அமுதசுரபியே அன்னபூரணியே
தமிழரின் தாயாரே எம்தாகம் தீர்த்திடம்மா
வேண்டாதோர் எம் தேசமெல்லாம்
எம்மை தீண்டிடாது காத்திடம்மா
தரணியாளும் பார்வதியே
கைலாய நாயகியே நாகபூஷணியே
தேரேறி வருகின்ற பூஷணியே
நாதியற்ற எம்மை உன்நல்லருளால் காத்திடம்மா
எம்தேசம் எழுச்சி கொள்ள
நீ தேரேறி பவனிவர வேணுமம்மா
வீரமே உருக்கொண்ட தமிழன்
விழிநீர் சொரியலாமோ
வேண்டாதோரும் எம்மை தூற்றிட
பசுத்தோல் போர்த்திய நரி எல்லாம்
எம்மை நயவஞ்சகம் கூறலாமோ?
சிறகொடிந்த எமக்கு வானுயரப்பறக்க
வல்லமை தாருமம்மா
தேரேறி வருகின்ற அம்பிகையே
எம் தேசமெங்கும் பவனி வரவேணும் அம்மா
உன்வாசலில் இருகரம் கூப்பி
வணங்குகின்றோம்
வல்லமை தாருமம்மா வல்லமை தாருமம்மா
தரணி ஆளும் நாகபூஷணியே
தேரேறி நீ பவனிவர வேணுமம்மா

**த.தர்சன் - மட்டுவில்மத்தி.**

## இனியொரு விதிசெய்து ஈழத்தமிழர்களுக்கு தீர்வுதர மணிபல்லவத்தில் தேரேறி வருகின்றாள்

புராதன பெருமை மிக்கதாகக் காணப்படுகின்ற லைடன்தீவு, நெடுந்தீவு, எழுவைதீவு, அனலைதீவு, புங்குடுதீவு, காரைதீவு, நயினாதீவு எனும்சப்த தீவுகளுக்கு நடுநாயகமாக அமைந்துள்ளது நயினாதீவு. இப்பழம் பெருமைவாய்ந்த நயினையம்பதியிலே பன்நெடுங்கால மாக அருளாட்சி செய்கின்றாள் அன்னை நாகபூஷணி.

அன்னை நாகபூஷணி மணிபல்லவத்திலே புவனேஸ்வரி பீடத்தை அலங்கரித்துக்கொண்டு நாகேஸ்வரி நாகபூஷணி முதலாய திருநாமங்களுடன் எழுந்தருளி அருளாட்சி செய்துகொண்டிருக்கின்றாள்.

நயினாதீவுக்கு பழைய பெயர் நாகதீவு அல்லது நாகத்தீவு என்றுகொள்ளப் பொருத்தமாகத் தெரிகிறது. இந்த மணித்தீவு நாகத்துவீபம் என வழங்குவதாலும் நாகம் நாகர் தொடர்புகளின் தொன்மை புலப்படுவதாலும் இலங்கை எங்குமுள்ள ஆலயங்கள் யாவற்றிலும் மிகவும் பழமைவாய்ந்தது நயினை நாகபூஷணி அம்மன் ஆலயமே.

"தொன்று நிகழ்ந்ததனைத்தும் உணர்ந்திடு
சூழ்கலைவாணர்களும் இவள்
என்று பிறந்தவள் என்றுணராத
இயல்பினளாம் எங்கள் தாய்"

என்று பாரதமாதாவின் பழமையைப் பாடினான் பாரதி. இந்தப்பாடல் அடிகள் அகில அண்டங்களையும் ஈன்ற எம் அன்னை யாம் நாகபூஷணி அம்பாளுக்குப் பொருந்து வதேயாகும்.

"பூத்தவளே புவனம்பதினான்கையும்
பூத்தவண்ணம்காத்தவளே" என அபிராமிப்பட்டர் விதந்து போற்றத் தக்கவள் அம்பிகையென அவளின் சர்வ உலக வியாபகத்தை அழகாக விவரித்திருக்கின்றார். அந்த வியாபகம் எங்கள் தாயாக விளங்கும் நாகபூஷணி அம்பாளுக்கும் பொருந்துவதாகவே அமைகின்றது.

நயினைவாழ் நல்லடியார்களுக்கு மட்டுமல்ல, நாடளாவிய சைவர்கள், பௌத்தர்கள்முதலாம் எல்லோருக்கும் பொதுவானவளாக அம்பாள் வணக்கத்துக் குரியவள் ஆகின்றாள். இத்தகுசரித்திர வரலாற்றுப் பெருமைகளை தன்னகத்தே கொண்டுள்ள அன்னை நாகம்பாளின் ஆலயம் தற்பொழுது பல்லவர், சோழர் கால அமைப்பையொத்த வரிசையில் கலைத்திருக் கோயிலாக காட்சியளிக்கின்றது.

108 அடி உயரமான கம்பீரமான சக்தியின் மகத்துவங் களை எடுத்தியம்பும் வகையில் ஆலய பிரதம வாயில் இராஜகோபுரம் அமைந்துள்ளது. அதேபோல ஆலயதெற் குப்பிரகார இராஜகோபுரம் திருக்கயிலைக் காட்சியை விளக்கும் வகையில் அழகியதீர்த்தத்தடாகம். இவ்வாறாக [illegible] நாகபூஷணி [illegible]கின்றது.

இத்தகு புராதன மகத்துவ சிறப்புக்களோடு எம்மை யெல்லாம் வாழ்வித்துக் கொண்டிருக்கின்றாள். நயினை யம் பதியில் நாலடி நடந்தால் போதும் நம்பாவம் தொலைந்துவிடும்.

அழகுக்கு ஒருவரும் ஒவ்வாதவல்லியாக, கண்கள் களிக்கும்படியாக, மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத நின்திருமூர்த்தமாக விரும்பித் தொழும் அடியார் விழிநீர்மல்கி விதந்து போற்றி துதிக்கத்தக்கவளாக, பாலையும், தேனையும், பாகையும் போலும் பனிமொழி யாக, பைரவியாக, பஞ்சமி, உண்ணும் உயர்சண்டி காளியாக, ஒளிரும் கலாவல்லியாக மண்டலி, மாலினி சூலி, வராகியாய் திருத்தேரிலே ஆரோகணித்து வரும் காட்சி அற்புதமானது.

ஆனிப் பௌர்ணமியை தீர்த்தநாளாகக் கொண்டு ஆண்டுதோறும் வெகுசிறப்பாக நடைபெறுகின்ற மகோற்ச வங்களில் சிறப்பு உற்சவமாக லட்சோபலட்சம் மக்கள் கலந்துகொள்ளும் தேர்த்திருவிழா மணிபல்லவத்தின் மகோன்னதமான விழாவாக அமைந்து விடுகிறது.

அன்பர்களின் அரோகரா கோசம் வானெழுந்து பக்திப் பரவசமாக ஒலிக்க நாகபூஷணி தேரேறி வருகிறாள். நிச்சயமாக ஈழத்தமிழ் மக்களின் நிரந்தர தீர்வுக்கு அவள் வழிகாட்டப் போகிறாள்.

**மதுரகவிகாரை.எம்பி.அருளானந்தன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதிகள் விடயத்தில் இந்தோனேசியா மனிதாபிமானம் அற்று நடக்கின்றது

## மனித உரிமை அமைப்புக்கள் கண்டனம்

கொழும்பு, ஜூன் 19
ஆஸ்திரேலியா நோக்கிப் பயணமாகியபோது, இயந்திரக் கோளாறால், இந்தோனேசியாவின் ஆச்சே மாகாணத்தில் தரைதட்டிய இலங்கைத் தமிழ் அகதிகள் படகை அனைத்துலக கடற்பரப்புக்குள் தள்ளிச் செல்லும் இந்தோனேசியாவின் முடிவுக்கு கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது.

கர்ப்பிணிப் பெண், சிறுவர்கள் மற்றும் பெண்கள் அடங்கிய 44 அகதிகள் விவகாரத்தை இந்தோனேசியா மனிதாபிமானமற்ற வகையில் அணுகுகின்றது என்று அனைத்துலக மனித உரிமை அமைப்புக்கள் கண்டித்துள்ளன.

அனைத்துலக மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் கண் காணிப்பகம் மற்றும் இந்தோனேசியாவின் தொண்டர் நிறுவனங்களும், இது குறித்துக் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன. மனிதாபிமான அடிப்படையில் அகதிகளைத் தரையிறங்க அனுமதிக்க வேண்டும்என்றும்கோரியுள்ளன.

அகதிகள் படகின் அருகே அகதிகளுக்கான ஐ.நா. முகவரமைப்புப் பிரதிநிதிகள் சென்று பார்வையிட்ட போதிலும், உள்ளே சென்று பார்வையிடுவதற்கு இந்தோனேசிய அதிகாரிகள் அவர்களை அனுமதிக்கவில்லை.

அகதிகளுக்கான ஐ.நா. முகவரமைப்பு அதிகாரிகள், படகிலுள்ள அகதிகளின் விவரங்களைச் சேகரிக்கும் மற்றும் உதவிகளை வழங்கும் நோக்கில், அந்தப் பகுதியில் தயார் நிலையில் உள்ளனர் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அகதிகள் படகை அனைத்துலக கடற்பரப்புக்கு இழுத்துச் சென்று இந்தியா நோக்கி அனுப்பி வைப்பதற்காக எரிபொருள் மற்றும் உணவுப் பொருள்கள் நேற்று முன்தினம் குறித்த படகுக்கு அனுப்பப்பட்டன.

அத்துடன் படகின் அருகே உள்ளூர் வாசிகள் செல்வதற்கும் அதிகாரிகள் தடை செய்துள்ளனர். ஊடகவியலாளர்களும் அந்தப்பகுதியில் இருந்து அகற்றப்பட்டுள்ளனர்.

அந்தப் படகை பெக்கோ இயந்திரத்தின் துணையுடன் கடலுக்குள் அனுப்பும் முயற்சி முன்னெடுக்கப்பட்ட போதிலும், அது தோல்வியில் முடிந்தது என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஐ-4)










Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுற்றுச் சூழல் பாதுகாப்பை வலியுறுத்தி நாட்டைச்சுற்றி விழிப்புணர்வுப் பயணம்

## வவுனியா இளைஞர்கள் இருவர் மோட்டார் சைக்கிளில் ஆரம்பித்தனர்



யாழ்ப்பாணம், ஜூன் 19

சுற்றுச் சூழலைப் பேணி அடுத்த சந்ததிக்கு இந்தப் பூமியைப்பாதுகாத்துக்கொடுக்க வேண்டிய கடப்பாட்டை வலியுறுத்தி, ஒரே தடவையில் இலங்கையைச் சுற்றிவரும் விழிப்புணர்வுப் பயணம் ஒன்று நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்திலிருந்து ஆரம்பிக்கப் பட்டது.

யாழ்.நல்லூர்க் கந்தசுவாமி கோயில் முன்பாக நேற்று முன்தினம் அதிகாலை 5.30 மணிக்கு இந்தப் பயணம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தப் பயணம் இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ்.நல்லூரை வந்தடையும் என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இயற்கையைப் பாதுகாத்தல், சுற்றுச் சூழலை வளமாக்குதல் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இந்தப் பயணம் ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியாவைச் சேர்ந்த பிரதாபன் மற்றும் இமயசவன் ஆகிய இரு இளைஞர்களுமே ஒரே தடவையில் ஆயிரத்து 320 கிலோமீற்றர் பயணம் செய்து இலங்கையைச் சுற்றி வர உள்ளதாகத் தெரிவித்தனர். இவர்களது சாதனைப் பயணத்தை வடமாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், வடமாகாண சபை உறுப்பினர்களான ம.தியாகராஜா மற்றும் ஆர்.இந்திரராஜா ஆகியோர் கொடி அசைத்து ஆரம்பித்து வைத்தனர்.

இந்தப் பயணம் விழிப்புணர்வு சார்ந்தே ஆரம்பிக் கப்பட்டுள்ளது. நல்லூரில் ஆரம்பித்து சங்குப்பிட்டி ஊடாக மன்னாரை அடைந்து அங்கிருந்து வில்பத்து தேசிய சரணாலயத்தினூடாக புத்தளம், நீர்கொழும்பு, காலி, அம்பாந்தோட்டை, கதிர்காமம், பொத்துவில், அம்பாறை, கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, பரந்தன், கிளிநொச்சி, ஆனையிறவு ஊடாக நல்லூரில் நிறைவடையவுள்ளது.

ஆயிரத்து 320 கிலோமீற்றர் தூரத்தை ஒரே தடவையில் சுற்றி வர உள்ளோம். இதனை உலக சுற்றாடல் தினத்துக்கு அர்ப்பணிக்கவுள்ளோம். இன்றைய உலகில் அணு ஆயுத அபாயம் பிளாஸ்டிக் கெமிக்கல் இரசாயனம் கலக்கப்பட்ட உணவுவகை பழவகை போன்றவற்றினால் இந்தப் பூமிப் பந்து பாதிப்படைந்து வருகின்றது.

அடுத்த சந்ததிக்கு இந்தப் பூமியைப் பாதுகாத்து கொடுக்க வேண்டிய கடப்பாடு ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு. இதனை உணர்த்தும் நோக்கில் இந்தப் பயணம் அமைகின்றது. இவற்றைப் பொறுப்பு வாய்ந்தவர்களும் உணர வேண்டும் என்பதை நினைவு படுத்த விரும்புகிறோம். அதன் பொருட்டு நாமிருவரும் மோட்டார் சைக்கிளில் இந்தப் பயணத்தை ஆரம்பித்துள்ளோம் என்று அவர்கள் தெரிவித்தனர். (வ-4,ரி)

**காணி விற்பனைக்கு உண்டு**

மல்லாகம் கே.கே.எஸ் வீதியில் (சோடாக் கம்பனி ஒழுங்கை அருகில்) 21/2 பரப்புக் காணி விற்னைக்குண்டு.

077 753 2994

**ஆனை விழுந்தான் வன்னேரிக்குளம்
அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்
அதிஸ்டலாபச் சீட்டு முடிவுகள்**

- முதலாம் பரிசு இலக்கம்- 900
- 2 ஆம் பரிசு இலக்கம் - 1219
- 3 ஆம் பரிசு இலக்கம் - 126
- 10 ஆறுதல் பரிசுகள்:

இலக்கங்கள்: 909, 149,2392, 234, 711 ,98, 1342, 1015, 752, 246

மேற்படி இலக்கங்களுக்கான பரிசுகளை 30 நாள்களுக்குள் பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம், ஆனைவிழுந்தான், வன்னேரிக்குளம்.
ஆலய பரிபாலனசபை.

077 0760511

**வீடு வாடகைக்கு**

கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கு அருகில் பெரிய வீடு ஒன்று (அனெக்ஸ்) உடன் வாடகைக்கு உண்டு.

தொடர்பு:077 99 27 146 (J2267)(10.17)

**வேலையாள் தேவை**

பண்ணையில் தங்கிநின்று வேலை செய்யக்கூடிய அனுபவமுள்ளவர்களும் பழக விரும்புபவர்களும் தேவை.

077 318 7946

**அறை வாடகைக்கு உண்டு**

ஆடியபாதம் வீதி, மருத்துவபீடத்திற்கு அண்மையில் அறை வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 075 911 6428

**வீடு வாடகைக்குத் தேவை**

வைத்தியருக்கு சில மாதங்கள் தங்கியிருப்பதற்கு சிறிய வீடு / அனெக்ஸ் விரும்பத்தக்கது.

077 907 9888 (11.17.18)

**அறைகள் நாள் வாடகைக்கு**

ரூபா 600 முதல் 3500 வரை (Ac, Tv, ATTACH Bathroom) Hotel Villa 422, Galle Rood, வெள்ளவத்தை ராமகிருஷ்ணா பெற்றோல் செற் அருகில் முன்பதிவு

072 255 2222

**ஒத்துமாறல்**

Colombo (Horana. T.M.V) தமிழ் ஆசிரியை யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலைக்கு ஒத்துமாற விரும்புகிறார்.

077 309 5984

**வீடு வாடகைக்குத் தேவை**

நல்லூர், கோப்பாய் ஆகிய இடங்களில் வீடு வாடகைக்குத் தேவை.

077 362 7055, 077 468 2951

**GENERATOR FOR SALE**

| | |
|---|---|
| 10 KVA - 1 ph | 25 KVA - 3 ph |
| 12 KVA - 3 ph | 43 KVA - 3 ph |
| 17.5 KVA - 3ph | |

Contact No:
0777 635 232 / 07777 56904

**தவறவிடப்பட்டுள்ளது**

தினேஸ் தன்னியசிறி என்பவருடைய பாடசாலை அனுமதிக்கான ஆவணம் நல்லூர் வைமன் வீதிக்கும் இருபாலை வீதிக்கும் இடைப்பட்ட தூரத்தில் தவறவிடப் பட்டுள்ளது. கண்டு எடுத்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

T.P: 077 4150799

தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**கார் மற்றும் FZS மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**

யாழ்ப்பாணத்தில் NIZZION SUNNY BII கார் மற்றும் FZS மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.

விலை 750,000/=

077 758 5920

**பார ஊர்தி சாரதி தேவை**

கரடிப் போக்கு சந்தியில் அமைந்துள்ள "சிவகுரு காட்வெயர்" நிறுவனத்திற்கு பார ஊர்திச் சாரதிகள் தேவை. கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 25-45 வயதுடையவர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரர்கள் தமது சகல சான்றிதழ்களுடனும் 30.06.2016 ஆம் திகதிக்கு முன்பு தொடர்பு கொள்ளவும்.

சம்பளம்: 50,000/- - 60,000/- வரை

தொலைபேசி: 077 7722305
முகவரி: சிவகுரு காட்வெயர்
A9வீதி,கரடிப்போக்கு, கிளிநொச்சி

**IPS**
Institute of Professional Studies

**இலவச கணினி வகுப்புக்கள்**

பாடசாலை மாணவர்கள், O/L, A/L பரீட்சைக்கு தோற்றியவர்கள், நேர்முகப் பரீட்சைகளுக்கு தோற்றுபவர்கள், தொழில் புரிபவர்களுக்கு ஏற்ற

- ★ Diploma in MS-Office
- ★ Diploma in Internet Technology

பிரிவுகள் ஆரம்பம் 25,26/06/2016
சனி, ஞாயிறு
பெறுமதிமிக்க சான்றிதழ் காலம் : 3 மாதங்கள்

**English Courses**

Spoken English - ஆங்கிலத்தில் சரளமாக உரையாட பயிற்சியளிக்கும் பிரிவு.
ii. Diploma in English - Writing,
iii. Speaking Listening, Grammer
உள்ளடங்கலாக அடிப்படையிலிருந்து
★ சான்றிதழ் ★ காலம் 3 மாதங்கள் ★ வாரத்தில் 4 நாள்கள்

IPS Thirunelvely
Mobile 0766852529 (J2257)(10.17)

**சிறுநீரகம் தேவை**

நாற்பத்தெட்டு வயதுடைய இளைஞனுக்கு 'O' Positive சிறுநீரகம் தேவை. தானம் செய்ய விரும்புவோர் நல்ல திடகாத்திரம் உள்ளவராகவும் 'O' Positive இரத்தகுரூப் உள்ள சலரோகம், இரத்த அழுத்தம், மஞ்சல் காமாலை, Aids வேறு எந்த விதமான நோய்களும் இல்லாதவராகவும் இருக்க வேண்டும். தானம் செய்ய விரும்புபவர்கள்,தயவு செய்து உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்

விளம்பர இலக்கம் 5108
C/O- உதயன்
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**CEYMED HOSPITAL SERVICES (PVT) LTD.**
CEYMED

**பதவி வெற்றிடங்கள்**

உதவியாளர்கள் - Helper
கிளிநொச்சி, முல்லைதீவு, வவுனியா, மன்னார்
தகைமைகள்
- ★G.C.E (O/L), G.C.E (A/L) பயின்றிருத்தல்
- ★வயதெல்லை 20-40 வரை
- ★மோட்டார் வாகனத்துடன் சாரதி அனுமதிபத்திரமும் இருத்தல் வேண்டும்.
- ★மருத்துவ துறையில் அனுபவம் குறைந்தளவு ஒரு வருடமாவது இருத்தல் நன்று. அனுபவம் இல்லாதவர்களும் விண்ணப்பிக்கலாம்.

தாதியர் - Nurse
மன்னார், வவுனியா, கிளிநொச்சி
தகைமைகள்
- ★G.C.E (O/L), G.C.E (A/L) பயின்றிருத்தல்
- ★வயதெல்லை 20-40 வரை
- ★தாதியர் பயிற்சி பெற்றமைக்கான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படுபவர்களுக்கு கவர்ச்சிகரமான சம்பளத்துடன் மேலதிக சலுகைகளும் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்குறிப்பிட்ட தகைமைகள் இருப்பின் சுயவிவரக் கோவையை ஏழு நாள்களுக்குள் No-550, Hospital Road, Jaffna என்ற முகவரிக்கு அல்லது Email: ccj400@ceymed.lk அனுப்பி வைக்கவும்

தொடர்புகொள்ளவும்: 021 221 9777, 071 453 5258 (J2256)(10.17)

**உடனடி வேலைவாய்ப்பு**

எமது ஸ்தாபனத்திற்கு பொதிகட்டுபவர் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

நேரில் சமூகம் தரவும்: 9.00Am - 4.00 Pm

தேனு களஞ்சியம்
நவீன சந்தை உட்புறம், திருநெல்வேலி
TP No- 021 492 1259

**அறைகள் வாடகைக்கு**

- புதிய வீடு
- இணைந்த குளியல் அறை
- முற்றிலும் மாபிள் பதிக்கப்பட்டது
- சுற்றுலாப் பயணிகளுக்கு
- உத்தியோகத்தர்களுக்கு
- மாணவர்களுக்கு
- நாளாந்த, மாதாந்த வாடகைக்கு

இடம்: பலாலி வீதி யாழ்ப்பாணம்.

077 666 4674

**துயர் பகிர்கின்றோம்**



எமது கல்லூரியில் ஆசிரியையாகக் கடமையாற்றும் திருமதி வைநிஷா டேகீஸ்வரராசன் அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி கனகாம்பிகை செல்வநாயகம்**

அவர்கள் 17.06.2016அன்று சிவபதமடைந்துவிட்டார். அவரின் மறைவையிட்டுத் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்
உரும்பிராய் இந்துக் கல்லூரி,உரும்பிராய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### பொன்னையா சிவபாதம்

(முன்னாள் தலைவர், பனை அபிவிருத்திச்சபை, அகில இலங்கை சமாதான நீதிவான்)



யாழ் வடமராட்சி துன்னாலையைப் பிறப்பிடமாகவும் மூத்தவிநாயகர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சிவபாதம் நேற்று (18.06.2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா-கோவிலாள் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசா-நல்லம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும் யோகமணியின் அன்புக் கணவரும் சுகந்தரூபன் (இங்கிலாந்து), காந்தரூபன்(இங்கிலாந்து), தாரிசரூபன்(பெல்ஜியம்), மோகனரூபி (நல்லூர்), ஶ்ரீஜனனி (பெல்ஜியம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தவமணி (கரவெட்டி), அச்சுத்தம்பிள்ளை (ஓய்வு பெற்ற வங்கி முகாமையாளர்), சதாசிவம் (கனடா), பர்வதகல்யாணி(கரவெட்டி), உதயகுமார்(கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் பவளராணி (இங்கிலாந்து), கீர்த்தனா(பெல்ஜியம்), சிறிதரன்(ஆசிரியர்), சயாத்(பெல்ஜியம்)ஆகியோரின் அன்பு மாமனாரும் லக்சிகன் (இங்கிலாந்து), நிதுசன்(இங்கிலாந்து), தன்சிகா (நல்லூர்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.06.2016) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மூத்த விநாயகர் வீதி,
நல்லூர்.

தகவல்: குடும்பத்தினர்
021 2220820, 077 3726419
077 9116844


# கட்சிக்குப் பங்கம் ஏற்படுத்தினால் பொறுமையாக இருக்க முடியாது

## அமைச்சர் கபிர் ஹாசிம் கூறுகின்றார்

கொழும்பு, ஜூன் 19

தேசிய அரசின் கீழ் பல்வேறு அபிவிருத்திச் செயற்றிட்டங்களை முன்னெடுக்கும் தருணத்தில் அதனைச் சீர்குலைத்து எமது கட்சியின் பெயருக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் செயற்படும் பிரிவினர் தொடர்பில் நாம் தொடர்ந்தும் பொறுமையாக இருக்க முடியாது. இவ்வாறு அமைச்சர் கபிர் ஹாசிம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தேசிய அரசின் ஒருமித்த செயற்பாடுகள் மூலமாக மக்களுக்கு பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். அந்த வகையில் ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்களால் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் தொடர்பில் ஒரு சிலர் போலியான பரப்புரைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

யானையின் பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தவும் முயற்சி மேற்கொள்கின்றனர். நாம் பல்வேறு சந்தர்ப்பங்களில் பொறுமையாக இருந்துள்ளோம். எமது பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு என்பதனை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

ஐக்கிய தேசியக்கட்சி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆகிய பிரதான இரண்டு கட்சிகள் ஒன்றிணைந்து உருவாக்கியுள்ள தேசிய அரசின் கீழ், மக்களுக்கான பல்வேறு அபிவிருத்தி செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப் படுகின்றன. அந்தவகையில் இந்தப் பயணத்தை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது – என்றார் (ஹ-ஜ-4)


## மரண அறிவித்தல்

### திருமதி தேவராணி நாகராஜா



யாழ்ப்பாணம் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் இருபாலையில் வசித்தவரும் தற்போது இந்தியாவில் சென்னையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தேவராணி நாகராஜா கடந்த (14.06.2016) செவ்வாய்க் கிழமை சென்னையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம்-பவளம்மா தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு-இராசமணி தம்பதியரின் மருமகளும் நாகராஜாவின் அன்பு மனைவியும் தேவதாஸ் (பிரான்ஸ்), நவதாசன் (பிரான்ஸ்), சுதா (லஷ்மி ரெக்ஸ், இந்தியா), கிரிஜா(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஶ்ரீதர்ஷினி(பிரான்ஸ்), ராதிகா(பிரான்ஸ்), சிவகுமார் (பிரான்ஸ்–அம்மன் ஆடையகம், மாருதி ரெக்ஸ், பாரீஸ்), சந்திரராசா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் செல்வநாயகி, காலஞ்சென்றவர்களான பாலசரோஜினி, சிவபாலசிங்கம் மற்றும் இந்திராணி, சண்முகராஜா(பிரான்ஸ்), காலஞ்சென்ற விக்னேஷ்வரன்(பிரான்ஸ்) மற்றும் கேதீஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரது பாசமிகு சகோதரியும் நாகலட்சுமி, ராசலட்சுமி, விஜயலட்சுமி, காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் பவளராணி, இலக்கணகுமார், காலஞ்சென்ற அலன் மற்றும் செல்வராஜா, கமலா, சிவலோகநாதன் யோகமலர்(பிரான்ஸ்), நவநீதசெல்வி (பிரான்ஸ்), கமலேஷ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஹரிஷ்லன் (பிரான்ஸ்), விதுஷ்லன் (பிரான்ஸ்), நிருஷ்லன் (பிரான்ஸ்), ஜதுஷ்லன் (பிரான்ஸ்), திருஷ்லன் (பிரான்ஸ்), லேயா (பிரான்ஸ்), ப்ரஜின் (பிரான்ஸ்), பிரவின்(பிரான்ஸ்), சிவானுஜா (இந்தியா), சிவசுதன் (இந்தியா), கீர்த்திகா (பிரான்ஸ்), சுபிக்ஷன்(பிரான்ஸ்), அபிக்ஷன் (பிரான்ஸ்), ஆகியோரது அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.06.2016) ஞாயிற்றுக்கிழமை அவரது இந்தியாவில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3.00 மணிக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(J 2260)
(17,19)

வீட்டுமுகவரி:
Kannan Avenue Mudichur Road,
Tambaram, Chennai-600063

தகவல்:
குடும்பத்தினர்.



# கண்ணீர் அஞ்சலி



S.V. முருகேசு நிறுவனத்தின் கிளிநொச்சி முகாமையாளர் கணேசபிள்ளையின் அன்பு மகள்

செல்வி

## மாலதி கணேசபிள்ளை

அவர்கள் நேற்று (18.06.2016) சனிக்கிழமை அகால மரணமடைந்த செய்திகேட்டு மிகுந்த துயரடைவதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளரும்
ஊழியர்களும்.

S.V.M. (Pvt) Ltd,-Colombo
S.V. முருகேசு யாழ்ப்பாணம்.
S.V. முருகேசு, கிளிநொச்சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதய

இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.
ஆஸ்திரேலிய பிரசை ஒருவருக்குச் சொந்தமான நிறுவனமொன்றின் பல மில்லியன் ரூபா பெறுமதியான பங்குகளை போலியான ஆவணங்கள் தயாரித்து விற்பனை செய்த குற்றச்சாட்டிலேயே கம்பன்பில கைது செய்யப்பட்டுள்ளார்.
ஆஸ்திரேலிய பிரசையினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டை அடுத்து, இவர் விசாரணை செய்யப்பட்டு வந்த நிலையில், நேற்றுக் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (5)

## அமைதியான

இந்தியப் பிரதமர் தெரிவித்ததாவது:
நவீன தகவல் தொடர்பு சாதனம் வாயிலாக இந்திய – இலங்கை மக்கள் இந்தக் கொண்டாட்டத்தில் இணைந்துள்ளனர். இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் துரையப்பா மைதானத்தில் கரவொலியும், உற்சாகமும் நிரம்பி வழிகிறது. நாங்கள் பல்லாயிரம் கிலோ மீற்றர் தொலைவில் டில்லியில் இருந்தாலும், இலங்கையில் ஏற்பட்டுள்ள மாற்றம் மற்றும் துடிப்பை உணர முடிகிறது. இந்த மைதானம் வெறும் சிமெண்ட் மற்றும் செங்கற்களால் ஆனதல்ல. ஆக்கபூர்வமான மற்றும் பொருளாதார முன்னேற்றத்துக்கான அடையாளம்.
கடந்த ஆண்டு நான் இலங்கை சென்ற போது, யாழ்ப்பாண மக்கள் என்னை அன்போடு வரவேற்றது மறக்க முடியாத சம்பவம் ஆகும். இது வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்தது. இந்தியப் பிரதமர் ஒருவர் முதன் முறையாக யாழ்ப்பாணம் சென்றது அப்போதுதான்.
இலங்கை தனது அபிவிருத்தியை நோக்கிய புதிய பாதையை வரையும் போது, இந்தியா அதனுடன் இணைந்து பயணிக்கும்.
இந்தியா – இலங்கை இடையிலான உறவு வெறுமனே இரு அரசுகள் இடையிலான தொடர்புகளுடன் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. மாறாக ஆழமான கலாசாரம், கலை மற்றும் வரலாறு மொழி போன்றவற்றில் அது தங்கியுள்ளது.
இந்தியா தனது பொருளாதார வளர்ச்சி மூலம் தனது அயல்நாடுகளும் நன்மையடைய வேண்டும் என்று உறுதியாக கருதுகின்றது. துரையப்பா விளையாட்டரங்கு என்பது எங்கள் இருநாடுகள் மத்தியிலான ஒத்துழைப்பை வெளிப்படுத்துகின்றது. இலங்கையின் பொருளாதார ஒத்துழைப்பிற்கான இந்தியாவின் ஆதரவு என்பது நட்பின் வாக்குறுதி.
ஐ. நா. சபையில் சர்வதேச யோகா பிரகடனம் கொண்டு வரப்பட்டவேளை, அதனை முதலில் ஆதரித்த நாடு இலங்கை. இன்று நாங்கள் சர்வதேச யோகாவை கடைப்பிடிக்கின்றோம். அதன் ஆரம்பகட்ட நிகழ்வுகள் துரையப்பா அரங்கில் இடம் பெற்றுள்ளன – என்றார். (வ-5)

## வலி.வடக்கு

முடிவடைகின்றது. இந்த நிலையில், துரையப்பா விளையாட்டரங்கு திறப்பு விழாவில் பங்கெடுப்பதற்கு ஜனாதிபதி யாழ்ப்பாணத்துக்கு நேற்றைய தினம் வருகை தந்திருந்தார். இதன் போது உரையாற்றுகையில், வலி.வடக்கு மீள்குடியமர்வு தொடர்பில் எதுவும் அவர் பேசவில்லை.
இது தொடர்பில் குணபாலசிங்கத்தை, 'உதயன்' தொடர்பு கொண்டு கேட்டது. அதற்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஜனாதிபதி மைத்திரிபாலவை நாங்கள் தேவதூதனாகவே பார்த்தோம். அவர் வாக்குத் தவற மாட்டார் என்று எண்ணினோம். ஜனாதிபதி மைத்திரிபால, தென்னிலங்கையிலும் சரி வெளிநாடுகளிலும் சரி, தமிழ் மக்கள் தங்களுடைய காணிகளைத்தான் கேட்கின்றார் என்று பேசியிருந்தார். இதனைக் கேட்கும் போது, எமது காணிகளை விடுவிப்பதாகச் சொன்ன அவரது வாக்குறுதி நிறைவேறும் என்று நம்பினோம்.
ஜனாதிபதி வழங்கிய காலக்கெடு முடிவடைவதற்கு இன்னமும் சில தினங்கள் மாத்திரமே இருக்கின்றது. இந்த நிலையில், யாழ்ப்பாணத்துக்கு இன்று (நேற்று) வருகை தரும் ஜனாதிபதி அதிரடியாக எங்கள் காணிகளை விடுவிப்பார் அல்லது அதற்கான அறிவிப்பை விடுப்பார் என்று நம்பினோம்.
எங்கள் நம்பிக்கைகள் எல்லாம் சிதைந்து விட்டன. ஜனாதிபதியின் செயற்பாட்டினால் நாம் அதிர்ச்சியும் – ஏமாற்றமும் அடைந்துள்ளோம். இந்த மாத முடிவுக்குள் எங்கள் காணிகள் விடுவிக்கப்படா விட்டால், நாம் போராடுவதைத் தவிர வேறு வழியில்லை – என்றார். (வ-5)

## சர்வதேச

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரையும், ஐ.நா. உறுப்பு நாடுகளின் முக்கியஸ்தர்களையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் சில தினங்களுக்கு முன்னர் அமெக்காவின் வொசிங்டன் நகரில் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.
இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறுதல் ஆகியவற்றுக்கான செயன்முறை அவசியம் என்ற விடயத்தில் அமெரிக்கா மிகவும் உறுதியாகவுள்ளது என்று தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்க செயலாளர் நிசா பிஸ்வால் சில தினங்களுக்கு முன்னர் அமெரிக்காவில் நடைபெற்ற நிகழ்வொன்றில் தெரிவித்துள்ளார்.
இலங்கையில் போர்க் குற்றங்கள் இடம் பெற்றன என்பதற்கான ஆதாரங்களுடன் கூடிய பாரதூரமான குற்றச்சாட்டுகள் உள்ளன என்று அமெரிக்காவின் போர்க் குற்ற விவகாரங்களுக்கான முன்னாள் தூதுவர் ஸ்டீபன் ராப் கருத்தை வெளியிட்டுள்ளார்.
இந்த விடயங்கள் தொடர்பில் தங்கள் நிலைப்பாடு என்னவென்று எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனிடம் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:-
இலங்கை அரசின் சம்மதத்துடன்தான் கடந்த வருடம் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 29 ஆவது கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் பலவற்றின் ஆதரவுடன் தான் இந்தத் தீர்மானம் நிறைவேறியது.
இந்தத் தீர்மானத்தில் உள்ள அனைத்துப் பரிந்துரைகளும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இது இலங்கை அரசின் பொறுப்பும் – கடமையாகும். இதிலிருந்து இலங்கை அரசு விலகிச் செல்ல முடியாது. இதையும் மீறி இந்தப் பொறுப்பிலிருந்து இலங்கை அரசு நழுவிச் செல்ல முற்பட்டால், அதற்கு சர்வதேச நாடுகள் ஒரு போதும் அனுமதிக்காது.
எனவே, ஐ.நா. தீர்மானத்தில் உள்ள அனைத்துப் பரிந்துரைகளும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட்டின் இலங்கை தொடர்பான வாய்மொழிமூல அறிக்கையை நாம் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம். இதற்கு மேல் இப்போதைக்கு வேறு எதனையும் கூற முடியாது – என்றார். (வ-5)

## இராணுவ

நிகழ்ந்துள்ளது என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.
யாழ்ப்பாணம் 3ஆம் குறுக்கு வீதி வழியாக மோட்டார் சைக்கிளில் பயணித்த தாயும் மகளும் அதே வீதியில் பயணித்த இராணுவத் தண்ணீர் பவுசரும் நேருக்கு நேர் மோதுண்டு இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.
விபத்தில் றக்கா வீதியினைச் சேர்ந்த சந்திரராஜா சௌந்தரராணி (வயது-51) என்பவரே கொல்லப்பட்டார். அவரின் மகளான சங்கீதா படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
விபத்து இடம்பெற்று சுமார் 10 மீற்றர் தூரத்துக்கு மகள் வாகனத்தால் இழுத்துச் செல்லப்பட்டதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர். விபத்தினால் மோதுண்ட தாயார் சில மீற்றர் தூரம் இழுத்துச் செல்லப்பட்ட நிலையில் கிடந்துள்ளார். அவரை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போதும், அவர் அதற்கு முன்னரே உயிரிழந்துவிட்டமை பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டது.
விபத்தினால் அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் மோசமாகச் சேதமடைந்துள்ளது. அதன் பாகங்கள் சில உடைந்து காணப்பட்டதோடு தலைக் கவசங்களும் சிதறிக் காணப்பட்டன.
விபத்து இடம்பெற்ற பகுதிக்கு யாழ்ப்பாணப் பொலிஸ் அத்தியட்சகர் உள்ளிட்ட பொலிஸ் பிரிவினரும் இராணுவப் பொலிஸாரும் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டதோடு, குறித்த விபத்தினை ஏற்படுத்திய இராணுவ வண்டியின் சாரதியான இராணுவச் சிப்பாய் கைது செய்யப்பட்டுள்ளார். விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (வ-4,101)

## துரையப்பா

அடையாளம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
இந்திய அரசின் நிதிப் பங்களிப்புடன் சீரமைப்புச் செய்யப்பட்ட துரையப்பா விளையாட்டரங்கு நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
இதன்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்ததாவது:
துரையப்பா விளையாட்டரங்கை இந்தியப் பிரதமருடன் இணைந்து திறந்து வைப்பதில் மகிழ்சியடைகின்றேன். இதன் முழுமையான மறுசீரமைப்புச் செலவையும் இந்தியா ஏற்றுக் கொண்டது. இதற்காக இந்தியப் பிரதமருக்கும் – மக்களுக்கும், இலங்கை அரசு சார்பிலும், மக்கள் சார்பிலும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
இலங்கை – இந்திய நட்புறவில் இது முக்கியமான தருணம். இலங்கை – இந்திய நட்புறவு சரித்திர காலம் முதல் இருந்து வருகின்றது. இன்றைய நிகழ்வு முக்கியமானது. நாளை (இன்று) பொசன் தினம், இது பௌத்தர்களுக்கு முக்கியமான நாள். இந்தியாவினால்தான் இலங்கைக்கு பௌத்த தர்மம் கிடைக்கப் பெற்றது.
எமது நாட்டின் அபிவிருத்திக்காக இந்தியாவின் உதவி நீண்ட காலமாகக் கிடைத்து வருகின்றது. இந்த நாட்டில் நீண்ட காலம் போர் நிலவியது. அதன் பின்னர் சமாதானம் ஏற்பட்டது. சமாதானம் ஏற்பட்ட பின்னர், இந்தியா பல உதவிகளைச் செய்து வருகின்றது. இலங்கை – இந்தியாவுக்கு இடையில் பொருளாதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் நெருக்கம் காணப்படுகின்றது. இதற்காக நாங்கள் தியாக உணர்வுடன் பணிபுரிகின்றோம்.
எங்களுடைய இரண்டு நாடுகளினதும் முன்னேற்றத்துக்காக நாங்கள் தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் பல நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போகின்றோம். அதற்கு சில கடும்போக்காளர்கள் பல விதமான விடயங்களைச் சொன்னாலும், நாங்கள் சர்வதேச ரீதியாக இரண்டு நாடுகளுக்கும் நன்மை கிடைக்கும் வகையில் செயற்பட்டு வருகின்றோம்.
ஒரு விளையாட்டரங்கு என்பது தேசிய நல்லிணக்கத்துக்கு ஒரு முக்கியமான இடமாகும். இன – மதம் எல்லாவற்றையும் விடுத்து ஒன்றுகூடும் இடமாகும். எனவே இது நல்லிணக்கத்துக்கு முக்கியமான அடையாளம் ஆகும். அல்பிரட் துரையப்பா கொலை செய்யப்பட்டமையானது ஜனநாயக விரோதமான சம்பவமாகும்.
இந்திய அரசுக்கும் – மக்களுக்கும் மீண்டும் ஒரு தடவை நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். இன்று இடம்பெறும் யோகா தின நிகழ்வில் பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் இங்கு ஒன்று கூடியுள்ளனர். இதே போன்று புதுடில்லியிலும் யோகா தின நிகழ்வு இடம்பெறுகின்றது.
துரையப்பா விளையாட்டரங்குப் புனரமைக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கிய இந்திய அரசுக்கும், நிறுவனங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன் – என்றார். (வ-5)


## மரண அறிவித்தல்

### செல்வி கணேசபிள்ளை மாலதி

தோற்றம்
07
.
01
.
1988



மறைவு
18
.
06
.
2016

விளானை, களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி கணேசபிள்ளை மாலதி நேற்று (18.06.2016) சனிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் கணேசபிள்ளை-சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகளும் கஸ்தூரி, அச்சுதன், ருசாந்தன், காலஞ்சென்ற பிரசாந்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும் கோகிலராஜின் அன்பு மைத்துனியும் விதுசன், அபிஷா, அக்ஷயா ஆகியோரின் அன்பு பெரியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.06.2016) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் பி.ப 3.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் தில்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

விளானை, களபூமி,
காரைநகர்.

தகவல்:
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூக்கப்பட்டார் துங்கா

கோபா அமெரிக்கா கால்பந்து தொடரில் பிரேஸில் அணி முதல் சுற்றோடு வெளியேறியதால், அந்த அணியின் பயிற்சியாளர் துங்கா அதிரடியாக நீக்கப்பட்டுள்ளார்.

தென்னமரிக்கா நாடுகளுக்கு இடையில் நடத்தப்படும் கோபா அமெரிக்கத் தொடரில் கிண்ணம் வெல்லக்கூடிய பலம்வாய்ந்த அணிகளுள் ஒன்றாக பிரேஸிலும் கருதப்பட்டது. ஆனால் முதல் சுற்றுடனேயே அந்த அணி வெளியேற்றப்பட்டது. இந்தத் தோல்வியை அடுத்து அணியின் பயிற்சியாளராக இருந்த துங்கா, அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். புதிய பயிற்சியாளராக பிரேஸில் கழகங்களின் பயிற்சியாளராக செயற்பட்ட ரைட் நியமிக்கப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம)



## என்னை நிரூபித்து விட்டேன்: லோகேஸ் ராகுல் பெருமிதம்

டெஸ்ட், ஒருநாள், ரி-20 என மூன்று வகையான ஆட்டங்களிலும் தன்னை நிரூபித்துள்ளதாக பெருமிதம் தெரிவித்துள்ளார் இந்திய அணியின் லோகேஸ் ராகுல்.

டெஸ்ட் ஆட்டங்களுக்கு உரிய வீரர் என அடையாளம் காணப்பட்டிருந்த ராகுல் ஐ.பி.எல். தொட ரில் பெங்களூரின் சார்பாக களமிறங்கி மிரட்டினார். சிம்பாப்வேக்கு எதிரான ஒருநாள் தொடரிலும் தன்னை நிரூபித்தார். இந்த நிலையிலேயே அவர் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு மட்டுமே நான் சரிப்பட்டு வருவேன் என்று விமர்சித்தனர். பயிற்சியாளர்களும் ஓய்வறையில் சக வீரர்களும், குறிப்பிட்ட வடிவிலான கிரிக்கெட் உங்களுக்கு ஒத்துவராது என்று சொல்லியிருக்கின்றனர். ஆனால் அவர்களின் எண்ணம் சரி என்று நான் ஒருபோதும் நினைத்தது கிடையாது. எல்லா வடிவிலான கிரிக்கெட்டிலும் சிறப்பாக செயற்படக்கூடிய திறமை எனக்கு உண்டு என்பதை அறிவேன். அதை இப்போது நிரூபித்துக் காட்டியிருக்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (ம)





# மற்றுமொரு யூரோ கலவரம் பறந்து திரிந்த தீப்பந்தங்கள்

யூரோக் கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற குரோசியா, செக் குடியரசு அணிகளுக்கு இடையிலான ஆட்டம், ரசிகர்கள் தீப்பந்தங்களை மைதானத்துக்குள் வீசியதால் பாதியில் நிறுத்தப்பட்டது.

விறுவிறுப்புக்கு பஞ்சம் இல்லாமல் நடைபெற்ற இந்த ஆட்டத்தில், இரு அணிகளும் தலா இரண்டு கோல்களைப் பெற்று கடுமையாகப் போராடி வந்தன. இந்த நிலையில் குரோசியா ரசிகர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் இருந்து கொண்டு ரகளையில் ஈடுபடத் தொடங்கியதாகச் சொல்லப்படுகிறது. மேலும், தீப்பந்துங்களை எரித்து அவற்றை மைதானத்துக்குள்ளும் வீசியுள்ளனர். இதில் சிலருக்கு லேசான காயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. இதனால் ஆட்டத்தின் 86ஆவது நிமிடத்தில் நடுவர்கள் ஆட்டத்தை இடை நிறுத்தினர்.

இந்தச் சம்பவத்துக்கு ஐரோப்பிய கால்பந்து சம்மேளனமும், சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனமும் தமது அதிருப்தியை தெரிவித்துள்ளன. தொடர் ஐரோப்பிய கால்பந்தாட்ட சம்மேளனத்துக்கு உட்பட்டது என்பதால் அந்தச் சம்மேளனம் குரோசியா அணிக்கு அபராதம் விதிக்கவும் வாய்ப்புக்கள் உள்ளன.

யூரோ கிண்ணத்தைப் பொறுத்தமட்டில் ரசிகர்கள் இவ்வாறு வன்முறைகளிலும் கலவரங்களிலும் ஈடுபடுவது வழக்கமானதே. நடப்பு வருடத் தொடரில் இது இரண்டாவது முறை. இதற்கு முன்னர் இங்கிலாந்து, ரஷ்யா அணிகள் மோதிய ஆட்டத்தில் ரசிகர்கள் கைகலப்பில் ஈடுபட்டனர். இதில் 38 பேர் படுகாயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## சமநிலை

கிளிநொச்சி, ஜூன் 19

பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடத்தும் மூன்றாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில், கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து கிளிநொச்சி தர்மபுரம் மத்திய கல்லூரி அணி மோதிய ஆட்டமொன்று சமநிலையில் முடிவடைந்துள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய தர்மபுரம் மத்திய கல்லூரி அணி சகல இலக்குகளையும் இழந்து 96 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக லோகிதன் 27 ஓட்டங்களையும், துசாந்தன் 14 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் தர்மபுரம் மத்திய கல்லூரி அணியின் சார்பில் பிரதீசன் 4 இலக்குகளையும், அனுஸ்கன், பார்த்தீபன் இருவரும் தலா இரு இலக்குகளையும் கைப்பற்றினர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி சகல இலக்குகளையும் இழந்து 210 ஓட்டங்களைப் பெற நாளும் முடிவுக்கு வந்தது. இதனால் ஆட்டம் சமநிலையானது. அதிகபட்சமாக அனுக்சன் 133 ஓட்டங்களையம், பிரதீசன் 30 ஓட்டங்களையும், கௌசீகன் 25 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் தர்மபுரம் மத்திய கல்லூரி அணியின் சார்பில் பாணுஜன் 4 இலக்குகளைக் கைப்பற்றினார். (ம-422)



## இங்கிலாந்துக்கு முதல் வெற்றி

யூரோ கால்பந்துத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் வேல்ஸை திரிலாக வீழ்த்தியுள்ளது இங்கிலாந்து.

ஆட்டத்தின் 42ஆவது நிமிடத்தில் வேல்ஸ் வீரர் கரீத் பலே முதல் கோலைப் பதிவுசெய்தார். வேறெந்த மாற்றமும் இல்லாமல் முடிந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியில் 56 ஆவது நிமிடம் வரை வேல்ஸின் ஆதிக்கமே நீடித்திருந்தது. 56 ஆவது நிமிடத்தில் இங்கிலாந்து வீரர் வர்டி பதில் கோலைப் பதிவு செய்ய நிலைமை 1:1.90 நிமிடங்கள் முடிவடைந்த நிலையில் கூடுதலாக 3 நிமிடங்கள் வழங்கப்பட்டது. இதன் 2ஆவது நிமிடத்தில் இங்கிலாந்து வீரர் ஸ்டுரிட் கோலொன்றைப் பதிவு செய்ய 2:1 என்ற கோல் கணக்கில் வேல்ஸை வீழ்த்தியது இங்கிலாந்து. (ம)

## சிற்றி ஸ்போட்ஸ் அரையிறுதியில்

அரியாலை சரஸ்வதி விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திய துடுப்பாட்டத் தொடரில் வடமராட்சி சிற்றி ஸ்போட்ஸ் அணி அரையிறுதிக்குள் நுழைந்தது.

கல்வியங்காடு ஜி.பி.எஸ். மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் சிற்றி ஸ்போட்ஸ் அணியும் திருமகள் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று, முதலில் துடுப்பெடுத்தாடிய சிற்றி ஸ்போட்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட பத்து பந்துப் பரிமாற்றங்களில் மூன்று இலக்குகளை இழந்து 72 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக டெஸ்மன் 41 ஓட்டங்களையும், பவன் 22 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கார்த்தி 2 இலக்குகளையும் தினேஷ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

73 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய அரியாலை அணி 43 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் பறிகொடுத்தது. அதிகபட்சமாக தீபன் 15 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் உமைசுதன் மற்றும் டெஸ்மன் இருவரும் தலா இரு இலக்குகளை வீழ்த்தினர். (ம-108)

# சச்சின், கங்குலி, லக்ஷ்மனிடம் பயிற்சியாளர் தெரிவு ஒப்படைப்பு

இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளரை பரிந்துரை செய்யும் பொறுப்பு சச்சின், கங்குலி, லக்ஷ்மன் ஆகியோரைக் கொண்ட குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்திய அணியின் பயிற்சியாளர் பதவிக்கு 57 பேர் விண்ணப்பித்திருந்தனர். அவர்களில் 21 பேர் தற்பொழுது தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களில் இருந்து சிலரை சச்சின், கங்குலி, லக்ஷ்மன் ஆகியோரைக் கொண்ட குழு பரிந்துரை செய்யவுள்ளது. சச்சின் இந்தியாவுக்கு வெளியில் இருப்பதால் அவர் காணொலி வசதியின்மூலம் உரையாடவுள்ளார். இவர்களின் பரிந்துரையையும் டோனி, கோக்லி ஆகியோரது பரிந்துரையையும் கவனத்தில் கொண்டு, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை பயிற்சியாளர் யார் என்பதை உறுதி செய்யும். (ம)



## பாடும்மீன், றோயல் அணிகள் வென்றன

யாழ். லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் பாடும்மீன், றோயல் அணிகள் வெற்றிபெற்றுள்ளன.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் வளர்மதி அணியை எதிர்த்து பாடும்மீன் அணி மோதியது. இதில் பாடும்மீன் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மாலை 4 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் நாவற்குழி அன்னை அணியை எதிர்த்து பாரதி அணி மோதியது. இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் ஏந்த வித கோல்களையும் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

மாலை 5 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து யாழ். ஐக்கிய அணி மோதியது. இதில் றோயல் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வென்றது சென். ஜோசெப்

யாழ்ப்பாணம், ஜூன் 19

இளவாலை யங்ஹென்றிஸ் வி.கழகம் நடத்தி வரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் சென். ஜோசெப் அணி வெற்றிபெற்றது.

சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் சென். லூசியஸ் அணியை எதிர்த்து றோயல் அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரு அணிகளும் எதுவித கோல்களையம் பதிவு செய்யாத நிலையில் ஆட்டம் சமநிலையில் நிறைவடைந்தது.

இரண்டாவதாக நடைபெற்ற ஆட்டத்தில் சென். ஜோசெப் அணியை எதிர்த்து ஞானமுருகன் அணி மோதியது. ஆட்டத்தின் 23 ஆவது நிமிடத்தில் சிந்துஜனின் மூலம் சென். ஜோசெப்பின் முதல் கோல் பதிவானது. வேறெந்த கோல்களும் பதிவாகாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியில் 67 ஆவது நிமிடத்தில் ஜோசெப்பின் சார்பாக பிறிதொரு கோல் பதிவானது. ஞானமுருகன் அணியின் தவரூபன் ஆட்டத்தின் இறுதிப் பகுதியில் பதில் கோலைப் பதிவு செய்த போதிலும் ஜோசெப்பின் வெற்றியை தடுத்துவிட முடியவில்லை. முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது சென். ஜோசெப். (ம-422)

## கலையொளி - உதயதாரகை அரையிறுதியில் இன்று மோதல்

யாழ்ப்பாணம், ஜூன் 19

கிருஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டமொன்றில் கலையொளி அணியை எதிர்த்து உதயதாரகை அணி இன்று மோதவுள்ளது. மகேசன் விளையாட்டு கழக மைதானத்தில் காலை 9 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. (ம-422)

# கொக்குவில் இந்து சம்பியன்
## மாகாணமட்ட கரம் தொடரில்



யாழ்ப்பாணம், ஜூன் 19

பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட கரம் தொடரில் 19 வயதுக்கு உட்பட்ட பெண்கள் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சம்பியனானது.

யாழ். மத்திய கல்லூரியில் நேற்று இடம் பெற்ற இந்த இறுதிப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி மோதியது. இரண்டு ஒற்றையர் ஆட்டங்களையும் ஒரு இரட்டையர் ஆட்டத்தையும் கொண்டதாக இறுதியாட்டம் அமைந்திருந்தது. முதல் ஒற்றையர் ஆட்டத்தில் கொக்குவில் இந்துவின் சார்பில் டிசாந்தியும் இந்து மகளிரின் சார் பில் லக்சிகாவும் மோதினர். டிசாந்தி 23:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றார். இண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் சார்பில் துசாயினியும் இந்து மகளிரின் சார்பில் கிருஸ்ணபிரியாவும் மோதினர். இதில் துசாயினி 25:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றார். முதல் இரு ஒற்றையர் ஆட்டங்களையும் கைப்பற்றியதையடுத்து இரட்டையர் ஆட்டத்துக்கு வேலை வைக்காமல் சம்பியனானது கொக்குவில் இந்துக் கல்லூரி அணி.

பெரியமடு மகா வித்தியாலய அணி, முல்லைத்தீவு யோகபுரம் மகா வித்தியாலய அணியை 2:0 என்ற செற் கணக்கில் வீழ்த்தி மூன்றாம் இடத்தைத் தனதாக்கியது. (ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 19

**சரஸ்வதியின் தொடர்**

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 97ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியை எதிர்த்து உரும்பிராய் அணி மோதவுள்ளது. பிற்பகல் 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணி மோதவுள்ளது.

**கழுகுகளின் தொடர்**

கழுகுகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார் சென். லூசியா அணியை எதிர்த்து முல்லைத்தீவு சென். யூட் அணி மோதவுள்ளது.

**திருமகள் வி.க. தொடர்**

அராலி திருமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். தோமஸ் அணியை எதிர்த்து உடுப்பிட்டியுத் அணி மோதவுள்ளது. பிற்பகல் 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**எவரெஸ்ட் வி.க. தொடர்**

புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.45 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் மன்னார் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து அச்செழு வளர்மதி அணி மோதவுள்ளது. பிற்பகல் 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார் கில்லறி அணியை எதிர்த்து ஞானகலா அணி மோதவுள்ளது. (ம-23)

# மனோகரா முன்னேற்றம்

கரணவாய், ஜூன் 19

கழுகுகள் வி.கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஆட்டமொன்றில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டுள்ளது அல்வாய் மனோகரா வி.கழகம்.

கழுகுகள் கழக மைதானத்தில் இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகமும் சக்கோட்டை சென். சேவியர் விளையாட்டுக் கழகமும் மோதின. முதல் பாதியின் முடிவில் இரு அணிகளும் 1:1 என்று சமநிலைவகித்தன. இரண்டாம் பாதியின் 47 ஆவது, 79 ஆவது, 86 ஆவது நிமிடங்களில்மனோகராவின் சாருஜன் அடுத்தடுத்து கோல்களைப் பதிவுசெய்ய அந்த அணியின் வெற்றி வாய்ப்புப் பலப்படுத்தப்பட்டது. ஆட்டம் நிறைவடையும் தருணத்தில் சென். சேவியர் அணிக்குக் கிடைத்த தண்ட உதையை, கச்சிதமான கோலாக்கினார் ரஞ்சித்குமார். முடி வில் 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியது மனோகரா. (ம-108)



## மாகாண கால்பந்தாட்டம் அரையிறுதிகள் இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 19

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 19வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவினருக்கான கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன.

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் வவுனியா கனகராயன் குளம் மகா வித்தியாலய அணியை எதிர்த்து கிளிநொச்சி சிவநகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணி மோதவுள்ளது.

தொடர்ந்து நடைபெறவுள்ள இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்து மன்னார் வலைப்பாடு றோ.க.த. பாட சாலை அணி பலப்பரீட்சை செய்யவுள்ளது. (ம-422-23)

# வடமராட்சி மத்திய மகளிர் சம்பியன்



பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட கரம் தொடரில் 15 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி அணி சம்பியனானது.

யாழ். மத்திய கல்லூரியில் நேற்று இடம்பெற்ற இந்த இறுதிப் போட்டியில் வடமராட்சி மத்திய மகளிர் அணியை எதிர்த்து யாழ். இந்து மகளிர் அணி மோதியது. முதலாவது ஒற்றையர் ஆட்டத்தில் வடமராட்சி மத்திய மகளிர் அணியின் சார்பில் கயானாவும் யாழ். இந்து மகளிரின் சார்பில் தனுசாவும் மோதினர். இதில் கயானா 25:0 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றார். இண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் வடமராட்சி மத்திய மகளிர் அணியின் சார்பில் லக்சிகாவும் யாழ். இந்து மகளிர் அணியின் சார்பில் சுரபுஜிதாவும் மோதினர். லக்சிகா வெற்றிபெற 2:0 என்ற செற்கணக்கில் கிண்ணம் வென்றது வடமராட்சி மத்திய மகளிர் அணி.

முல்லைத்தீவு யோகபுரம் மகா வித்தியாலய அணியை 2:0 என்ற செற்கணக்கில் வீழ்த்தி மூன்றாம் இடத்தைத் தனதாக்கியது கொக்குவில் இந்துக் கல்லூரி அணி. (ம-23)

# ரஷ்யாவுக்குத் தடை

சர்வதேச தடகளத் தொடர்களில் பங்கேற்க ரஷ்யாவுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீடிக்கப்பட்டுள்ளது. இதனால் நடப்பு வருடத்தில் நடைபெறவுள்ள ரியோ ஒலிம்பிக் தொடரில் அந்த நாட்டின் வீரர்கள் பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

2012ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் தொடரிலும் அதற்குப் பிற்பட்ட சர்வதேசதொடர்களிலும் ரஷ்ய வீரர், வீராங்கனைகளில் ஏராளமானவர்கள் தடை செய்யப்பட்ட ஊக்கமருந்தைப் பயன்படுத்தியமை கடந்த வருடம் வெளிச்சமானது. ஊக்கமருந்துப் பாவனை அளவுக்கு அதிக அளவில் இருந்ததால் ரஷ்ய அரசின் அனுமதியுடன் இந்த தில்லு முல்லுகள் நடந்திருக்கும் என்ற அச்சத்தில் அந்த நாட்டு வீரவீராங்கனைகளுக்கு ஒரு வருடம் (2015 ஜூன் முதல் 2016 ஜீன் வரை) தடை விதிக்கப்பட்டது. தற்போது இந்தத் தடை நீடிக்கப்பட்டுள்ளது. இதனால் ரியோ ஒலிம்பிக் தொடரில் ரஷ்யா சார்பாக எவரும் களமிறங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்பள்ளியின் விளையாட்டு விழா

அளவெட்டி முற்போக்கு முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா குறித்த முன்பள்ளியின் மைதானத்தில் இன்று பி.ப.2 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண சபை அவைத் தலைவர் சி.சிவஞானம் கலந்து கொள்கிறார். (ம-36)

## அயர்லாந்தை வெள்ளையடிப்புச் செய்தது இலங்கை



இலங்கை–அயர்லாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் 136 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது இலங்கை.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அயர்லாந்து, முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கைக்கு ஆரம்பமே அமர்க்களமாக அமைந்தது. குசல், குணதிலக இணை அயர்லாந்துப் பந்துவீச்சாளர்களின் பொறுமையை மிகவும் சோதித்தது. இணைப்பாட்டமாக 147 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த வேளையில், 63 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் குணதிலக. அதிரடியில் குசலைக் கொண்டுபோய் மூலையில் வைத்தார் சீக்குகே பிரசன்னா. அரைச்சதத்துக்காக அவர் 23 பந்துகளையே எடுத்திருந்தார். மறுமுனையில் குசலின் சதம் அரங்கேறியது. 95 ஓட்டங்களுடன் (46 பந்துகளில்) ஆட்டமிழந்தார் பிரசன்னா. 135 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் குசல் ஜெனித் பெரேரா. முடிவில் இலங்கை 377–8.

பந்துவீச்சில் அயர்லாந்து சார்பாக மர்தாஜ் மூன்று இலக்குகளையும், மெக்கார்டி 2 இலக்குகளையும், ரன்கின், மைக் பிரைன் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு களமிறங்கிய அயர்லாந்துக்கு அதன் நட்சத்திர வீரரான போட்டர்பீல்ட் எட்டே ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். ஜொய்ஸைவீழ்த்தினார் மஹரூவ். பிரையனும் ஆட்டமிழக்க அயர்லாந்தின் முன்வரிசை 41 ஓட்டங்களில் முடிவுக்கு வந்தது. அன்டர்சன், மைக் பிரையன் இருவரும் 30 ஓட்டங்களைக் கடந்து சிறிது போராட்டம் காட்டினர். இலக்கை அடைவதற்கான போராட்டம் அல்ல. மாறாக 50 பந்துப்பரிமாற்றங்கள் வரை முழுமையாகத் தாக்குப் பிடிப்பது என்ற போராட்டமே. 34 ஓட்டங்களுடன் அன்டர்சனை வீழ்த்தினார் பிரசன்னா. மைக் பிரையன் ஒரு முனையில் அரைச்சதத்தை நிறைவுசெய்த போதிலும், மறுமுனையில் இலக்குகள் சாய 241 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது அயர்லாந்து. பந்துவீச்சில் இலங்கை சார்பாக லக்மல் 4 இலக்குகளையும், பிரசன்னா 2 இலக்குகளையும், மத்தியூஸ், மஹரூவ், சானக, குணதிலக நால்வரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

(ம)

FLC FRENCH LANGUAGE CENTRE
"FOR THE BEST FRENCH FOREVER"
FRENCH CLASSES
பிரான்ஸ், கனடா, சுவிஸ், பெல்ஜியம் செல்வோர்க்கான Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French
விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained in France - 2007)
DELF A1, A2 Exam இல் 100 % சித்தி.. 1110 மாணவர்கள் French கற்றுள்ளனர்....
No. 40, பலாலி வீதி, இலுப்பையடி. 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 02.07.16 சனி 10 am.
பிரதான வீதி, நெல்லியடி TP: 021 3202973 ஆரம்பம்: 04.07.16 Mon@ 4 pm.
ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → அப்பலோ Hospital → FLC

யாழ்நகரில் இயங்கிவரும் பிரபல உணவகம் ஒன்றுக்கு வேலையாள்கள் தேவைப்படுகின்றனர்
* உணவு பரிமாறுபவர் (ஆண் / பெண்)
* காசாளர் (பெண்கள் விரும்பத்தக்கது)
* தோசை, வடை தயாரிப்பதில் முன்னனுபவம் வாய்ந்த சமையலாளர்.
* சுத்திகரிப்பு பணியாளர்.
* வீட்டு பராமரிப்பாளர்
* அரவை வேலையாள்கள். (ஆண் / பெண்)
* மரக்கறி வெட்டுபவர். (ஆண் / பெண்)
* பராட்டா பூரி, சப்பாத்தி தயாரிப்பதில் முன்னனுபவம் வாய்ந்த சமையலாளர்.
கவர்ச்சியான சம்பளம் பாதுகாப்பான வசதியான தங்குமிடம் மற்றும் சுத்தமான உணவு இலவசம்.
தொடர்பு : 077 791 1219

வேலைவாய்ப்பு
யாழ் நகரில் ANDRA PUBLICATIONS
நிறுவனத்தினால் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள
புத்தகசாலை
ANDRA BOOKS
ஒன்றிற்கு அனுபவமுள்ள மேற்பார்வையாளர் மற்றும் புத்தக விற்பனையாளர்கள் தேவை!
கட்டாயத் தகைமைகள்:
• ஏற்கனவே புத்தகசாலையில் அனுபவமுள்ளவராக இருத்தல் வேண்டும்.
• கவர்ச்சிகரமான சம்பளத்துடன் மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படும்.
புதன்கிழமை (22.06.2016) காலை 9.00மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரை நேர்முகத்தேர்வு நடைபெறும்.
ANDRA PUBLICATIONS (PVT) LTD
356A, KASTHURIYAR ROAD, JAFFNA, SRI LANKA.
TEL: 0776622981 | 0777481696

ஜூஸ் பக்கெட் மெசின்
பல மடங்கு இலாபத்திற்கு !!
முதலீடு ஒருமுறை மட்டுமே !!



max adz
1 மணித்தியாலத்தில் 2000 பக்கட்டுகளை தயாரிக்கும் திறன்
ரூ.2 /= ரூ.5 /= ரூ.10 /= பக்கட்டுகளை தயாரிக்கலாம்
Eastman
வேலையாட்கள் தேவையில்லை
• 1 வருட உத்தரவாதம்
• இலவச செயல்முறைகளுடன் கூடிய பயிற்சி வழங்கப்படும்
• விற்பனைக்கு பின் சேவையுண்டு
• இலவச விநியோகம்
தமிழில் தொடர்பு கொள்ள
077 391 8870
WINRICH INTERNATIONAL(PVT)LTD
No.18, Ground Floor, Lucky Plaza, St.Anthony's Mawatha, Kollupitya, Colombo - 03



## அனுபவமற்ற இந்தியாவை பதம்பார்த்தது சிம்பாப்வே

இந்தியா சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான முதலாவது ரி–20 ஆட்டத்தில் இரு ஓட்டங்களால் இந்தியாவை வீழ்த்தியது சிம்பாப்வே.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இந்தியா முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 170 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக சிக்கும்புரா 54 ஓட்டங்களையும், வோலர் 30 ஓட்டங் களையும், மசகட்சா 25 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் இந்திய அணியின் சார்பாக பும்ரா இரு இலக்குகளையும், ரிசி தவான், அக்சர் பட்டேல், சாஹல் மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

171 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய இந்திய அணி, 20 பந்துப்பரிமாற்றங்கள் வரை தாக்குப் பிடித்த போதிலும், 168 ஓட்டங்களையே எடுக்கமுடிந்தது. இதனால் இரு ஓட்டங்களால் சிம்பாப்வே வென்றது. அதிகபட்சமாக பாண்டே 48 ஓட்டங்களையும், மன்டீப் சிங் 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சிம்பாப்வே சார்பாக முசரபானி, சிப்ஹபா இருவரும் தலா இரு இலக்குகளையும், திரிபானோ. மட்சிபா இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். இந்திய அணியின் சார்பாக களமிறங்கிய சாஹல், ரிசி தவான், மன்டீப் சிங், லோகேஸ் ராகுல், உனகட் ஐவருக்கும் இந்த ஆட்டம் அறிமுக ஆட்டமாக அமைந்திருந்தது. (ம)

அம்பாள் துணை
நயினாதீவு இந்து கலாசார அபிவிருத்தி சபையின்
அருட்பிரசாதப் பணி ஆரம்ப வைபவம் – 2016
நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு எமது சபையால் நடத்தப்படும் 44 ஆவது வருட அருட்பிரசாதப் பணி இவ்வாண்டும் தேர்த் திருவிழாவன்று பகல் 11.30 மணியளவில் ஆரம்பமாகவுள்ளது என்பதை மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.
அருட்பிரசாதப் பணியினை ஆரம்பித்து வைப்பவர் எமது சபையின் பணிகளுக்கு ஆரம்ப காலத்தில் இருந்தே சிறந்த பேராதரவை வழங்கி வரும்
திருமதி புஸ்பா ஜெயபாலசிங்கம் அவர்கள்
(ஆஸ்திரேலியா)
ஆரம்பித்து வைப்பார்கள் என்பதை மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்
என்கடன் பணி செய்து கிடப்பதே
நயினாதீவு
இந்து கலாசார அபிவிருத்திச் சபை

PERSONAL CLASS
இரசாயனவியல்
சி.அங்கதன் BSc (Chem.sp)
37 வருட
வினாத்தாள்கள் கற்பிக்கப்படும்.
077 618 9610

வீடு வாடகைக்குத் தேவை
4 பேர் கொண்ட குடும்பத்துக்கு நல்லூரை அண்டிய பிரதேசத்திலோ அல்லது யாழ்ப்பாணப் பெரிய ஆஸ்பத்திரியிலிருந்து 2Km சுற்றுவட்டத்துக்குள் வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 077 696 7461

வேலையாள் தேவை
அச்சக வேலைக்கு வேலை தெரிந்த (சாதாரண அனுபவமுள்ளவர்களும்) பெண் பிள்ளைகள் விரும்பத்தக்கது.
புத்தகம் கட்டுநர் (வைன்டிங்)
விக்ரோறியா றோட், ஆஸ்பத்திரி பின் வீதி, குமார் பேபி சிற்றி கெயர்
077 392 0797

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.06.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொலிகண்டி கந்தவனம்

# திருவருள் மிகு கல்யாண வேலவ சுவாமி தேவஸ்தானம்

# தேர்த்திருவிழா சிறப்பிதழ் - 19.06.2016

## தேர்த்திருவிழா இன்று காலை 08 மணிக்கு

### வரலாறும் கோயில் ஆதீனகர்த்தாவின் ஆசிச் செய்தியும்.



தென்கைலாயம் எனும் இலங்காபுரியில் புராணகாலந்தொட்டு பல அருள் நிறைந்த திருக்கோயில்கள் இறைவனால் தோற்றுவிக்கப்பட்டு அதனூடு அடியவர்களிற்கு ஆன்ம ஈடேற்றம் நல்கி வருகின்றான். அவ்வாறான சிறப்பினால் இலங்காபுரி சிவபூமி என்னும் சிறப்பைப் பெற்றது.அவ்வண்ணம் யாழ்ப்பாணத்து வடமராட்சியின் பொலிகண்டியூரில் ஸ்கந்தாரண்யம், கந்தவனம், கந்தவனக்கடவை, பொலிகண்டிக் கந்தசுவாமி கோயில் எனப்பல பெயர்களால் விளங்கும் திருத்தலம்.

அருணகிரிநாதரால் திருப்புகழ் பாடப்பெற்ற உயர்தலம்.யுகம்யுகமாய் அருள் விளங்கும் அற்புதத் திருத்தலம். கற்பூரம் விளைந்த பெருமையுடையதனால் இங்குள்ள இறைவன் கற்பூரக்கந்தன் எனும் சிறப்பு நாமமும்பெற்றான். நறுநீர்ச்சுனையால் நோய்கள் நீக்கியும் காஞ்சிமாவினால் குழந்தைப்பாக்கியமும் ஒருங்கே அடியவர்க்கு நல்கி தனது பேரருளுடன் பேரழகினையும் மொத்த வடிவில் காட்ட விளைந்த தலமே கந்தவனம்.

வடமராட்சிப்பகுதியில் முதன் முதல் தோன்றிய தேர் எனும் பெருமையுடையது. பொலிகண்டியைச்சேர்ந்த நாகர்தம்பர் எனும் அடியவரின் தனி முயற்சியால் இற்றைக்கு 250 வருடங்களுக்கு முன் தோற்றம் பெற்ற மகாதேர். இதன் சிறப்பினை

தேவருங் காமுறுஞ் சித்திரத்தேரும்
வானோருர்த்து மறந்து விட்டதுவிது தானோ....

என உடுப்பிட்டி சிவசம்புப் புலவர் தமது நான்மணிமாலையில் புகழ்ந்துரைக்கின்றார்.

இத்துணை சிறப்புடைய மகாதேரில் எங்குமில்லாத தனித்துவமுடைய ஆறுமுகநயினார் வள்ளி தெய்வானை இந்திர மயிலமர்ந்து விநாயகர் ஸ்ரீமுத்துக்குமாரசுவாமி சண்டேஸ்வரர் சகிதம் எழுந்தருள்வது கண்கொள்ளாக் காட்சி. இவ் ஆறுமுகநயினாரை திருமுருக கிருபானந்தவாரியார் கண்ணுற்று தாம் எங்கும் இதுவரை இவரைப்போல் அழகு பொருந்தியதும் பெரியதுமான சண்முகரைக்காணவில்லை என உருகி வழிபட்டுப் பேறடைந்தார்.

இச்சண்முகப் பெருமான் தாமே விரும்பி இத்தலத்தில் எழுந்தருளி யவர் எமது தந்தையாரின் திருநோக்கில் உதித்து வார்ப்பிக்கும் பேற்றை எமது தந்தையார் ஸ்ரீமான் திக்கம் செல்லையாப்பிள்ளைக்கு ஈந்தவர். இவரின் உற்பத்தியில் எத்தனையோ அடியவர்களின் ஆபரணங்களும் பல பெண்ணடியார்களின் திருமாங்கல்யங்களும் சேர்ந்த புனித வரலாறுகள் பலவுண்டு.இந்த ஒளி பொருந்திய சண்முகரை நவாலியூர் சோமசுந்தரப்புலவர் கந்தவனத்தருகே ஆறுமுகப்பொன்மாலை என்று போற்றிப்பாடு கின்றார்.

